ஈழமுரசு சிறப்பிதழ் உள்ளே

France: 10FFrs. GB: 90P Germany: 2.50DM Swisse: 2.50SFrs.

# ஈழமுரசு

Eelamurasu Weekly

முரசு: 2 | 12 - 18 டிசம்பர் 1996 | முழக்கம்: 100

ஈழமுரசு சிறப்பிதழ் உள்ளே

# திருமலை துறைமுகத்தில் கரும்புலித்தாக்குதல் அதிவேக டோரா வெடித்துச் சிதறியது

அதி உயர் பாதுகாப்பைக் கொண்டிருந்த திருமலைத் துறைமுகத்துள் நடாத்தப்பட்ட கடற்கரும்புலித் தாக்குதலில் அங்கு ரோந்து கடமையில் ஈடுபட்டிருந்த அதிவேக டோராப்படகொன்று வெடித்துச் சிதறியுள்ளது. கடந்த 08.12.96 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 2.40 மணிக்கு விடுதலைப்புலிகளின் அங்கையற்கண்ணி நீரடி நீச்சல் பிரிவைச் சேர்ந்த கப்டன் மல்லிகா தன்னுடைய உடலில் வெடிகுண்டைப் பொருத்திக்கொண்டு கடலுக்கு அடியில் நீந்திச் சென்று மேற்படி டோராப்படகின் மீது தற்கொடைத் தாக்குதலை நடாத்தியுள்ளார். இத்தாக்குதலில் டோராப்படகில் இருந்த அனைவரும் கொல்லப்பட்டதாக தெரியவருகிறது.

## நாதன் கஜன் அஞ்சலிக்கூட்டத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள்



கடந்த 26.10.96 அன்று பாரிசின் லாச்சப் பேல் வீதியில் சிறீலங்கா அரசின் கைக்கூலிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட ஈழமுரசு ஆசிரியர் கப்டன் கஜன், விடுதலைப்புலிகளின் சர்வதேச நிதிப்பொறுப்பாளர் லெப். கேணல் நாதன் ஆகியோரின் 41ம் நாள் நினைவாஞ்சலிக் கூட்டத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டார்கள். பிரான்சிலுள்ள செண்ரனிஸ் எனும் இடத்தில் அமைந்துள்ள L.S.C மண்டபத்தில் கடந்த 08.12.96 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இவ் அஞ்சலிக்கூட்டத்தில் நினைவுரைகள், கவிதாஞ்சலிகள், நினைவெழுச்சிக் கானங்கள் என்பவையும் இடம்பெற்றன.

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

## ஐரோப்பாவிற்கு ஆட்களைக் கடத்தினார் சுவிசில் இந்துமத குரு விசாரணை

சூரிச் நகரத்திலுள்ள இந்து ஆலயத்தின் குருவொருவர் சுவிசிலிருந்து பிற ஐரோப்பிய நாடுகளுக்கு ஆட்களைக் கடத்திவரார் என்ற சந்தேகத்தின் பேரில் சூரிச் பொலிசாரினால் விசாரணைக்குள்ளாக்கப்பட்டுள்ளார் எனத் தெரியவருகிறது.

மேற்படி ஆலயத்தின் உற்சவங்கள் மற்றும் விழாக்களைக் காரணம் காட்டி கொழும்பிலிருந்தும், சென்னையிலிருந்தும் இவ் ஆலய நிர்வாகம், பலரை ஸ்பொன்சர் செய்து அழைத்திருந்தது என்றும் இவர்களில் அனேகமானோர் திரும்பிச் செல்லாதது சூரிச் பொலிசாரினால் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இவ் ஆலய மதகுரு உட்பட பலர் மீது விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாகவும் சூரிச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த ஆலய நிர்வாகத்தால் அழைக்கப்பட்டவர்கள் சுவிசிலும் மற்றைய ஐரோப்பிய நாடுகளிலும் வேறு பெயர்களில் அரசியல் தஞ்சம் கோரியிருக்கலாம் என்றும் அவ்வாறு அவர்களை சுவிசுக்கும் மற்றைய ஐரோப்பிய நாடுகளுக்கும் கடத்துவதற்கு இந்த மதகுரு உடந்தையாக இருந்துள்ளார் என்பதன் அடிப்படையிலேயே பொலிசார் இவரை அழைத்து விசாரித்துள்ளதாக நம்பப்படுகிறது.

## ரத்வத்தை சென்ற உலங்குவானூர்தி விடுதலைப்புலிகளினால் தகர்க்கப்பட்டது

கடந்த 07.12.96 சனிக்கிழமை பலாலியிலிருந்து புறப்பட்டு வவுனியாவுக்கு அண்மையில் இயந்திரக் கோளாறு காரணமாக தரையிறக்கப்பட்ட சிறிலங்கா விமானப்படையின் பெல் 412 ரக உலங்குவானூர்தி விடுதலைப்புலிகளால் தகர்க்கப்பட்டது.

சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு, விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான பெரியபம்பைமடு பகுதியில் மேற்படி வானூர்தி தரையிறங்கியதாகவும் தமது படையினரே புலிகள் அதைக் கைப்பற்றி விடாமல் தடுப்பதற்காக குண்டு வைத்து தகர்த்ததாகவும் அறிவித்தது.

ஆனால் உண்மையில் அந்த உலங்கு வானூர்தி இயந்திரக் கோளாறு காரணமாக வவுனியாவுக்கு அண்மையில் உள்ள

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

## ஸ்ராஸ்பூர்க் நகரில் இருந்து இரு தமிழர்கள் சிறீலங்காவுக்கு நாடு கடத்தப்பட்டனர்

ஜெர்மனியில் இருந்து பிரான்ஸ் ஊடாக சுவிசிற்கு செல்லும் போது சுவிஸ் சுங்கப் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டு பின்பு பிரான்ஸ் சுங்கப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்ட தவசி கஜேந்திர சீலன், அப்புக்குட்டி சுகிர்தமாலா ஆகியோர் பின்னர் கோல்மார் COLMAR நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டனர். அவர்கள் தமது சட்டத்தரணியை ஒழுங்கு படுத்துவதற்கு முன்பே 25.11.96 அன்று அவர்களை நாடு கடத்தும்படி உத்தரவிட்டிருந்தார். இரு நாட்கள் சிறையில் இடப்பட்ட இவர்கள் 28.11.96 அன்று ஸ்ராஸ்பூர்க் நகரில் இருந்து பாரிஸ் அனுப்பப்பட்டு 29.11.96ல் விமான மூலம் இலங்

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

## பிரித்தானிய அதிகாரிகள் வவுனியா விஜயம்

பிரித்தானிய அகதிகள் கவுன்சிலைச் சேர்ந்த இரு உயர் அதிகாரிகள் .வவுனியாவிலுள்ள இடம்பெயர்ந்த மக்களின் நிலமைகளை அறிவதற்காக ஒரு நாள் விஜயத்தை மேற்கொண்டு வவுனியா சென்றுள்ளனர்.

கடந்த 07.12.96 சனிக்கிழமை

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

எசியன் என்ரபிறைசஸ்

பட்டுவேட்டி, மாறுகரை வேட்டி, நாலுமுழ வேட்டி, கிப்ஸ் சாரம், பெண்களுக்கான அலங்காரப் பொருட்கள், திருமணத்திற்கான அனைத்துப் பொருட்களும் கூறைச்சேலை, பாவாடை, சட்டை, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட எல்லா நிறங்களிலுமான சட்டைத்துணிகள்

* தங்க நகைகளுக்கு உத்தரவாதமும் பற்றுச்சீட்டும் வழங்கப்படும் *

ASIAN ENTERPRISE

Hohl.Str 78, 8004 Zurich.

Tel: 01/291 46 52 Fax: 01/291 46 37

# ஈழமுரசு

Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
P. Sivaguru

**Impression:**
IMPRIMERIE MEAULLE

நிர்வாகி:
ப. வேலுப்பிள்ளை

ஸ்தாபக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்

ஆசிரியர்:
பி. சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:

**EELAMURASU**
**22, Rue Perdonnet,**
**75010 Paris, France**

விளம்பர விநியோக தொடர்புக்கு:

பாரிஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
NIRMALARAJAN
Tel: 041333896

டென்மார்க்:
S.E. MAHENDRAN
SPURVE VEJ-20,
7200 GRINSTED.
Tel + Fax: 75310546

சுவிஸ்: மக்கள் கடை
Tel: 01-271 7374

லண்டன்:
ஜெயந்தன்: - Tel: 0956908145

இத்தாலி:
S. தில்லைவாசன்
VIA DANTE - 296, PALARMO
Tel: 03473358290

நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22425527

நெதர்லாந்து:
தாறுஸல்தன்
Tel: 0223 680462



## வீடு வாடகைக்கு

NOISY LE GRAND [RER A]
நிலையத்திற்கு அருகாமையில்
அமைதியான சூழலில்
4 அறைகள் உள்ள வீட்டில்,
இரண்டு பெரிய புதிய அறைகள்
தனிக் குசினியுடன், சகல
வசதிகளுடன் உடனடியாக
குடியிருக்கும் நிலையில் உண்டு.
வாடகை 2000FF
தொடர்புகளுக்கு: 01 43 05 26 23.


(1ம் பக்கத் தொடர்ச்சி)

## நாதன், கஜன்...

மாவீரர்கள் நாதன், கஜன் நினைவாக "தொலைதூர விடுதலைச் சுவடுகள்" இசைத்தட்டும்,

'நெருப்புப்பறவைகள்' எனும் நினைவு மலரும், "புயற்பறவைகள்" எனும் ஒளியிழை நாடாவும் வெளியிடப்பட்டன.

அன்றைய நாளாலே ஆரம்பிக்கப்பட்ட தமிழீழ மண்மீட்பு நிதிக்கு வந்திருந்த மக்கள் அனைவரும் மனமுவந்து தமது நிதிப்பங்களிப்பினை அள்ளி வழங்கினார்கள்.

### மண்மீட்கத் தாலி

நினைவாஞ்சலிக் கூட்டத்தின் இடையே தமிழீழ மண் மீட்பு நிதிக்கான அறிவித்தல் விடுக்கப்பட்ட போது பணமாகவும், நகைகளாகவும் தங்கள் பங்களிப்பினை மக்கள் செலுத்தினார்கள். இதேவேளை இளம் பெண் தனது தாலியையே கழற்றி மண்மீட்பு நிதிக்கு ஒப்படைத்து ஒருவர் தனது உயரிய தாய் மண்பற்றை வெளிப்படுத்தினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## ரத்வத்தை...

விடுதலைப்புலிகளும் இல்லாத இராணுவமும் இல்லாத இராணுவ சூனிய பிரதேசத்திலேயே தரையிறக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. இவ்வுலங்கு வானூர்தி அவசர அவசரமாக தரையிறங்கியதை அறிந்த விடுதலைப்புலிகள் அவ்விடத்திற்கு விரைந்து செல்லு முன்னரேயே அதிலிருந்த ரத்வத்தையும் ரோகான் தலுவத்தையும் மற்றும் உயர் இராணுவ பொலிஸ் அதிகாரிகளும் தப்பித்து வவுனியாவிற்கு சென்று விட்டனர்.

இராணுவத்தினர், அந்த உலங்குவானூர்தியை மீட்பதற்கு முன்பாகவே விடுதலைப் புலிகள் அதைக்குண்டு வைத்து தகர்த்து விட்டனர். சந்திரிகா, ரத்வத்தை மற்றும் அமைச்சர்கள், இராணுவ உயர் அதிகாரிகள் பயணம் செய்வதற்காக வாங்கப்பட்ட இவ் உலங்கு வானூர்தி ஏவுகணை எதிர்ப்பு கருவிகள் உட்பட அதி நவீன கருவிகளைக் கொண்டதுடன் பல கோடி ரூபாய்கள் பெறுமதியும் வாய்ந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு
25.05.1958



இறப்பு
12.11.1996

## அமரர் திரு இராசையா யோகரத்தினம்

குடும்பத்தின் குலவிளக்காய் குன்றாத ஒளிவிளக்காய் அன்பை அருவி யாக்கி பண்போடும் பாசத்தோடும் பாரெல்லாம் போற்றும் வண்ணம் எம்மோடு வாழ்ந்த எழில் பொங்கும் திருவுருவே நித்தம் நித்தம் உங்கள் அன்புமுகம் எங்கள் கண்முன்னே தெரிகிறது. எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயில் கொண்டு மாதம் ஒன்றானாலும் எங்கள் மனதைவிட்டு நீங்காத நினைவுகளாய் எம்முடன் இருக்கின்றீர்கள்.

வாசல் வரை வந்து நாம் வரவேற்பது எங்கே
பாசத்தைப் பரிமாறி உயிர்வாழ்வதெங்கே
தேகம் எமைவிட்டு மாதம் ஒன்று ஆச்சு _ உன்
நேசம் எம்மைவிட்டு நெடுந்தூரம் போயிட்டு
இல்லாளும் ஈன்ற மகனும் நாமும் துடிக்க
சொல்லாமல் போனீரே சோகத்தில் வீழ்ந்தோமே.
மழலை மொழி உன்மகன் மதூ கலங்க
நீண்ட நேரம் தூங்கிவிரோ
என்றுதான் திருமையா எம்துயர்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கும் மனைவி, மகன், சகோதரர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள். சாவகச்சேரி கல்வயலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், ஜேர்மனியில் BREMER HAVEN-ஐ வசிப்பிடமாகக் கொண்டவருமான அமரர் திரு இராசையா யோகரட்னம், அவர்களின் அந்தியேட்டிக் கிரிகைகள் 12.12.96 அன்று RICKMERS STR T69, 27668 T BREMER HAVEN ஜேர்மனியில் நடைபெறுகிறது.

இத்துயரச் செய்தி அறிந்து நேரில் வருகை தந்தும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மற்றும் எல்லா வழிகளிலும் உதவிய உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மனைவி, மகன், சகோதரர்கள்.

தகவல்: பாலா (ஜேர்மனி) / தொலைபேசி இல: 0471 51996.

# 31ம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு
03.06.1944



இறப்பு.
13.11.1996

## திருமதி சுப்பையா பூரணம்

(இராசு - இராசம்மா)

அன்பின் ஒளிவிளக்கே பாசமுடன்
பத்து மாதம் சுமந்து பாலூட்டிச் சீராட்டி
அன்போடு வளர்த்து ஆளாக்கிய தெய்வமே
உங்கள் இழப்பை எங்களால் தாங்கமுடியவில்லை.
எங்கள் இனிய அம்மாவே உங்கள்
ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.
உங்கள் பிரிவால் வாடும்

கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதர, சகோதரிகள், மைத்துனர்கள், உறவினர்கள்.

12.12.96 வியாழக்கிழமை எமது தாயாரின் 31ம் நாள் நினைவஞ்சலியில், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்: க. தர்மகுலராஜா (சுவிஸ்)
தொலைபேசி இல: 033 3335 207

# 31ம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு
18.06.1934



இறப்பு
13.11.1996

## திருமதி கந்தையா நாகரத்தினம்

(93/7 இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்)

கலங்குகின்றோம் ஆசை அம்மா கண்காணாத தேசம் இருந்து
விடிகாலை பொழுது எம்மை விம்மியழ வைத்தது இன்று
பன்னிரு திங்களாக அகதியாக அல்லல் பட்டு
சொந்த வீதி திரும்ப எண்ண, சொந்தங்களும் எதிர்பார்த்திருக்க
கந்த சட்டி வேளையிலே காலன் உங்களை அழைத்ததேனோ.
எம்முயிரை தன்னுயிராய் நினைத்து எம்மை அணைத்த தெய்வம்
ஆண் பிள்ளை நாம் என்று அரவணைத்து உணவு அழித்த அன்னை
ஆளாக்கி பார்த்து எம்மை ஆனந்தங் கொண்ட தாயே
எம்மை இன்று தவிக்கவிட்டு மீளாத்துயில் கொண்டதேனோ.
தூரதேசம் சென்றிடினும் ஆசையம்மா பாசம் அது மாறிடுமோ
செந்தணலில் வேகிடினும் சொந்தம் விட்டுப் போய்விடுமோ
இவ்வுலகில் உள்ளவரை உள்மனதில் தியானிப்போம்
உங்கள் ஆத்ம சாந்திக்காக நல்லூர் கந்தனிடம் பிரார்த்திப்போம்

உங்கள் பிரிவால் வாடி நிற்கும்
சகோதரர்கள், மகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
மகன்மார், ராஜன், சுதா
(சுவிஸ்)


லாச் சப்பலில் குறைந்த செலவில் நிறைந்த பிரயாண சேவை

**Errances Travels**

Fax: 01 42 09 53 39 - Li: 075 95 01 37
55, Rue Louis Blanc, 75010 Paris.
M°: La Chapelle *ou* Louis Blanc
தொடர்புகளுக்கு: நாதன் (தமிழில்)

Tél 01 42 09 70 00

*à partir de*

| | | | |
|---|---|---|---|
| Bombay | 3,900Frs. | Londres | 650Frs. |
| Delhi | 3,900Frs. | New york | 2,400Frs. |
| Bangkok | 3,350Frs. | Montreal | 2,400Frs. |
| Colombo | 4,150Frs. | Oslo | 2,010Frs. |
| Singapour | 3,350Frs. | Toronto | 2,700Frs. |
| Kualalumpur | 3,400Frs. | Nepal | 4,820Frs. |
| Madras | 4,750Frs. | | |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

ஈழமுரசு
Eelamurasu Weekly

# ஆயிரம் கருத்துக்கள் மலரட்டும்

பத்திரிகைகள் சமூகப்பொறுப்புள்ளவை. சமூக முன்னேற்றத்திற்கு பங்களிப்பு செய்யவேண்டிய கடமையைத் தம்மகத்தே கொண்டவை சமூகப் பொறுப்புள்ள பத்திரிகையாளர் எவரும் பத்திரிகையினை வெறும் வியாபாரமாகக் கருதமுடியாது.

எமது தாயகத்திலே நடைபெறும் உன்னதமான விடுதலைப் போராட்டத்திலே போராளிகளும், மக்களும் குதித்துள்ள இவ்வேளையில், அப்போராட்டத்திற்கு பலம் சேர்க்கும் வகையில் செயற்படவேண்டியது தமிழீழ மக்கள் மத்தியில் இருந்து வெளிவரும் ஒவ்வொரு பத்திரிகையினதும் கடமையாகிறது. இதனால் 'நடுநிலைமை' என்று போலி முகம் காட்ட நாம் விரும்பவில்லை,

உண்மையில் நடுநிலைமை என்று ஒன்று இருக்க முடியாது. ஒவ்வொரு பத்திரிகையும் செய்திகளையும் ஏனைய ஆக்கங்களையும் வெளியிடும் விதத்திலேயே அதன் சார்புத் தன்மை தெரிந்துவிடும். இந்த வகையில் ஈழமுரசு என்றும் போராட்டத்தின் பக்கமே. ஈழமுரசு வாசகர்களின் பத்திரிகையாக மிளிர வேண்டும் என்பதே எமது அவா. ஆயிரம் கருத்துக்கள் இங்கு மலர வேண்டும் என்பதே எமது அவா. மக்களின் வாழ்வுடன் தொடர்புபட்ட அனைத்துத் துறை சார்ந்தும் கருத்துக்கள் பரிமாறப்பட வேண்டும். பத்திரிகை ஆசிரிய பீடத்திற்கும் வாசகர்களிற்கும் இடையே இருக்கக்கூடிய இடைவெளி மிகக் குறைக்கப்பட வேண்டும். இது வாசகர்களின் பங்களிப்பு மூலமே சாத்தியமாக முடியும்.

இது உங்கள் பத்திரிகை. உங்கள் ஆக்கங்களும் கருத்துக்களும் ஈழமுரசுக்கு வளம் சேர்க்கட்டும்.

இது ஈழமுரசு முதல் இதழ் வெளியிடப்பட்ட போது எங்கள் ஸ்தாபக ஆசிரியர் கஜனால் எழுதப்பட்ட ஆசிரியர் தலையங்கம். இது எழுதப்பட்டு இன்றுடன் நூறு வாரங்கள் கடந்து விட்டன. இந்த நூறுவார காலத்தில் ஈழமுரசு எவ்வளவு தூரம் தனது நோக்கத்தில் வெற்றியடைந்திருக்கின்றது என்பதை எமது ஆசிரியர் கஜன் சிறீலங்கா அரசின் கைக்கூலிகளால் கொல்லப்பட்ட போது எமது வாசகர்கள் எழுத்தாளர்கள் பத்திரிகையாளர்கள் எழுப்பிய கண்டனக் குரல்கள் நீட்டிய ஆதரவுக்கரங்கள் என்பவற்றிலிருந்தும் பத்திரிகை தொடர்பான கருத்துக் கணிப்பு என்று சிலவாரங்களுக்கு முன் வைத்த போதும் வாசகர்களிடமிருந்து வந்து குவிந்த கருத்துக்களில் இருந்தும் எம்மால் தெரிந்து கொள்ள முடிந்தது.

ஆசிரியர் பீடத்திற்கும் வாசகர்களுக்கும் உள்ள இடைவெளி மிக மிகக் குறைக்கப்பட வேண்டும் என்ற கஜனது நோக்கத்தில் அவர் எவ்வளவு தூரம் வெற்றி கண்டிருந்தார் என்பதை, அவரது இழப்பு, குறிப்பாக ஆசைத்தம்பியின் இழப்பு வாசகர்களுக்கு எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தியதென்பதை அவர்கள் தெரிவித்த பிரதிபலிப்புகளில் இருந்து எம்மால் உணர முடிந்தது.

ஈழமுரசு இன்று ஒரு மக்கள் பத்திரிகையாக வளர்ந்து இருக்கின்றது என்றால் அதன் ஆணிவேராக அச்சாணியாக நின்று செயற்பட்டவர் கஜன். மாற்றுக் கருத்துக் கொண்டவர்களையும் தன் கருத்தால் அரவணைத்து ஈழமுரசின் இலட்சியப் பயணத்திற்கு துணை சேர்த்தவர் அவர்.

இன்று அவருடைய வித்துடல் எம் கண்பார்வைக்கு மறைந்து போய் பாரிஸ் மண்ணில் விதைக்கப்பட்டாலும், ஈழமுரசின் அமைப்பு, இலட்சியம், நோக்கம் என்ற வடிவத்தில் அவர் எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றார். அவர் வழியில் நாம் தொடர்ந்தும் ஈழமுரசை மக்கள் பத்திரிகையாய் போராட்டத்திற்கு பலம் சேர்க்கும் பத்திரிகையாய் வெளிக்கொணர்வோம் என்று உறுதி கூறும் அதே நேரம் எங்கள் இலட்சியப் பயணத்தில் இணைந்து கொள்ளுமாறு வாசகர்கள் எழுத்தாளர்கள் பத்திரிகையாளர்கள் மற்றும் பல்துறைசார்ந்த அறிஞர்கள் உட்பட்ட அனைத்து தரப்பினரதும் ஆதரவையும் ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கின்றோம்.

# ஈழமுரசு சிறப்பிதழுக்கு ஈழநாதம் வாழத்துச் செய்தி

தமிழர் தாயகத்தில் இருந்து பல்லாயிரம் மைல்களுக்கப்பால் நூறு வாரங்களாக ஒரு தமிழ்ப்பத்திரிகை வெளிவந்து கொண்டிருப்பதையிட்டு பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம். வாரம் தோறும் அதிக பக்கங்களுடன் வெளிவந்து கொண்டிருக்கும் இவ் வார இதழ் பலவாறு தனது பணிகளை புலம் பெயர்ந்த மேற்குலகில் வாழும் தமிழ் மக்களுக்கு வழங்கி வருகின்றது. இந்த ரீதியில் தமிழீழப் பிரதேசம் உட்பட இலங்கை அரசியல், ராணுவ, சமூக மற்றும் இலக்கியம் சார்ந்த விடயங்களோடு சர்வதேசம் தொடர்பான பல்வேறு அம்சங்களையும் விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சியையும் வழங்கி வருவதும் அதன் முக்கிய பணிகளாகும். இதே நேரம் அதனைத் தமிழ் மொழி மூலம் வழங்கி வருவதும் இதன் சிறப்பான பணியாகும். அதிலும் குறிப்பாக தமிழீழப் போராட்டத்திற்கு எதிராக பெருமெடுப்பில் உண்மைக்கு மாறான பிரச்சாரத்தை மேற்கொண்டுள்ள சிறீலங்கா அரசின் சுயரூபத்தை வெளிக்காட்டும் வகையில் தமிழீழப் போராட்டம் குறித்தும் இன்றைய கள நிலவரம் குறித்தும், பௌத்த சிங்கள பேரினவாத அரசு மேற்கொண்டுள்ள இன ஒடுக்குமுறை குறித்தும் உண்மை நிலையை வெளிக்கொண்டு வருவதில் இப் பத்திரிகை பெரும்பங்காற்றி வருகின்றது. இந்த வகையில் புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்களுக்கு பெரும் தொண்டாற்றி வருவதோடு, தமிழீழத்தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதிலும் பங்காற்றி வரும் ஈழமுரசு வாரப் பத்திரிகை, தனது பணிக்காக பெரும் அர்ப்பணிப்புக்களைச் செய்துள்ளது. இதன் உச்சக்கட்டமாக அதன் ஆசிரியர் கந்தையா கஜேந்திரன் தனது உயிரை அர்ப்பணிப்பு செய்ய வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

இவ்வாறாக பல இன்னல்களையும் சவால்களையும் கடந்து தனது பணியைத் தொடரும் ஈழமுரசு பத்திரிகை மென்மேலும் தனது சேவையைத் தமிழ் மக்களுக்கு தொடர எமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம். அத்தோடு நாம் தமிழீழத்தில் இருந்து வெளிநாட்டில் இவ்வாறு தமிழ் மக்களுக்கு சேவையாற்றும் பத்திரிகை ஒன்றிற்கு வாழ்த்துச் செய்திகள் கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

நன்றி

ஈழநாதம்
தமிழீழம்

# வாழ்த்துகிறேன்

ஈழமுரசு பத்திரிகையின் நூறாவது இதழ் சிறப்பிதழாக வெளிவருவதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி

இந் நேரத்தில் இவ் வெற்றி இச் சாதனை குறித்து மகிழ்ச்சியடைய ஸ்தாபக ஆசிரியர் கஜன் இல்லையே என்பது உள்ளத்தை நெருடுகின்றது.

ஈழமுரசு தனது பணியினை தொடர்ந்தும் ஆரம்பிக்கப்பட்ட நோக்கத்திற்கு துணை போகும் என்ற அசையாத நம்பிக்கை எனக்கு உண்டு.

ஈழமுரசுவின் பணி சிறந்து பல்லாயிரம் இதழ்கள் வெளிவர எனது இதயபூர்வமான வாழ்த்துக்கள்.

ஆசிரியர்
தமிழினி

# வவுனியா வேப்பம்குளம் தடுப்பு முகாமில் குழந்தைகள் உட்பட 13 பேர் மரணம்

வவுனியா நகரத்திலுள்ள வேப்பங்குளம் தடுப்பு முகாமில், சிறீலங்கா படையினரால் சிறை வைக்கப் பட்டுள்ள ஆயிரக்கணக்கான வடபகுதி மக்களில் நான்கு குழந்தைகள் உட்பட 13 பொது மக்கள் அநியாயமாக மரணமடைந்துள்ளனர்.

கடந்த ஒக்டோபர் 22ம் திகதியில் இருந்து வடக்கிலிருந்து வவுனியா நோக்கி வரும் மக்களை, சிறீலங்கா படையினர் சிறைப்பிடிக்கத் தொடங்கியதன் பின், இரண்டு கைக் குழந்தைகள், இரண்டு சிறுவர்கள் உட்பட 13 பேர் உரிய மருத்துவ வசதி, உணவு வசதி இல்லாத காரணங்களால் மரணமடைந்துள்ளனர்.

பிறந்து இரண்டு மாதம் மட்டுமேயான நவரத்தினம் துஷ்யந்தன், பத்துமாதம் மட்டுமே உடைய நித்தியானந்தன் கௌசிகா, ரி.ஜெரோனிக்கா (3), ஜெசிந்தன் (2), மூக்கையா சுசித்தா (10), முத்தையா தம்பித்துரை (60), பன்னீர்செல்வன் (42), சின்னு ராகவன் (63), சுப்பையா (67), அர்சுனன் சுந்தரலிங்கம் (53), மயில்வாகனம் கந்தசாமி (55), துரைசாமி (49), சோமசுந்தரம் அன்னப்பிள்ளை (77) ஆகியோரே மரணமடைந்தவர்களாவர்.

தொற்று நோய்களுக்கு உள்ளான மக்களை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல இராணுவத்தினர் தொடர்ந்து மறுத்துவருவதால் இவ் அநியாய மரணங்கள் சம்பவித்துவருகின்றன.

நித்தியானந்தன் கௌசிகா என்ற சிறுமியின் மருத்துவ அறிக்கையில் காலதாமதம் செய்யாமல் வைத்திய சாலைக்கு கொண்டுவந்திருந்தால் இவரது மரணத்தை தவிர்த்திருக்கலாம் என வைத்திய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## ஸ்ராஸ்பூர்க்...

கைக்கு நாடு கடத்தப்பட்டனர்.

இவர்கள் இருவரும் கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு சென்றடைந்த பின்பு இதுவரை இவர்களைப்பற்றிய தகவல்கள் எதுவும் உறவினர்களுக்கு கிடைக்கவில்லை. முன்னர் இவர்கள் கொழும்பில் தங்கியிருந்த போது பல தடவைகள் பொலிசாரால் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவ் இருவரினதும் நாடு கடத்தலை ஸ்ரார்ஸ்பூர்க்கிலுள்ள உதவி வழங்கும் நிறுவனங்கள் கண்டித்துள்ளன.

# சிறந்ததொரு வாழ்க்கை அனுபவம் தப்பி வந்த ரத்வத்தை சொல்கிறார்

'வாழ்கையில் இது நல்லதொரு அனுபவம்' என கடந்த சனிக்கிழமை வவுனியாப்பகுதியில் இயந்திரக் கோளாறு காரணமாக உலங்கு வானூர்தி தரையிறக்கப்பட்டு அங்கிருந்து தப்பி வந்த பாதுகாப்பு பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார். விடுதலைப்புலிகளும் படையினரும் நடமாடாத சூனியப் பிரதேசத்தில் உலங்கு வானூர்தி தரையிறக்கப்பட்ட சம்பவம் நாட்டில் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. தானும் சக இராணுவ அதிகாரிகளும் தப்பி வந்தது தொடர்பாக கருத்து வெளியிட்ட ரத்வத்தை இது எனக்கு சிறந்ததொரு வாழ்க்கை அனுபவம் என்றும் காட்டுப் பகுதியூடே உள்ளூர் கிராம வாசிகளின் உதவியுடன் தான் நடந்து வந்த அனுபவம் குறித்து மேலும். அவர் குறிப்பிடுகையில் படைவீரர் காட்டுக்குள் இந்த மாதிரியான கடுமையான சூழ்நிலையில் பணியாற்றும் அனுபவத்தையும் அதே அளவில் பெற்றுக்கொள்ள முடிந்தது எனவும் குறிப்பிட்டுள்ளார். இச் சம்பவம் விடுதலைப்புலிகள் விடுத்த செய்திக் குறிப்பில் ரத்வத்தையும் ஏனைய இராணுவத்தளபதிகளும் மயிரிழையில் உயிர்தப்பி விட்டனர் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## பிரித்தானிய...

வருகைதந்த அவ் அதிகாரிகள், அரச அதிபர் கேசுலேஸ், மற்றும் உயர் அதிகாரிகளைச் சந்தித்துப் பேசியுள்ளனர். வவுனியாவிலுள்ள நலன்புரி நிலையங்களுக்கு விஜயம் செய்து நிலமைகளை நேரில் கண்டறிந்தார்கள். இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் வசிக்கும் மக்களின் வாழ்க்கை நிலமைகள், இடம் பெயர்ந்துள்ள மக்களின் நிலை குறித்தும் கேட்டுத் தெரிந்து கொண்டார்கள்.

பிரித்தானிய அகதிகள் கவுன்சிலின் சர்வதேச தலைமை அதிகாரி மல்கம் றோஜர்ஸ், நிறைவேற்று அதிகாரி றிச்சாட் விக் ஆகியோரே அங்கு சென்றவர்களாவர்.

# உள்ளூராட்சித் தேர்தல்கள் அறிவிப்பு அரசியல் பொறியாகும் - *விடுதலைப்புலிகள்*

யாழ் குடாநாட்டில் சிறீலங்கா அரசு உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்த முயல்வது, தமிழீழ மக்களுக்கு வைக்கப்பட்டுள்ள கபடமான அரசியல் பொறியாகும். எனவே தமிழீழ மக்கள் இதில் சிக்கிக் கொள்ளக்கூடாது. இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு, சிறீலங்கா அரசின் உள்ளூராட்சி தேர்தல் அறிவிப்பினைத் தொடர்ந்து வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கத்துள்ளது.

சிறீலங்கா இராணுவ இயந்திரத்தின் கீழ், யாழ்ப்பாண மக்கள் அடிமைகள் போல நடத்தப்படுவதுடன், அடிப்படை உரிமைகளும் மறுக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் ஆயுத முன்னெடுப்பில் அரச நிர்வாக அலகுகளை எம் மக்கள் மீது திணித்துவிடும் இந் நாசகார முயற்சியினை வன்மையாகக் கண்டிப்பதுடன், இதனால் ஏற்படும் பாரதூரமான விளைவுகளுக்கு சிறீலங்கா அரசே பொறுப்பேற்க வேண்டும் என்ற எச்சரிக்கையையும் விடுகின்றோம்.

வடக்கில் ஆக்கிரமிப்புக்கு எதிராக புலிகளின் போராட்டம் தொடர்வதால், படையினர் தொடர்ந்தும் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். எனவே குடாநாட்டில் ஒரு போர்ச் சூழலே காணப்படுகின்றது. இந்த உண்மையை சர்வதேச சமூகம் உணர்வதால் அதிருப்தி அடைந்துள்ள மேற்குலக நாடுகள், புலிகளுடன் பேசி தீர்வை எட்டுமாறு வலியுறுத்தி உள்ளதுடன் சிறீலங்காவிற்கான அபிவிருத்தி நிதியையும் நிறுத்தியுள்ளன.

இந்த நிலை சந்திரிகா அரசுக்கு பெரும் சிக்கலைத் தோற்றுவித்துள்ளது. வடக்கில் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகள் அரசிற்கு எவ்வித அரசியல் வெற்றியையும் கொடுக்காமையினால், இதனைச் சமாளிக்கும் முகமாக சதித் திட்டத்துடன் இவ் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்த முயல்கின்றது.

தமிழ் பகுதிகளில் குடிசார் (சிவில்) நிர்வாகத்தை ஏற்படுத்துவது என்ற சிறீலங்கா அரசின் ஏமாற்றுத் தலத்தை உணர்வது தமிழீழ மக்களுக்கு புதிய அனுபவம் அல்ல. எனவே அம் மோசடியில் சிக்கிக் கொள்ள வேண்டாம் எனக் கூறிக் கொள்கிறோம் என அவ் அறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

# மட்டக்குளியில் ஒதுங்கிய சடலங்கள் தமிழருடையதா?

கொழும்பு, மட்டக்குளி கடற்கரையில் அழுகிய நிலையில் கரை ஒதுங்கிய மூன்று சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இச் சடங்களில் இரண்டு இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

அவற்றில் ஒரு சடலம், பேலியகொட பொலிஸ் நிலையத்தில் கைதியாக இருந்த சிங்களவர் ஒருவருடையது எனத் தெரிய வருகிறது. ஏனைய இரு சடலங்களும் தமிழருடையதாக இருக்கலாம் என அஞ்சப்படுகின்றது. ஆனால், பேலியகொட பொலிசார் தமது காவலில் இருந்த சிங்களக் கைதி ஒருவர் காணாமல் போயிருந்ததாகவும், அவரது சடலமே கண்டுபிடிக்கப்பட்ட சடலங்களில் ஒன்று எனத் தெரிவித்துள்ளனர். பொலிசாரே இக்கொலைகளைச் செய்துவிட்டு உடல்களை கடலில் எறிந்திருக்கலாம் என இப் பகுதி மக்களிடையே பீதி ஏற்பட்டுள்ளது.

இதே வேளை, கொழும்பில் கைதான பல நூற்றுக் கணக்கான அப்பாவித் தமிழர்களின் உறவினர்கள் இக் கொலைச் செய்தியால் பீதியடைந்துள்ளனர்.

# கொக்கிளாய் முகாம் கட்டளை அதிகாரி பலி

கொக்கிளாய் பகுதியிலுள்ள சிறீலங்கா இராணுவ படை முகாமின் கட்டளை உயர் நிலை அதிகாரி கடந்த மாத இறுதியில் பலியாகியுள்ளார்.

இவரது மரணத்திற்கு விபத்து என அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், புலிகளின் தாக்குதல் ஒன்றிலேயே இவர் கொல்லப் பட்டிருக்கலாம் எனச் செய்திகள் வெளியாகி உள்ளன.

இராணுவத் தரப்பினர் வெளியிட்டுள்ள அறிக்கையின் படி லெப்டினன்ட் கேர்ணல் விக்கிரம திலகா தனக்கு கீழ் கடமையாற்றும் அதிகாரிகளுடன் இயந்திரப் படகு ஒன்றில் கொக்கிளாய் வாவி ஊடாக பயணம் செய்து கொண்டிருந்த போது ஏற்பட்ட விபத்தில் பலியானார் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஆனால், பிறிதொரு தகவலின்படி இவர் பயணம் செய்த படகு புலிகளின் தாக்குதலுக்கு உள்ளானபோதே இவர் கொல்லப் பட்டதாகவும், இவரது உடல் பல மணிநேர தேடுதலின் பின்னரேயே கண்டுபிடிக்கப் பட்டதாதவும் தெரிகிறது.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து கீழ் நிலை சிப்பாய்களின் மனோநிலை பாதிப்படைந்து காணப்படுவதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி தெரிவிக்கின்றது.

# முல்லைப்படைத்தள வீழ்ச்சி ஆய்வு முடிந்தது

கடந்த யூலைமாதம் விடுதலைப் புலிகளின் வீரம் செறிந்த தாக்குதல்களினால் வீழ்ச்சி உற்ற முல்லைப் படைத்தள வீழ்ச்சி குறித்து ஆராய்வதற்காக, சிறீலங்கா அரச பாதுகாப்பு உயர்பீடத்தால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு, தனது விசாரணைகளை முடித்துக் கொண்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இக் குழுவின் விசாரணை அறிக்கை இராணுவத் தளபதி ரோகான் தலுவத்த இடம் கையளிக்கப் பட்டதாகவும் அவ் அறிக்கையில், பல உயர் அதிகாரிகளின் மெத்தனப் போக்காலேயே படைத்தளம் விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சி அடைந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

1.5 பில்லியன் ரூபா பெறுமதியான ஆயுத தளபாடங்கள் புலிகளால் எடுத்துச் செல்லப் படுவதற்கு போதிய கால அவகாசம் இருந்ததும் அவ் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது ஒரு மேஜர் ஜெனரல் தரத்தில் உள்ளவராலும், இரண்டு பிரிகேடியர் தரத்தில் உள்ளவர்களாலும் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

# பொலிஸ் அதிகாரி உதவியுடன் கொழும்பை படம்பிடிக்கும் புலிகள்

விடுதலைப்புலிகளின் உளவுப் பிரிவைச் சேர்ந்தவர்கள், கொழும்பின் முக்கிய மையங்களை எல்லாம் படம் பிடித்து வருவதாகவும், இதற்கு பொலிஸ் உயர் அதிகாரி உதவி வருவதாகவும் கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மேற்படி பொலிஸ் அதிகாரி புலிகளின் இழக்குப் பொறுப்பாளர் ஒருவருடன் நெடுங்கால தொடர்பு கொண்டவராக இருப்பதாகவும், கொழும்பில் தங்கி புலிகள் படம் எடுப்பதற்கு இவரே உதவி செய்து கொடுத்து வருவதாகவும், பாராளுமன்றக் கட்டிடம் மற்றும் அலரிமாளிகை உள்பட பல கேந்திர முக்கியம் வாய்ந்த இடங்கள் இவ்வாறு படம் எடுக்கப் பட்டதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# யாழ் குடாவில் காணாமல் போனவர்களில் பன்னிரண்டு பொதுமக்களின் விபரங்கள்

சிறீலங்காப் படைகளால் ஆக்கிரமிக்கப் பட்டுள்ள யாழ் குடாநாட்டில் இராணுவத்தால் கைது செய்யப்பட்டவர்களில் காணாமல் போன 12 பொது மக்களின் விபரங்கள்,

தங்கவேலு பரமநாதன் (20) வறிய புலம், சுன்னாகம்., நடராசா சிறீதரன் (22)சுன்னாகம் கிழக்கு, செல்வராஜா கோபிராஜ் (18) மாணவன் - முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை, செல்வராசா பிரதீபன் (20) மூன்றாம் ஒழுங்கை கொழும்புத்துறை, காசித்தம்பி தருமதாசன் (20), மீசாலை கிழக்கு, தங்கவடிவேலு ராஜேந்திரகுமார் - அல்வாய், செல்வி சிவாந்தி ஆறுமுகம் - இரண்டாம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை, முத்துத்தம்பி கனகரத்தினம் (44) ஐந்து பிள்ளைகளின் தந்தையான இவர் மட்டுவிலில் கைது, மனோகரன் சுப்பிரமணியம் - யாழ்நகரில் கைது, ஜெகதீஸ்வரன் ஜெகதீபன் - யாழ்நகரில் கைது, சின்னையா சோமஸ்கந்தன் (25) யாழ் பல்கலைக்கழக மூன்றாம் வருட மாணவன் _ மட்டுவிலில் கைது, செல்லத்துரை செல்வகுமார் (18) - மாணவன், யாழ் வேம்படிச் சந்தியில் கைது.

# அமெரிக்க கடற்படையின் சீல்ஸ் சிறீலங்கா படைக்கு பயிற்சி

அமெரிக்க கடற்படைப் பிரிவில் ஒன்றான 'சீல்ஸ்' சிறீலங்கா படையினருக்கு விசேட பயிற்சி அளித்துள்ளதாக தெரியவருகிறது. சிறீலங்காவின் தென்பகுதி தங்காலைக் கடற்பரப்பில் மேற் கொள்ளப்பட்ட இப் பயிற்சி நிறைவு பெற்றுள்ளத்ாகவும் தெரியவருகிறது.

அமெரிக்க கடற்படையின் விசேட படைப்பிரிவான சீலஸ், இப் பயிற்சியை சிறீலங்கா படையினருக்கு கொடுக்கும் வேளையில், சிறீலங்காவின் தென்பகுதி காடுகளில் அமெரிக்க கிரீன் பெரட் தரைப் படைப் பிரிவும் பயிற்சியை அளித்து வருவது குறிப்பிடத் தக்கது.

# தென்னிந்தியப் படகுகள் கொழும்புவர மீண்டும் தடை

தென்னிந்திய தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து கொழும்புத் துறைமுகத்திற்கு வந்து செல்லும் படகுகளுக்கு மீண்டும் சிறீலங்கா அரசால் தடை விதிக்கப்பட்டுள்ளது. இப் படகுகள் மூலம் விடுதலைப் புலிகள் கொழும்புத் துறைமுகத்துக்குள் ஊடுருவலாம் என்ற அச்சமே இத் தடை உத்தரவுக்குக் காரணம் எனச் சொல்லப் படுகின்றது.

சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா, திடீரென பிறப்பித்த உத்தரவை அடுத்து தொடர்ந்து தான் இத் தடை உத்தரவை அறிவித்துள்ளதாக சிறீலங்கா கப்பல்துறை அமைச்சர் அஷ்ரப் தெரிவித்துள்ளார். இத் தடை உத்தரவால் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப் படும் பல பொருட்களின் விலைகளும் சடுதியாக அதிகரிப்பதாக தெரியவருகிறது.

ஈழமுரசின் மகத்தான பணி தொடர எமது வாழ்த்துக்கள்

தமிழ் - சிங்கள - ஹிந்தி - மலையாள வீடியோ, ஓடியோ, சிடி மற்றும் தமிழ் சிங்கள புத்தகங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் அனைத்தும் விற்பனைக்கும் வாடகைக்கும் உண்டு.

வெள்ளிக்கிழமை தோறும் சகல இலங்கை மரக்கறி வகைகள், கடல் உணவு வகைகளையும் பெற்றுக்கொள்ளலாம்

Asia Music Centre

*71, Rue Louis Blanc, 75010 Paris. M°: La Chapelle*

*Tel: 01 40 34 80 60*

# சிறீலங்காவின் நவீன ஆயுதக் கொள்வனவுகள் அரசு மக்களுக்குப் பூச்சாண்டி காட்டுகிறது

## முன்னாள் இராணுவப் பிரிகேடியர் விபுல் பொதோஜு

விபுல் பொதோஜு; இவர் சிறிலங்கா இராணுவத்தில் ஒரு முன்னாள் பிரிகேடியர் 1990-ஆம் ஆண்டில், அரசியல் வாதிகளின் விருப்பு வெறுப்புகளுக்காக அப்பாவி மக்களைக் கொல்வதில் அர்த்தமில்லை எனக் கூறி அரசுடன் முரண்பட்டுக் கொண்டு பதவியில் இருந்தும் விலகினார். இவர் கடந்த 08.12.96 திகதி வெளியான 'ராவய' என்ற சிங்களப் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இருந்து ஒரு பகுதியை இங்கே தருகிறோம். சிறீலங்கா இராணுவத்தின் தற்போதைய நிலையை நகைச்சுவையோடு வெளிப்படுத்தினார் அவர்.

**கேள்வி:** முன்னாள் இராணுவத் தளபதி என்கின்ற முறையில் தற்போதைய யுத்தத்தின் நிலை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:** யுத்தத்தில் குறிப்பிடக்கூடிய சாதக நிலைகள் எதையும் நான் காணவில்லை. அத்துடன் யாழ்ப்பாணத்திலும், கிளிநொச்சியிலும் பலத்தை நிலைநிறுத்திக் கொள்ள படைகளிடம் போதிய ஆட்கள் இல்லை. இன்று இராணுவ நகர்வு இடை நடுவில் நிற்கிறது. இராணுவத்துக்கு புதிய ஆட்களை சேர்த்துக்கொள்ள எடுத்த முயற்சியும் சாத்தியமாகவில்லை. இராணுவத்தில் ஆட்கள் தட்டுப்பாடாக இருக்கின்றது. என்பதை, இராணுவத்தை தேடிப் பிடிக்கும் அவர்களது முயற்சியிலேயே எம்மால் நன்கு அறிந்து கொள்ள முடிகின்றது. யாழ்ப்பாணத்தில் இராணுவம் தொடர்ந்து நிற்க வேண்டுமானால், கிளிநொச்சி _ வவுனியா தரை வழிப்பாதை திறக்கப்பட வேண்டும். தற்போதைய நிலையில் அது சாத்தியமேயில்லை. அடுத்த பக்கத்தில் கிழக்கு நிலைமைகள் மிகவும் மோசமடைந்து செல்கிறது. புலிகள் அங்கு தம்மை நிலை நிறுத்தி வருகிறார்கள். பல பொலிஸ் நிலையங்களையும் திறந்து சிவில் நிர்வாகத்தையும் ஏற்படுத்தி வருகிறார்கள்.

**கேள்வி:** இராணுவத்திற்கு படைகளைத் திரட்டும் முயற்சி தொடர்ந்து தோல்வியிலேயே முடிகின்றது. இதற்கு என்ன காரணம் என நினைக்கிறீர்கள்?

**பதில்:** யாழ்ப்பாணத்தை இராணுவம் பிடித்துவிட்டதால் புலிகள் அழிந்து போய்விடவில்லை. அவர்கள் முல்லைத்தீவைக் கைப்பற்றி பெரு வெற்றி சூடினார்கள். புலிகள் பலவீனமடைந்து விட்டார்கள என்ற அரசின் பிரச்சாரத்தை மக்கள் இன்று ஏற்றுக்கொள்ளும் நிலையில் இல்லை. மக்கள் சகலதையும் அறிந்தே இருக்கிறார்கள். புலிகளின் ஆட்பலத்தை குறைத்தால் மட்டுமே நாம் ஓரளவு வெற்றியை எதிர்பார்க்கலாம். யுத்தத்தின் உண்மை நிலையை மக்களுக்கு மூடிமறைத்து தெரியப்படுத்தாமல் இருப்பதால் பல எதிர் விளைவுகளே ஏற்படுகின்றன. இன்றைய நிலைக்கு இதுவே காரணம் என நான் நினைக்கின்றேன்.

**கேள்வி:** தப்பி ஓடிய இராணுவத்தினரை மீண்டும் படையில் சேர்த்துக் கொள்வதால் அரசுக்கு எவ்வகை இலாபம் கிட்டும் என எதிர்பார்க்கிறீர்கள்?

**பதில்:** நான் முன்னைய கட்டளையிடும் ஒரு அதிகாரி என்ற வகையில் கூறுகிறேன், தப்பி ஓடியவர்களை மீண்டும் படையில் சேர்த்துக் கொள்வதால் எந்தவித இலாபமும் கிடைக்காது. தப்பி ஓடியவர்கள், பிடிபடும் போது சொல்கிறார்கள், தாங்கள் வசதிக் குறைபாடுகளால்தான் தப்பி ஓடியதாக. ஆனால் இதில் எவ்வித உண்மையும் இல்லை. உண்மையில் புலிகளின் தாக்குதல்களுக்கு முகங் கொடுக்க அஞ்சியே இவர்கள் தப்பி ஓடியிருக்கிறார்கள். இவர்கள் மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டால், வெகு இலகுவிலேயே சண்டைக் களங்களிலிருந்து தப்பி ஓடக் கூடியவர்கள். இவர்களது நடவடிக்கைகளால் தொடர்ந்து சண்டையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் இராணுவத்தினரின் மனோநிலையும் பாதிப்புக்கு உள்ளாகும்.

**கேள்வி:** இராணுவம், பலம் குன்றி சிரழிந்து கொண்டிருக்கும் இன்றைய நிலையில், பிரபாகரனைத் தேடித் தாக்கிக் கொல்வதற்கு இலக்கு வைக்கிறது அரசு; இது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:** அப்படி பிரபாகரனுக்கு இலக்கு வைத்து ஏதாவது செய்ய முடிந்தால் நல்ல விடயம் தான். அப்படியானால் இராணுவத்திற்கு ஆட்பலமே தேவையில்லை. புதிதாக ஆள் சேர்க்கும் அவசியமும் இல்லை. ஆனால் நிலமை என்ன என்றால், வளைகுடா யுத்தத்திலேயே இது போன்ற அதிநவீன யுத்த தளபாடங்களை வைத்து சதாம் குசையினை இலக்கு வைத்தார்கள். இதனால் சாதகமான பதில் எதுவும் கிடைத்ததா?, ராடார் உதவியுடன், பதுங்கு குழிகள் இருக்கும் இடங்களைக் கண்டு பிடித்து குண்டுகளைப் போட்டார்கள். யுத்தம் முடிவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் கூட மிக நவீன விமானங்கள் மூலம் சதாம் இருப்பதாக கருதிய ஒரு இடத்தின் மீது தாக்குதல் நடத்தினார்கள். ஆனால்,



ஸ்ரீலங்கா அரசு வாங்கிய 'ஸ்மாட் பொம்'

இடம் அழிந்ததே தவிர சதாம் அங்கு இருக்கவில்லை.

அவர்கள், கொல்ல நினைத்த சதாம் பற்றி அமெரிக்க உளவுத் துறைக்கு கிடைத்திருந்த தகவல்களில், ஒரு விகிதம் கூட பிரபாகரன் பற்றி எமது உளவுத்துறை அறிந்து வைத்திருக்கவில்லை. பிரபாகரனை இலக்கு வைத்து கொல்வமுதல், முல்லைச் சமரில் அவர்கள் 52 தொன் எடை கொண்ட யுத்த தாங்கி ஒன்றையும் கொண்டு சென்றார்கள். அது இன்று முல்லைத்தீவு காடுகளுக்குள் வைக்கப்பட்டுள்ளது. அதை முதலில் தேடி அழியுங்கள். உங்களின் அதிநவீன ஆயுதங்கள் எல்லாவற்றையும் பயன்படுத்தி அதனை முதலில் செய்யுங்கள் பார்க்கலாம். உங்களுடைய ஸ்மாட் குண்டுகள், லேசர் கருவிகள், மற்றும் இலக்கு வைத்துத் தாக்கும் கருவிகள் மூலம் காட்டுக்குள் எங்கோ இருக்கும் பிரபாகரனின் குழியை இலக்கு வைப்பது எப்படி? இன்றுவரை பதுங்குகுழிக்குள் சென்று வெடிக்கும் குண்டுகள் கண்டு பிடிக்கப்படவில்லை. இவர்கள் போடுகின்ற குண்டுகள் எல்லாம் காட்டு மரங்களைத்தான் அழிக்கப்போகின்றன.

எந்த ஒரு அரசும், யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதில் ஆசைதான். அதற்காக வெறும் மாயைகளை மட்டுமே தம்பி இருக்கக் கூடாது. சென்ற வருடம் கூட யாழ்ப்பாணத்தில் சண்டை நடந்து கொண்டிருந்த போது, ஒரு கதை வந்தது பிரபாகரனின் இரத்தத்தின் தன்மையை அடையாளம் கண்டு, அவர் இருக்கும் இடத்தை கண்டுபிடித்து அவரை அழிக்க முடியுமென்று; இதுவரை எதுவுமே நடக்கவில்லையே. எல்லாமே மக்களை ஏமாற்றும் ஒரு பூச்சாண்டிதான்.

**கேள்வி:** இலக்கு வைத்துத் தாக்கும் ஆயுதங்கள் மூலம் பிரபாகரனின் இரண்டு மெய்ப் பாதுகாவலர்கள் கொல்லப்பட்டதாக இராணுவம் கூறுகிறதே. அப்படியானால் அது பொய் என்கிறீர்களா?

**பதில்:** இந்தச் செய்தியை சிறீலங்காவின் உளவுத்துறை தான் சொல்லுகிறது. குண்டு போட்ட போது இருவர் இறந்திருக்கலாம். அவர்கள் பிரபாகரனின் மெய்ப் பாதுகாவலர்கள் என்று இவர்கள் எப்படிக் கண்டு கொண்டார்கள்? பாதுகாப்பு வட்டாரத்தைச் சேர்ந்தவர்கள் நேரில் போய்ப் பார்த்தார்களா? தற்செயலாக குண்டு வீச்சில் புலிகளைச் சேர்ந்தவர்கள் கொல்லப்பட்டாலும் கூட தங்களது நவீன ஆயுதங்களாலேயே அவர்கள் இறந்தார்கள் என்று கூறுகிறார்கள்.

**கேள்வி:** தற்கால நவீன ஆயுதங்களைப் பாவித்து கடந்த காலங்களில் வெற்றிகரமான தாக்குதல் எதுவும் நடக்கவில்லை என்று கூறுகிறீர்களா?

**பதில்:** நாம் கடைசியாகச் சந்தித்த மிகப் பெரிய யுத்தம், வளைகுடா யுத்தம்தான். அங்கேதான் மிக நவீன ஆயுதங்கள் பலவும், பரீட்சித்துப் பார்க்கப்பட்டன. TAKE BOMBER எனப்படும் ஒரு நவீன ஆயுதம் அங்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் மூலம் சதாமின் மாளிகை, தொலைத் தொடர்பு நிலையங்கள், என்பன அழிக்கப்பட்டன. ஆனாலும் கூட தரைப்படை இராணுவத்தின் முன்னேற்றத்தால் மட்டுமே ஈராக்கிய இராணுவத்தைத் தோற்கடிக்க முடிந்தது. பல மேற்கு நாடுகளும் தங்களது இரண்டாயிரம் விமானங்கள் மூலம் இந்த வகையான நவீன குண்டுகளை பொழிந்து தள்ளினார்கள். இதன் மூலம் எதிரிகளின் பலத்தைக் குறைக்க முடிந்ததே தவிர, தோற்கடிக்க முடியவில்லை. அங்கே புதிய நவீன ஆயுதங்களைப் பயன்படுத்தும் போது முன்னைய விளைவுகளை பரிசீலனை செய்த பின்னரே பயன் படுத்தினார்கள். ஆனால் இங்கே எதைச் செய்கிறார்கள். அன்று நான் பதவியை விட்டு விலகிய காலத்தில், தொப்பிக் கலைக் காட்டுப்பகுதியில் தாக்குதல் நடத்தினார்கள். இன்றும் அதையே சொல்லிக் கொண்டு தாக்குதல் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த இராணுவ நடவடிக்கையை 'வியட்நாம் நோய்' என்று சொல்லாம். அமெரிக்கா ஐந்தரை இலட்சம் தரைப்படையை வியட்நாமுக்குள் அனுப்பி தாக்குதல் நடத்திய போது, இதோ ஐயாயிரம் வியட்கொங் கெரிலாக்களை கொன்று விட்டோம், மூவாயிரம் கெரில்லாக்களை கொன்று விட்டோம் என்று தொடர்ந்து பொய்யான தகவல்களையே சொல்லி வந்தது அமெரிக்கா. இறுதியாக என்ன நடந்தது? வியட்நாமை விட்டு அமெரிக்கா ஓடியது தான் நடந்தது.

**கேள்வி:** வடக்கு _ கிழக்கு யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது தெறகில் பல உயர் அதிகாரிகள், இராணுவ வாகனங்கள் பலவற்றை தங்களது சொந்தத் தேவைகளுக்கு பாவித்து சுகபோகம் நடத்துகிறார்களே? இவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:** ஒரு அதிகாரி மூன்று, நான்கு வாகனங்களை தங்களது சொந்தத் தேவைகளுக்குப் பாவிப்பதே பிழை. யுத்தம் நடைபெறும் காலத்தில் அதனுடைய பொருளாதாரச் சுமைகளை சுமப்பது. சாதாரண பொது மக்கள்தான். என்பதை எல்லோரும் உணர்ந்து கொள்வது அவசியம். நான் நினைக்கிறேன் வடக்கு _ கிழக்கில் இராணுவ ரீதியில் யுத்தம் நடக்கும் அதேவேளையில், கொழும்பில் இவர்கள் பொருளாதார யுத்தத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

நன்றி: 'ராவய'

தமிழில்: மாந்தன்

ஈழமுரசின் மகத்தான பணி தொடர எமது வாழ்த்துக்கள்

தவம் வீடியோ சென்ரர்

புதிய, பழைய பாடலகள் CD, Audio க்களை மிக குறைந்த விலையில் வாங்கவும், புதிய பழைய படங்களின் ஒரிஜினல் பிரதிகளைக் குறைந்த விலையில் வாங்கவும், புதிய பழைய படங்களின் ஒரிஜினல் பிரதிகளை வாடகைக்குப் பெறவும், புதிய பழைய பாடல்களை உங்கள் விருப்பம் போல் பதிவு செய்யவும், இன்றே நாடுங்கள் தவம் வீடியோ சென்ரர்

64 rue Louis Blanc,
75010 PARIS,
FRANCE.
Tel- 01 42 09 35 53

எமது வாடிக்கையாளர்க்கு ஓர் நற்செய்தி!

மிக விரைவில் உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கள நிகழ்ச்சிகளை சிறந்த முறையில் வீடியோப் படமாக்க நீகல் வீடியோ. (இது ஒரு தவம் வீடியோ ஸ்தாபனத்தின் சகோதர ஸ்தாபனம்) மண்டபவசதி, மணவறை, ஐசிங்கேக், பூமாலை, சாப்பாட்டு வகைகள், நாதஸ்வரம் அனைத்திற்கும் தவம் வீடியோ சென்ரர்.

# டில்லிக்குப் பல்லக்குக் காவும் போக்கு தமிழக அரசியலில் அதிகம் உண்டு

**- பழ.நெடுமாறன்**

## ஈழமுரசிற்கான பிரத்தியேகப் பேட்டி

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

◈ **தமிழ் நாட்டின் கிராமப்புறங்களில் வாழும் அன்றாடச் சீவனத்துக்கே கஷ்டப்படும் மக்களிடம் தமிழீழப் பிரச்சனைகள் பற்றிய புரிந்துணர்வு உள்ளதா ?**

✪ கிராமப்புற மக்கள் மத்தியில் கிடைக்கும் பத்திரிகைகள் 'பிரச்சனையல்லாத பிரச்சினை'களை மக்கள் மத்தியில் வெளியிட்டும் 'உண்மையான பிரச்சனைகளை' திட்டமிட்டு இருட்டடிப்புச் செய்வதிலும் தமிழீழப் பிரச்சினையின் உண்மையான வடிவம் கிராமப்புறங்களிற்கு சரியாகத் தெரிய வருவதில்லை. இதற்கு பத்திரிகைகளின் போக்கே காரணம். ஆனால் மக்களிடம் தமிழீழ



மக்களுக்கு ஒரு தீர்வு கிடைக்க வேண்டும் என்ற நிலைப்பாடு உள்ளது. அவர்களுக்கு தமிழீழப் பிரச்சனைகளைப் பற்றி நாம் பத்திரிகைகளில் எழுதும் கட்டுரைகள், பொதுக்கூட்டங்கள் மூலம் சிறிது சிறிதாக அறிந்து கொள்ள நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறோம்.

◈ **ராஜீவ் கொலை வழக்கு மிகவும் நீண்டு கொண்டே செல்வதற்குக் காரணம்; தொடர்ந்தும் புலிகளை குற்றவாளிகளாகக் காட்டி, அதில் அரசியல் இலாபங்களைத் தக்க வைப்பது தான் என்று இங்குள்ள பத்திரிகையாளர்கள் பலர் கருதுகின்றனர். அப்படியான எண்ணம் தமிழ் நாட்டு; இந்திய அரசியல்வாதிகளுக்கு உண்டா ?**

✪ ராஜீவ் கொலைவழக்கினை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் அவ்வழக்கை விரைவில் நடாத்த முடியாது பல முட்டுக்கட்டைகள் போடப்பட்டுள்ளன. ஆயிரத்துக்கு மேற்பட்ட சாட்சிகளில் கடந்த ஐந்து ஆண்டுகளில், நாநூறு சாட்சிகளையே விசாரித்துள்ளார்கள். மீதிச் சாட்சிகளை விசாரிக்க மேலும் பல ஆண்டுகள் செல்லும்.

சீ.பி.ஐ புலன்விசாரணைக் குழு ஆரம்பத்திலிருந்தே புலிகளின் மேல் பழியைப் போடும் நோக்கிலேயே செயல்பட்டது. இதில் "மற்றவர்களுக்கு பங்கு உள்ளதா?" என்ற நோக்கில் அவர்கள் புலன்விசாரணை நடாத்தவில்லை.

இதே நேரம் டெல்லியில் இரு கமிசன்கள் ஜெயின், வர்மா என அமைக்கப்பட்டன. வர்மா கமிசன் மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக தனது அறிக்கையை அரசிடம் சமர்ப்பித்துவிட்டது. இதன் அறிக்கை இந்திய நாடாளுமன்றத்திலும், மக்களுக்கும் தெரியப்படுத்தப்படாது மறைக்கப்பட்டுள்ளது.

ஜெயின் கமிசன் விசாரணைக்கு முக்கிய ஆவணங்களையும், விசாரணை நடாத்தும் இடம் போன்றவற்றையும் வேண்டுமென்றே மத்திய அரசு கொடுக்காது பல முட்டுக்கட்டைகளை இட்டுள்ளது. உதாரணமாக ராஜீவ் கொலை வழக்கு எழுதப்பட்ட 'வழக்குக் குறிப்பை' தன்னிடம் ஒப்படைக்குமாறு சீ.பி. ஐக்கு ஜெயின் கமிசன் உத்தரவிட்டும் 5 ஆண்டுகளாக அதற்கு மத்திய அரசு துணையுடன் சீ.பி.ஐ மறுத்து வருகிறது.

'மடியில் கனமில்லாவிடில் இவர்கட்கு எதற்குப் பயம்?'

ஏதோ ஒரு உண்மையை இவர்கள் மறைக்கின்றார்கள் என்பதும், வேறு பலர் இதில் சம்பந்தப்பட்டுள்ளனர் என்பதும் ஜெயின் கமிசன் விசாரணைகள் மூலம் மெல்லமெல்ல மக்களுக்குத் தெரியவருகிறது. ஜெயின் கமிசன் விசாரணைகளை அந்தரங்கமாக நடாத்த உடன்படாததால் சீ.பி.ஐ வேண்டுமென்றே தனது விசாரணைகள் ஜெயின் கமிசன் முடிவுகளின் பின்பு வெளிவரும் நோக்கில் (அதாவது வி.புலிகளை குற்றவாளிகளாக்கவும், பல பெரிய அரசியல் வாதிகளை மறைக்கவும்) திட்டமிட்டே இழுத்தடிக்கிறது.

◈ **எமது தளபதி கிட்டுவின் வழக்கின் தீர்ப்பில் வி.புலிகள் சர்வதேச விதிகளை மீறாததும், இந்தியக்கடற்படையே அத்துமீறிப் பிரவேசித்ததும் தெரிய வந்துள்ளது இந்திய மக்கள் மத்தியில் எப்படியான உணர்வுகளைத் தோற்றுவித்தது. அல்லது புலிகளின் மேல் போடப்பட்ட தடா சட்டம் தவறு என்ற முடிவினை மக்கள் உணர்ந்துள்ளார்களா ?**

✪ தளபதி கிட்டு அவர்களது கப்பலை சர்வதேசக் கடற்பரப்பிலிருந்து இந்தியக் கடற்பரப்பிற்கு இழுத்துவந்து அவர்கள் மீது அபாண்டமான பழிகளைச் சுமத்தி அவரைக் கைது செய்து ஒரு தனிவிசாரணை செய்வது என்ற சதித் திட்டத்துடன் இந்தியக் கடற்படை முயற்சி செய்தும் தளபதி கிட்டு இதற்கு இரையாக மறுத்ததால் அவரும், அவரது பத்துத் தோழர்களும் தம்மை தியாகம் செய்தனர். மீதி 9 பேர் சென்னைக்குக் கொண்டுவரப்பட்டவுடன் நான் உயர்நீதி மன்றத்தில் ஒரு வழக்குத் தாக்கல் செய்தேன். இதில் அவர்களையும், கிட்டுவின் உடலையும் என்னிடம் ஒப்படைக்கும்படியும் கேட்டிருந்தேன். அன்றிரவே அவசர அவசரமாக மீதி 9 பேரையும் ஆந்திர மாநிலத்திலுள்ள விசாகப்பட்டினத்துக்குக் கொண்டு போய்விட்டார்கள் காரணம் நான் தாக்கல் செய்த வழக்கு.

நான் மீண்டும் ஆந்திர உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்கினைத் தாக்கல் செய்தேன். உடனே அரசு அவர்களை 'தடா' சட்டத்தின் மூலம் கைது செய்து வழக்குப்போட்டார்கள். நாம் மீண்டும் தொடர்ந்து அதற்குரிய சிறப்பு நீதிமன்றில் வழக்கைத் தொடர்ந்து நடாத்தினோம் மூன்றாண்டு காலத்திற்குப் பின்பு 'சர்வதேசக் கடலிலேயே இவர்களை இந்தியக் கடற்படை கைது செய்தது' என்று உச்ச நீதிமன்ற நீதிபதி, கடற்படையினரைக் கடுமையாகச் சாடி எந்த நாட்டிலிருந்து இக் கப்பல் புறப்பட்டதோ அதாவது கொண்டுராஸ் நாட்டிற்கு இவர்களை உடனடியாக அனுப்பிவைக்கும்படியும் இவர்கட்கு நஷ்டஈடு கொடுக்கும்படியும் தீர்ப்பளித்தார். ஆனால் வேண்டுமென்றே இதனைத் தாமதப்படுத்துவதற்காக அவர்கள் உச்ச நீதிமன்றிற்கு மீண்டும் வழக்கைத் தாக்கல் செய்தனர். அங்கும் இத் தீர்ப்பே உறுதியாகும் என்பதில் சந்தேகமே இல்லை.

இந்தியக் கடற் படையினர் அடாவடித்தனத்தினால் தான் தளபதி கிட்டுவும் அவர் தம் தோழர்களும் தம்முயிரை இழக்க நேரிட்டதும், மற்றும் 9 பேர் மூன்றாண்டு காலமாக சிறையில் தாங்கொணாக் கொடு



மைகட்கு ஆளாகினார்கள். அவர்கள் கப்பலும் நாசமாக்கப்பட்டது. என்றும், தளபதி கிட்டு குடும்பத்தினருக்கு நஷ்டஈடு கொடுக்கவேண்டும் என்றும், இதற்குக் காரணமான இந்திய தேசிய மனித உரிமைகள் சங்கம் முன்பு நான் ஒரு வழக்குத் தாக்கல் செய்துள்ளேன். இது இன்னமும் விசாரணைக்கு வரவில்லை, இவ் வழக்கைத் தவிர்ப்பதற்காகவே இந்திய அரசு உச்சநீதிமன்றுக்கு மேல்முறையீடு செய்துள்ளனது.

உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்பு வரும்வரையும் எனது வழக்கு விசாரிக்கப்பட முடியாத நிலை உள்ளது. எப்படியிருந்தாலும் தமிழ்நாட்டு மக்கள் மத்தியிலே இத் தீர்ப்பு ஒரு அழியாத வொன்றாக நிலைத்தபடியால் சகல பத்திரிகைகளும் இத் தீர்ப்புக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளியிடப்பட வேண்டிய கட்டாயத்துக்குள்ளாகிய படியால் மக்கள் உண்மைகளை இப்போது உணர்கிறார்கள். என்பதே உண்மை.

◈ **தமிழக மீனவர்களை ஸ்ரீலங்கா கடற்படை கொல்வதைத் தடுக்க உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட்டதேன் ?**

✪ இராமேஸ்வரம் பகுதி மீனவர்களை சிறிலங்கா, இந்தியக் கடற்படைகள் மாறி மாறி வேட்டையாடுகின்றன. அதாவது மீனவர்களை 'புலிகளுக்கு நீ உதவி செய்கிறாய்' என்று கூறி சிங்களக் கடற்படையும், இந்தியக் கடற்படையும் தம் முன்னே பேசிக் கலந்துகொண்டே தாக்குதல்களை நடாத்தி வருகின்றனர். ஆனால் இதற்கெதிராக 'தமிழ் நாட்டுத் தமிழர்களை சிங்களக் கடற்படை சுட்டுத்தள்ளுகிறது.' என்பதைக் கண்டிக்க அகில இந்தியக் கட்சிகள் எதுவுமே முன்வரவில்லை. (காங்கிரஸ், பாரதீய ஜனதா) உட்பட மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த மீனவர்களை கிழக்கு வங்காள இராணுவம் சுடுகிறது என்பதைக் கேட்டாலோ அன்றி ராஜஸ்தான் மாநில கிராமப்புற மக்களை பாகிஸ்தான் சுடுகிறது. என்றாலோ பாராளுமன்றத்தில் அகில இந்தியக் கட்சிகள் எதிர்த்துக் குரல் கொடுக்கிறார்கள். ஆனால் கடந்த 7 அல்லது 8 வருடமாக இப்பிரச்சனை தொடர்ந்து நடந்தும் இவ்வகில இந்திய கட்சிகள் பாராமுகமாக இருப்பதன் காரணம் தமிழர்கள் இதில் பாதிக்கப்படுகிறார்கள் என்பதுதான்.

இந்த உண்மையை உணர்ந்து தமிழ்நாட்டுக் கட்சிகளாவது ஒன்று சேர்ந்து போராடவேண்டும். அப்போதுதான் இராமேஸ்வரம் பகுதி வாழ் மீனவர்களுக்கு விமோசனம் கிடைக்கலாம்.

◈ **தமிழக மக்கள் இந்திய மத்திய அரசினால் 'மாற்றாந்தாய்' மனப்பான்மையுடன் நடத்தப் படுகின்றார்களா ?**

✪ அப்படியல்ல. தமிழ் நாட்டு மக்கள் இவ்வுணர்வைப் பெற முடியாத நிலைக்கு எது முட்டுக் கட்டையாக இருக்கிறது? தமிழ் நாட்டுக் கட்சிகள் மாறி மாறி டில்லியில் ஆட்சியில் இருக்கும் கட்சியுடன் தேர்தல் உறவு வைத்துக்கொள்ளுகிறார்கள். டில்லியை எதிர்க்கும் இவர்களது முனை அங்கே மழுங்கடிக்கப்படுகிறது. டில்லியை எதிர்த்து.. அல்லது வடநாட்டு ஏகாதிபத்திய மொழியை எதிர்த்து... அல்லது வடக்கு வாழ்கிறது - தெற்கு தேய்கிறது என்றெல்லாம் பேசி எமது தமிழுணர்வை பயன்படுத்தி ஆட்சிப் பீடத்திற்கு வந்த கட்சிகள் இவ்வுணர்விற்கு நேரெதிரான செய்கையுடைய காங்கிரஸ், ஜனதா தளம் கட்சிகளுடன் ஒரு



வரை ஒருவர் போட்டி போட்டுக் கொண்டு தேர்தல் உறவை உணர்க்கின்றனர்.

'தேர்தல்கூட்டு' வைப்பதனால் தமிழ் நாட்டுக்கு தாங்கள் இன்ன இன்ன காரியங்களைச் சாதிக்கிறோம் என்று இவர்கள் பட்டியலிட்டுக் காட்டினால் நான் அவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்.

இவர்கட்கு சொந்த இலாபங்கள் உள்ளனவே தவிர இக் கூட்டினால் தமிழ்நாட்டுக்கோ, தமிழர்க்கோ எதுவித இலாபங்களுமில்லை.

டில்லி இதை நன்கு பயன்படுத்தி, இவர்களைத் தமக்கு பல்லக்கு சுமக்க வைத்து தமிழ் நாட்டை அடக்கி ஆள்கின்றனர். இது தான் உண்மைநிலை.

◈ **இறுதியாக ஈழமுரசு 'வாசகர்கட்கு' என்ன கூற விரும்புகிறீர்கள் ?**

✪ முதலாவதாக, அந்நிய மண்ணிலிருந்து தமிழில் ஒரு பத்திரிகையை நடாத்துவது என்பது எவ்வளவு கடினமான காரியம்.

இரண்டாவதாக விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவாக முழுமையாக இந்தப் பத்திரிகையை நடாத்துவது அதைவிடச் சிரமமானது. அச்சிரமமான பணியை நீங்கள் மேற்கொண்டு தொடர்ந்து நடாத்தி வருவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

அதுவும் ஆசிரியருக்கு ஆசிரியராக இருந்து அரும் பாடுபட்டு மறைந்த கஜன் அவர்களின் பின்புகூட இப்பத்திரிகை தொடர்ந்து வெற்றிகரமாக வெளிவருகிறது உலகம் பூராகவும் வாழும் தமிழ் மக்களுக்கு பேருவகையை அளிக்கிறது.

நீங்கள் ஐரோப்பாவில் வாழும் தமிழ் மக்களுக்கு ஆற்றிவரும் இத் தொண்டு, தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் முக்கிய இடத்தை வகிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

ஈழமுரசுப் பத்திரிகை மேலும் வளரவும், அதன் வாசகர்கள் எண்ணிக்கை மேலும் மேலும் பெருகவும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

நன்றி

# இயந்திரக் கோளாறால் தரையிறங்கிய ஹெலி ரத்வத்தை - தலுவத்தை உயிர் தப்பினர்

**கொழும்பிலிருந்து தமிழரசன்**

பிரதி பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை இராணுவத் தளபதி லெப்ரினன் ஜெனரல் ரோகான் தலுவத்தை பொலிஸ் மாஅதிபர் ராஜகுரு மற்றும் சில இராணுவ உயர் அதிகாரிகள் ஹெலிகொப்டர் விபத்தில் இருந்து விடுதலைப் புலிகளின் கண்களில் அகப்படாமல் அதிஷ்டவசமாக உயிர்தப்பியுள்ளனர். கடந்த சனிக்கிழமை 07.12.1996 பலாலியில் இருந்து பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை இராணுவத் தளபதி லெப்ரினன் ஜெனரல் ரோகான் தலுவத்தை பொலிஸ் மாஅதிபர் ராஜகுரு வடக்கு கிழக்கு இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன, பிரிகேடியர் பற்றிக் பெர்னாண்டோ ஆகியோர் 'பெல் 412' ரக ஹெலிகொப்டரில் அனுராதபுரத்தை நோக்கி புறப்பட்டனர். ஹெலிகொப்டர் வன்னிக்காட்டுப் பகுதிக்கு மேலாக பறந்து கொண்டிருந்த போது திடீரென இயந்திர கோளாறு ஏற்பட்டது. விமானி மிக சாதுரியமாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வவுனியா பெரிய பம்பைமடு பகுதியில் பத்திரமாக ஹெலியை தரை இறக்கினார். தாங்கள் இறங்கிய இடம் எது என அறியாத நிலையில் அவர்கள் அருகில் உள்ள வீடு ஒன்றுக்கு சென்று அது எந்த இடமென்று பயத்துடன் வினவினர். பெரிய பம்பைமடு என வீட்டார் கூறவே அருகில் இராணுவ முகாம் எங்கே இருக்கின்றது என கேட்டனர். அங்கிருந்து 3 கிலோமீற்றர் தொலைவில் வவுனியா இராணுவ முகாம் இருக்கிறது என அவர்கள் கூறினார். புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் இறங்கிவிட்டோம் என்று பயந்த அவர்கள் புலிகளிடம் சிக்கிவிடாதிருக்க வவுனியாவை நோக்கி நடந்து சென்றனர்.

தாங்கள் ஆபத்தில் சிக்கியிருக்கிறோம் என்பதை வோக்கி டோக்கி மூலம் அறிவித்தால் தகவல் புலிகளுக்கு கிடைத்துவிடும் என்று எண்ணி எப்படியாவது வவுனியாவுக்கு நடந்து சென்று விடுவதென முடிவு செய்தனர். பிரதிபாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தைக்கு வேகமாக நடக்கமுடியாது என்பதால் ஏனையவர்கள் அவரை தூக்கிக்கொண்டு ஓட்டமும் நடையுமாக சென்றுள்ளனர்.

**தாங்கள் ஆபத்தில் சிக்கியிருக்கிறோம் என்பதை வோக்கி டோக்கி மூலம் அறிவித்தால் தகவல் புலிகளுக்கு கிடைத்துவிடும் என்று எண்ணி எப்படியாவது வவுனியாவுக்கு நடந்து சென்று விடுவதென முடிவு செய்தனர். பிரதிபாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தைக்கு வேகமாக நடக்கமுடியாது என்பதால் ஏனையவர்கள் அவரை தூக்கிக்கொண்டு ஓட்டமும் நடையுமாக சென்றுள்ளனர்.**

அவர்கள் புறப்பட்டுச் சென்ற ஹெலிகொப்டர் உடனான சகல தொடர்புகளும் காலை 10.57 மணியுடன் துண்டிக்கப்பட்டுவிட்டது. இச் செய்தியை கேள்விப்பட்ட ஜனாதிபதி சந்திரிகா உடனடியாக இராணுவத் தலைமையகத்திற்கு சென்று வேண்டிய உத்தரவுகளை பிறப்பித்தார். அநேகமாக ரத்வத்தையும் மற்றவர்களும் இறந்துவிட்டதாகவே கொழும்பில் கருதப்பட்டது. ஆனால் நண்பகல்12.45க்கு ரோகான் தலுவத்தை வோக்கி டோக்கி மூலம் வவுனியா இராணுவ முகாமுடன் தொடர்பு கொண்டார். தாங்கள் வவுனியாவுக்கு அண்மையில் இருப்பதாக அவர் தெரிவித்தார். உடனடியாக நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் அவர் குறிப்பிட்ட பம்பைமடு பகுதியை நோக்கி விரைந்து சென்று ரத்வத்தையையும் மற்றவர்களையும் மீட்டனர். பின்னர் அப்படையினர் பம்பைமடுவிற்கு சென்று பழுதான ஹெலிகொப்டரையும் குண்டுவைத்து தகர்த்தனர். பம்பைமடு பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தாலும் அன்றைய தினம் அங்கு விடுதலைப் புலிகள் இருக்கவில்லை. தப்பித்தவறி ரத்வத்தையும் அவரது குழுவினரும் விடுதலைப் புலிகளிடம் சிக்கியிருந்தால் நிலைமை தலைகீழாகமாறிப் போயிருக்குமென கொழும்பிலுள்ள பாதுகாப்புத் துறை நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். இவர்கள் உயிர்தப்பியது பெரிய அதிஷ்டமும் அதிசயமும் என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

வடமாகாணத்தில் உள்ளூராட்சி தேர்தலை நடத்துவதில் கொழும்பு தமிழ்க்குழுக்களுக்கு உடன்பாடு இல்லாதது போல் அரசாங்கத்தில் இருக்கும் சிறிமணி அத்துலத்முதலிக்கும் உடன்பாடில்லை. இத்தேர்தல் பற்றி கலந்தாலோசிப்பதற்காகவும் வேட்பாளர்களை தெரிவு செய்வதற்காகவும் சந்திரிகா கடந்த வாரம் அலரி மாளிகையில் கூட்டம் ஒன்றை கூட்டியிருந்தார். இக்கூட்டத்திற்கு சிறிமணியின் கட்சியினரைத் தவிர மற்ற அனைவரும் வந்திருந்தனர். ஆனால் கூட்டம் முடியும் தறுவாயில் லலித் கட்சியை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க வந்திருந்தார். சந்திரிகா அவரிடம் தேர்தல் பற்றி பேசமுனைந்த போது அவர் வெட்டொன்று துண்டு இரண்டு என்ற பாணியில் தேர்தல் நடத்த இது உகந்த காலமல்ல; நாட்டில் எவ்வளவோ பிரச்சனையிருக்கும் போது தேர்தலுக்கு இப்போது என்ன அவசியம் என்று கேட்டார். இதனால் கோபம் அடைந்த சந்திரிகா நீங்கள் போட்டியிடாவிட்டால் உங்கள் கட்சியை விட்டுவிட்டு நாங்கள் போட்டியிடவேண்டிவரும் என்றார். அதற்கு ரவி கருணாநாயக்க நாங்கள் கூட்டு கட்சியாகவே பதிவுசெய்துள்ளோம். எங்களை விட்டுவிட்டு நீங்கள் போட்டியிட தேர்தல் சட்டத்தில் இடமில்லை என்றார். இதனால் இன்னும் எரிச்சல் அடைந்த சந்திரிகா ஒரு முடிவெடுக்கமுடியாமல் கூட்டத்தை அடுத்த வாரத்திற்கு ஒத்திவைத்தார்.

# 3ம் மாத நினைவஞ்சலி



## சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி

## கிருஷாந்தி குமாரசாமி

எங்கள் கிருஷாந்தியே!
உன்னைப் புசித்த மிருகங்கள்
எத்தனை நாள் உலாவும்
எங்கள் மண்ணிலே..
மலர் வனங்களைப் பொசுக்கவும்
குயில்களைப் பிடித்துக் கருக்கவும்
வெறிநாய்களால்தான் முடியும்.
வெறிநாய்களும் மிருகங்களும்
வாழ்வை விரைந்தே முடித்துக் கொள்ளும்
அல்லது முடிக்கப்படும்.
கிருஷாந்தி! எமக்குள் நீ
புது வாழ்வை ஆரம்பிக்கிறாய்.

இராணுவக் கொடும்
கரங்களுக்கு இரையாக
07.09.1996

கொலை வெறி பிடித்த ஸ்ரீலங்கா இராணுவ வெறியர்களின் பாலியல் வக்கிரத்துக்கு இரையாகி பலியான எங்கள் தோழி கிருஷாந்திக்கும் அவருடன் படுகொலை செய்யப்பட்ட அவரது தாய், சகோதரன் மற்றும் அயலவருக்கும் எமது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**- சுவிஸ் வாழ் சுண்டுக்குளி பழைய மாணவிகள்**

ஈழமுரசின் மகத்தான பணி தொடர எமது வாழ்த்துக்கள்

# Zürich நாதன் கடை ஸ்தாபனத்தாரின்

# மாபெரும் மலிவு விற்பனை

உங்கள் அனைவரின் வேண்டுகோளுக்கிணங்க பட்டுச்சேலை வகைகள், பஞ்சாபி - சூட் வகைகள், சிறுவர் ஆடை அணிகள், ஆண்களுக்கான ரவுசர், சேட் வகைகள், தமிழ்ப் படப் பாடல்கள், அடங்கிய CD, Audio, 500-ற்கும் மேற்பட்ட வகைகளில். வீடியோ படங்கள், S.K.T, Ayngaran முத்திரை பதிக்கப்பட்ட வீடியோ கசட்டுக்கள் இன்னும் பல பொருட்கள் அனைத்தும் 50% தொடக்கம் 60% வரை விலை குறைக்கப்பட்டுள்ளன.



1. Pyramid, சங்கர் CD வகைகள் $2^{SFr}$ முதல்
2. பஞ்சாபி சூட் பல ரகங்களில் $19^{SFr}$ முதல்
3. பல ரக சேலைகள் (மைசூர் சில்க், பனாரஸ், காஞ்சிபுரம், சுயிக்கின்ஸ் சாறிகள் மற்றும் பல வகையான சேலைகள் $15^{SFr}$ முதல்
4. சிறுவர், சிறுமியர் ஆடைவகைகள் $15^{SFr}$ முதல்
5. ஒரிஜினல் வீடியோ தமிழ்ப் பாடல் கசெட்டுக்கள் $5^{SFr}$ முதல்
6. ஆண்களுக்கான இந்தியா, இந்தோனேசியா சேட் வகைகள் $10^{SFr}$ முதல்
7. சிறுமியர்களுக்கான பட்டுப் பாவாடை வகைகள் $20^{SFr}$

இதே போன்று அனைத்துப் பொருட்களும் மிகமிக மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பிட்ட இரு நாட்கள் மட்டும்தான் இந்த விலைகட்கு பொருட்கள் கிடைக்கும். வந்து வாங்கி லாபம் அடையுங்கள்.

**முக்கிய குறிப்பு:** சென்ற முறை 95ம் ஆண்டில் நடந்த மண்டபத்தில் இடவசதி போதாமையால் இந்த முறை பிரமாண்டமான புதிய மண்டபத்தில் நடத்துகின்றோம்.

**காலம்:** **27.12.96** வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் இரவு 8 மணி வரை

**28.12.96** சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை

**இடம்:** Limmat Hotel (Limmat Platz)
Limmat Str-118, 8005 Zurich.

**வந்தடையும் வழி:** சூரிச் பிரதான புகையிரத நிலையத்திலிருந்து Tram 13 அல்லது 4ம் நம்பரில் ஏறி Limmat Platz இல் இறங்கவும். Limmat Platz இல் இருந்து 1 நிமிட நடை தூரம்.

• மேலதிக விபரங்களுக்கு:

**S.K.TRADING**
**Gasometer Str-31, 8005 Zürich.**
**Tel: 01-272 43 36 / 077-78 22 01**

**S.K.TRADING TEXTILES**
**Josef Str 137, 8005 Zürich.**
**Tel: 01-272 43 30 / 089-402 78 17**

# ஜெயலலிதா மத்திய சிறையில் அடைக்கப்பட்டார் 40 கிலோ தங்கம் 500 கிலோ வெள்ளி பறிமுதல்

எட்டுக் கோடி ரூபாய் ஊழல் குற்றச்சாட்டில் முன்னாள் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டுள்ளார். கலர் ரீவி கொள்வனவில் இந்த ஊழல் நடந்திருப்பதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

## 40 கிலோ தங்கம்

கடந்த சனிக்கிழமை காலை 9.50 மணியளவில் ஜெயலலிதா கைதானார். கடந்த இருநாட்களாக அவரது வீட்டில் நடாத்தப்பட்ட வந்த சோதனைகளில் 40 கிலோவிற்கும் அதிகமான தங்கமும், 500 கிலோவுக்கும் அதிகமான வெள்ளிப்பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளாதாகவும் இவற்றின் மதிப்பு 58 கோடிருபாவிற்கும் அதிகமாக இருக்கும் என்று அரசு தரப்பில் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## TV ஊழல்

இந்தத் "தொலைக்காட்சிப்பெட்டி ஊழல்" வழக்கு ஏற்கனவே செல்வ கணபதி மீதும் சுமத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக சனிக்கிழமை காலை கைதான ஜெயலலிதா பொலிஸ்வானில் ஏற்றப்பட்டு "எழும்பூரில்" உள்ள பொலிஸ் கமிசனர் அலுவலகத்துக்கு கொண்டு செல்லப்பட்டார்.

## பொலிஸ் விசாரணை

நகரப் பொலிஸ் அலுவலகத்தில் புலனாய்வுப்பிரிவு துணைக்கமிசனர் திரு. செல்வரத்தினம் முன்பாக ஜெயலலிதாவிடம் மாநிலக் குற்றப் புலனாய்வு பிரிவு பொலிஸ் அதிகாரிகள் ஒரு மணி நேரம் விசாரணை நடாத்தினார்கள். தொலைக்காட்சிப்பெட்டிகள் வாங்கியதில் நடந்த ஊழல் குறித்தும், ஜெயலலிதா மீது மாநில குற்றப்புலனாய்வுப் பிரிவு நடாத்தி வரும் ஆறு வழக்குகள் பற்றியும் அதிகாரிகள் விசாரணைகள் நடாத்தினார்.

இது குறித்து தமக்கு எதுவும் தெரியாதென்றும், இந்த வழக்குகளோடு தமக்கு எந்த சம்பந்தமும் இல்லை என்றும் ஜெயலலிதா பதிலளித்தார்.

தவறு நடந்திருந்தால் அதற்கு அமைச்சர்கள் தான் பொறுப்பு. எல்லாப் பொறுப்புகளையும் முதல்வர் பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்றும் பிறிதொரு கேள்விக்கு பதிலளிக்கையில் ஜெயலலிதா தெரிவித்தார்.

பொலிசார் விசாரணை முடிந்ததும் கீழ்ப்பாக்கம் டெய்லர்ஸ் சாலையில் உள்ள சிறப்பு நீதிபதி திரு. ராமமூர்த்தி வீட்டுக்கு அவரை அழைத்துச் சென்றனர். பின்பு சென்னை மத்திய சிறைக்கு ஜெயலலிதா கொண்டு செல்லப்பட்டார்.

## சிறையில் அடைப்பு

சனிக்கிழமை காலை 11.50க்கு சென்னை மத்திய சிறையில் ஜெயலலிதா அடைக்கப்பட்டார். நீதிபதி முன்னிலையில் ஜெயலலிதாவை சனிக்கிழமை காலை 11 மணிக்கு பொலிசார் ஆஜர் படுத்தினர். "உங்களை பொலிசார் தரக்குறைவாக நடத்தினார்களா?" என்று நீதிபதி கேட்ட போது "இல்லை" என்று அவர் பதிலிறுத்தார். இது தொடர்பான "முதல் தகவல் அறிக்கை" அவருக்கு வழங்கப்படாதது பற்றி நீதிபதி பொலிசாரைக் கண்டித்தார். அதன் பின்னரே அவருக்கு முதல் தகவல் அறிக்கையின் பிரதியொன்று வழங்கப்பட்டது. அப்போதே நீதிபதியின் முன்பு ஆஜராகி ஜெயலலிதாவுக்காக வாதாடிய முன்னாள் சபாநாயகர் ஆகிய பி.எச் பாண்டியன்" ஏற்கனவே சி.பி.சி.ஐ.டி ஜெயலலிதாவை அவரது வீட்டில் விசாரித்து வாக்குமூலம் வாங்கி விட்டனர். எனவே அவரை தற்போது கைதுசெய்ய வேண்டிய அவசியம் இல்லை" எனக் குறிப்பிட்டார். அது மட்டுமன்றி தேசியபாதுகாப்புப் படையின் பாதுகாப்பில் ஜெயலலிதா இருக்கிறார். பாதுகாவலர் யாருமின்றி அவரைச் சிறைக்கு அனுப்பக்கூடாது. அவரைக் கைதுசெய்ய ஆளுனரிடம் அனுமதி பெறப்பட்டதா என்றும் பி.எச். பாண்டியன் கேள்வி எழுப்பினார்.

## உயிருக்கு ஆபத்து

ஜெயலலிதா அப்போது குறுக்கிட்டு "குண்டர் தடுப்புச் சட்டம், மற்றும் தடா சட்டத்தின் கீழ் பலரைக் கைது செய்வதற்கான உத்தரவுகளில் நான் கையெழுத்திட்டுள்ளேன். அப்படிக் கைதானவர்கள் தற்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களோடு என்னை அடைத்தால் என்னுயிருக்கும் ஆபத்து ஏற்படலாம்" என்று தெரிவித்தார். தொடர்ந்து பி.எச் பாண்டியன் வாதாடுகையில் "கலர் ரீவி வாங்குவது பற்றி ஜெயலலிதா அமைச்சரவையில் முடிவு செய்தார் என்று கூறினார். அப்போது மீண்டும் குறுக்கிட்ட ஜெயலலிதா "அமைச்சரவையில் எடுக்கப்பட்ட கொள்கை முடிவு" அது என்று தெரிவித்தார். சனியும், ஞாயிறும் விடுமுறையாக உள்ள படியால் பிணை மனுவை தாக்கல் செய்ய முடியாது எனவே அடுத்த இரு நாட்களுக்கு ஜெயலலிதாவைக் கைதுசெய்யக் கூடாது என்று உயர்நீதிமன்ற நீதிபதி திரு. சிவப்பா கூறியுள்ளார் என்று பி.எச் பாண்டியன் கூறியதை, அரச வழக்கறிஞர் ராஜா இளங்கோ மறுத்தார். நீதிபதி சிவப்பா அவ்வாறு கூறவில்லை என்று அவர் வாதிட்டார்.



## 21ம் திகதி வரை சிறை

அதன் பிறகு நீதிபதி ராமமூர்த்தி ஜெயலலிதா எதிர்வரும் 26.12.96 சிறையில் அடைக்கும் படியும், அவரை நீதிமன்றக் காவலில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

பின்பு ஜெயலலிதா அங்கிருந்து மத்திய சிறைக்குகொண்டு செல்லப்பட்டு அங்கே அடைக்கப்பட்டார். முதலில் அவருக்கு தனியாக ஒரு அறை ஒதுக்கப்பட்டிருந்தது. அங்கே அவருக்கு கீழ்வகுப்பு வசதிகள் மட்டுமே தரப்பட்டன எனச் செய்திகள் தெரிவித்தன.

## தலைவர்களும் கைது

ஜெயலலிதா கைது செய்யப்பட்டது கூடவே அவரது கட்சியின் முன்னணித் தலைவர்கள் ஆன திருநாவுக்கரசு உட்பட பல முன்னாள் அமைச்சர்களும் கைதாகி சிறையிலடைப்பட்டனர். ஜெயலலிதா கைதானது தொடர்பாக தமிழ்நாட்டில் பெரிதாக ஏதும் கலவரங்களோ மற்றும் அசம்பாவிதங்களோ நடைபெறவில்லை. கடந்த சில தினங்களாக கடுமையான மழையில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்கள் சிக்கிக் கொண்டிருப்பதால் இச்செய்தி மக்களிடம் எந்தவிதமான எதிர் விளைவுகளையும் ஏற்படுத்தவில்லையா? என்பது இன்னும் சரிவரத் தெரியவில்லை. ஆங்காங்கே பல இடங்களில் போக்குவரத்தை மறித்து சில தொண்டர்கள் மறியலில் ஈடுபட்டு பின்பு பொலிசாரால் அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர். சில இடங்களில் முன்னாள் அமைச்சர்கள் தலைமையில் மறியல் போராட்டங்கள் நடாத்தப்பட்டு அவர்களும் கைதுசெய்யப்பட்டு சிறையிலிடப்பட்டுள்ளனர்.

## இளைஞர் தீக்குளிப்பு

இவ்வாறானவர்களில் முன்னாள் அமைச்சர் காளிமுத்து குறிப்பிடத்தக்கவர். இதற்கு இடையில் ஜெயலலிதாவின் கைதுச் செய்தியைக் கேட்டு ஒரு இளைஞர் சென்னையில் தீக்குளித்துள்ளார். தீக்காயங்களுடன் சென்னை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர் கடந்த திங்கட்கிழமை இறந்து விட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. ஜெயலலிதாவின் கைது பற்றி பல்வேறு அரசியல் கட்சிகளும் தமது கருத்துக்களைத் தெரிவித்துள்ளன. திராவிடர் கழகம் வீரமணி தலைமையிலான பிரிவு, இது பாரபட்சமான செயல், பழிவாங்கும் நோக்கில் அமைந்துள்ளது. ஒரு முன்னாள் முதல்வருக்கு தரவேண்டிய எந்தவொரு சலுகைகளும் அவருக்கு தரப்படாமல் திட்டமிட்டு செய்யப்பட்டதாக இது இருக்கின்றது" என்று விபரித்துள்ளது. பாரதீய ஜனதாக்கட்சி ஜெயலலிதாவை விடுதலை செய்ய வேண்டுமென தீர்மானம் எடுத்துள்ளது. சீதாராம் கேசரி தலைமையிலான காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்றத்தில் ஜெயலலிதாவின் கைது பற்றி தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர். முன்னாள் தமிழ் நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழைப்பாடி இராமமூர்த்தி இக்கைதுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே அவருக்கு சிறப்பு வசதிகள் செய்யாமல் சிறையில் மிகவும் மோசமாக நடத்துகிறார்கள் என்று அ.இ.அ.தி.மு.கழகத்தைச் சேர்ந்த தலைவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். ஜெயலலிதாவின் கைதுக்கு பின்பு கடந்த சனிக்கிழமை நெடுஞ்செழியன் தலைமையில் சென்னையில் கூடிய அதிமு. கவினர் தமது அடுத்த கட்ட நடவடிக்கைகள் பற்றி கட்சி நிர்வாகிகளுடன் இரண்டு மணி நேரத்திற்கு மேல் ஆலோசனை நடாத்தி ஒரு முடிவு செய்துள்ளனர். "ஜெயலலிதாவை நானும் எனது கட்சியின் சட்டப் பிரிவு செயலாளர் பி. எச் பாண்டியனும் சந்திக்க முடிவு செய்துள்ளோம். அவரைச் சந்திக்க அனுமதி கேட்டு விண்ணப்பித்துள்ளோம். அனேகமாக திங்கள் அல்லது, செவ்வாய் கிழமையில் அனுமதி கிடைத்துவிடும். அவரைச் சந்தித்து பேசிய பின்பே கட்சியின் அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி தலைமைக்கழகத்தின் சார்பில் அறிவிப்போம்."என்று நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

அவருடன் பி.எச் பாண்டியன் சுலோசனா சம்பத், லியாகத் அலிக்கான் போன்ற அதிமுக பிரமுகர்கள் உடனிருந்தனர். இதனிடையே இராயப்பேட்டையின் அ.தி.மு.க வின் தலைமைக்கழகம் எதிரே கொட்டும் மழையிலும் சில பெண்கள் உள்ளிட்ட அ.தி.மு.க வினர் ஆர்ப்பாட்டம் செய்து பொலிசாரால் அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர். ஜெயலிதா சிறையில் மிக மோசமாக நடாத்தப்படுகின்றார் என்ற குற்றச்சாட்டை தமிழக அரச மறுத்துள்ளது. அவருக்கு மனித நேயத்துடன் சரியான பராமரிப்பும் கவனிப்பும் தரப்படுகின்றது. அவா சிறப்புப் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார் என்றும் அதன் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து சட்டத்துறை அமைச்சர் ஆலடி அருணா வெளியிட்ட அறிக்கையில் "ஜெயலலிதாவுக்கு சிறப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்திருக்கிறார்.

- நமது சென்னை நிருபர்

ஈழமுரசின் மகத்தான பணி தொடர எமது வாழ்த்துக்கள்

பாரிஸ் மாநகரில் வீடியோத் துறையில் நீண்டகாலமாக அனுபவம் மிக்கவர்கள்



S.A.R.L SHASSI

21, Bld de la Chapelle, 75010 Paris.
Tel: 01 42 09 18 88 / Fax: 01 42 09 68 88

ஈழமுரசிற்கு எமது வாழ்த்துக்கள்

பல்லாயிரக்கணக்கான வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெற்று,
இரு இடங்களில் மிகப் பிரம்மாண்டமான ஸ்தாபனங்கள்

# கோபால் அன் கோ

பாரிஸ் லாச்சப்பலில்....

# KOPAL & Co

*Super Marché*

64, Rue Louis Blanc, 75010 Paris.Tel: 01 40 05 04 50 / Fax: 01 40 05 09 90

லாக்கூர்னெவ் இல்.... மக்கள் ஆதரவுடன்

# KOPAL & Co

CASH & CARRY

300 பிராங்குகளுக்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்கு ஒரு லக்ஸ்பிறே பால்மா பெட்டி இலவசம்

*39 Rue Maurice La Chatre,*
*93120 La Courneuve.*
*Tel: 01 48 37 00 43*

லாச்சப்பலில்...

அன்பு உள்ளங்களின் அபிமான உணவகம்

RESTAURANT

# SHABARINA

21, Rue Cail, 75010 Paris - Tel: 01 42 05 05 68

வெகுவிரைவில் லாச்சப்பலில்...

# K.V.SHO

69 Rue Louis Blanc, 75010 Paris.

உரிமையாளர்
சு. கோபாலபிள்ளை



# ஈழமுரசு
## சிறப்பிதழ்





ஈழமுரசு பிரதம ஆசிரியர்
விடுதலைப் புலிகள் பிரெஞ்சுக் கிளையின்
நீண்டகால செயற்பாட்டாளர்
**கப்டன் கஜன்**
**17.04.1966**


**கஜன் !**

உன்னை எங்களில் சுமந்து,
உன் கனவுகளும்,
எண்ணங்களும்,
இலட்சியங்களும் ஈடேற
ஒன்றாய் உழைப்போம்.
உன் பணி தொடர்வோம்.
உறுதி.

## வீரமரணம்: 26.10.1996

**நாதன் !**

உன் பண்பும்
பணியும்
நினைவில் சுமந்து
நடப்போம்.



விடுதலைப் புலிகளின்
சர்வதேச நிதிப் பொறுப்பாளர்
**லெப். கேணல் நாதன்**
**10.11.1964**

## மாவீரர்கள் கஜன் - நாதனுக்குச் சமர்ப்பணம்

# ஈழமுரசு

## உங்கள் கரங்களை பற்றியபடி எங்கள் பயணம் தொடரும்

நாம் இந்த ஈழமுரசின் 100 வது இதழை உங்கள் முன் சமர்ப்பிக்கின்ற இந்த நேரத்தில் எங்கள் ஸ்தாபக ஆசிரியர் கஜனும், நாதனும் எங்களுடன் இல்லை. அதாவது அவர்களது வித்துடல்கள் தமிழீழ விடுதலைக்கு விதையாக பாரிஸ் மண்ணில் விதைக்கப்பட்டு ஒரு மாதம் முடியப்போகிறது.

சிறீலங்கா அரசின் கைக்கூலியால் அவர்களது உயிர் பறிக்கப்பட்டு 46 நாட்கள் ஆகிவிட்டன.

இந்த 46 நாட்களிலே எங்களுடைய துயரத்திலே பங்கு கொண்டவர்கள் ஏராளம், ஏராளம். வாசகர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், அரசியல்வாதிகள் அபிமானிகள் என்று அனுதாபச் செய்திகள், வீர வணக்கத் துண்டுப் பிரசுரங்கள் அனுப்பியவர்கள், வெளியிட்டவர்கள் ஆயிரம் ஆயிரம் பேர். கண்டனக் கூட்டங்கள் நடத்தியவர்கள், கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றியவர்கள், அதில் கலந்து கொண்டவர்கள் ஆயிரம், பல்லாயிரம் பேர்.

எமது அலுவலகத்துக்கு வந்து மலர்வளையம் வைத்து அனுதாபம் தெரிவித்தவர்கள், தொலைபேசி மூலம், தொலைநகல் மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தவர்கள் நிறையப் பேர்.

இவர்கள் அத்தனை பேருமே எங்களுக்கு ஒரு செய்தியை சொல்லியிருக்கிறார்கள். அதாவது நாங்கள் எல்லோருமே உங்கள் பக்கம் என்பதுதான் அந்தச் செய்தி. அதை நாங்கள் பெருமையோடு ஏற்றுக் கொள்கிறோம். அதற்காக எங்களுக்கு நீட்டப்பட்ட ஆதரவுக் கரங்களை இறுகப் பற்றிக் கொள்கிறோம். ஏனென்றால் சிறீலங்கா பௌத்த சிங்கள தேசிய வாதம் என்கிற எதிரி தமிழீழத் தமிழர் எல்லோருக்குமே பொது எதிரிதான். அவ் எதிரிக்கு எதிராக போராட்டத்தின் பக்கம் அணிதிரள வேண்டியது எங்கள் ஒவ்வொருவருக்கும் உள்ள வரலாற்றுக் கடமை.

இந்த கடமைக்காக அல்லும் பகலும் இங்கே அயராது உழைத்தவர்கள் கஜனும், நாதனும். சிறீலங்கா அரசின் யாழ்ப்பாண ஆக்கிரமிப்பின் ஒரு வருடப் பூர்த்தியை அங்கு நடந்த எங்கள் மக்களின் மாபெரும் புலப்பெயர்வை, கண் மூடியிருக்கும் உலகத்திற்கு தெரியப்படுத்த புறப்பட்ட நேரத்திலேதான் சிறீலங்கா அரசின் கைக்கூலியால் அவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள் என்பது நினைவில் கொள்ளப்பட வேண்டிய ஒரு விடயம்.

ஈழமுரசின் இந்த நூறாவது சிறப்பிதழ் அதிக பக்கங்களுடன் வெளியிடுவது என்பது கஜன் எம்முடன் இருந்த காலத்திலேயே தீர்மானிக்கப்பட்ட ஒன்று. ஈழமுரசு ஆரம்பிக்கப்பட்ட காலத்திலேயே அதை அழிக்க எதிரிகள் பல வகைகளிலும் முயன்றபோது அந்த முயற்சியே கஜனுக்கு சத்திய ஆவேசத்தைக் கொடுத்தது. ஈழமுரசை என்ன விலை கொடுத்தும் முரசறைய வைப்பது என்று அவர் அல்லும் பகலும் உழைத்த உழைப்பு. ஈழமுரசு குடும்பத்தினரான எங்களுக்கும், எங்களுடன்' தொடர்புடைய குறிப்பிட்ட சிலருக்கும் மட்டும்தான் தெரியும்.

அதற்காக அவர் தன்னுடைய உயிரையே கொடுப்பார் என்று நாம் கனவிலும் நினைக்கவில்லை.

ஈழமுரசை முளையிலேயே அழிக்க வேண்டும் என்றவர்களின் நோக்கம் கஜனை எப்படி ஆவேசம் கொள்ள வைத்ததோ, அவ்வாறு கஜன் சிந்திய இரத்தம், எங்களுக்கு இன்று ஒரு புதிய உத்வேகத்தை, இலட்சியத்தை, ஆவேசத்தைக் கொடுத்திருக்றது. கஜன் எங்களுக்குள்ளேயே இருக்கிறார் என்ற உணர்வுடன் இந்த சிறப்பிதழை நாங்கள் நேரமின்மை முதலான பல்வேறு நடைமுறைச் சிக்கல்களுக்கு மத்தியில் உங்கள் முன் வைக்கிறோம். தொடர்ந்தும் ஈழமுரசு வெற்றிமுரசு கொட்ட உங்கள் எதிர்பார்ப்பை எதிர்பார்த்து நிற்கிறோம்.

- ஈழமுரசு குடும்பத்தினர்.

# கஜன் நினைவாக....

“அம்மான்... ஈழமுரசின் $100^{வது}$ சிறப்பிதழை அதிக பக்கங்களுடனான பத்திரிகையாக விடுவமா, அல்லது சஞ்சிகையாக விடுவமா?” ஒக்டோபர் மாதம் நடுப் பகுதியில் கஜனுடன் ஈழமுரசுவின் அடுத்த கட்ட வளர்ச்சி குறித்துப் பேசிக் கொண்டிருந்த போது கஜன் கேட்ட கேள்வி இது!

"சஞ்சிகையாக வெளியிட்டால் அதன் ஆயுள்கூட. முடிந்தால் 70 பக்கங்கள் கொண்ட சஞ்சிகை வடிவிலான சிறப்பு மலராக வெளியிடலாம்" என்ற கருத்தினைத் தெரிவித்துவிட்டு 'நிலைமைகளுக்கு ஏற்பச் செய்வம்' எனக் கூறிமுடித்தேன்.

இன்று ஈழமுரசுவின் 100வது சிறப்பிதழ் வெளிவருகிறது. நேரப் பிரச்சனை காரணமாக அதிக பக்கங்கள் கொண்ட பத்திரிகையாகவே இது வெளிவருகிறது. ஆனால் 100வது சிறப்பிதழை சிறப்புடன் வெளியிட விரும்பிய 'கஜன்' எம் மத்தியில் இல்லை.

தேடிச் சென்று வாங்கும் நிலையினை உருவாக்க வேண்டும்.

இது பத்திரிகை ஒன்றினை வெளியிடுவது தொடர்பான கருத்துப் பரிமாற்றத்தில் நானும், கஜனும் உடன் பட்டுக்கொண்ட விடயங்கள்.

பத்திரிகை ஆரம்பிப்பது தொடர்பாக நண்பர்கள் என்னுடன் தொடர்பு கொண்டதற்கும் ஒரு காரணம் இருந்தது. எனக்கு பத்திரிகைத் துறையில் சிறிது அனுபவம் இருந்தது தான் அக் காரணம். 1987இல் தான் 'ஈழமுரசு' பத்திரிகையில் 'கோபு' என்று அழைக்கப்படும் S.M. கோபாலரத்தினம் ஐயாவுடன் உதவி ஆசிரியராக கடமையாற்றியிருந்தேன்.

பத்திரிகை ஆரம்பிப்பது என முடிவு செய்தாகி விட்டது. பத்திரிகை ஆரம்பிப்பதற்கு பணம் தேவை. சிலர் நினைப்பது போல இயக்கப் பணத்தில் ஆரம்பிக்கப்பட்டதல்ல ஈழமுரசு.

நண்பர்களிடம் பணம் திரட்டுவதன் மூலம் பத்திரிகையை

திட்டம் தொடர்பாக 'எல்லாம் கதைத்தாச்' என்று கூறிவிடவே, பத்திரிகை ஆரம்பத்தில் ஆர்வம் காட்டிய தற்போதைய நிர்வாகி வேலுப்பிள்ளை சகிதம் நெதர்லாந்து வந்துவிட்டான் கஜன். பத்திரிகை வெளியிடுவது தொடர்பான திட்டங்களை விவாதித்த பின் 'டென்காக்' வீதியொன்றில் நடந்து சென்றபோது நிர்வாகி வேலுப்பிள்ளை தனக்குள் முணுமுணுத்துப் பாடத் தொடங்கி விட்டார். நன்றாகக் காது கொடுத்துக் கேட்டபோது 'நடக்குமென்பார் நடக்காது, நடக்காதென்பார் நடந்துவிடும்' என்ற வரிகள் கேட்டன. 'என்ன பாட்டோ' என்று நான் கேட்ட போது 'ஈழமுரசு' பிறக்கப் போகும் கதை என்றான் கஜன்.

பத்திரிகை ஆரம்பிப்பது தொடர்பான நம்பிக்கையினை கொடுத்துத் திட்டங்களைத் தீட்டிய பொழுதும் அதில் உள்ள பல நடைமுறைச் சிக்கல்களை எவ்வாறு எதிர் கொள்

# ஈழமுரசு

15.01.1995 அன்று வெளிவர ஆரம்பித்த 'ஈழமுரசு' இன்று 100வது சிறப்பிதழை வெளியிடுகிறது என்றால் அதற்கு அடிப்படைக் காரணம் கஜன் தான். இதனால் இந்த 100-வது சிறப்பிதழில் 'ஈழமுரசு' பிறந்த கதையினை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என நினைக்கிறேன்.

1994ஆம் ஆண்டின் நடுப் பகுதி என நினைக்கிறேன். நான் பிரான்சுக்கு வருகை தந்த போது 'பத்திரிகை' ஒன்றினை ஆரம்பிப்பது தொடர்பான கருத்துக்களை நண்பர்கள் என்னுடன் பகிர்ந்துகொண்டனர். இவ்வாறு அவர்கள் விருப்பம் தெரிவித்தபோது அவர்கள் மத்தியில் 'பத்திரிகை சாத்தியமா?' என்ற அவ நம்பிக்கையும் இருந்தது. அப்போது பத்திரிகை ஒன்றினை வெளிக்கொணர வேண்டும் என்பதில் கஜன் தீவிரமாக இருந்தான்.

'போராட்டத்திற்கு எந்த நெருக்கடி ஏற்படினும் வியாபார நோக்கின்றி, போராட்டம் உள் நாட்டிலும், வெளி நாட்டிலும் எதிர்கொள்ளும் சவால்களை புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் மத்தியில் எடுத்துச்சொல்ல எமக்கென்று ஒரு பத்திரிகை அவசியம், வெளிநாடுகளில் வாழுகின்ற எமது மக்கள் மத்தியில் சமூக விழிப்புணர்ச்சியினைத் தோற்றுவிக்க வேண்டும். புலம் பெயர்ந்த தமிழ் மக்களின் சகல இலக்கிய முயற்சிகளையும் சரியான திசையினை நோக்கி ஊக்குவிக்க வேண்டும். எழுத்துலகில் புதிதாக நுழைபவர்களை வளர்த்தெடுக்க வேண்டும், இதற்காக உருவாக்கப்படும் பத்திரிகையினை நாம் வீடு வீடாகச் சென்று விநியோகிககாமல், மக்கள் தாமாகவே பத்திரிகையினை

ஆரம்பிப்பது என முடிவு செய்தோம். பத்திரிகை ஆரம்பத்தில் கஜனின் முதல்பணி பத்திரிகை ஆரம்பிப்பதற்குப் பணத் தரக் கூடிய நண்பர்களிடம் பணம் திரட்டுவதாகத் தான் இருந்தது. இப் பணத்தினை ஒரு உதவியாகக் கருதும்படியும் மூன்று வருடங்களின் பின் வட்டியுடன் திருப்பித் தரலாம் என்ற அடிப்படையிலுமே 'கஜன்' பத்திரிகைக்கான பணம் திரட்டும் முயற்சியில் ஈடுபட்டான்.

ஓரளவு பணம் சேரலாம் என்ற நம்பிக்கை வந்தபோது பத்திரிகையினை எப்போது வெளிக் கொணரலாம், எப்படி வெளிக்கொணரலாம் என்பது தொடர்பாக ஆலோசனை செய்து திட்டங்கள் தீட்ட வேண்டி இருந்தது. இதற்காகத் தொலைபேசியில் கதைத்து முடிவு செய்ய முடியாது என்பதனால் நேரிலே சந்தித்துப் பேசவே கஜன் விரும்பினான். நான் அப்போது நெதர்லாந்தில் உயர் கல்விக்காகத் தங்கியிருந்த நேரம். என்னால் அடிக்கடி பாரிசிற்கு வரமுடியவில்லை. இதனால்' பத்திரிகை ஆரம்பிப்பது தொடர்பாக மூன்று தடவைகள் நெதர்லாந்திற்கு வந்து ஆலோசனை கலந்து சென்றிருக்கிறான் கஜன்.

ஒரு தடவை நண்பர்கள் ஓரிருவர் பத்திரிகை வெளிப்படும்

ளப் போகிறோம் என்று அச்சம் மனதில் எழவே செய்தது. எம்மில் என்னைத் தவிர பத்திரிகை ஒன்றில் வேலை செய்த அனுபவம் எவருக்கும் இருக்கவில்லை. பத்திரிகை ஆரம்பிப்பது என்ற முடிவு செய்தபோது கலை இலக்கியத் துறையில் ஈடுபாடு கொண்ட ஓரிரு நண்பர்களே துணைக்கு நின்றனர். 'பத்திரிகையினைச் சிறப்பாக வடிவமைக்கலாம்' என்ற நம்பிக்கை எமக்கு இருந்த பொழுதும் நல்ல எழுத்தாளர்களின்றி ஒரு பத்திரிகையினை தரமாகக் கொண்டு வர முடியுமா? என்னால் பிரான்சில் தொடர்ச்சியாக நிற்க முடியாது என்பதனால் பத்திரிகை ஆசிரியராக யார் கடமையாற்றுவது? எப்படி வித்தியாசமான முறையில் பத்திரிகையினை வெளிக்கொணர்வது? போன்றவை சவால்களாகவே இருந்தன. ஓரிரு தடவை 'பத்திரிகை ஆரம்பிக்கும் திட்டத்தினை கைவிடுவமோ?' என்ற எண்ணம்கூட தலைதூக்கிச் சென்றது. இருப்பினும் 'கஜன்' காட்டிய உற்சாகம் என்னையும் தூண்டவே உடனே ஏற்பாடுகளில் மூழ்கினோம்.

ஆயத்தங்களைச் செய்து கொண்டு இருந்தபோது 'SATURDAY REVIEW' 'TAMIL NATION' ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியர்கள் சிவநாயகம்

> பத்திரிகை ஆரம்பிப்பது தொடர்பான நம்பிக்கையினை கொடுத்துத் திட்டங்களைத் தீட்டிய பொழுதும் அதில் உள்ள பல நடைமுறைச் சிக்கல்களை எவ்வாறு எதிர் கொள்ளப் போகிறோம் என்று அச்சம் மனதில் எழவே செய்தது.

ஐயா (தற்போதைய HOT SPRING ஆசிரியர்) பாரிஸ் வந்து சேர்ந்தார். ஐயாவுக்குத் தமிழ் பத்திரிகை உலகில் அனுபவம் இல்லாவிடினும் அவருடைய பத்திரிகைக் துறை அனுபவம் ஈழமுரசிற்கு உதவலாம் என முடிவு செய்தோம். கஜன் ஆசிரியராக இருந்து பத்திரிகையினை நடாத்துவது எனவும்,

வேறு எதுவுமே தயாராக இருக்கவில்லை. இடமும் பத்திரிகை நிறுவனத்திற்கேற்ப வடிவமைக்கப்படவில்லை. இருப்பினும் பொங்கலுக்கு ஈழமுரசு வெளிவரும் என்பதில் நாம் உறுதியாய் இருந்தோம். கஜன் இதில் தீவிரமாய் இருந்தான்.

ஒரு வகையில் நண்பர்களின் உதவியுடன் இடத்தினைத்

**நாம் திட்டமிட்டவாறு, எமது எதிர்பார்ப்பிற்கு ஏற்றவாறு முதலாவது இதழ் அமையவில்லை. இருப்பினும் எமக்கு நம்பிக்கை இருந்தது. வழமையாகப் பத்திரிகைகள் கூறும் 'ஒருநிறுவனம்' என்பதற்குப் பதிலாக 'ஈழமுரசு என்றும் போராட்டத்தின் பக்கமே' என நாம் முதலாவது இதழிலே பிரகடனப்படுத்தியதற்கு மக்கள் மத்தியில் கிடைத்த வரவேற்பும் எமக்கு உற்சாகத்தினைத் தந்தது.**

பத்திரிகை ஆரம்பித்து வெளிவிடும்வரை நான் பாரிஸில் நின்று பத்திரிகை விடயங்களைக் கவனிப்பது என்றும் முடிவாகியது. பத்திரிகை வெளிவந்தவுடன் பல்வேறு எழுத்தாளர்களின் தொடர்புகளைப் பெற்றுக் கொள்வது இலகுவாகும் எனவும் திட்டமிட்டுக் கொண்டோம்.

இதற்கிடையில் பத்திரிகைக்கு தயார் படுத்தினோம். தொலைபேசி இணைப்புக்கு வேண்டுதல் விடுத்தோம். பத்திரிகையினைப் பதிவதற்கான ஏற்பாடுகள் விடப்பட்டன. "வெளிவருகிறது ஈழமுரசு" என்ற சிறு அறிவித்தலும் வெளியிடப்பட்டது.

'ஈழமுரசு' வெளிவருகின்றது என்ற அறிவித்தல் வெளிவந்தவுடன், ஏற்கனவே வெளிவந்து கொண்டிருந்த பத்திரிகை ஒன்

கூறி கஜனை அப் பத்திரிகை அலுவலகம் நோக்கி அனுப்பி வைத்தேன்.

நண்பன் ஒருவருடன் அப் பத்திரிகை நிர்வாகியைச் சந்திக்கச் சென்ற கஜன் திரும்பி வந்து கூறிய தகவல் என்னைத் திடுக்கிட வைத்தது. மூத்த பத்திரிகையாளரிடம் எமது நிலையைத் தெரிவித்து ஆசி பெறச் சென்ற அவன் அவமதிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டிருந்தான். 'ஈழமுரசு'வினை "வீழ்த்துவதற்கான" வேலைகளும் உடன் ஆரம்பிக்கப்பட்டன. "பிரதி வெள்ளி தோறும் வெளிவருகிறது முரசொலி" என அப் பத்திரிகை நிறுவனத்தால் புதிய ஒரு பத்திரிகைக்கான அறிவித்தலும் வெளியிடப்பட்டது.

இது குறித்து நாம் அலட்டிக் கொள்ளவில்லை. எமது பத்திரிகையினை மக்கள் விரும்பினால் வாங்கிப்படிப்பார்கள். என்ற நோக்குடன் எமது வேலைகளைத் தொடர்ந்தோம். பத்திரிகையில் ஆரம்பிக்க வேண்டிய 'பத்திகள்' பற்றிக் கலந்தாலோசித்தோம். எமது புலம் பெயர் வாழ்வின் அவலங்களை வெளிக்கொணர்வதற்கு ஒரு பத்தியும் போலித்தனங்களை அம்பலப்படுத்துவதற்கு

# பிறந்த கதை

'ஈழமுரசு' என்ற பெயருக்குப் பதிலாக வேறு பெயர்கள் வைக்கலாம் என்ற ஆலோசனை வந்துவிட்டது. இதற்கமைய பல்வேறு பெயர்களும் கலந்தாலோசிக்கப்பட்டன. அப்போது பத்திரிகைத் துறையிலும் எழுத்துத் துறையிலும் ஈடுபாடும் ஆர்வமும் கொண்ட, பத்திரிகைகளினை மக்கள் பயன்படுத்துவதில் நல்ல பல ஆலோசனைகளைத் தந்த நண்பன் 'சுவிஸ் முரளி' மக்களுக்கு ஏற்கனவே அறிமுகமான பெயர் என்ற வகையில் 'ஈழமுரசு' என்ற பெயரினை வலியுறுத்தினார். அதன் படி அப்பெயர் உறுதி செய்யப்பட்டது.

ஏறத்தாழ பத்திரிகை வெளியிடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட தொடங்கின. 'கீதா மளிகை'யின் (தற்போதைய மக்கள் கடை) மேல் உள்ள இடமும் பத்திரிகைச் செயற்பாடுகளுக்கு என எடுத்தாயிற்று. 1994-ம் ஆண்டு டிசம்பர் 28-ம் திகதி ஈழமுரசு வெளிப்படுத்துவதற்காக நான் பிரான்ஸ் வந்து சேர்ந்தேன். பத்திரிகை வெளியிடுவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட, இடத்தினைத் தவிர

றின் நிர்வாகி விடுதலைப் புலிகளின் பிரெஞ்சுக் கிளைப் பொறுப்பாளருடன் தொடர்பு கொண்டு அதிருப்தி தெரிவித்தார். 'ஈழமுரசு' ஆரம்பிக்கும் வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த என்னிடமும், கஜனிடமும் இத் தகவல் தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு அதிருப்தி தெரிவிக்கப்பட்ட காரணத்தினை எம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. எமது சிந்தனைகளுக்கு, விருப்பங்களுக்கு ஏற்ப ஒரு பத்திரிகையை வெளிவிடுவதற்கு நாம் விரும்பினோமே தவிர எந்த ஒரு பத்திகைக்கு எதிராகவோ அல்லது போட்டியாகவோ பத்திரிகையை வெளிவிட விரும்பவில்லை. எமது பத்திரிகையில் சுதந்திரமாக வேறு எந்த வித நோக்கமும் எமக்கு இருக்கவில்லை. இதனால் இவ்வாறு அதிருப்தி தெரிவிக்கப்பட்டமை எமக்கு கவலையை அளித்தது. "பத்திரிகைகளுக்கிடையே புரிந்துணர்வும் நட்புறவும் அவசியம், இதனால் அப் பத்திரிகையின் நிர்வாகியுடன் போய் எமது நோக்கத்தைப் பற்றி தெளிவுபடுத்திவிட்டு வா" எனக்

இன்னொருபத்தியும் வெளியிட வேண்டும்எனக் கலந்துரையாடியபோது, போலித்தனங்களை அம்பலப்படுத்தும் பத்தியினை தான் எழுதுவதாக முன்வந்தான். 'ஆருக்குச் சொல்லி அழ' என்ற பெயரையும் அவனே முன் மொழிந்தான். பத்தியினை என்ன பெயரில் எழுதலாம் என்று தொடர்பாகக் கலந்துரையாடிய போது, சிவநாயகம் ஐயா, 'ஆசைத்தம்பி' எனும் பெயரினையும் கூறினார். அப் பெயர் எமக்குப் பிடித்துவிட்டது. அப் பெயரிலேயே பத்தியினை எழுத கஜன் தீர்மானித்தான்.

பத்திரிகை வேலைகள் ஆரம்பித்தன. முன் ஏற்பாடுகள் போதிய அளவில் இல்லாதமையால் மிகுந்த சிரமம் இருந்தது. தொலைபேசி இணைப்பும் கிடைக்கவில்லை. அதனால் தொலைபேசி கதைப்பதென்றால் வீதியோரம் உள்ள தொலைபேசிப் பெட்டிக்கே செல்ல வேண்டியிருந்தது. `A3' அளவிலான Printer எடுப்பதற்கு நிதி வசதி இருக்கவில்லை. Printer இல்லாத படியால் 'வெட்டி ஒட்டிப்' பத்திரிகையினை

வெளிக்கொணர்வமா என்ற எண்ணமும் ஏற்பட்டது. இருப்பினும் வடிவமைப்பாளர் நிதி `A3' Printer இருப்பின் தான் பத்திரிகை சிறப்பாக இருக்கும் என்று கூறி தானே பணத்திற்கு ஒழுங்கு செய்து Printer ஒன்றினைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்தார். பத்திரிகையினைப் பதிவு செய்வதற்கு விண்ணப்பித்து அது குறித்த முடிவு வராத நிலையிலும் - முடிவு சாதகமாக வரும் என்ற நம்பிக்கையுடன் வேலைகளைத் தீவிரப்படுத்தினோம். புதிதாய் ஒரு பத்திரிகை ஆரம்பிப்பதில் முன் அனுபவம் யாருக்குமே இருக்கவில்லை. பொங்கலுக்குள் பத்திரிகையினை வெளிக் கொணர்வதற்கு கடுமையாக உழைத்தோம். ஏறக்குறைய 72 மணித்தியாலங்கள் நித்திரை கொள்ளாத நிலை. பத்திரிகையினை வடிவமைத்தவாறே கம்பியூட்டர் முன் தூக்கத்தினால் விழக் கூடிய நிலையில் வடிவமைப்பாளர்கள்; எழுத்துப்பிழை பார்க்க முடியாதவாறு கண் நிரம்பிய தூக்கத்துடன் நண்பர்கள்; விடயங்களையும் புதிதாய் எழுத வேண்டிய தேவை ஏற்பட்ட போதெல்லாம் உற்சாகமாக எழுதமுடியாத நிலையில் நாம் - இருப்பினும் பொங்கலுக்குள் பத்திரிகையை வெளிக் கொணர்வதில் உறுதியாய் இருந்தோம். வெளிக்கொணர்ந்தோம்.

நாம் திட்டமிட்டவாறு, எமது எதிர்பார்ப்பிற்கு ஏற்றவாறு முதலாவது இதழ் அமையவில்லை. இருப்பினும் எமக்கு நம்பிக்கை இருந்தது. வழமையாகப் பத்திரிகைகள் கூறும் 'ஒருநிறுவனம்' என்பதற்குப் பதிலாக 'ஈழமுரசு என்றும் போராட்டத்தின் பக்கமே' என நாம் முதலாவது இதழிலே பிரகடனப்படுத்தியதற்கு மக்கள் மத்தியில் கிடைத்த வரவேற்பும் எமக்கு உற்சாகத்தினைத் தந்தது.

அந்த உற்சாகத்துடனேயே இரண்டாவது இதழையும் வெளிக் கொணர்ந்தோம். முதலாவது இதழை விடத் தரத்தில் வளர்ந்திருந்தது. பத்திரிகை வளரும் என்பதில் பலருக்கு நம்பிக்கையையும் தந்தது. இரண்டாவது இதழ் வெளிவந்த பின்னர் கஜனிடம் முழுப் பொறுப்புக்களையும் கொடுத்துவிட்டு நான் பிரான்சில் இருந்து வெளியேறினேன்.

அப்போது முதல் கஜன் எம்மை விட்டுப் பிரியும் வரை 'ஈழமுரசு' வின் ஒவ்வொரு இதழ் தொடர்பாக நானும் கஜனும் கதைத்துக் கொண்டுதான் இருந்தோம்.

"செய்வதன் ஊடாகக் கற்றுக் கொள்ளலாம்" (LEARNING BY DOING) என்பதில் நாம் கொண்டிருந்த நம்பிக்கைக்கு ஏற்ப - பத்திரிகையாக வளர்ந்து கொண்டே வந்தது.

கஜனின் ஆளுமையும் வளர்ந்து கொண்டே வந்தது. புலம் பெயர்ந்து வாழ்கின்ற தமிழ் மக்களிடையே ஒரு நல்ல பத்திரிகையாளராகக் கஜன் பரிணமித்துக் கொண்டிருந்தான். 'ஈழமுரசு' வெற்றிகரமாக வெளிவந்து கொண்டிருப்பது என்றுமே மனதுக்குத் திருப்திகரமாக இருக்கிறது" என நண்பர்களிடம் நான் மகிழ்ந்து கூறிக் கொள்வேன்.

கஜன் பத்திரிகையாளனாக மட்டுமல்ல, பத்திரிகை நிறுவனத்தின் எல்லாச் செயல்பாடுகளையும் அவனது தலையில் சுமந்திருக்கிறான். பத்திரிகை வெளிவந்தபின் - அதனை விநியோகிப்பதில் இருந்து கணக்குகளைப் பார்வையிட்டு பத்திரிகைக்குரிய பணத்தினைப் பெற்றுக் கொள்வது, எழுத்தாளர்களுடன் தொடர்புகளை எடுத்து அவர்களின் உறவுகளைப் பராமரிப்பது, பத்திரிகை அலுவலகத்தை ஒழுங்குபட நிர்வகிப்பது வரை நிறையவே அவன் உழைத்திருக்கிறான். அவனது கடுமையான உழைப்பினைப் பார்த்தபோது எனக்கு என் மீதே ஒரு குற்ற உணர்வு தென்பட்டதும் உண்டு. அவனின் பொறுப்புக்களைப் பகிர்ந்து கொள்வதற்கு சில காலம் அவனுடன் போய் நிற்பதற்கும் நான் விரும்பியதுண்டு. இருப்பினும் அது நடைமுறையில், அவன் எம்மை விட்டுப் பிரியும் வரை கைகூடவில்லை.

பத்திரிகை வளர்ச்சியடையத் தொடங்கிய பின்னர் மாதம் ஒரு சஞ்சிகையும், இரண்டும் வளர்ச்சியடைய மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை தமிழில ஒரு 'ஆய்வுச் சஞ்சிகை' வெளியிடவேண்டும் என்பதுதான் எமது திட்டமாக இருந்தது. இதன் அடிப்படையில் 'பாலம்' சஞ்சிகையினை கஜன் ஆரம்பித்தான். 'பாலத்தினை' வளர்த்துச் செல்ல வேண்டிய பொறுப்பும் எமக்கு உள்ளது. பாலமும் வளருமாக இருப்பின், கஜனின் அடுத்த கட்ட விருப்பமான மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை 'ஆய்வுச்சஞ்சிகை' ஒன்றினையும் தமிழில் வெளியிட வேண்டும்.

'ஈழமுரசு'வின் இந்த 100-வது சிறப்பிதழின்போது - 'கஜன்' என்ற நண்பனது - பத்திரிகையானது மாவீரனது நினைவுகளுடன் கஜனுடன் வீரச்சாவடைந்த விடுதலைப் புலி இயக்கத்தின் சர்வதேச நிதிப் பொறுப்பாளர், நண்பன் மாவீரன் நாதனின் நினைவுகளும் எம்முன் எழும். என்றுமே இந்த நினைவுகள் எமக்குப் புத்தெழுச்சியினைத் தரும்.

**சர்வே**

**ORIENT TEXTILIEN & SCHMUCK**

*KOENIGSWALL 16 (AM FBF), 44137 DORTMUND - TEL: 0231-162377 - FAX: 49-231-147836*

* ஜேர்மனியில் தங்க நகைகளின் தரத்திற்கும், தேர்விற்கும் தனிச் சிறப்பு பெற்ற ஸ்தாபனம் சிங்கப்பூர் விலையில் S D 158,
* ஆடைகளின் நிரந்தர மலிவு விலைகள்: பனாறிஸ் சாறி 79; மைசூர் சில்க் 85; பட்டபிளை சாறி 25; குப்தா சாறி DM25; பஞ்சாபி DM 26; பட்டுவேட்டி DM 35, * கன, தரம் மிக்க எவர்சில்வர் பாத்திரங்கள், * புத்தம் புதிய டிசைன்களில் அலங்கார ஆபரணங்கள், பரதநாட்டிய ஆபரண செட் ab DM 119, * உங்கள் பழைய பவுணிற்கு குறைந்த கூலியில் உடனடியாகவே புதிய நகைகள் மாற்றிப் பெறுவதற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்! உரிமையாளர்: ச.ஜெகதீஸ்

தரம்! உத்தரவாதம்!! அதிக தேர்வு!!! மலிவு!!!!

தரமான பொருட்களை தரமற்ற பொருட்களுடன் ஒப்பிடாதீர்கள்

ஈழமுரசின் பணி தொடர எமது வாழ்த்துக்கள்

பல்லாயிரக்கணக்கான வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க

மீண்டும்

# யாழினி சென்ரர்



ஆடு, மாடு, மான், கோழி, இறைச்சி வகைகள் உயிர்க் கோழி, ஆட்டிறைச்சிப் பங்கீடுகள் மற்றும் சுவைமிகு மிளகாய்த்தூள், கறிப்பவுடர் அனைத்தும் மலிவு விலையில் உங்கள் நலன் கருதி மீண்டும் மகத்தான சேவையில்

## YALINI CENTER

2, Rue Perdonnet, 75010 Paris.
M°: La Chapelle ou Gare du Nord
Tel: 01 42 09 00 76

ஈழமுரசின் பணி தொடர எமது வாழ்த்துக்கள்

# ஷாலினி உணவகம்



திருமண வைபவங்கள், கொண்டாட்டங்களுக்கு சாப்பாட்டு ஓடர்கள் செய்வதற்கும் மணவறை, வீடியோ, மண்டப வசதிகள் மற்றும் அலங்கரிப்புக்கள் செய்துகொள்வதற்கும்

## ஷாலினி உணவகம்

23, Rue Cail,
75010 Paris.
Tel: 01 40 34 20 72

ஈழமுரசின் சேவை தொடர எமது வாழ்த்துக்கள்

தெற்கு லண்டனில் ஒரே நிர்வாகத்தின் கீழ் இயங்கும் ஒரே தமிழ் நிறுவனம்

# BEST FOODS

நாங்கள் தந்த நியாய விலையில்
நீங்கள் தந்துகொண்டிருக்கின்ற ஆதரவில்
நீண்டகாலம் சேவையாற்றும் முகமாக

# BEST FOODS

Super Market ஆக விஸ்தரிக்கப்படுகின்றது!

* Off Licence * News Agent

*Best Foods Super Market*

259b, 261 London Road,
W/CROYDON
Tel: 0181-684 6269 Fax: 0181-665 5299

# “முகம் இழந்த மனிதர்கள்”

முன்னொரு காலத்தில்
மகனே,
அவர்கள் இதயத்தோடு சிரிப்பார்கள்...
கண்களால் சிரிப்பார்கள்
ஆனால் இப்போது
பற்களால் மட்டுமே சிரிக்கிறார்கள்....

என் மகனே, குழந்தாய்!
இப்போது அவர்களின் வலதுகை
இதயமில்லாமல் குலுக்குகிறபோது
இடதுகை
என் காலி சட்டைப் பைகளைத்
துழாவுகின்றது
"உங்கள் வீடாக நினைத்துக் கொள்ளுங்கள்"
"மீண்டும் வருக"
என்று சொல்கிறார்கள்
ஆனால் நான் மீண்டும் வந்து
என் வீடாக நினைக்கிறபோது
ஒரு முறை, இரு முறை
மூன்றாவது முறை இருக்கப்போவதில்லை.
ஏனெனில்
கதவுகள் எனக்காக மூடிக்கொள்கின்றன.
நான் பலவற்றைக் கற்றுக் கொண்டேன்
மகனே, நான் பல முகங்களை
அணியக் கற்றுக் கொண்டேன்
அடிக்கடி மாற்று உடைகளைப் போல-
வீட்டு முகம், அலுவலக முகம்
ம்து அருந்தும் முகம் என்று-
படங்களில் நிலையாக இருக்கும்
சிரிப்புக்களைப் போல
உறுதி அளிக்கும் சிரிப்புக்கள்.
என்னை நம்பு மகனே;
நான்
உன்னைப்போல் இருந்த போது
எப்படி இருந்தேனோ
அப்படியே இருக்க விரும்புகிறேன்.
இந்த ஊமைச் செய்திகள் அனைத்தையும்
மறக்க விரும்புகிறேன்
சிரிப்பது எப்படி என்று
மீண்டும் கற்றுக் கொள்ள விரும்புகிறேன்.
ஏனெனில்
நான் கண்ணாடியில் இருக்கிற போது
என்பற்கள் பாம்பின் நச்சுப் பற்கள் போல்
தெரிகின்றன.
மகனே, குழந்தாய்
எப்படிச் சிரிப்பது என்று
எனக்குக் காட்டு
ஒரு காலத்தில்
நான் உன்னைப்போல் இருந்த போது
எப்படிச் சிரித்தேன் என்று
எனக்குக் காட்டு, மகனே.

நைஜீரியா நாட்டுக் கவிஞனான கபிரியல் ஒகாராவின் இந்தக் கவிதையைப் படித்த போது, 'சிறீலங்கன் அகதி' என்ற அடையாளக் குறியீட்டு அட்டையை சட்டைப் பையிலே சுமந்து கொண்டு, அதிலும் அந்த அடையாளக் குறியீடு தங்களுக்குக் கிடைத்ததையிட்டு பெருமிதம் கொண்டிருக்கும் முகமிழந்த நம்முடைய புகலிடத் தமிழர்களினது, பரிதாபத்திற்குரிய நிலை என் கண்முன் காட்சியாய் பிரிந்தது.

புகலிடத் தமிழர்களாகிய நாம் எமது தாயகத்தை விட்டு புலம்பெயர்ந்து இரண்டு தசாப்தங்கள் முடியப் போகிறது. இந்த இரண்டு தசாப்த காலத்தில், எங்களது சொந்த வாழ்க்கைக் கணக்கை கூட்டிக் கழித்துப் பார்த்தால், நாம் பெற்றிருப்பவையை விட இழந்திருப்பவையே அதிகம், ஞாபகத்தில் வைத்துக்கொண்டிருப்பவையை விட மறந்திருப்வையே அதிகம் என்பது தெரியவரும்.

எங்களூரில் எல்லா வீடுகளுக்கும் மின்சாரம் இல்லை. அதிவேக மின்சார ரயில் இல்லை, மெத்திரோ இல்லை, விண்ணைத் தொடும் கட்டிடங்கள் இல்லை. அங்கே எங்களுடைய மருத்துவக் காப்புறுதி இல்லை. குடும்ப உதவி (Allocation familial) கூட இல்லை.

ஆனால் இங்கே மின்சாரம் இல்லாத வீடோ கிடையாது. அதிவேக மின்சார ரயில், மெத்ரோ பள்ளம் மேடில்லாத நீண்ட தெருக்கள். அடுக்கடுக்கான தொடர் மாடிக் கட்டிடங்கள் மருத்துவ காப்புறுதி, குடும்ப உதவி என்று எல்லாமே உண்டு.

இருந்தும், எங்களூர் செம்மண்கறை அவற்றின் புழுதி மணத்தை, நெருஞ்சி முட்கள் நிறைந்த பனங்கூடல்களை, அங்கே வீழ்ந்து கிடக்கும் பனங்காய்களில் கூழி கொண்டு செய்யப்படும், பனங்காய்ப் பணியாரத்தை பனங்கிழங்கை, புளுக்கொடியலை, அவற்றை ருசித்து ரசித்துச் சாப்பிட்ட நினைவுகளை, நம்மூர் மாந்தோப்புக்களை, அவற்றில் காய்த்துக் குலுங்கும் கறுத்தக்கொழும்பான், விலாட்டு மாங்காய்களை, அவற்றைப் பறிப்பதற்காக திருட்டுத்தனமாய் தோப்புக்காரன் அறியாமல் கல்லெறிந்த நினைவுகளை மார்கழி மாதத்தின் அதிகாலைப் பொழுதில், நம்மூர் சிவன், பிள்ளையார், முருகன், அம்மன் கோவில்களில் திருவெம்பாவை அவலுக்கும், கண்டலுக்கும், காத்திருந்த கதையை, கோவில் வீதிகளில், சடைத்து பிரிந்து நிற்கும் ஆலமரங்களிலும், ஏறி ஒழித்து விழுந்த கதைகளை நினைத்துப் பார்க்கின்ற போது கிடைக்கின்ற சுகம், ஏக்கம், இங்குள்ள தொடர் மாடிக் கட்டிடங்களைப் பற்றியோ, பிரமாண்டமான பூங்காக்கள், சுற்றுலா மையங்கள், மற்றும் பிரமாண்டமான பல் பொருள் அங்காடிகள் பற்றியோ, நினைக்கிறபோது கிடைப்பதில்லை.

காரணம்: இங்குள்ள மண் எங்களின் சொந்த மண் கிடையாது. இங்குள்ள நாடுகள் எங்களின் சொந்த நாடுகள் கிடையாது, இங்குள்ள மொழிகள் எங்களின் சொந்த மொழிகள் கிடையாது. இங்குள்ள கலாச்சாரப் பண்பாட்டு விழுமியங்கள், எங்களின் சொந்தக் கலாச்சார பண்பாடுகள் கிடையாது. இங்கு நாங்கள் அந்நியர்கள். பிறப்பால், இனத்தால், மொழியால், நிறத்தால் எல்லாவற்றாலுமே இங்கு நாம் அந்நியர்கள்.

அடிப்படையில் இங்குள்ள ஐரோப்பிய சமூகம் என்பது, ஒரு சமூக அமைப்பை தகர்த்துக் கொண்டு, இன்னொரு சமூக அமைப்புத் தோற்றம் பெற்ற படிமுறை வளர்ச்சியில் வந்தது. ஆனால் நம்முடைய சமூகமோ, ஒரு அமைப்பைத் தகர்த்துக் கொண்டு ஒன்றை ஒன்று அரவணைத்துக் கொண்டு இயங்குகின்ற சமூக அமைப்பாகும். நம்முடைய சமூகத்திலே இன்னமும், அடிமைச் சமூகத்தின் கூறுகளும், நிலப்பிரபுத்துவ சமூகத்தன் சாதிய அடிமைத்தனமும், கலாச்சார ரீதியில் ஆழமாக வேரூன்றியுள்ளன.

முதலாளித்துவ சமூகத்தின்படி நிலைக்கு முழுமையாக வளர்ச்சியடையாத நமது சமூகம், முதலாளித்துவம் உச்சக் கட்டத்திலுள்ள ஐரோப்பிய சந்தைப் பொருளாதார நுகர் பொருள் சமூகத்தின் வாழமுறபடுகின்ற போது அந்நியமாதல் என்பது தவிர்க்க முடியாததாகி விடுகிறது.

நம்முடைய புலம் பெயர்வு ஆரம்பித்த இரண்டு தசாப்த காலத்தில் இந்த அந்நியமாதல் என்பது, ஒரு மிகப் பெரிய சமூகப் பிரச்சனையாகவே உருவெடுத்து வந்திருக்கிறது. இந்த 20 வருட காலத்தில்...

1. ஐரோப்பியக் குடியுரிமை பெற்று ஐரோப்பிய சமூகத்தில் ஐக்கியப் பட்டுப் போக விரும்பியவர்கள். அல்லது அந்தக் குடியுரிமை என்கிற அடையாளச் சின்னத்துக்குள்ளேயே தங்களது சுய அடாளத்தை தக்க வைக்க விரும்புகின்றவர்கள்.
2. சிறீலங்கன் அகதி என்ற அடையாளக் குறியீட்டுக்குள் இருந்து கொண்டு தாங்கள் இழந்து கொண்டிருக்கும் தங்களது சுய அடையாளத்தைக் காப்பாற்றப் போராடுபவர்கள்.
3. ஐரோப்பிய பெரு நகர்ச் சீரழிவுக் கலாச்சாரத்துக்குள் எல்லாவற்றையுமே தொலைத்துவிட்டு தாங்களும் தொலைந்து போய்க்கொண்டிருப்பவர்கள்.

என்று மூன்று பிரிவுகளாக நம்முடைய புகலிடத் தமிழர்சமூக அமைப்பு பிளவுபட்டுப் போயுள்ளது. இந்த மூன்று பிரிவுகளில் முதல் பிரிவில் 10முதல் 20வீதமானவர்கள் உள்ளனர். பிரெஞ்சு, இங்கிலாந்து, ஜேர்மன், டெனிஸ், நோர்வே, என்று ஐரோப்பியக் குடியுரிமை (தனித்தனியாக) பெற்ற இவர்களிலும் இரண்டு பிரிவினர் உண்டு. ஒரு பிரிவினர், தங்களுக்குத் தாங்களே தொப்புள் கொடி அறுத்துக் கொண்டவர்கள். அதாவது இவர்களைப் பொறுத்தவரை, தமிழ் மொழி அசிங்கமானது, தமிழர்கள் அசிங்கமானவர்கள், தமிழ் கலாச்சாரம், பண்பாடு அசிங்கமானது. தமிழ் பேசுவதும், எழுதுவதும், படிப்பதும் கூட கௌரவக் குறைச்சலானது. மறு பிரிவினர் இந்த ஐரோப்பியக் குடியுரிமை எற்ற அடையாளத்தை வைத்திருக்கும் அதே நேரத்தில் தாங்கள் தமிழர்கள் என்ற சுய அடையாளத்தையும் பேணிக்காக்க வேண்டும் என்று நினைப்பவர்கள். இதில் முதல் பகுதியினர் என்னதான் தங்களைக் வெள்ளைக்காரர்களாக மாற்றமுயன்றாலும், தங்களது சுய அடையாளத்தை ஐரோப்பிய இனம் என்று மாற்ற முயற்சித்தாலும், அவர்களுக்கு பிறப்பினால் வந்த 'தமிழர்'என்ற இனக் குறியீட்டை ஐரோப்பியர்கள் இல்லாமல் செய்துவிடத் தயாராக இல்லை. இதனால் இவர்கள் ஐரோப்பிய சமுதாயத்தில் முற்று முழுதாக ஒன்றமுடியாமல் அந்நியப் பட்டுப்போய், தமிழ் சமூகத்திலிருந்தும் அந்நியப்பட்டுப் போய் வேடதாரிகள் போலவே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மற்றப் பிரிவினரின் நிலை இரண்டு தோணியில் கால்வைத்ததைப் போன்றது.

இவர்களை விட இரண்டாவது பிரிவில் (புகலிடத் தமிழர்களில் 70 முதல் 80 வீதத்தினர்) அகதி அந்தஸ்த்துப் பெற்றவர்கள் என்ற ஒரு பிரிவும், உரிய வதிவிட அனுமதி பெற்றவர்கள் என்ற ஒரு பிரிவும், உரிய வதிவிட அனுமதி வழங்கப்படாமல், மனிதாபிமான அடிப்படையில் தங்க அனுமதிக்கப்பட்டவர்கள் என்ற மற்றொரு பிரிவும் அடக்கம்.

இவர்களில் முதல் பகுதியினரில் கணிசமானோர், தங்களிற்குக் கிடைத்திருக்கும் அகதி அந்தஸ்த்தையும், தற்காலிக வதிவிட அனுமதியையும் கிடைத்தற்கரிய பெரும் பேறாக நினைப்பவர்கள். இவர்களது இலட்சியம் அப்படியே யாழ்ப்பாணத்தை பெயர்த்தெடுத்து வந்து பாரிசில் அல்லது லண்டனில் அல்லது ஜேர்மனியில் ஏதாவது ஒரு நகரத்தில் அப்படியே மறு நிர்மானம் செய்து கொண்டு யாழ்ப்பாண வாழ்வு வாழ வேண்டும் என்பதுதான். அவ்வாறு இங்கு யாழ்ப்பாண வாழ்வு வாழப்போவதாக நினைத்துக் கொண்டு, அங்கே செத்துமடிந்து கொண்டிருக்கும், சாதி அமைப்புக்கும் , ஊர்பிரதேச வாதங்களுக்கும், புத்துயிரூட்ட முனையும் போது, அதுவே இங்கு முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதற்கும், அந்நியமாதலை தூண்டுவிப்பதற்கும் அடிப்படையாக அமைந்து விடுகிறது.

நம்முடைய நாட்டிலும், தமிழகத்திலும் சாதி அமைப்பானது மக்களை 'சாதியச்சமூகம்' என்ற அடிப்படையில் ஒருங்கிணைய வைத்ததன் மூலம் ஓரளவிற்கு அந்நியமாதலைத் தடுக்க உதவியிருக்கிறது. ஆனால் இங்கே ஐரோப்பாவில் சாதிகள் அற்ற சமூக அமைப்பில் சாதியைக் கொண்டுவந்து திணிக்க முற்படும்போது, சாதியச் சமூகத்திற்கும், சாதியமறுப்புச் சமூகத்திற்குமிடையிலான முரண்பாடாக மாறி, அதுவே அந்நியமாதலுக்குக் காரணியாகவும் அமைந்து விடுகிறது.

மூன்றாவது பிரிவினர், அந்நியமாதலின் உச்ச கட்டத்தற்குச் சென்று-அதன் காரணமாகவே ஐரோப்பிய பெருநகரச் சீரழிவுகளுக்கு அடிமையாகி, அவற்றிலிருந்து மீழமுடியாமல், குற்றவாளிகளாகவும், சமூக விரோதிகளாகவும், மனநோயாளிகளாகவும்மாறி சமூகத்திலிருந்தும், குடும்பத்திலிருந்தும், வீட்டிலிருந்தும் கூடத் தனிமைப்பட்டுப்போய் முகவரி இல்லாமல் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். சமீக காலமாக இவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவருவதானது அந்நியமாதல் நமது புகலிடச் சமூகத்தில் அதிகரித்து வருகிறது என்பதையே எடுத்துக் காட்டுகிறது.

யுத்த மேகங்கள் சூழ்ந்த எங்கள் தேசத்தில் பற்றாக் குறைகளுக்கும், நெருக்கடிகளுக்கும் மத்தியில் நாம் வாழ்ந்தபோதும் அந்நியமாதல் என்பது குறிப்பிட்டுச் சொல்கின்ற அளவுக்கு இல்லாமல் இருந்தது. அங்கு பஞ்சமும், பிணியும்,மரணமும்துரத்துகின்ற சூழ்நிலையில், பரஸ்பரம் ஒருவருக்கொருவர் உதவி செய்வதிலும், ஒத்தாசை புரிவதிலும், அன்பு செலுத்துவதிலும், போலித்தனம் இல்லாமல் இருந்தது.

ஆனால் இங்கு அன்பு செலுத்துவதில் போலித்தனம், உதவி செய்வதில், ஒத்தாசை புரிவதில் போலித்தனம், சிரிப்பதில் போலித்தனம், வாழ்வதில்கூடப் போலித்தனம் என்று எல்லாமே போலியாகவும், நடிப்பாகவும் ஆகிவிட்டது. நைஜீரியக் கவிஞர் சொன்னது போல் நாங்கள் இங்கே வீட்டு முகம், அலுவலகமுகம், நடுத்தெருமுகம், விருந்துமுகம் என்று ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு முகமூடிகளை அணிந்து கொண்டிருக்கிறோம். மொத்தத்தில் நாங்கள் அசலைத் தொலைத்துவிட்டு நகலைத் தேடிக்கொண்டிருப்பவர்கள். முகத்தைத் தொலைத்துவிட்டு முகமூடிகளைத் தேடிக் கொண்டிருப்பவர்கள்.

- நக்கீரன்

ஈழமுரசின் 100வது
முழக்கத்திற்கும் அதன் பணி
தொடரவும் எமது வாழ்த்துக்கள்

**T.K.**
*Enterprises*



82, Tooting High St.
London Sw17
Tel: 0181-672 9505
Tooting Broadway Station முன்பாக

ஈழமுரசின்
நற்பணி தொடர எமது
நல் வாழ்த்துக்கள்

இலண்டனில் உங்கள்
வீட்டுத் தேவைக்கான
அனைத்துப்
பொருட்களையும்
பெற்றுக்கொள்ள

**VARSHI'S**
**Super Store**

தமிழ் மக்களின்
நன்மதிப்பைப் பெற்ற
ஸ்தாபனம்!

99, Burlinton Road,
New Malden,
Surrey KT3 4LR
Tel: 0181-336 0061

ஈழமுரசின் பணி
தொடர எமது
வாழ்த்துக்கள்

தமிழ் மக்களின்
அன்றாட தேவைகள்
அனைத்தையும் பூர்த்தி
செய்ய நீங்கள் நாட
வேண்டிய ஸ்தாபனம்

**Prime foods**



118, Tooting High St.
London SW 17
Tel: 0181-682 3777

ஈழமுரசின் பணி தொடர எமது நல் வாழ்த்துக்கள்

**வெகு விரைவில்**
**உலகம் உங்கள் கரங்களில்**

குறைந்த விலையில் கூடிய அலகுகளைக் கொண்ட புதிய
தொலைபேசி அட்டை அறிமுகப்படுத்தப்படவுள்ளது

* ஏற்கெனவே பாவனையில் இருக்கும் தொலைபேசி அட்டைகளை விட கூடிய நேரத்தில் - குறைந்த விலையில் உரையாடத் தேடிவரும் புதிய அட்டை
* பிரான்சிலிருந்து எந்தவொரு நாட்டிற்கும் இலகுவாக தொடர்பு கொள்ளலாம்
* தொலைபேசி அட்டையில் உள்ள அலகுகள், அவற்றின் பாவனை நேரம் ஆகிய விளக்கங்கள் தமிழில்.




**FRANCE WORLD**

| | | | |
|---|---|---|---|
| இலங்கை | 19 நிமிடம் | U.S.A. / கனடா | 72 நிமிடம் |
| பாகிஸ்தான் | 19 நிமிடம் | இங்கிலாந்து | 72நிமிடம் |
| இந்தியா | 24 நிமிடம் | சிங்கப்பூர் | 45 நிமிடம் |

# அவ்வை யார்?

தமிழ் வளர்ச்சிக்கும், தமிழர்தம் மத வளர்ச்சிக்கும் பெண்ணினத்தின் பங்களிப்பு தொன்று தொட்டே இருந்து வந்திருக்கிறது.

அவர்களில் அவ்வைப் பாட்டியானவரே தமிழர் தம் நெஞ்சங்களில் நிறைந்தவர்; உணர்வுகளுடன் ஒன்றிக் கலந்தவர்.

'அவ்வை' என்ற பெயரில் பல பாட்டிகள் வாழ்ந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது.

எனது ஆய்வுகள் மூன்று அவ்வையரை இங்கே முன்னெடுத்துச் செல்கின்றது. முதல் மூத்த அவ்வையானவர் கி.மு. பல்லாயிரம் வருடங்களுக்கு முன் தோன்றியவர்.

. இரண்டாவது அவ்வை கி.பி.3-ம் நூற்றாண்டின் பின்பு வாழ்ந்திருத்தல் வேண்டும். மூன்றாவது அவ்வையின் காலம் கி.பி.11-ம் நூற்றாண்டின் பிற் பகுதியாக இருக்கலாம். முதலில் கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழருக்கு நற்றொண்டு ஆற்றியவராகக் கருதப்படும் இரண்டாவது அவ்வையின் நெறிகலந்த நெஞ்சத்தை அணுக, அதற்கான பின்புலத்திற்கு வருவோம்.

மூன்று தமிழ்ச் சங்கங்களில் 'கடைச்சங்கம்' கி.பி.3-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் நேர்ந்த கடல் கோளால் அழியுண்டிருக்கலாம் என ஒரு கருத்தும்; தமிழர், தெய்வப் புலவர்என்று போற்றும் திருவள்ளுவர்தம் திருக்குறள் அரங்கேற்றப்பெற்று நல்லாதரவைப்பெற்ற வேளை, கருத்து வேளாண்மைகளால் 'சங்கப்பலகை' (Tamil board) உடையுண்ட பின்னரே 3ஆவது கடல் கோள் ஏற்பட்டிருத்தல் வேண்டும் என்றொரு கருத்தும் நிலவிவருகிறது. கடைச் சங்கம் கருத்து வேற்றுமைகளால் தன்னை மாய்த்துக் கொண்டதற்கும் திருக்குறளின் அரங்கேற்றமே காரணம் என்ற கருத்து நியாயப் படுத்தக்கூடியதே!

திருக்குறளில் தென்படும் உயர் நெறிகள் யாவும் அக் காலப் பகுதிக்குரிய 2-வது அவ்வையின் நூல்களில் படிமம் பெறுகின்றன. 'திருக்குறள்' சமணத்தமிழ் நூலாக ஏற்கப்பட்டதால் அந்நூல் வேத ஆசிரியர் வழிவந்தோர்க்கு உடன்பாடற்றதாகியதுபோல்; சைவ சமயியாக நின்றும் சமணத்திருக்குறளை முதல் நூலாகக்கொண்டு தமிழரை நன்நெறிப்படுத்தி வந்த 2-வது அவ்வையான்வரும் ஆரியர் வசைக்கு உள்ளாகின்றார்.

அவ்வையும் திருவள்ளுவரும் சகோதரர் எனவும், இழிகுலத்தினர் (சண்டாளர்) எனவும்; பெற்றோரால் கைவிடப் பெற்று எங்கெங்கோ அநாதரவாக வளர்ந்தனர் எனவும், ஆரியர் வழிவந்தோர் கதைகட்டிக் கொள்கின்றனர்.

இனி, கி.பி.11-ம் நூற்றாண்டிற்கு வருவோம்.

சோழ மன்னர்கள் புகழ்க் கொடி நாட்டி நின்றகாலப் பகுதி அது. சோழன் தமிழ்ச் சபையை அலங்கரிக்க, அவர்களது மூன்று தலைமுறைக்குக் குருவாகியும் ஆஸ்தானப் புலவராகியும் புகழ்கொடி நாட்டிய கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர், கவிச்சக்கரவர்த்தி கம்பருடன் சோழன் அவையைச் சிறப்பிக்க புகழேந்திப் புலவரும் பாண்டிய மண்டலத்தில் இருந்து சோழன் அவைக்கு வந்து



தமிழ்பாட, அனைத்துத் தமிழ் வளர்ச்சியும் சோழன் சார்ந்த ஆரியர் தம் தணிக்கை முறையூடாக அரங்கேற்றம் பெறுகின்றன. தமிழ் நூல்கள் அனைத்தும் வடமொழி நூல்களை அடியொற்றியே சோழர் சார்ந்த தமிழ் புலவர்களால் படைக்கப் பெறுகின்றன.

இக் காலப் பகுதிக்குரிய மூன்றாவது அவ்வை செருக்கு நிறைந்தவராகவே இனங்காட்டப் பெறுகின்றார்.

சோழர்கள் சிறப்பித்த ஆஸ்தானப் புலவர்கள் கவிச்சக்கரவர்த்திகள் யாவரும் இந்த அவ்வையின் வசைக்கு உள்ளாகின்றனர்.

'எட்டேகால்' இலட்சணமே, எமன் ஏறும் பரியே!...

என கவிச்சக்கரவர்த்தி கம்பரும், 'ஒட்டா ஒருமதி கெட்டாய்' என சோழனின் குருவான கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தரும் அவ்வையின் வசைக்கு உள்ளாகின்றனர்.

அவ்வையின் செருக்கை அடக்க தமிழ்க் கடவுளான முருகப்பெருமான் நாவல் கனி மூலம் பாடம் போதித்ததான கதைகள் இக் காலத்திலேயே உருவாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

கி.பி 7-ம் நூற்றாண்டிலேயே 'விநாயகர் வணக்கம்' தமிழ் நாட்டில் புகுந்திருக்கிறது என்பதும்; கி.பி. 7-ம் நூற்றாண்டிற்கு முற்பட்ட தமிழ் நூல்களில் விநாயகர் காப்பு இடம்பெற்று இருப்பது, பின் வந்தோர் இடைச் செருக்கல் என்பதும் ஆய்வினர் தம் முடிவாகையால் 'விநாயகர் அகவல்' எனும் நூலை இம் 3-வது அவ்வைக்குரியதாக்கலாம்.

('வி' என்பது அறிவு அல்லது ஞானம்; அதேபோல் 'புத்' என்பதும் அறிவு அல்லது ஞானம்.

புத்தரும், விநாயகரும் அரசமரத்தைத் தேர்ந்தமை சிந்தனைக்குரியது)

இவை இவ்வாறு இருக்க, முதல் தோன்றிய மூத்த அவ்வையிடம் வருவோம். தமிழர், அவ்வை என்றதுமே சிவசினைத்துடன் ஆசாரம் மிக்க ஒரு மூதாட்டியைத் தம் மனக் கண் முன் நிறுத்தி மகிழ்ந்தவர்கள்; பிற்காலத்தே தோன்றிய கூத்துக்கள், சினிமாக்களில் ஆசாரத்துடன் அவ்வையாகவே தோற்றம் தந்த நடிகர்களில் (டி.கே.சண்முகம், கே.பி.சுந்தராம்பாள்) அவ்வைத் தரிசனம் பெற்றவர்கள். தாம் ஏற்படுத்தி வைத்த கற்பனைகளில் இருந்தும், முன்னர் அகத்தே பதிவாகிப்போன பாரம்பரிய மூடமைகளிலிருந்தும் இம்மியளவும் விலகாத நெஞ்சுறுதி பெற்றவர்களாக வாழ்ந்து இன்றைய காலப் பகுதியிலேயே தமது உண்மை உருவத்தை உள்ளபடி காணவேண்டும் எனும் பக்குவத்திற்கு வந்திருக்கிறார்கள். எனவே, முதல் தோன்றிய மூத்த அவ்வையார் முகம் சுழிக்க மாட்டார்கள்.

பொலிவிழந்த ஆடை; அருகிலே சென்றால் மாமிசவாடை.

குடிப்பதோ மது; விரும்பி உண்பதோ எலும்புடன் கூடிய மாமிசத் துண்டம்.

எமது மூத்த அவ்வையானவர் ஒழிவு மறைவின்றி தனது உண்மை வேடத்தை இவ்வாறு தான் இனங்காட்டுகிறார். தமிழர் போற்றும் புறநாநூறு எமது அவ்வைப் பாட்டிக்கான வேடத்தை இவ்வாறுதான் பதிவு செய்துள்ளது.

**'சிறியகள் பெறினே எமக்கீயும் மன்னே!**
**பெரியகள் பெறினே யாம்பாடத்தான் மகிழ்ந்துண்ணும் மன்னே....**
**என்பொடு தடிபடு வழியெலாம் எமக்கீயும் மன்னே..**
**நரந்தம் நாநாறும் தன்கையால் புலவு நாறும் என் தலை தைவரும்..'**

(புறம் 235)

**'.....என் அரை முது நீர்ப் பாசி அன்ன உடை களைந்து**
**திருமலர் அன்ன புதுமடிக் கொளிஇ மகிழ்தரல் மரபின் மட்டே அன்றியும்**
**அமிழ்து அன மரபின் ஊன் துவை அடிசில்**
**வெள்ளி வெண்கலத்து ஊட்டல்...'**

(புறம். 390)

திருவள்ளுவருக்கு முற்பட்ட (கி.மு) அவ்வையையும் பிற்பட்ட அவ்வைகளையும் (கி.பி) தொடர்பு படுத்தி ஓர் அவ்வையானவர் அதிகமான் உண்ட நெல்லிக்கனியால் பல்லாயிரம் வருடங்கள் வாழ்ந்து தமிழ் செய்தார் என ஒரு கதையும்; பந்தன் எனும் வைசிகன் நாகலோகத்தில் (தமிழீழம்) இருந்து கொணர்ந்த அருநெல்லிக் கனியில் பாதி நெல்லிக்கனியை உண்டு அவ்வையானவர் நெடுநாள் வாழ்ந்து தமிழ் செய்தார்' என வேறொரு கதையும் அவ்வை பற்றிய சிரஞ்சீவிக் கதைகளாகித் தமிழரிடை நிலை பெற்று வருகின்றது. கடைச்சங்கத்தே எழுந்ததாகக் கருதப்படும் சிறுபாணாற்றுப்படையில் 'நெல்லி அமிழ்து தீங்கனி அவ்வைக்கு ஈந்த அதிகனும்' எனும் வரியில் 'அமிழ்தம்' எனும் பதம் இடம் பெற்றிருக்கின்றது. முதல் மூத்த அவ்வையானவரும் அதிகமான் நெடுமான் அஞ்சி ஊட்டிய மாமிசம் பிசைந்து சோற்றுத் துகையலை கிடைத்தற்கரிய அமிழ்தத்துடன்' ஒப்பிட்டிருப்பதை ஏலவே (புறம் 390) அறிந்தோம்.

தவிர மேற்படி அவ்வையானவர் அதிகமான் நெடுமான் அஞ்சியின் மகன். 'பொருட்டு எளினி' யைப் பாடும் போதும் கரும்பின் இனிமையை அமிழ்தம் எனும் தேவாமிர்தத்துடன் ஒப்பிடுகின்றார்.

**'அந்தரத் தரும்பெறல் அமிழ்தம் அன்ன**
**கரும்பிவட்டத்தோன் பெரும்பிறங் கடையே'**

(புறம் 392)

கடைச் சங்க காலத்தே அரங்கேற்றமுற்ற திருவள்ளுவர்தம் திருக்குறளிலும் அமிழ்து, அமிழ்தம் எனும் பதங்கள்' பயன்படுத்தப்பட்டுள்ளன.

**'அமிழ்தினும்ஆற்ற இனிதே தம் மக்கள்**
**சிறுகை அளாவிய கூழ்'**

(திரு. அறம் மக்கட்பேறு)

**'வானின்றுலகம் வழங்கி வருதலால் தானமிழ்தம் என்றுணரற் பாற்று'**

(திரு. அறம். வான் சிறப்பு)

தமிழிலே அமிழ்து எனவும் அமிழ்தம் எனவும் அமிர்தம் எனவும் வழங்கப்படுவது தேவர்கள் உண்டு நீண்ட நாள் உயிர்வாழும் உணவு எனும் நம்பிக்கையூடாக உருவான பதமாகும்.

அமிர்தம் உண்டால் நீண்ட நாள் உயிர்வாழ முடியும் எனும் நம்பிக்கை இந்துக்களின் புராண, இதிகாசங்களூடாக எழுப்பப் பெற்றிருக்கின்றது.

• 'தேவர்களும், அசுரர்களும் அமிர்தம் உண்ணும் பொருட்டு திருப்பாற் கடலைக் கடைந்தனர்.

அவர்களது மத்தாக, மகா மேருமலையும், கயிறாக வாசுகி என்னும் பாம்பும் உதவிற்று.

தேவர் கூட்டமும், அசுரர் கூட்டமும் இக்கரையும், அக்கரையுமாக நின்று கடைய அமிர்தம் திரண்டுவரும் நேரம் தேவாசுரர்தம் இழுப்பின்வலி தாங்கமாட்டாது வாசுகி எனும் பாம்பானது திருப்பாற் கடலுக் குள் நஞ்சைக் கக்கிவிட்டது.

# அவ்வை யார்?

அனைவரும் முழுமுதற் கடவுளான சிவபெருமானிடம் முறையிட, அனைவரையும் காக்கும் பொருட்டு சிவபெருமான் அந்த நஞ்சை எடுத்து உண்டு அனைவரையும் மீட்டருளினார்.'

'ஒருமுறை, காக்கும் தெய்வமான திருமால் தேவர் கூட்டத்திற்கு அமிர்தம் வழங்கிக் கொண்டு இருந்த போது ஓர் அசுரன் கூட்டத்தோடு கூட்டமாக மறைந்து நின்று அமிர்தத்தை வாங்கிப் பருகிவிட்டான்.

உடனே தேவர்கள் அதனை திருமாலுக்குத் தெரிவித்தனர்.

திருமாலும் அமிர்தம் வழங்கிக் கொண்டிருந்த அகப்பையால் அந்த அசுரனை ஓங்கி அடித்தார். அசுரன் தலைவேறு உடல்வேறு ஆகியும், அமிர்தம் புசித்ததால் இராகு, கேது என சிரஞ்சீவி ஆனான்.

தமிழ் மொழியில் அமிழ்து எனவும், அமிழ்தம் எனவும் அமிர்தம் எனவும் வழங்கப்பெறுவது 'வடசொற்கிளவி' வட எழுத்தொரீஇ எழுத்தொடு புணர்ந்து சொல்லாகும்மே' எனும் தொல்காப்பிய சூத்திரத்திற்கமைய சமஸ்கிருதத்தின் அம்ருத (Amrta) என்னும் பதத்திலிருந்து உருவாக்கப்பட்டதாகும்.

ஆங்கில அகராதிகளில் அம்ரோசியா (Ambrosia) எனக் குறிப்பிடப் படுவதும், மேற்படி தேவர்கள் புசிக்கும் அமிர்தத்தையே குறிப்பிடும், இப் பதத்தை ஆங்கிலம் இலத்தீனிலிருந்தே கடன் பெற்றிருக்கிறது.

மேற்படி, பதம் கிரேக்க புராணங்களில் தேவர்தம் உணவைக் குறிப்பிடும் எனவும், இலத்தீன் இப்பதத்தை கிரேக்கத்தில் இருந்தே கடன் பெற்றிருக்கிறது எனவும் டேனிஷ் உள்ளிட்ட ஐரோப்பிய மொழியகராதிகள் தெரிவிக்கின்றன.

(Nudansk Ordbog 1986 Copenhagen page 48

Ambrosia 1 Grske Mytologi Navnpa gudernes spise 2 Latin lant fra graesk)

எனவே, கிரேக்கத்தின் Ambrosia வே சமஸ்கிருதத்தின் Amtra (அம்ருத) ஆகித் தமிழிலும் இடம் பிடித்திருக்கிறது.

அமிழ்தம், அமிழ்து எனத் தமது திருக்குறளில் கையாண்ட தெய்வப் புலவர் திருவள்ளுவனார் மேற்படி தேவாமிர்தத்தை தூய தமிழ் வடிவில் 'சாவாமருந்து' எனவும் பெயர்த்துள்ளார்.

'விருந்து புறத்தாத் தானுண்டால் சாவா மருந்தெனினும் வேண்டாற்பாற் றன்று'

(திருக்குறள் விருந்தோம்பல்)

திருவள்ளுவர் காலத்திற்குரிய எமது இரண்டாவது அவ்வை மேற்படி குறளை 'மருந்தே ஆயினும் விருந்தோடு உண்' எனத் தமது 'கொன்றை வேந்தன்' என்னும் நூலில் காண்பிக்கின்றார்.

இதன் பொருள் 'சாவா மருந்தான தேவாமிருதமாக இருந்தாலும் வீட்டிற்கு வரும் விருந்தினரோடு பகிர்ந்து உண்க' என்பதாகும்.

மேற்படி தேவாமிர்தமானது தமிழிலே அமிர்தம், அமிழ்தம், அமிழ்து, சாவா மருந்து என்பவை தவிர அவிப்பாகம், அரு



மருந்து போன்ற பதங்களாலும் வழங்கப்பட்டு வந்திருக்கிறது.

'அருமருந்து' என்பதே எமது பேச்சு வழங்கில் அருமந்த என மருவிற்று. (அருமந்த பொடியன், அருமருந்தன்ன பையன் அல்லது அருமருந்து என்னும் தேவாமிர்தம் போன்ற கிடைத்தற்கரிய பையன்)

சைவர்களின் நாற்குரவர்களில் ஒருவரான மாணிக்கவாசகர் தமது திருவாசகத்தில் அருமந்த எனும் பேச்சு வழக்கை கையாண்டுள்ளார்.

...அருமந்த தேவர் அயன் திருமாற்கு அரியசிவம் (திருத் தென்னேணம்) தேவர்கள் அருந்தும் மதுவான சோம பானம் போல கிரேக்க புராணத்தில் இடம்பெற்று இலத்தீனால் உள்வாங்கப்பட்டதே 'nectar' என்னும் பதமாகும். இப்பதம் ஆங்கிலத்திலும் இடம்பிடித்திருக்கிறது.

இலத்தீன் அரேபியரிடம் இருந்தும் ஒரு பதத்தை உள்வாங்கியிருக்கிறது. அப்பதம் நீண்ட நாள் உயிர்வாழும் அமிர்தம் போன்ற சிறந்த மருந்து எனப் பொருள் கொள்ளத்தக்கதாகும்.

Elixir என வழங்கப்படும் இபப் பதம் தூய தமிழான 'இலைச்சாறு' என்பதுடன் ஒத்திருக்கிறது. எனவே, இலத்தீன் உள்வாங்கிக் கொண்ட 'Elixir' என்னும் பதம் தமிழருடையதேயன்றி அரேபியருடையதாகாது. பண்டைத் தமிழருடன் வணிகம் மேற்கொண்ட அரேபியர் மேற்படி தமிழர்தம் 'இலைச்சாறு' எனும் பதத்தை இலத்தீனுக்கு வழங்கியிருக்கலாம்.

இயற்கையோடு வாழ்ந்து தமது ஆய்வினால் தாவர வருக்கத்தின் குணவியல்புகளை வகைப்படுத்திய பண்டைத் தமிழர்தம் ஆற்றல்கள், அவர்தம் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் அனைத்தும் பூசி மெழுகப் பெற்று அவர்களை அசுரர்கள், அரக்கர்கள், குரங்குகள் என தமது புராண, இதிகாசங்களில் கீழ்மைப் படுத்தியும், தம்மை மேம்பட்ட, தேவர்களுக்கு ஒப்பானவர்கள் என்று காட்டப் புகுந்தும், கிரேக்க புராணங்களைத் தழுவி தமது வைதிகக் கொள்கைகளை உருவாக்கியும் கூட, ஆரியரால் பண்டைத் தமிழர்களின் ஆற்றல்களை முற்று முழுதாக மறைக்க முடியவில்லை என்பதற்கு ஆரியர்தம் புராண இதிகாசங்களே சான்று.

ஆகையால் தமிழர்தம் 'இலைச்சாறு' தமிழ் வடிவம் நீங்கி 'சஞ்சீவினி' என்னும் இரகசியமாகவும் உயிரைக் காப்பாற்ற வல்ல மூலிகையாகவும் ஆரியரிடை வழங்கப் பெற்று வந்திருக்கலாம்.

'தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் ஏற்பட்ட யுத்தத்தில், இறந்த அசுரர்கள் மீண்டும் உயிர்பெற்று எழுந்தனர்.

அசுரர்களின் குருவான சுக்கிராச்சாரியாரிடம் இருந்த சஞ்சீவினி இரகசியமே அசுரர்கள் மீண்டும் உயிர்பெறக் காரணமாகையால், அச்சமுற்ற தேவர்கள் தமது தலைவனான இந்திரனின் மகனை அசுர குருவான சுக்கிராச்சாரியரின் புத்திரிமீது காதல் கொள்ளும்படியாக ஏவி, தக்க தருணம் பார்த்து அசுர குருவிடமிருந்து மேற்படி இரகசியத்தை கவர்ந்து வரும்படி கூறி, அவ்விதமே சஞ்சீவினி என்னும் உயிரைத் தப்ப வைக்கும் இரகசியத்தை அறிந்து அசுர ஒழிப்பில் இறங்கினர்.'

'அரக்கன், இராவணனுடனான இலங்கை யுத்தத்தில் இராமரின் தம்பி இலக்குவன் உயிர்பிழைக்க வேண்டி பறந்து சென்று சஞ்சீவி மலையையே தூக்கிவந்து அவனது உயிரை காப்பற்றினார்'

(தமிழ் நாட்டை ஆண்ட சோழ மன்னர் வழியில் வந்த முசுகுந்த சோழன் முற்பிறப்பிலே குரங்காக இருந்தான் என்னும் கந்தபுராணமும், இராமாயணத்துக் குரங்கான அனுமானும்

ஈழமுரசின் மகத்தான பணி தொடர எம் வாழ்த்துக்கள்

* புதிய அறிமுகம் * தரம் நிரந்தரம் * அதிகசுவை

முதன் முதலாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்டு ஐரோப்பா வாழ் தமிழ் மக்களின் வீடுகளைத் தேடி வரும் சுவையான

புழுங்கல் அரிசி

ஒரு முறை சுவைத்தால் மறுமுறை சுவைக்கத் தூண்டும்

உங்கள் குறைகளோ எம்மிடம் வரட்டும்

நிறைகளோ உங்கள் நண்பர்களிடம் போகட்டும்

குமார்ஸ்

Kumars Shop S. A. R. L.
80, Bld. Barbes, 75018 Paris.
M°: Marcadet Poissonniers
Tél: 01 42 59 35 10
Fax: 01 42 59 35 00

K.T.C. Jewels & Exchang
193, Rue du Fg. S'.Denis,
75010 Paris.
M°: Gare du Nord / La Chapelle
Tél: 01 42 05 41 36

Kumars Jewels S.A.R.L.
80, Bld. Barbes, 75018 Paris.
M°: Marcadet Poissonniers
Tél: 01 42 59 11 52 Fax: 01 42 59 35 00

Singapore Exchang Co
38, Rue St.Quintin, 75010 Paris.
M°: Gare du Nord
90, Bd. Rochechouart, 75018 Paris.
M°: Anvers

# அவ்வை யார்?

லெமூரியாக் கண்டத்தில் லெமூர் என்னும் குரங்கினத்திலிருந்தே முதல் மனிதன் தோன்றினான் என்னும் இன்றைய ஆய்வினர் தம் தீர்மானத்திற்கமைந்த, உலகின் முதல் குடியினர் தமிழர்களே! என்பதற்கான பண்டைப் பதிவுகளா? என்பதும் ஆய்விற்குரிய விடயமே!)

இலத்தீனில் தமிழர்தம் இலைச்சாறே இலிக்சிர் (Elixir) என இடம்பெற, ஆரியரோ நீசர்களின் மொழியெனத் தமிழைக் கருதியதால் இலைச்சாறு என்பதை 'சஞ்சீவினி' என நாமகரணம் சூட்டியிருக்கலாம் எனவும் கொள்ளலாம். பிற்காலத்தே தோன்றிய ஆங்கிலம் தமிழர்தம் 'மிளகு தண்ணியை' உள்வாங்கி இருக்கிறது.

இவை, தமிழர்தம் மருத்துவ சிறப்பைக் காட்டுவன.

மேற்படி, தமிழர்தம் மருத்துவப் புலத்தினூடாக அவ்வை உண்ட நெல்லிக்கனிக்கு வருவோம்.

தமிழர்தம் மருத்துவத்தில் நெல்லிக் குடும்பம் முக்கிய பங்கை வகிக்கிறது. வெப்பத்தினால் உடல் உருக்குலைதல், பெண்களுக்கான நோய்கள், சிறுவர், முதியோருக்கு ஏற்படும் நோய்கள் என பலதரப்பட்ட நோய்களை நெல்லிக் குடும்பம் நீக்கிவந்திருக்கிறது.

நெல்லிக்காயின் எண்ணெய், குழம்பு (லேகியம்) ஊறுகாய் என்பவை உடலாரோக்கியத்திற்கு உகந்தவை.

தொட்டாற்சுருங்கி வடிவில் எமது மண்ணில் காணப்படும் ஒருவகைத் தாவரம் கீழா நெல்லி (கீழ்க்காய் நெல்லி) என அழைக்கப்படுவதாகும். அத் தாவரத்தின் இலைகளில் 'கடுகு' போன்ற சிறிய வடிவில் நெல்லிக்கனிகள் காணப்படும்.

இத் தாவரம் செங்கண்மாரி (செங்கமாரி) போன்ற நோய்களை குணமாக்க வல்லது. தமிழர்தம் மருத்துவத்தில் முக்கிய பங்கை வகிப்பதும், சர்வரோக நிவாரணியென வா நூலார் குறிப்பிடுவதுமான வேப்பிலை, அறுகு முதலான்லவை இந்துக்களின் வழிபாட்டுடன் இணைக்கப்பட்டிருப்பது போல, நெல்லியும், அதன் குடும்பத்தைச் சேர்ந்த வன்னியும் பூசைக்கு உகந்தனவாக மதிக்கப்படுகின்றன.

இந்துக்களின் முழுமுதற் கடவுளின் பெயரால் நெல்லிக் குடும்பம் 'சிவா' எனவும் 'சிவை' எனவும் அழைக்கப் பெற்றிருக்கிறது.

தமிழ் மருத்துவர்கள் நோயாளர் உட்கொள்ள வேண்டிய சில மருந்து வகைகளின் அளவினைக் கூறும் போது 'நெல்லிக்காய் அளவு' என்பர்.

நெல்லியின் மகத்துவத்தாலேயே அதற்கு 'அருநெல்லி' (தேவார்மிதம் அல்லது அருமருந்து போன்ற கிடைத்தற்கரிய நெல்லி) என வழங்கப் பெற்று பின்னாளில் நெல்லியின் ஒரு வர்க்கத்திற்கு மட்டும் அப் பெயர் நிலைபெற்று வந்திருப்பதாகக் கொள்ளலாம்.

வழக்கிறந்த ஜேர்மன் மொழியில் 'நெல்லிக்கனி' (Negelken) இடம் பெற்று பின்னர் Nelke, Nellike ஆகி இடைக்காலத்தே டெனிஷ் மொழியிலும் புகுந்துள்ளது. Nelike என்பது கராம்பு, இலவாங்கம் என்பவற்றுக்கான பெயராகவே டேனிஷ் மக்கள் பயன்படுத்துவர்.

நெல்லிக்காய் எண்ணெய் (Nellikke olie) நெல்லிக்காய் வேர், (Nellikerod) என்பவை தமிழர்தம் மருத்துவச் சிறப்பின் விளைவாக. இம் மேற்குலகின் சுதேச மருத்துவத்திற்கமைய இடம்பிடித்திருப்பது தமிழர் பெருமைப்பட வேண்டிய விடயமாகும்.

தவிர, நெல்லி (Nelly) என்பது எலன் (Ellen) என்னும் பெண்பாற் பெயரை செல்லமாக அழைக்கப் பயன்படுத்தப் படுவதையும், Ellen என்பது கிரேக்கத்தின் Helan ஆகும் எனவும் இப் பதத்தை டேனிஷ் மொழி ஆங்கிலத்தினூடாக உள்வாங்கியிருப்பதையும் மொழியகராதிகள் காட்டுகின்றன. தமிழர்தம் அவ்வைக்கும் நெல்லிக்கும் உள்ள தொடர்பாக கிரேக்கத்தின் 'கெலன்' செல்லப் பெயரில் 'நெல்லி' என அழைக்கப்படுவது சிந்திக்கப்பட வேண்டிய விடயமே!

தமிழர்தம் பண்டை இலக்கியங்கள், பௌத்தர்களின் மகாவம்சம், கிறிஸ்தவர்களின் ஆதியாகமம் முதலானவை பதிவு செய்துள்ள பிரளயத்திற்கு (கடல்கோள்) முன்னர், உலகில் இருந்த மிகப்பெரிய அறிவியல், விஞ்ஞான மதிநுட்பங்களுக்கு உரியவர்கள் தமிழர்களே!

**தமிழர்தம் பண்டை இலக்கியங்கள், பௌத்தர்களின் மகாவம்சம், கிறிஸ்தவர்களின் ஆதியாகமம் முதலானவை பதிவு செய்துள்ள பிரளயத்திற்கு (கடல்கோள்) முன்னர், உலகில் இருந்த மிகப்பெரிய அறிவியல், விஞ்ஞான மதிநுட்பங்களுக்கு உரியவர்கள் தமிழர்களே!**

அவை, பிரளயத்தின் பின்னர் ஆரியரால் வலுவிழந்த திராவிடர்தம் வழிபாட்டிற்குள் புகுந்துவிட்டிருத்தல் வேண்டும். எனவேதான் இந்து மதமானது தமிழரிடை கருத்தாழம் காணா நிலையிலும் இலகுவில் சீரணமாகியிருப்பதுடன் இந்து மதத்தின் சிறந்த விஞ்ஞான தத்துவங்கள் இன்றைய விஞ்ஞானிகளையும் வியப்பிலாழ்த்திக் கொண்டிருக்கிறது. குறிப்பிட்ட மக்களினம் வாழும் நிலத்தில் உள்ள தட்ப வெப்பமே அவ்வினத்தின் பண்பாடு, நாகரீக முடிவாக்கலை தீர்மானிப்பதில் முன்னணி வகிக்கிறது என புவியியல் அறிஞர்கள் உள்ளிட்ட மேற்குலக அறிஞர்களும், தத்துவ ஞானிகளும் மொழிந்துள்ளனர்.

திராவிட நிலத்திற்கே சொந்தமான சந்தனமும், நெல்லியும் வெப்ப மண்டலத்தில் வாழ்ந்து புகழ்க் கொடி ஏற்றிட, தமிழருக்கு உறுதுணை புரிந்திருக்கின்றன. எமது நாடுகளுக்கு மதம் பரப்பவந்த கிறிஸ்தவ பாதிரிகள் நெல்லியின் மகத்துவத்தைப் புரிந்தமையாலேயே யாழ்ப்பாணத்தில், தோலக்கட்டிக் கிராமத்தில் உள்ள தமது ஆச்சிரமத்தில் 'நெல்லி இரசம்' (nelly crush) தயாரிப்பில் இறங்கி இருக்கிறார்கள்.

'தாத்திரி' என்னும் பதம், நெல்லி, பூமி, மாதா, ஆடுதின்னாப் பாலை என்பவற்றை குறிப்பிடப் பயன்படுத்தப்படுகின்றது. 'தாத்திரி பலம்' என்பது நெல்லிக்கனியெனவும், 'புத்தாத்திரி' என்பது 'அருநெல்லிக்கனி' யெனவும் தமிழ் அகராதிகள் தெரிவிக்கின்றன.

'அரு' என்பதும் 'புத்' என்பதும், அறிவையும் குறிப்பிடலாம். 'அருநெல்லி' 'அறிநெல்லி' அல்லது 'அறிவு நெல்லி' எனவும் ஆகலாம்.

'அறிவு நெல்லி'யால் அவ்வையானவர் தமிழர்தம் அறிவியலை மேன்மை பெற வைத்தவரென ஆகும் போது, தமிழரே உலகின் மூத்த குடியினர் என்ற கருத்தும் வலுவாகின்றது.

பண்டைத் தமிழர் தாயை,



துறவறப் பெண்களை, மூதாட்டிகளை அழைக்க, அவ்வை எனும் பதத்தையும் பயன்படுத்தியுள்ளனர்.

'அவ்வைக்கு மூத்த மாமன்' (சீவகசிந்தாமணி)

'அவ்வை உயிர்வீவுங் கேட்டாயோ தோழி' (தோழி! தாய் உயிர் நீத்த செய்தியை கேட்டாயோ) (சிலப்பதிகாரம்)

சூடாமணி நிகண்டு அவ்வை என்பதற்கு 'தவப்பெண்' எனப் பொருள் உரைத்துள்ளது.

சமணர்களின் துறவுப்பெண்கள் 'அவ்வை' எனவே அழைக்கப்பட்டனர். அவ்வையான தாயை முதன்மைப்படுத்திய தமிழர்கள், தாய் வழிக்கலாச்சாரத்திற்கு உரியவர்களாகையால் பெண் தெய்வ (அம்மன்) வழிபாடுகளுக்குள் இணைந்தவர்கள். (கொற்றவை, பழையோள், காடுகிழாள்) பெண் அரசிகளின் ஆட்சிகளை நெறிப்படுத்தியவர்கள். பழந்தமிழ் நூல்கள், பௌத்தர்களின் மகாவம்சம், ஆதியாகமம் முதலியவை தெரிவிக்கும் பிரளயம் (கடல் கோள்) ஏற்படும் முன்னர் உலகம் முழுவதும் வியாபித்திருந்த நாக வழிபாட்டின் தலைமைப் பீடமாக தமிழர் புகழோச்சிய குமரிக்கண்டமே இருந்திருக்கின்றது. அக் குமரிகண்டத்தில் பெண் அரசிகள் நாகப்பெண்கள், அல்லது நாக கன்னியர் எனப் பெருமைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். பிரளயத்தின் பின்னர் தத்தையை முதன்மைப் படுத்தும் இனங்கள் மேன்மை பெற்று இருக்கின்றன. (வீர சோழியம் எனப்படும் தமிழ்ப் பௌத்த நூலில் புத்தரை, 'பொற்புடை நாகர் தம் துயரம் போக்கினை' எனத் துதிப்பது பிரளயத்தின் பின்னால் புத்தர், நாகருக்கும் தெய்வமானமையை தெரிவிக்கின்றது. சமணரும் நாகர்தம் வழிபாட்டினூடாக தமது நெறிகளைப் பரப்பி பெண்மையைக் கீழ்மைப்படுத்தினர். பிரளயத்தின் பின்னால் ஆரிய இனம் மேன்மை பெற்று பெண் அடக்கு முறைகளில் இறங்கி தமிழர்தம் கலாச்சார சீரழிவுகள் தோன்ற வழிவகுக்கப்பட்டிருக்கின்றது.

ஆதியாகமத்தில் 'ஆதாம் தன் மனைவிக்கு 'ஏவாள்' என்று பேரிட்டான். ஏனெனில் அவள் ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவள்' எனக் குறிப்பிடப் பட்டுள்ளது.

**பிரளயத்தின் பின்னால் ஆரிய இனம் மேன்மை பெற்று பெண் அடக்கு முறைகளில் இறங்கி தமிழர்தம் கலாச்சார சீரழிவுகள் தோன்ற வழிவகுக்கப்பட்டிருக்கின்றது.**

மேற்படி, ஆதியாகமம் தமிழர் போல் தாய்மையை முதன்மைப்படுத்தாது ஆதாமின் விலா எலும்பில் இருந்தே 'ஏவாள்' ('ஏவாள்' என்பது தமிழர் தம் 'அவ்வை' வடிவை ஒத்திருப்பதை நோக்குக) படைக்கப்பட்டதாக தெரிவிக்கின்றது.

தவிர, ஏவாள், சாத்தான் ஆகிய பாம்பின் தூண்டுதலால் புசிக்கக்கூடாது என்ற தேவ கட்டளையை மீறி அறிவு விருட்சத்தின் கனியை உண்டு கணவனுக்கும் கொடுத்தாள்.

அதனால் அறிவாற்றல் பெற்றுத் தமது நிர்வாண கோலத்தைக் கண்டு வெட்கி அத்தி இலையைத் தைத்து ஆடையாக அணிந்து, தேவ கட்டளையை மீறிய சாபத்திற்கு உள்ளாகினார். (ஆதியா. அதி.3)

ஆதியாகமம் காண்பிக்கும் முதல் தாயான ஏவாளும் (அவ்வை) அவளை அறிவுக் கனியை உண்ணத் தூண்டிய சர்ப்பமும் (நாகம் எனும் தமிழ்ப் பதம் ஆதியாகமம் எழுந்த 'கீப்ரூ' மொழியில் 'நாகாஸ்' எனவே வழங்கப்படுகிறது)

பாம்பின் சந்திப்பால் அவர்கள் புனைந்த ஆடையும்: அதனால் தேவசாபமும் தந்தை வழித்தலைமையை நிலைநாட்டவும், தாய் வழித் தலைமையை கீழ்மைப்படுத்தவும் ஏற்படுத்தப்பட்ட பதிவுகளாகக் கொள்ளலாம். தவிர, நாகத்தின் சந்திப்பின் பின்னரே முதல் மனிதன் ஆடை புனைந்தமை ஆடைக் கலாச்சாரத்திற்கு உரியவர்கள் நாகர்தம் மரபில் வந்த தமிழர்களே என்பதைக் காண்பிக்கும்.

பண்டைத் தமிழர்தம் விலை உயர்ந்த ஆடைகளை உரோம புரி உட்பட உலகம் முழுவதும் இறக்குமதி செய்திருக்கிறது.

தமிழ்நாடு, தமிழீழம், (பருத்தித்துறை, பருத்தித்தீவு) ஏற்படுத்தி வைத்த வணிகத் தொடர்புகள் உலகெங்கும் கொடிகட்டிப் பறந்தன என்பதும் பண்டைய யாத்திரிகளின் குறிப்புகளாலும் அறிய முடிகின்றது.

இவை, பண்டைய குமரிக் கண்டத்தின் மிச்ச சொச்சமே! எனக் கருதலாம். நாகவழிபாட்டிலிருந்து பிறந்ததே தமிழ்த் தெய்வமான முருகவழிபாடாகும். (தமிழீழத்திலுள்ள தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் 'முருகநாகர்' எனவே அழைக்கப்படுகிறார்)

திராவிட மொழியில் பாம்பிற்கு வழங்கப்படும் சுப்பா, சுப்பிரமணியா, சுப்பிரமணி என்பவை முருகனுக்கும் உரியவையே.

சோழர் மரபிலே (சத்திரியர்) உதித்தவர்களாகவும் 'பிற்காலச் சோழர்களால் கல்வெட்டுக்களில்' "தெரிஞ்சபடை" எனப் பொறிக்கப்பட்டவர்களுமான தமிழர்களில் ஒரு பிரிவு மக்கள் உயிர் மானத்திற்காக எதிரிகளிடமிருந்து தமிழரைக் காத்ததுடன், உடல் மானத்திற்காக நெசவாளர்களாகித் தமது கைத்திறனை உலகெங்கும் பொறித்தவர்கள். இவர்கள் தமது குல தெய்வமாக முருகனைக் கொண்டாடுவதுடன் முருகன், புகழ் கூறும் கந்த புராண வழியில் வீரபாகு தேவர் உள்ளிட்ட நவவீரர்களின் சந்ததியாகவே தம்மைக் கூறிக்கொள்வர்.

(இவை ஆரியக் கலப்பின் பின்னர் நிலை நாட்டம் பெற்ற குமரிக் கண்டத்தின் நகரான தமிழரின் எச்ச சொச்சங்களாகக் கருத இடமுண்டாகிறது) தமிழர், பெண்களைத் தையல் எனவும் அழைப்பர்,

ஆடை என்பது தாய்மையால் உருவாக்கமடைந்த நாகரிகமே என்பதற்கு ஆதியாகமமே சான்று. (ஏவாள் பறித்த நன்மை, தீமைகளை உணரவைக்கும் கனி அல்லது அறிநெல்லிக்கனி!)

நாகரிகச் சிறப்பியல்புகளில் முதலிடம் வகித்த தமிழர்கள் தாய்த்தலைமை வீழ்ச்சியடைந்த பின்னர், ஏக்கமுற்று தமது பண்பாட்டுப் பிரகாரம் காலங்காலமாக தாய்மையைக் குறிப்பிடும் அவ்வை எனும் பாத்திரங்களைக் படைத்து "இவை அனைத்தையும் நெல்லிக்கனியை உண்டு அந்த ஓர் அவ்வை செய்த நன்நெறிக் கோவைகளே!" எனத் தாமே படைத்த கருத்துக்களை தாமே நிலை நிறுத்த விழைந்திருக்கலாம்.

தாய்த் தலைமையில் இருந்து நீங்கி ஆரியச் சூழ்ச்சிகளினால் பிளவுபட்டு (சேர, சோழ, பாண்டியர்) இன்றைய நூற்றாண்டிலும் ஒரு தலைமைக்குக்கீழ் ஒன்றிணையத் தயங்கும் தமிழர்கள் உளவியல் ரீதியான தாக்கத்தினூடாக அவ்வை முகமே துல்லியமாகத் தெரிகின்றது.

**கவிஞர் பாரதி பாலன்**
உலகத் தமிழ் பண்பாட்டியக்கம்,
டென்மார்க்

## ஈழமுரசின் பணி தொடர எமது வாழ்த்துக்கள்

# ரஜிந்தாஸ் - RAJINTHAS

நத்தார், புதுவருட, தைப்பொங்கல் பண்டிகைகளை முன்னிட்டு
15-12-96 முதல் 15-01-97 வரை எங்களிடம்
500 பிராங்குகளுக்கு மேல் கொள்வனவு செய்யும்
வாடிக்கையாளர்களுக்கு ரஜிந்தாஸின் திரைப்பட பாடல்
(வீடியோ) பிரதி ஒன்றை அன்பளிப்பாக வழங்குகிறோம்!

தைத்த ஆடைகளின் சுரங்கம்

### மனதிற்கு பிடித்த தேர்வுகள் மலிவான விலைகளில்

சிறுவர், சிறுமியர்க்கான தைத்த ஆடைகள் பெண்களுக்கான பஞ்சாபி வகைகள், சட்டைகள், வீட்டுப் பாவனைக்கான உடைகள், ஆண்களுக்கான டெனிம், சிங்கப்பூர் ரவுசர்கள், சேட் வகைகள், பட்டுவேட்டி, குர்த்தா அனைத்தும்

### பழைய புதிய CD வகைகள் வீடியோ பிரதிகள் [ஒரிஜினல்]

ரஜிந்தாஸின் தீபாவளிப் பரிசுத் திட்டத்தில் வெற்றிபெற்றவர்கள்
முதற்பரிசு இல 33 (ஒரு தங்கப்பவுண்) எல்.குணதாசன்
இரண்டாம் பரிசு இல 32 (ஆண்களுக்கான கைக்கடிகாரம்) ஜெயக்குமார் (ராதி)
மூன்றாம் பரிசு இல 17 (பெண்களுக்கான கைக்கடிகாரம்) பொபி பாரிஸ் 15

28, 20, 19 31, 35, 16, 11 ஆகிய இலக்கங்களுக்கு தலா 200 பெறுமதியான வவுச்சர்கள் பெற்றவர்கள்: திரு. விஜயானந்தன், திரு. மகேஸ்வரன், செல்வி. அமிர்தநாயகம், திரு. கண்ணதாசன், திரு. றமேஸ், திரு. சரா, செல்வன் சஜா

இதுவரை பரிசில்களைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் எம்முடன் தொடர்புகொள்ளவும்



9, Rue Perdonnet, 75010 Paris - Tel: & Fax: 01 40 36 53 20



# Rose Agency

*No.1*

## for Money Super Plus Fast Bankcredit for Tamils in Switzerland.

Eco Agency என்ற பெயரில் இயங்கிவந்த எம் நிறுவனம் கடந்த 15.10.1996 முதல் Rose Agency எனப் பெயர் மாற்றம் அடைந்துள்ளது. எம் சேவை முன்பு போல் 100 சதவீதமும் உங்கள் திருப்திக்காகவே தொடர்ந்திருக்கும். எம் நிறுவனம் பல வங்கிகளுடன் கூட்டாக இயங்குவதன் மூலம் இன்றுவரை பல தமிழர்களின் பணத்தேவைகளை நிறைவு செய்துள்ளது.

மேலும் இலகுவான முறையிலும், நியாயமான வட்டிவீதத்திலும், கூடிய விரைவிலும் உங்கள் பணத்தேவைகளைப் பூர்த்தி செய்யக் காத்திருக்கிறோம்.

உதாரணமாக இங்குள்ள பட்டியலைக் கவனிக்கவும்.

| கடன் தொகை | 12 மாதங்கள் | | 18 மாதங்கள் | | 24 மாதங்கள் | | 36 மாதங்கள் | | 48 மாதங்கள் | | 60 மாதங்கள் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வட்டி மாத்திரம் 13.9% | கட்டுத் தொகை வட்டியும் முதலும் | வட்டி மாத்திரம் 13.9% | கட்டுத் தொகை வட்டியும் முதலும் | வட்டி மாத்திரம் 13.9% | கட்டுத் தொகை வட்டியும் முதலும் | வட்டி மாத்திரம் 13.9% | கட்டுத் தொகை வட்டியும் முதலும் | வட்டி மாத்திரம் 13.9% | கட்டுத் தொகை வட்டியும் முதலும் | வட்டி மாத்திரம் 13.9% | கட்டுத் தொகை வட்டியும் முதலும் |
| 10.000 | 726.80 | 893.90 | 1071.80 | 615.10 | 1422.80 | 475.90 | 2148.20 | 337.45 | 2902.40 | 268.80 | 3683.00 | 228.05 |
| 15.000 | 1090.20 | 1340.85 | 1607.70 | 922.65 | 2134.80 | 713.95 | 3223.20 | 506.20 | 4353.60 | 403.20 | 5523.00 | 342.05 |
| 20.000 | 1453.60 | 1787.80 | 2143.60 | 1230.20 | 2846.80 | 951.95 | 4298.20 | 674.95 | 5804.80 | 537.60 | 7366.00 | 456.10 |
| 25.000 | 1817.00 | 2234.75 | 2679.50 | 1537.75 | 3558.80 | 1189.95 | 5371.40 | 843.65 | 7256.00 | 672.00 | 9206.00 | 570.10 |
| 30.000 | 2180.40 | 2681.70 | 3215.40 | 1845.30 | 4270.80 | 1427.95 | 6446.40 | 1012.40 | 8707.20 | 806.40 | 11049.00 | 684.15 |
| 35.000 | 2543.80 | 3128.65 | 3751.30 | 2152.85 | 4982.80 | 1665.95 | 7521.40 | 1181.15 | 10158.40 | 940.80 | 12889.00 | 798.15 |
| 40.000 | 2907.20 | 3575.60 | 4287.20 | 2460.40 | 5694.80 | 1903.95 | 8596.40 | 1349.90 | 11609.60 | 1075.20 | 14732.00 | 912.20 |

இங்கு தரப்பட்ட தொகைகளைவிட தேவையான மேலதிக தொகைக்கு விபரம் எம்மிடம் கோரவும். சுவிஸ் விசா B அல்லது C பத்திரமுள்ளவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டால் நாம் மேலதிக விபரங்கள் விரிவாகவும், விளக்கமாகவும் உங்களுக்குத் தருவோம்.

**SOMASUNDARAM RAMALINGAM**

METTLENSTRASSE 1
4554 ETZIKEN (50)
SWITZERLAND.

Tel: 032 614 40 51
Natel: 077 46 16 94
Fax: 032 614 40 51

# பட்டி மன்றம்: பரிசீலனைக்கு சில குறிப்புகள்

தொலைக்காட்சி மூலம் பொருட்களுக்கு 'மார்க்கெட்' உண்டாக்கப்படுவதை நாம் அறிவோம். ஆனால் தொலைக்காட்சியால் 'மார்க்கெட்' செய்யப்படும் சில விஷயங்கள் இருக்கின்றன. இவற்றை நாட்டுப்புற இசை, மெல்லிசை, பட்டி மன்றம் என அடுக்கிக் கொண்டே போகலாம்.

பண்டிகை நாட்களில் செயற்கையாக உருவாக்கப்படும் விழா மன நிலையைத் தூண்டுவதாகவும், திருப்தி செய்வதாகவும் இயங்குகிறது பட்டிமன்றம். வெவ்வேறு ஊர்களில் நடத்தப்பட்டு பதிவு செய்யப்படும் இந்தப் பட்டிமன்றங்கள் இன்று புதிய சந்தையைக் கண்டுபிடித்துள்ளன. பஸ் பயணங்களால் பெருகும் பாக்கெட் நாவல்கள், டீக்கடைகளால் பெருகும் ஒலி நாடாக்கள், கல்யாண வரவேற்புகளால் பெருகும் மெல்லிசைக் குழுக்கள் என்ற வரிசையில் திருவிழாக்களால், தொலைக்காட்சியால் பெருகும் பட்டிமன்றங்களையும் சேர்க்க வேண்டும்.

மேடைப்பேச்சின் ஆற்றலை வசீகரத்தோடு பயன்படுத்தி வளர்ந்த திராவிட இயக்கத்தின் உப விளைவுகளில் ஒன்றாகப் பட்டிமன்றத்தைக் கணிக்கலாம். இந்தி எதிர்ப்புப் போராட்டத்துக்குப் பிந்திய ஆண்டுகளில் அறிமுகமாகி எழுபதுகளில் நிலைபெற்றது இந்த வடிவம்.

**மேடைப்பேச்சின் ஆற்றலை வசீகரத்தோடு பயன்படுத்தி வளர்ந்த திராவிட இயக்கத்தின் உப விளைவுகளில் ஒன்றாகப் பட்டிமன்றத்தைக் கணிக்கலாம். இந்தி எதிர்ப்புப் போராட்டத்துக்குப் பிந்திய ஆண்டுகளில் அறிமுகமாகி எழுபதுகளில் நிலைபெற்றது இந்த வடிவம்.**

வில்லுப்பாட்டு, லாவணி என இன்னமும் சில கிராமங்களில் தொடரும் போட்டிப் பாட்டு வடிவங்களை காலி செய்து விட்டு அங்கே குடியேறியது பட்டிமன்றம். வில்லுப்பாட்டு போன்ற நிகழ்ச்சிகளின் உள்ளடக்கமாக அமையும் புராணக்கதைகள், நிகழ்த்து முறையின் அலுப்பூட்டும் தன்மை முதலிய காரணங்களால் நகரத்து மக்கள் பட்டிமன்றங்களை எடுத்துக்கொண்டார்கள்.

நிகழ்த்துக்கலையின் சாதகமான கூறுகளைப் பயன்படுத்தும் திராவிட இயக்கங்களின் மேடைப்பேச்சும்; பின்னாட்களில் அப்பேச்சுக்களின் வழி உருவாக்கப்பட்ட உள்ளீடற்ற பழந்தமிழ் இலக்கிய ரசனையும் தமிழ்ச் சூழலில் ஏற்படுத்திய தாக்கம் பட்டிமன்றத்திற்கான பாதையை செப்பனிட்டுத் தந்தது எனலாம்.

திராவிட இயக்க வளர்ச்சியில் அண்ணாவின் நா வன்மைக்கு

தமிழக அரசியல் வரலாற்றில் முக்கியமான கூறாகக் கவனிக்கப்பட வேண்டிய தமிழாசிரியர்களின் பங்களிப்பு பட்டிமன்றத்தை வளர்த்தெடுத்தது. கொஞ்சம் கம்யூனிசம், கொஞ்சம் பகுத்தறிவுவாதம், கொஞ்சம் மனிதாபிமானம் என எல்லாவற்றையும் சரளமான தமிழில் கலந்து மேற்கோள்களோடு வாரி இறைத்துக் கொண்டிருந்த தமிழாசிரியர்கள், தமக்கான சரியான வெளிப்பாட்டு வடிவமாக பட்டிமன்றத்தை ஏற்றுக்கொண்டார்கள்.

கிராமத்துப் பள்ளி முதல் பட்டணத்துக் கல்லூரி வரை பரவியிருந்த அந்த தமிழாசிரியர்கள் இளைய தலைமுறையினருக்குள் உண்டாக்கிய செல்வாக்கு குறிப்பிடத்தக்கதாகும். அன்றைய காலகட்டத்தில் வெகுசன அபிப்பிராயத்தை வடிவமைத்த காரணிகளை ஆராயும் போது தமிழாசிரியர்களின் பங்கினைக் குறிப்பிட்டே ஆக வேண்டும். சினிமா, தினத்தந்தி,

முக்கிய பங்கு உண்டு. 'தீ பரவட்டும்' என்ற தலைப்பில் தமிழறிஞர்கள் பலரோடு அவர் நடாத்திய சொற்போர் பட்டிமன்றத்திற்கு நல்ல முன்னுதாரணமாக அமைந்திருக்க வேண்டும்.

அண்ணா, கருணாநிதி உள்ளிட்ட திராவிட இயக்கத் தலைவர்களின் மேடைப் பேச்சுகள் அப்போது பாமர அறிவில் பதிந்திருந்த நம்பிக்கைகளை ஆட்டம் காணச் செய்தன. சமூகத்தில் தமது கருத்தியல் மேலாண்மையை உருவாக்க எழுத்து பேச்சு அனைத்தையும் பயன்படுத்தினார்கள் அவர்கள்.

ஆனால், இத்தகைய மேடைப் பேச்சிலிருந்து தனது வடிவத்தை ஒழுங்கமைத்துக்கொண்ட பட்டிமன்றம் திராவிட இயக்கத்தின் நோக்கம், அணுகுமுறை போன்றவற்றிலிருந்து தன்னைத் துண்டித்துக்கொண்டது. பாமர அறிவை, அதில் பதிந்திருந்த நம்பிக்கைகளை, மறு உறுதி செய்வதையே நடைமுறையாகக் கொண்டது பட்டிமன்றம். கோயில்கள், கல்விக்கூடங்கள் என தான் சேர்ந்து கொண்ட களத்துக்கு ஏற்றபடி தன்னை மாற்றிக் கொண்டது பட்டிமன்றம்.

மேடை நாடகங்கள் என்பவற்றோடு; அவர்களது பணிகளையும் கணக்கில் கொள்ளவேண்டும். அவர்களில் பலர் அரசியல் நீரோட்டத்தில் கலந்து அதிகாரமையங்களை நோக்கி நகர்ந்த போது அதில் இடம் கிடைக்காமல் ஒதுங்கியவர்களின் புகலிடமாகவும் பட்டிமன்றம் அமைந்து போனது.

அரசியல் களத்தில் அடைய முடியாத அதிகாரத்தை அவர்கள் பட்டிமன்றங்களில் அடைந்தார்கள். அரசியல் களத்தில் வெளிப்படுத்த முடியாத தமது ஆற்றலை அவர்கள் பட்டிமன்றங்களில் திறந்து விட்டார்கள். இந்தப் போக்கு தொலைக்காட்சியின் வருகையால் புதிய பரிமாணங்களைப் பெற்றது.

தொலைக்காட்சியில் ஒலிபரப்பப்படும் பட்டிமன்றங்கள், நிகழ்த்தப்பட்டவற்றின் மறு ஒலிபரப்பாகும். அந்தந்த பண்டிகைக்கு ஏற்றபடி அறிமுகம், வா[illegible] முதுவுரை, சங்கதிகள் த[illegible] பட்டம் பிடிக்கப்பட்டு சேர்க்கப்பட்டு அன்றைக்கு நடக்கும் நிகழ்ச்சியின் நேரடி ஒளிபரப்பு என்பது போன்ற பிரமை நமக்கு உண்டாக்கப்படுகிறது. அது போலவே பட்டிமன்றத்திற்கான அரங்கு முதற்கொண்டு பார்வையாளர் வரை எல்லாமே ஏற்கனவே முடிவு செய்யப்பட்டு தெரிவு செய்யப்பட்ட விதத்திலேயே முன்வைக்கப்படுகின்றன. இவைதவிர, பேச்சாளர்களின் முகபாவங்கள், தோரணைகள், அவர்கள் முன் வைக்கப்படும் கோணங்கள், அவர்களது பேச்சுக்களிருந்து தெரிவு செய்யப்பட்டு வழங்கப்படும் பகுதிகள் யாவும் தொலைக்காட்சி நிகழ்ச்சியை இயக்குபவரின் விருப்பத்தின் படியே அமைக்கப்பட்டு வழங்கப்படுகின்றன. T.V திரைக்கு அப்பால் நடக்கும் இத்தகைய "வித்தைகள்" ஆழ்ந்த பரிசிலனைக்கு உரியவை. ஏனென்றால் நிகழும் யதார்த்தத்தை தமக்கான கருத்தியலின் அடிப்படையில் அர்த்தப்படுத்தும் செயல்பாடு அங்குதான் நடக்கிறது. இத்தகைய ஆய்வை வேறொரு தருணத்திற்கு தள்ளி வைத்து பட்டிமன்றத்தின் இரண்டு கூறுகளை மட்டும் இங்கு பார்ப்போம். அவை: 1- பட்டிமன்றத்தில் பயன்படுத்தப்படும் பேச்சு.

2- பட்டிமன்றத்திற்கும் நீதி மன்றத்திற்குமான உள்ளிணைப்புகள்.

பட்டிமன்றம், மேடைப் பேச்சு முதலியவற்றுக்கு ஆதாரமாக அமைந்த சொல்லணி (RHETORIC) என்பது இரண்டு வகைப்படும். அரசியல் உரைகள் அதன் வழி முன்வைக்கப்படும் வாதங்கள்; இது முதல் வகையாகும். ஒரு பிரச்சனைக்கு வெவ்வேறு விதமான அணுகு முறைகள் சாத்தியம் என்ற போதிலும் தாம் முன்வைக்கும் வாதங்களின் மூலம் கேட்பவரை தமது கருத்தோடு இணங்கச் செய்யும் தமது நிலைப்பாட்டை ஏற்கச் செய்யும் பேச்சை நாம் இந்த வகையில் சேர்க்கலாம்.

இதில் ஒருவரது கருத்து மற்றவர் மீது திணிக்கப்படுவது கிடையாது. மாறாக, கேட்பவரின் சம்மதம் வாதத்தின் மூலம் பெறப்படுகிறது.

இன்னோரு வகையான சொல்லணி இருக்கிறது. அது உருப்படியான வாதம் எதையும் முன்வைக்காது வெற்று வார்த்தைகளை ஈர்க்கும் விதத்தில் தொடுத்து தொங்கவிடும். இது காலம் காலமாக வழங்கி நம்பிக்கைகளை ஆதாரமாகக் கொண்டு அவற்றின் அடிப்படையில் தனது நியாயத்தை முன்வைக்கும். உதாரணமாக, "தாயைத் தவிக்கவிடக்கூடாது" என்ற கூற்றை எடுத்துக்கொள்வோம். குற்றவாளி ஒருவனைக் காப்பாற்றும் பொருட்டு, அவனுக்கு சார்பான விதத்தில் இந்தக் கூற்று முன்வைக்கப்படும் போது அங்கே நியாயம் என்பது உணர்ச்சியால் மூடப்படுகிறது.

"அயோத்தியில் இராமர் பிறந்தார் என்பது இந்துக்களின் நம்பிக்கை அதை கேள்வி கேட்கக் கூடாது". என்கின்ற வாதமும் இத்தகையதே. இதனை சொல்லணியின் இழிந்த வடிவமாக குறிப்பிடலாம்.

சொல்லணியின் முதல்வகை சற்றே கற்பனையையும், படைப்புத்திறனையும் கொண்டதாயிருக்க இரண்டாவது வகையோ அவை இல்லாத வெற்று முழக்கமாக இருக்கிறது. முதல் வகைக்கு நாம் ஆரம்பகால திராவிட இயக்க மேடைப் பேச்சுகளை உதாரணமாகக் கூறலாம். இரண்டாவது வகைக்கான உதாரணமாக பட்டிமன்றத்தின் பேச்சு இருக்கிறது.

இலக்கியமாக இருந்தாலும் சரி, பெண்ணுரிமை உள்ளிட்ட சமூகப்பிரச்சனைகளாக இருந்தாலும் சரி பட்டிமன்றத்தின் பேச்சாளர்கள் பிரயோகிப்பது இரண்டாவது வகை சொல்லணிகளைத்தான், இதில் தற்போதைய தமிழ் சினிமாவின் நகைச்சுவை வகைமாதிரிகளை (Stereotypes) அவர்கள் தமது முன்னுதாரணங்களாகக் கொள்கின்றனர். குன்றக்குடி அடிகளார் போன்றோர் பங்கெடுத்தபோது சமூகத்தின் வேறுபல விஷயங்கள் குறித்து அக்கறைகொண்ட சிலரது கட்டுப்பாட்டோடு கூடிய பிரச்சாரத்திற்கு பயன்பட்ட பட்டிமன்றம், தற்போது முற்றிலும் தொழில்முறைப் பேச்சாளர்களின் வருமானம் ஈட்டும் வழியாக மாறிவிட்டது. இந்த விதத்திலும் கூட நாடக, திரைப்பட நடிகர்களின் செயல்பாடுகளோடு ஒப்பிடத்தக்கதாக உள்ளது.

மேடைப்பேச்சு முறையில் பேச்சாளர் முன்வைக்கும் வாதங்களின் அடிப்படையில் தீர்ப்பு வழங்கும் இடத்தில் பார்வையாளர்கள் இருக்கின்றனர். அவர்களே அங்கு நீதிபதிகள். ஆனால் பட்டிமன்றத்தில் நீதிபதி என ஒருவர் அமர்த்தி வைக்கப்படுகிறார்.

பட்டிமன்ற நீதிபதி பொது மக்கள் மத்தியில் நிலவும் பொதுப்புத்திக்கு சார்பாகவே தீர்ப்பு வழங்குகிறார். எனவே அங்கு "திணிப்பு" எதுவும் நடப்பதில்லை என்றாலும் கூட நீதி வழங்கும் உரிமை பார்வையாளர்களிடம் இருந்து பறிக்கப்படுகிறது. இது ஒரு முக்கியமான விஷயமாகும். தீர்ப்பு வழங்குவதில் உள்ள சந்தோஷம் நமக்குப் புரியாததல்ல. நாம் நமது உறவுகளை நாம் வழங்கும் தீர்ப்புகளின் அடிப்படையிலேயே ஏற்படுத்திக்கொள்கிறோம். குறிப்பாக, ஒன்றை மோசமானது எனத் தீர்ப்பளிக்கும் சமயத்தில் நாம் கூடுதல் சந்தோஷம் அடைகின்றோம். ஒன்றை நமக்குக் கீழானதாக வகைப்படுத்துவதால் இந்த சந்தோஷம் நமக்கு உண்டாகிறது. இதன் விளைவாய்

**இலக்கியமாக இருந்தாலும் சரி, பெண்ணுரிமை உள்ளிட்ட சமூகப்பிரச்சனைகளாக இருந்தாலும் சரி பட்டிமன்றத்தின் பேச்சாளர்கள் பிரயோகிப்பது இரண்டாவது வகை சொல்லணிகளைத்தான். இதில் தற்போதைய தமிழ் சினிமாவின் நகைச்சுவை வகைமாதிரிகளை (Stereotypes) அவர்கள் தமது முன்னுதாரணங்களாகக் கொள்கின்றனர்.**

- ரவிக்குமார் -

## பட்டி மன்றம்:

எல்லாவற்றையும் எதிரெதிர் நிலையில் வகைப்படுத்துவது நமக்கு அவசியமாகிறது. நல்லது எதுவானாலும் அதைக் 'கெட்டது' ஒன்றுடன் நாம் எதிர் நிலையில் வைத்துப்பார்க்க வேண்டியது தேவையாகிறது. ஆக எப்போதும் நாம் நம்மை ஒரு நீதிபதியின் ஸ்தானத்தில் வைத்துக் கொள்ளவே விரும்புகிறோம்.

நல்லது, - கெட்டது; சரி, - தவறு என்பவற்றுக்கு நடுவில் இருப்பவராகவே நீதிபதியை நாம் கற்பித்துக்கொள்கின்றோம். ஆனால் அவர் எப்போதுமே நல்லது, சரி என்பவற்றுக்கு சார்பாக அவற்றோடே நிற்கிறார். ஆக நடுநிலை என்பது வெறும் மாயத்தோற்றமே ஆகும். நல்லது கெட்டது, சரி தவறு என்பவை குறித்த நீதிபதியின் நிலைப்பாடு அவரது நீண்ட நடைமுறை அனுபவத்தால், விஷேசமான அறிவால் பெறப்படுவதாக உணர்த்தப்படுகிறது. ஆனால் அத்தகைய 'விஷேச புலமை' இல்லாதவர்களும் கூட தீர்ப்பு அளிப்பதில் ஈடுபடவே செய்கின்றனர். தீர்ப்பு வழங்குதல் என்னும் நோய்க்கு ஆட்படாதவர்களே இல்லையென்று குறிப்பிடலாம்.

தான் அறிந்த அனைத்தையும் கூறுபடுத்த வேண்டிய தேவை மனிதனுக்கு இருந்தது. தான் அறிந்தவற்றை மட்டுமன்றி தனது கற்பனையில் உதித்தவற்றையும் கூட மனிதன் வகைப்படுத்தினான். எல்லாவற்றையும் எதிரெதிர் நிலையில் அடையாளப்படுத்தி, அவற்றுக்கிடையில் நீங்காத பகையை அவன் கற்பித்துக் கொண்டான். இத்தகைய இருமைவாத (Dualistic) அணுகுமுறை மிகத்தொன்மையானது. இந்தப்பாகுபாடும் பகையுணர்வும் தொடர்ந்து நீடிக்கப்படுவதில்தான் தீர்ப்பு வழங்கும் நீதிபதியின் ஸ்தானம் காப்பாற்றப்படுகிறது. பாமர அறிவில் வேர் கொண்டு திளைக்கும் இந்த இருமை வாதமே பட்டிமன்றத்தில் செயல்படுகிறது. இன்று நீதிமன்ற முனைப்பு வாதம் (Judicial Activism) என வகைப்படுத்தப்படும் நீதித்துறையின் போக்கு பெற்றுவரும் ஆதரவின் அடிப்படையாகவும் இதுவே அமைகிறது.

**தான் அறிந்த அனைத்தையும் கூறுபடுத்த வேண்டிய தேவை மனிதனுக்கு இருந்தது. தான் அறிந்தவற்றை மட்டுமன்றி தனது கற்பனையில். உதித்தவற்றையும் கூட மனிதன் வகைப்படுத்தினான். எல்லாவற்றையும் எதிரெதிர் நிலையில் அடையாளப்படுத்தி, அவற்றுக்கிடையில் நீங்காத பகையை அவன் கற்பித்துக் கொண்டான்.**

சமூகத்தின் நிர்வாக இயந்திரம் சீர்கெட்டு விட்டது, அரசியல் ஊழல் மலிந்து விட்டது என்பதான காரணங்களின் அடிப்படையில் நீதித்துறை மீதான நம்பிக்கை நியாயப்படுத்தப்படுகிறது. இப்படிப் பேசுவதன் மூலம் 'வெகுஜனநீதி' என்ற விஷயம்- மறைக்கப்படுவதை நாம் கவனிக்க வேண்டும். பன்னெடுங்காலமாய் சமூகப்பரப்பில் தமது நீதி வழங்கும் அதிகாரத்தை செயல்படுத்த முடியாமல் தடுக்கப்பட்ட மக்கள் திரளின் பிரச்சனை, இங்கு மேலும் மூடி மறைக்கப்படுகிறது. மக்களை மேன்மேலும் ஏதிலிகளாக்கி இரந்து நிற்க வைப்பதன் மூலமே, நீதிவழங்கும் வள்ளல்கள் செயல்பட முடியும். இது அரசியல் தளத்தில் மட்டுமன்றி கலாச்சார தளத்திலும் நடக்கிறது.

இன்னொரு விஷயத்தையும் நாம் இங்கு கவனித்தாக வேண்டும். மதிப்புமிக்கதாக சித்தரிக்கப்பட்டு, பூடகப்படுத்தப்படும் "தமிழ் மரபு" பொதுமக்களுக்கு எட்டாததாக, புரிந்து கொள்ள முடியாததாகவே வைக்கப்படுகிறது. மரபு குறித்த தூலமான விளக்கங்களை அறியாத மக்கள், தாம் ஏதும் அறியாதவர்களாய் இருக்கிறோம் என்ற குற்ற உணர்வில் மனம் குறுகிப் போகின்றனர். இதனால் எது பற்றியும் தீர்ப்பளிக்க முடியாத நிலை அவர்களுக்கு உண்டாகிறது. அந்த 'மரபை' அறிந்தவர்களாக, அதன் முகவர்களாகத் தம்மை வெளிக்காட்டிக் கொள்பவர்களை வியந்து நோக்குகின்றனர். பக்தி பாராட்டுகின்றனர், அவர்களைத் தனித்திறமை வாய்ந்தவர்களாக அங்கீகரிக்கின்றனர். பட்டிமன்றத்தில் பெருக்கெடுத்தோடும் (இழிந்த) சொல்லணிகள் இத்தகைய நம்பிக்கையை எளிதாக உண்டாக்கிவிடுகின்றன. பழந்தமிழ் இலக்கியங்கள் முதல் தற்கால சினிமாவரை பட்டிமன்றத்தில் பேச்சாளர்கள் எடுத்து பயன்படுத்தும் மேற்கோள்கள் அவர்களது வாதங்களுக்கு வலு சேர்ப்பதை விடவும் அவர்களைப் பற்றிய விம்பங்களுக்கே வலுச் சேர்க்கின்றன. தெய்வங்களுக்கும் மக்களுக்குமிடையில் நிற்பதாகக் கூறிக்கொள்ளும் பூசாரிகளைப் போல்; 'மரபுக்கும்' 'மக்களுக்கும்' இடையில் உண்டாக்கப்படும் செயற்கையான வெளியில் நிற்கின்றனர் பேச்சாளர்கள். அவர்களோடு அங்கே நிற்கும் இன்னும் ஏராளமான நபர்களை நாம் அடையாளம் காண்பது அவசியம். அப்படி அடையாளம் காண்பதன் மூலமே நாம் இழந்த அதிகாரத்தை மீட்டெடுப்பது சாத்தியம். அதற்கு, நடுநிலையானதாகத் தன்னைக் காட்டிக் கொள்கின்ற, ஆபத்தில்லாததாகத் தன்னை முன் வைக்கின்ற அனைத்து விஷயங்களையும் நாம் தீவிரமான விசாரணைக்கு உட்படுத்தியாக வேண்டும்.

**மரபு குறித்த தூலமான விளக்கங்களை அறியாத மக்கள், தாம் ஏதும் அறியாதவர்களாய் இருக்கிறோம் என்ற குற்ற உணர்வில் மனம் குறுகிப் போகின்றனர். இதனால் எது பற்றியும் தீர்ப்பளிக்க முடியாத நிலை அவர்களுக்கு உண்டாகிறது. அந்த 'மரபை' அறிந்தவர்களாக, அதன் முகவர்களாகத் தம்மை வெளிக்காட்டிக் கொள்பவர்களை வியந்து நோக்குகின்றனர்.**

இப்படியான விமர்சன முயற்சிகள் கல்வித்துறை வட்டாரங்களிலிருந்தும் ஆரம்பமாகியுள்ளன. சாலமன் பாப்பையா குறித்து டாக்டர். அ. ராமசாமி செய்துள்ள ஆய்வு ஆரோக்கியமான ஒரு துவக்கம் என்று கூறலாம்.

ஈழமுரசின் 100வது இதழுக்கும் அதன் பணி தொடரவும் எமது வாழ்த்துக்கள்

அச்சுப் பதிப்பின் முன்னோடிகள்

உங்களுக்குத் தேவையான சகல அச்சுப் பதிப்பு தேவைகளையும் அதி நவீன கணணியில் சிறப்பாக நீங்கள் விரும்பிய விதத்தில் வடிவமைத்துத் தருபவர்கள்

தமிழ் அச்சகம்

60, Rue Louis Blanc, 75010 Paris. M°: La Chapelle *ou* Gare du Nord
Tel: 01 42 09 60 64

சிறுகதை

# வெம்பல்

கி.பி.அரவிந்தன்

கலாச்சாரங்கள் விற்கப்படும் அந்தத் தெருவின் எதிர்த்த நடை பாதையில் தான் அவனைக் காண்கிறேன். அவன் தானா என நிச்சயமாவதற்கு முன்னாலேயே என்னுள்ளான கணம் ஒன்று இறங்கி ஏதோ இலேசாகியது போலாகின்றது. தெருவையும் நடை பாதையையும் பிரித்தபடி துப்பரவு செய்யும் குழாய்த் தண்ணீர் சலசலத்து வழிந்து கொண்டு இருக்கின்றது. அழுக்குகள் எல்லாவற்றையும் தண்ணீர் கழுவுமா, காவுமா என்பதைக் கவனிக்க மறக்கின்றது அவனை அறியும் அவசரம். வழியும் நீர் அழுக்குகளைக் கொண்டு கால்வாய்க்குள் சேர்க்கும் வாய்களை மூடியபடி இருக்கும் சிறிய இரும்புக் கிராதிக்குள் துப்பக் குனிந்து நிமிரும் போதுதான் அவனது முக அடையாளம் துல்லியமாய்த் தெரிகின்றது.

துப்பக் குனிந்த பணிவும், துப்பியது வெற்றிலைச்சப்பலின் ஊறல் என்பதும், ஆள் வயதானவன் போல் தோன்றுவதும் மதிப்பீட்டைப் பிசகச் செய்துவிடும் போலும். நெஞ்சு படபடக்கின்றது. பத்திரிகைச் சுருள் கொண்ட கையை மெல்ல வீசியபடி தளர்வுடன் நடக்க முயல்பவனை எதிரொருவன் வந்து மறித்துக் கதைப்பதையும், இவனது முகம் கலவரமடைவதையும் இரைந்து விரையும் வாகனங்களால் கூட என் பார்வை வீச்சை தடுக்க முடியவில்லை.

தெருவின் குறுக்காய் எட்டி நடைபோட்டு இருவரதும் வாய்க்கு நடுவே காதை பொருத்தி விட்டு ஓரமாகினறேன்.

எந்தன் தொலை தேசத்திலிருந்து இறக்குமதியான விற்பனைக் கலாச்சாரங்கள் கண்ணாடிகளூடே மினுங்குகின்றன. கறித்தூளும், வாசனைச் சரக்குகளும் காற்றில் ஏறி நாசியில் உரஞ்சுகின்றன. சுவாசத்திலும் கலாச்சாரம் தன் அடையாளத்தை பதிக்கின்றது. துள்ளல் இசையில் சப்பப் பட்ட வார்த்தைகள் நைந்து தொய்யும் இரைச்சலிடையே,

"சீட்டெடுக்கும் மட்டும் யோக்கியன் மாதிரி இருந்து விட்டு இப்ப உச்சுக்காட்டுறீங்க. இன்னும் ஒன்பது சீட்டு கூறக்கிடக்கு போன சீட்டுக் காசும்' தரவில்லை. மற்றச் சீட்டும் இந்தா அடுத்த ஞாயிறு கூறப்போறன்..... என்ன பேசாமல் நிற்கிறாய் சந்திரன்" சந்திரன். இவன் பாலச்சந்திரன், அவனேதான். சேறு கலங்கிப் படிந்த நினைவுக்குளத்தில் துள்ளும் மீன்கள் தெளிவாய் தெரிகின்றன. அக்கா சுந்தரிக்காய் சிறுவனான இவனிடம் சிநேகம் வளர்ந்த காலம் அலையெழும்பி மறைகின்றது. என்னை இவன் நினைவிற் கொணர்வானா? 'போனமுறை ஒரு பொறிக்குள்ள ஒருகால் சிக்கலாப் போச்சு. யோசிக்காதேயுங்கோ. இரண்டையும் சேர்த்துத்தாறன். சீட்டென்றால் சிட்டாத்தான் அலையணும். ஞாயிற்றுக் கிழமை உங்கடை வீட்டில்தானே கூறுறீங்க. கூறமுதல் வாறன்.' தீயணைப்பு அவசர வண்டி சைரன் ஒலித்தபடி விரையும் சத்தம் காதைக்குடைந்த போது கவனம் சிதறுகின்றது. அவன் நடக்கத் தயாராகிக் கொள்கிறான்.

'தம்பி. சந்திரன்.. உம்மைத்தான்.'

நின்று மீண்டும் வெற்றிலைச் சப்பலின் ஊறலை குனிந்து பவ்வியமாகத் துப்பி, புருவத்தை நெரித்து அறிஞ்ச கணத்தில் "கார்த்தியண்ணைதானே?"

வாஞ்சைமீதூர சந்திரன்



மலைத்துப் போகின்றான். அப்பாடா என்கிறது என்மனம். பிசகாதகணக்கு. பதினைந்து வருடமாயினும் வயது இடைவெளி இருக்கும் எங்களுக்கு. ஆனால் சந்திரன் மூத்துப் போயிருந்தான். அவனில் இருந்து ஒரு வாடை. சோற்று அவியலும், வெங்காய வதக்கலும் குழைந்து படிந்ததனால் வரும் ஒரு உறண்டல் மணம். என்னில் இனலும் மணம் எதுவும் படியவில்லை, யார் சொன்னார்? கண்கள் குழிந்து, சொண்டு தடித்து, தலையில் பக்கவாட்டு மயிரெல்லாம் சுருண்டு பரட்டையாகி,

'அண்ணன் நீங்க இல்லையெண்டா... நான்..'

குரல் தளதளத்து கண்ணில் நீர் கோர்க்கின்றது. இந்திய இராணுவ காலகட்டத்தில் அயலவனான இவனையும் இவனொத்த வயதினர் வேறு இருவரையும் காத்தருளும் பொறுப்பை சுற்றம் என் தலையில் சுமத்தியிருந்தது. வவுனியா தாண்டி இவர்களை அனுப்பி வைத்தபோது எனது மூளையையும், வீரத்தையும் நானே மெச்சிக்கொண்டதுண்டு

இவன் சுந்தரியின் சகோதரமாய் என் நினைவருட்ட, அவன்தப்பி வந்த காலத்தை நான் நினைவூட்டினேன் போலும். ஆழ்மனத் தொட்டருட்டலில் நேசங்கள் கிளர்கின்றன. உச்சி மோந்து அணைய வேண்டும் என்ற குறுகுறுப்பு என்னுள். தெரிந்தவர் யாரேனும் வேலை ஒன்று கிடைக்க உதவமாட்டார்களா, உடன் செலவுக்கு ஏதேனும் கொஞ்சம் இரங்க மாட்டார்களா என்ற அலைச்சலில் இவன் சிக்கினானே என்று திருப்தி கொண்டநான், ஓடி நிற்கும் காலத்தில் இறங்கிப் போகின்றேன். குளிர்காலப் பொழுதாயிருந்தும் குறண்டிப் போகாமல் நெஞ்சம் விரிகின்றது. நம்பிக்கை சுரக்கின்றது. நடைதுள்ளலிடுகின்றது. வேகம் கொள்ள மாட்டாமல் சந்திரன் பின்நோக்கி தாமதிக்கின்றான்.

"ஏன் சந்திரன் நடக்கக் கஸ்டப்படுகின்றான்?" திரும்பி நின்று கொள்கிறேன். விழிகளை சுருக்கி, சொண்டைச் சுழித்து அடியெடுத்த சந்திரன் 'அண்ணை' என்ற போது உறைந்த துயரத்தால் தோய்ந்திருந்தது அச்சொல்.

"பட்டுத்தெளிய, பட்டகாலிலேபட, முட்டுப்பட்டாலே வலிக்கும். தெரிந்து கொள்ளலாம்." என்ற போது கூடவே பெருமூச்சும் சந்திரனிடம் இருந்து வெளி வருகின்றது. நடைக்கும் இதற்கும் என்ன முடிச்சு..? முடிச்சுகள் எல்லாம் தொடர்போடேயா இருக்கின்றன.

தெரு முனையில் நாங்கள் திரும்புகின்றோம். குளிர் உறைந்த காற்று முகத்திலடிக்கின்றது. உன்றுகின்றது இப்போது. நடைபாதையில் இந் நாட்டவன் போன்றவன் சுவரில் சாய்ந்து கிடக்கின்றான். தலைமுடங்கித் தொங்குகின்றது. அழுக்கேறிய போர்வை ஒன்றால் தன்னைச் சுற்றிக்கொண்டு குளிர் பற்றிய உணர்வின்றிக் கிடக்கின்றான், போதைதரும் புளித்த காடியைக் கொண்ட போத்தல் அருகே வீழ்ந்து கிடக்கின்றது. நான் அவனையே திரும்பத்திரும்ப பார்க்கின்றேன்.

"எங்கட ஆக்கள் கனக்க இப்படி அறைகளுக்குள்ள கிடக்குதுகள் சந்தை மலியக்குள்ள நாமளும் குப்பைகளாத்தான் கொள்ளப்படுவம்." சந்திரன் நேரே பார்த்தபடிதான் நடந்து கொண்டிருக்கிறான். எதைக் கூறுகிறான்? என்வரை நிலைமையையும் புரிந்திருப்பான். இளையவனானாலும் இப்போது சந்திரன் மூத்தவன். அடிபட்டகாய் விழுந்த ஒரு அடியையே என்னால தாங்க முடியவில்லை. சந்திரன் எத்தனை பட்டானோ. அவனை இறுகப் பற்றியாக வேண்டும். நான் கரைசேர இவன் மிதவையாகலாம்.

"இவ்வளவு காலத்துக்கப்புறம் ஏன் கார்த்தியண்ணை நாட்டை விட்டு வெளிக்கிட்டனீங்க"

சந்திரன் கேட்பது சுரங்க நடை பாதைச்சுவர்களில் மோதி அதிர்வது போன்ற உணர்வு. இலேசான தாக்குதல்தான். சந்திரனின் தங்குமிடத்திற்குச் செல்வதற்காய் சுரங்கத்துக்குள் நாங்கள் இறங்கிக்கொண்டிருக்கின்றோம்.

என்ன பதில் சொல்லலாம் சந்திரனுக்கு? என்னிடம் இப்படிக் கேள்வி எழுப்பும் பத்தாவது ஆளாக இருக்கலாம் சந்திரன். நிலத்துள், ஆழ் சுரங்கத்துக்குள் இருந்து மேலேறி வருகின்றன புற்றீசல்கள். ஒளிராத பல வண்ணங்களில் அவ்வுருக்கள். எங்களை உரசிச் செல்கின்றன அவை. இறங்கிச் செல்லும் புற்றீசல்களில் ஒருவித வண்ணக் கோப்பில் நானும் சந்திரனும். எந்த ஒளிப்பகட்டு என்னையும் இங்கே..?

"வெளிக்கிட்டால்தான் உயிர்வாழும் எனப்பட்டது அதுதான்.." நான் இழுத்து இழுத்து குரலைத்தேய்த்தேன்.

"வாழ்வா.... சக்கைதான் இங்கே?" வெடுக்கென வெட்டுகிறான் சந்திரன்.

சுரங்கத்துள் வெப்பம் போலும், வியர்க்கும் உணர்வு, கனத்த ஆடைகள் மூடிய உடம்பின் மயிர்க்கால்கள் ஊசியாகி குத்துகின்றனவா? சுணைக்கின்றது. உடலை நெளிக்கின்றேன். நாங்கள் நிலத்தடி ரயில் மேடையை அடைந்து விட்டோம். பேச்சைத் தொடக்கலாம். இறுக்கம் குடி கொள்கிறது. எதிர்த்த மேடையிலும் ஆட்கள். இரண்டு நிமிட இடைவெளியில் வண்டிகள் வந்து போகும், சந்தித்துச் செல்லும் இடம். இன்னும் முப்பது செக்கண்டில் எம் வண்டி வரப்போகின்றது. மேடையின் தொங்கலில் நாங்கள் நின்றுகொண்டிருக்கின்றோம். கறுப்பும், சாம்பலும் இல்லாத ஒரு கருஞ்சாம்பல் கலப்பில் இரும்பும், மரமும், கருங்கற்களாலுமான தண்டவாளப் பாதையில சட்டென ஓர் எலி, இரண்டு, மூன்று, நான்கு அங்கெங்கனும் இன்னும் பலவாய், பெருவிரலளவில் துள்ளிக்குதித்தோடி, பரப்பப்பட்ட கற்களிடையே, முகர்ந்துதேடி எதையோ கொறித்து ஓடிமறையும் அவைகள்வெட்டி ஓடும் ஒரு மாயப் பொழுதில் இவ்வுயிர்கள் வாழ்ந்த வேகம்.. ரயில் வந்து விட்டது.

"இந்த எலிகள் இரை தேடும் கண நேர வேகம் உள்ளவனால்தான் இங்கெல்லாம் வாழ முடியும். பொறிகள் கவ்வு, கவ்வ ஊறிவரும். ஆனால் மனிதரின் இயக்ககதி ஏற்றத்திலே செல்வதில்லை. அது சாத்தியமுமில்லை கார்த்தியண்ணன்."

வண்டிக்குள் ஏறி எதிரெதிராய் அமர்கின்றோம். பதட்டம் கொள்கின்றது என் நெஞ்சு. வயதின் வனப்பிற்குரிய எந்த அடையாளமும் அவனில் தென்படவில்லை. கை விரல்கள் மரத்துக் குட்டைபிடித்தது போல் இருக்கின்றது. என்ன இவன் இப்படியாக இருக்கின்றான்..

"அண்ணன் உங்களை நினைக்கத்தான்.." என்கிறான் சந்திரன் என்னையே வெறித்தபடி தாழ்ந்த குரலில் ஒரு சிரிப்புடன். சிரிக்க முகம் விகாரிக்கின்றது.

(தொடர்ச்சி 24ம் பக்கம்)

23ம் பக்கத் தொடர்ச்சி)

# சிவம்பல்

"குட்டிபோடுற வட்டி கட்டி, வட்டி வளர்க்கும் முதலை திருப்பி, இருப்பிடத் தேவைக்கு ஒதுக்கீடும் செய்து, கொள்ளளவற்ற உற்றார் கனவிற்குத் தீனியும் போட்டு, வேரொடுகொடியொடு சொந்தங்கள் இறக்கி,சாத்தியமாகிற நம்பிக்கையோட..."

சண்டிப் போகும் என்மனம். எரிச்சல் மூள்கின்றது. முணுமுணுப்பது சந்திரனா? இருப்பது சங்கடமாகின்றது.

பாடும் அந்தச் சிறுமியின் மீது கவனத்தைக் குவிக்கின்றேன். சிறுமியின் பாடலில் ஒருவித இரக்கம் சுரக்கின்றது. வட இந்திய குஜராத்திமார்வாடி சாயலில் அவளது முகம். பல தடவைகள் இப்படிக் கையேந்தி கொடுப்பதற்கு என்னிடம் எதும் இருப்பதில்லை. இப்போது கூட அந்தச் சிறுமி கையை நீட்டினால் கொடுப்பதற்கேதுமில்லை. இந்தக் கையேந்தலைத்தான் நானும் செய்துகொண்டிருக்கிறேன் என்பது என்னைக் கூசச் செய்கின்றது. இந்த சந்திரனுடன் கடைத் தெருவில் தொற்றிக்கொண்டதும் ஒரு கையேந்தலுக்குத்தான். அவனின் தங்குமிடம் போய்ச் சேர்ந்ததும் இதைத்தான் செய்யப் போகின்றேன்.

வண்டி தரிப்பிடம் ஒன்றில் நின்று புறப்படுகின்றது. வண்டிக்குள்ளான ஒலிபெருக்கியில் எனக்கு இன்னமும் பிடிபடாத இந்நாட்டு மொழியில் ஏதோ அறிவிக்கப்படுகின்றது. சந்திரனைக் கேட்கலாம்தானே; அவன் கண்ணயர்ந்திருந்தான்.

சந்திரனை கடைத் தெருவில் முதலில் கண்டபோது ஏற்பட்ட திருப்தியும் வாஞ்சையும் இப்போது என்னுள் மெல்ல தணிந்து



செல்வதுபோல் படுகின்றது.

அவனது கதைகளில் ஒரு விதவூடகம் தொனிப்பதாய் இப்போது உறுத்துகின்றது. எப்படிக் கண்ணயர முடிந்தது இவனால்...?

தொடர்ந்து உரையாட ஏன்தவிக்கிறான்? சந்தித்ததிலிருந்து அளவளப்பாய், மனம்விட்டு பேச்செதையுமே அவனால் தொடங்கமுடியாதது ஏன்?

எதை நான் தொடங்கியபோது முறித்து வரும் ஏதோ ஒரு விளக்கம். எலிகள் அந்தத் தண்டவாளத்துக்குள், இத்தனை சந்தடிக்குள் வாழ்வது ஆச்சரியமாய்த்தான் இருந்தது. ஆனால் என்னமோ விளக்கம் சொல்கிறான். தொடக்கத்திலிருந்தே அவனது கதைகளில் பிறழ்வுதான்.

ஏன் வந்தீங்க என்றுமட்டும் கேட்டான். அங்கே எப்படி இருக்கிறீங்க? என்ன செய்யிறீங்க? என்று எந்த மேலதிக அக்கறையும் இல்லாமல் இருந்தானே.

கண்ணயர்வு கூட ஒரு இயல்பற்றது போல்தான் தெரிகின்றது. வண்டி இப்போது சுரங்கத்திற்கு வெளியே வெளிச்சத்துக்கு வந்துவிட்ட துநகர்ப்புறம். இவனின் இறங்கும் இடம் எது? அறையில் பட்ட காயம் யாரோடென்றாலும் ஒட்ட வேண்டும் என்றாகிவிட இவன் சிக்கினான். அதிலும் எவ்வளவு நெருக்கமானவன். நான் நம்பவே இல்லை.

தண்டல்சோறு தின்ன ஆறாயிரம் மைல் தாண்டி வந்தேனாம் என்ன நாக்கடா அது. சக மனிதனை நோகச் செய்வதிலேயே என் அறைக்காரர்கள் குறியாய் இருக்கின்றார்கள்.

மெல்லக்கண் விழிக்கிறான் சந்திரன். கண்ணாடியூடே வெளிப்புறத்தை பார்த்துவிட்டு,

"நாசமாப்போன முள்ளந்தண்டு, வயசென்னும் உச்சிக்குவரயில்ல அதுக்குள்ள மச்சுப் போச்சு"

எவ்வித பதட்டமுமின்றி உடலை நெளிச்சு சரி செய்து கொள்கிறான். மலையெனக் குந்தியிருக்கும் நான் அவனின் கண்ணில் பட்டதாய் தெரியவில்லை.

"சந்திரன் இன்னும் தூரமா போகவேண்டும்?" இடத்தை அறிய வேண்டும் என்ற ஆர்வமும், என்னைக் கவனிக்காத எரிச்சலும் ஒரு சேர என்னுள் குமைகின்றது.

என்னை அவன் அந்நியனைப் போல் பார்ப்பதும், பார்க்கும் பார்வையில் தன் மூளைப்பரப்பெங்கும் என்னைத்தேடி ஆராய்வதும் தெரிகின்றது.

"சந்திரன்... என்ன நல்ல தூக்கம் போல.." நான் சமாளித்து வலியச் சிரித்து, எந்தன் நெருக்கத்தை உணர்த்தி நிலைமையை சீராக்க எண்ணுகின்றேன்.

தூக்கக் கலக்கமாகவும் இருக்கலாம்.

அக்கம் பக்கத்து இருக்கைகளின் முகங்கள் எங்களை நோக்கி வெடுக்கென்றில்லாமல் நாதூக்காக திரும்புவது தெரிகின்றது. நான் குரலின் தென்பை உயர்த்தி விட்டேனா அல்லது அவர்கள் பார்க்கவே இல்லையா? அந்தரிப்பாக இருக்கின்றது. என்ன இந்த சந்திரனின் தோற்றம். இப்படி வெருள்கிறான். "அப்போது தமிழ்க் கடைத்தெருவில் சந்தித்த கார்த்தியண்ணைதானே? இந்த வண்டியில் எங்கை போறீங்க?" அவன் கேள்வியில் ஆச்சரியம் தெரிகின்றது. பாசாங்கா?

"உன்னுடைய தங்குமிடத்திற்குத் தானே நாம் போய்க்கொண்டிருக்கிறம்... நீ என்ன இப்படிக் கேட்கிறாய். உனக்கென்ன நடந்தது சந்திரன்?

என்ன பிசகு இது. கடைத்தெருவில "வாங்க வீட்டுக்குப் போகலாம் என்று தானே இவன் சொன்னவன். சொன்னவன்தானே?" இப்ப என்ன புதுசாக் கதைக்கிறான்.

என்னைப் பேயன் ஆக்குகின்றானா?

நினைவுக் குளத்தில் சேறு கலங்குகின்றது.

கடந்த ஒரு மணிநேரத்தில் என்ன நடந்து கொண்டிருந்தது? "என்னுடைய தங்குமிடத்திற்குப் போகின்றோமா? நான் இப்ப பின்னேர வேலைக்குப் போய்க்கொண்டிருக்கின்றேன். அடுத்த தரிப்பிடத்தில்தான் நான் வேலை செய்யும் இடம். நான் இறங்க வேண்டும். நீங்க கார்த்தியண்ணைதானே?"

"இனி எலி வந்து இரை தேடும் கணநேரவேகம். இனி கைகாலும் ஓய நடுநிசிதாண்டும். உயிர் இங்கு வாழ.."

சந்திரன் முணுமுணுக்கின்றான் வெளியே பார்த்தபடி.

அடுத்த தரிப்பிடத்தில் நிற்பதற்கு ரயில் வேகத்தைக் குறைக்கின்றது.

* * * * * *

*குளிர்காலம் - 1996*


தமிழ் மக்களின் இதயநாதமாய் விளங்கும் ஈழமுரசே!
உனது பணி வளரட்டும்
எங்கள் ஆசைத்தம்பியின் உறுதி சுமந்து
வீறுகொண்டே நடை தொடரட்டும்!!
ஈழமுரசின் 100வது இதழுக்கும் அதன் தொடர் பணிக்கும் எங்கள் வாழ்த்துக்கள்...

மக்கள் கடை
சுவிற்சர்லாந்தின் ஈழமுரசிற்கான
ஏக விநியோகஸ்தர்களும் விளம்பர முகவர்களும்

தரம் - மலிவு - நாணயம் - நம்பிக்கை

மக்கள் கடை - இது உங்கள் கடை

| மக்கள் கடை | மக்கள் கடை | மில்லர் அங்காடி | மக்கள் கடை | மக்கள் கடை |
|---|---|---|---|---|
| Kupfergasse 13, | Heinrichstrasse 85, | Winkelriedstrasse 47, | Seilerstrasse 4, | Bahnhof Passage 3, |
| 7000 Chur | 8005 Zurich | 6003 Luzern | 3011 Bern | 4500 Solothun |

# அவ்வை சண்முகி சீலையும் வேணும்! தாம்பாளத்திலை சீதனக் காசும் வேணும்!!

அவ்வை சண்முகி... அவ்வை சண்முகி எண்டு எங்கடை பெடி பெட்டையளின்ரை வாயிலை கொஞ்ச நாளா ஒரே பேச்சாயிருந்திச்சு. கண்ட கண்ட கிலிசகெட்ட படங்களெல்லாம் வாற இந்த நாளிலை அவ்வைக் கிழவியையும் சண்முகப் பெருமானையும் வைச்சு நல்ல தொரு புராணப் படமெடுத்திருக்கிறாங்களாக்கு மெண்டு நினைச்சு எனக்கு புல்லரிக்காத குறையாய் புளகாங்கிதமாயும் போயிட்டுது

எங்க இப்ப படங்களெண்டு வாறதுகளை பிள்ளைகுட்டியளோடையிருந்து கண்ணொடுத்துப் பாக்கேலுமே விசப்புழுதித்தனமாயெல்லே எடுத்து வைச்சிருக்கிறாங்கள். ஊருலகத்திற்கு பயன்படுற மாதிரி அதிலை ஏதாச்சும் வருகுதே. ராத்திருவிழாவிலை துலைச்ச ஒரு ரூபாய்குத்தியை தேடி எடுக்கிற மாதிரி குனிஞ்சு, நிமிந்து, விழுந்தெழும்பி பெடி, பெட்டையள் ஆடுற கண்ணுறாவிப் பாட்டுகளும் அதற்குள்ள வேறை.

என்ரை பெறாமேள் ஒருத்தியிட்டை எப்பிடியெடி அவ்வையாற்றை படமெண்டு சும்மா கேட்டு வைச்சன். உலகத்துப் பூராயங்களை எல்லாம் விடுப்புப்புடுங்கிற சித்தப்புவுக்கு ஒண்டுமே தெரியாதாக்கும் எண்ட மாதிரி, பெடிச்சியும் பதிலுக்கு முத்தாய்ப்பு வைச்சாள். விசயம் இல்லாமலுக்கு அவள் உப்பிடிச் சொல்ல மாட்டாளே எண்டு எனக்குத் தெரிஞ்சதனாலை மெல்ல வாயைக் கிளறினன். பேத்து தான் ஏன் இந்த சீத்துவக் கேடுகளை கேட்டன் எண்டு போச்சு.

அவள் சொன்ன விசயத்தாலை அவ்வை சண்முகி படத்தின்ரையும் எங்கடையாக்கள் சிலரின்ரையும் சாயமும் வெளுத்திட்டுது. உவர் கமல் பெடி நெஞ்சு, கால், கை எல்லாத்திலும் இருக்கிற முடியை எல்லாம் வழிச்செறிஞ்சிட்டு ஐயர் பொம்பிளை வேசம் போட்டு நடிச்சிருக்கிறாராம். எனக் கென்னத்திற்கு உந்தத் துளாவாரங்கள். பேந்து எங்கடை கமலை குறைவாய் சொல்ல நீ ஆர் காணும் எண்டு ரசிக சிகாமணியள் பொல்லாப்புக்கும் வந்திடுவினம்.

இந்தியாவிலை உந்தப் படம் ஓடேக்கை அவ்வை சண்முகி எண்ட பேரிலை சீலை ஒண்டும் விக்கிறதுக்கு வந்ததாம். "குடல் கூழுக்கு அழ கொண்டை பூவுக்கு அழுத கதையாய் செய்யவேண்டியதுகள் எவ்வளவோ கிடக்க தேவையில்லாததுகளை சுமக்கிறதிலை அவையளும் என்ன குறைஞ்ச ஆக்களே!

சரி... அங்கை தான் அவ்வை சண்முகி காச்சல் பிடிச்சிட்டுதெண்டு பாக்க, இங்கை லண்டனுக்கு மெல்லோ அது தொத்தியிட்டுது. பரியாரி நாகலிங்கத்தாரும் இஞ்சை இல்லை. இல்லாட்டிக்கு பார்வை பார்த்து மந்திரிச்சு மருந்து குடுத்திருக்கலாம்.

லண்டனிலை உள்ள புடவைக்கடைக்கு போன எங்கடை தாய்க் குலத்திலை ஒராள் இந்தச் சீலை இங்கை விக்கிறதுக்கு வந்திட்டுதோ எண்டு அக்கறையோடை விசாரிச்சிருக்கிறா. கடையிலை இருந்த பெடியனும் இவவின்ரை குணம் தெரியாமலுக்கு வலு சுறுக்கா 'இல்லை' எண்டு சொல்லிப் போட்டுது.

"சிறீலங்காவிலையிருந்து, அகதியிலை, முருங்கையிலை எண்டு எல்லாம் உடனுக்குடனை இறக்கிறியள் இப்பிடிப்பட்ட லேட்டஸ் ஐயிற்றங்களையும் கொஞ்சம் உடனுக்குடனை எடுத்து வித்தா என்ன குறைஞ்சோ போயிடுவியள்" எண்ட கணக்கில பொரிஞ்சிருக்கிறா. பெடியும் ஏனடா வாயைக் குடுத்தன் எண்ட நினைப்பிலை மலைச்சுப் போய் நிண்டிட்டுது.

'அடியடா புறப்படலேலை எண்டானாம்' எப்பிடியிருக்குது அம்மலசியின்ரை கதை. அங்கை எங்கடை மண்ணிலை கோடித்துணியெண்டா என்னெண்டு கேக்கிற அளவுக்கு சந்திரிக்காவின்ரை வானரப்படை ஒரு துளி சாமானையும் விடுகுதில்லை. இஞ்சை எங்களுக்கு அவ்வை சண்முகி சீலை உடனை கேக்குது.

## ஆருக்குச் சொல்லி அழ?

உப்பிடித்தான்– சந்திரிக்கா நாச்சியாரும் அரியணை ஏறின உடனை கதை ஒண்டு விட்டவ தெரியுமே? யாழ்ப்பாணத்துச் சனங்களெல்லாம் தன்னிலை வைச்சிருக்கிற சரியான விருப்பத்தாலை சந்திரிக்கா சீலை, சந்திரிகா கைச்சங்கிலி எல்லாம் போட ஆசைப்படுகுதுகளெண்டும் ஆனால் புலியள் அதெல்லாத்துக்கும் விடுகினமில்லையெண்டும் பேப்பர்காரருக்கு பேட்டியொண்டும் குடுத்தவாவெல்லே! எங்கடை சில ஆக்களிலை சதாப் பிடிச்சுப்போய் இருக்கிற பலவீனங்களிலை ஆராரோ குந்தியிருந்து சவாரிவிடப் பாக்கிறாங்கள். நாங்களும் இது தான் நாகரீகமாக்குமெண்டு இளிச்சுக் கொண்டு நிக்கிறம். இன்னும் சிலர் ஆவுரஞ்சிக் கல்லுகள் போல இருக்கினம். லண்டன் கதை எண்டாப்போலை இன்னொண்டும் ஞாபகத்திற்கு வருகுது. கிட்டடியிலை கலியாண எழுத்தொண்டு அங்கை நடந்தது. பேச்சுச் சம்பந்தம் தான். எழுத்து நாளண்டு கோட்டுச் சூட்டோடை எல்லாரும் வலு கலாதியாய் வந்திருந்திச்சினம். வெள்ளைக்காரன்ரை நாட்டிலை அவனைப் போல உடுக்க விரும்புறது பெரிசா பாதகமில்லை எண்டாலும் அங்க நடந்த விசயம் தான் பாதகமாயிருந்திச்சுது.

மாப்பிளைப் பெடியனும், பொம்பிளைப் பெடிச்சியும் நாணிக்கோணி இருக்க மேசையிலை ஒரு தாம்பாளத்திலை இருந்த சீதனக் காசு மட்டும் வெக்கமில்லாமலுக்கு ராணியம்மா வீட்டுப் பிரதிநிதியாய் இருந்திருக்குது. எழுத்து நாள் அண்டைக்கே சீதனக்காசை, காசாத் தரவேணுமெண்டு முன்னமே மாப்பிளை வீட்டுக்காரர் கேட்டதாலைதானாம் உந்த ஏற்பாடாம்.

இங்கின பெரிய மனுசருகள் போல நடமாடுறவை செய்யிற சின்னத்தனங்களைப் பாத்தியளே. சும்மாவே சொல்லுறவை "அத்திப் பழத்தைப் புட்டுப் பார்த்தால் அத்தனையும் புழுவெண்டு"

ஆமி அடிக்கிறான், தேவி துரத்திறான் எண்டு நாங்கள் ஆவசிவன் கெட்டது போல வந்தாலும் மறக்காலுக்கு கக்கத்துக்குள்ளை பரவணிக்குணங்களையும் கொண்டு வந்து இஞ்சை பரப்பி யாவாரம் செய்யிறம். நான் இப்படிச் சொன்னதாலை இக்கணம் சன்னதம்கொள்ளுற தோடை என்ன நாங்களெல்லாம் ஆமிக்காரனுக்கு பயந்து வந்தனாங்களோ? நாங்கள் அதுக்கு முதலே வந்து சேர்ந்தனாங்களெண்டு செருக்காயும் எல்லே சொல்லப்பாப்பினம்.

"கெடுமதியும் கண்ணுக்குத் தெரியாது" என்ரை சொல்லும் காதிலை ஏறாது. என்னவாவது செய்து துலைக்கட்டுமெண்டு என்னாலையும் சும்மா கிடக்கேலாமல் கிடக்குது.

அது சரி. என்ன நீங்கள் முணுமுணுக்கிறியள்? "சாக்கடைப் புழுவுக்கு போக்கிடம் ஏதோ?"

என்னை வில்லங்கத்திலை மாட்டிவிடப் பாக்கிறியள் போல ஆளை விடுங்கோ சாமி!

**அருமைத்தம்பி**


ஈழமுரசின் பணி தொடர எமது வாழ்த்துக்கள்

Aarthi Photo service
16 rue de Paradis, 75010 Paris, Mo: Gare de l'Est.
Tel: 01 42 46 42 07 / Fax: 01 40 22 98 67

Aarthi Photo Studio
15 rue Cail, 75010 Paris, Mo: Gare du Nord - La chapelle
Tel: 01 40 34 20 90

ஆர்த்தி போட்டோ ஸ்டூடியோ
இப்பொழுது உங்களின் வசதிக்காக
M°: லாசப்பலில் ஆர்த்தியின் மற்றுமொரு அங்கம்

உங்கள் குழந்தைகளை புகைப்படம் எடுக்க நாடுங்கள் ஆர்த்தி ஸ்டுடியோ, குடும்பப் படங்கள் எடுக்க நாடுகள் ஆர்த்தி ஸ்டுடியோ.
மணவறை அலங்காரங்கள் மற்றும் பலவிதமான அமைப்புகளுடன் கூடிய பிரம்மாண்டமான ஸ்டுடியோ., நீங்கள் விரும்பிய வண்ணம் புகைப்படங்கள் விதவிதமான கோலங்களில் எடுக்க ஆர்த்தி - லாசப்பல் , இலங்கை, இந்தியா மற்றும் பிரான்ஸ், அமெரிக்க Passport மற்றும் அடையாள அட்டைப் படங்கள் எடுக்க ஆர்த்தி - லாசப்பல்., உங்கள் பிலிம்ரோல்களை 30 நிமிடங்களில் டெவலப் செய்ய ஆர்த்தி - Gare de l'Est.

- Camera பழுது பார்க்கப்படும்.

Film - Development - Photo Enlargement - Mariage Photo
- Children Photo - Ceremony Photo - Albums - Frames - Cameras

ஆர்த்தியின் தொலைபேசி சேவை Mobile Telephone

ஆர்த்தி ஸ்டுடியோவில் Mobile Telephone பதிவுபெற்று ஒவ்வொரு மாதமும் 3 மணிநேரம் இலவசமாக பேசுங்கள்.
* Forfait : 240Ffs மட்டுமே. வேறு எந்த விதமான வரிகளும் கிடையாது. Callback வசதிகளும் செய்து தரப்படும்., SFR, Itineris, Bouygues Telephone தொலைபேசிகளும் வாங்கிக்கொள்ளலாம்.


ஈழமுரசின் பணி தொடர எமது வாழ்த்துக்கள்
R.M.C
பரடைஸின்
மாபெரும் மலிவு விற்பனை
1 பவுண் தங்க நகை - 145Sfr
1 கிராம் கல்லு நகையின் விலை - 25Sfr
மற்றும் துணி வகைகளும் மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
அனைத்து CD, Audio, பட CD கள் அனைத்தும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
1Kg உடன் மீன் - 10Sfr மட்டும்
1Kg அறக்குளா மீன் - 12Sfr மட்டும்
மற்றும் அனைத்துப் பொருட்களும் மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்
R.M.C பரடைஸ்
Kuchen Gasse-16
4052 Basel
Switzerland
T.P: 061-2712207

# புகலிடச் சூழலில் புலம் பெயர் தமிழ் இளைஞர்களின் உளப் பிரச்சனைகளும் ஒரு சில தீர்வுகளும்

'இளம் கன்று பயமறியாது' என்று சொல்வார்களே. ஆகவே "இளைஞர்களாகிய எமக்கு என்ன பயம், என்ன பிரச்சினை இருக்கப்போகிறது; நாம் எதற்கும் துணிந்தவர்கள். ஆனால் எமது மூத்த சந்ததியும், எமது கலாச்சாரத்தைத் தூக்கிப்பிடிப்போரும்தான் இங்கு புகலிடத்தில் பிரச்சனையாக இருக்கிறார்கள். இவர்களை சரிப்பண்ணி விட்டால் எமது இளமைத்துடிப்புக்கு புகலிடத்தில் எல்லையே இல்லை. சொர்க்கலோகமே மண்ணில் இருக்கு" என்று ஒரு பகுதி இளையவர்கள் தாம் சந்திக்கும் இடங்களிலும், தாமாகவும் சிந்திப்பதும் கதைப்பதும் கேட்ட வண்ணம் இருக்கிறது.

இதற்கு சமாந்திரமாக "மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்?" இன்னோர் பகுதி இளையவர்கள் தம்மை அடக்கமாகவும், பணிவாகவும் வைத்திருக்க கஸ்டப்பட்டு முயற்சி செய்வதையும் அவதானிக்கின்றோம். இவர்களில் ஒரு பகுதியினர் தமது ஆட்களைக் கண்டபோது மிக மரியாதையாகவும் பணிவாகவும் செயற்பட்டு, வேற்று சூழலில் "இவர்தானா அந்த இளையவர்!" என பிரமித்து வாயில் கை வைக்கும் அளவிற்கு நடக்கிறார்கள். மற்றும் ஒரு பகுதி இளையவர்கள் வேற்று சூழல்களை ஒதுக்கி தமது சூழல்களின் வட்டத்தினுள் மாத்திரம் வாழ்கிறார்கள்.

மேலே உள்ள இளையவர்களின் வயதை நாம் 12-இலிருந்து 18 வயது வரை எனக் குறிப்பிடலாம். இதில் ஆண்பிள்ளைகளும் அடங்குவர். ஆனால் ஆண், பெண் பிள்ளைகளிற்கு ஏறப அவர்களின் வளர்ப்பு முறை, அவர்களினது செயல்பாடுகள், பழக்க வழக்கம் போன்றவை வித்தியாசமாக, தமிழ் கலாச்சாரத்தினால் பேணப்பட்டு வருகிறது. இப்பேணுதலில் உள்ள எதிர்பார்ப்புக்கள், வழக்கங்கள் பழக்கங்கள் ஊரில் போர்க்கால ஆயத்தங்கள், செயல்பாடுகளாலும் குழப்பமாகி உள்ளது. அதே போல புகலிட நாட்டு சூழலினாலும் இவைகள் குழப்பம் அடைகிறது.

புகலிட நாட்டு சூழலில் இருக்கின்ற பழக்க வழக்கங்கள், குறிப்பாக இளையவர்களைப் பொறுத்தவரை பெரிதும் வித்தியாசப்பட்டிருப்பதை இளையவர்கள் பலர் அறியார். ஆனால் வளர்ந்தோர், பெற்றோர் பலர் அறிவர். ஆனால் வளர்ந்து பெற்றோர் ஆகியவர்கள் கூட (18 வயதிற்கு மேல்பட்டோர்) புகலிட நாட்டு சூழலினால் "இளையவர்கள்" ஆக ஆக்கப்பட்டிருப்பதையும் / ஆகி இருப்பதையும் காண்கின்றோம். இவர்கள் உடல் வயதினையும், அவர்களின் சமூக பொறுப்பினையும், (உதாரணம்: குடும்பமாகி மனைவி பிள்ளைகளுடன்) பார்க்கும் போது இவர்களை "இளையவர்கள்" என்ற பகுதியில் சேர்க்க முடியுமா என்ற கேள்வி எழுகிறது. எப்படி இருந்தபோதும் இவர்கள் செயல்பாடு இவர்களை ஓர் "வளர்ந்த இளையவர்கள்" குழுவாக வைத்து எண்ணச் செய்கிறது எனலாம். (உதாரணம்: மனைவி பிள்ளைகள் வீட்டில் தனிமையில், ஒருவர் இளையவர்களுடன் கடுதாசி விளையாடி மகிழ்ந்து கொள்வதை) பெரியவர்கள் "இளையவர்களாக" மாறிய செயல்பாடு போல சிறியவர்கள்/பிள்ளைகளில் ஒரு பகுதியினர் "இளையவர்களாக" உருவாக்கப்பட்டு இருப்பதையும் அவதானிக்கலாம். இங்கு பெற்றோரின் இயலாமை பல சிறியவர்களை, இளையவர்கள் நிலைக்குத் தள்ளிவிட்டிருக்கிறது. இதே போல் விவாகரத்துச் செய்யப்பட்ட குடும்பங்கள், பெற்றோரில் ஒருவரை இழந்த குடும்பங்கள், பெற்றோரிடையே உள்ள மனக்கசப்பு, பிரச்சனைகள், அளவிற்கு மிஞ்சிய மதுபாவனை, வரவுக்கு மிஞ்சிய படாடோபமாக வாழும் விருப்பம் போன்ற இன்னோரன்ன காரணிகளில் பிள்ளைகளை பிள்ளைகளாக வாழும் சந்தர்ப்பத்தை கொடாது, "பிள்ளை இளையவர்" என்ற குழுவாக ஆக்கிவிடுகிறது.

ஆக மொத்தம், "இளையவர்கள்" என்ற 12 - 18 வயதுடையவர்கள் ஒரு குழுவாகவும், 12-க்கு கீழ்ப்பட்ட பிள்ளைகள் பல இன்னோரன்ன காரணிகளால் "பிள்ளை இளையவர்" என்ற குழுவாக்கப்பட்டும், 18 வயதிற்கு மேற்பட்டோர் தமக்குரிய பிற காரணிகளால் உந்தப்பட்டு "வளர்ந்த இளையவர்கள்" என இயங்கிகொண்டு இருப்பதையும் புகலிடத்தில் அவதானிக்கிறோம். இம் மூன்று குழுவினரின் வயதுகட்கு ஏற்ப அவர்கள் உளவியல் பிரச்சனைகள் மாறுபட்டதாக இருக்கும் என்றால் மிகையாகாது.

உண்மையில் ஒருவர் செயல்பாட்டை அவதானிக்கும் இன்னொருவர், செயல்பாட்டிற்கு உரியவரின் வயதினை, உடல் தோற்றத்தினை தன் அகக் கண்ணில் வைத்து எடை போடுவதை பார்க்கின்றோம். அதன் பின் தனது சுய விளக்கத்துடன் செயலை செய்தவருக்கு ஓர் வயதினைக் குறித்துக் கொள்கிறார். இவ் வயதினை "மன வயது" எனலாம். இதன்படி ஒருவரின் உடல் வயது 9 வயதாகவோ, 29 வயதாகவோ இருந்தாலும் அவர் செயல்பாடு இளையவர்களினுடையதாக இருந்தால் உதாரணமாக 9 வயதுடையவர்களை "பிஞ்சிலே பழுத்தது" என்றோ, 29 வயதுடையவர்களை "தறுக்கணித்துவிட்டவர்கள்" என்றோ சொல்லலாம். "தறுக்கணித்தல்" என்பது கத்தரிக்காய், கீரை போன்றவற்றைக் கடையும் /மசிக்கும் போது மையாகக் கரைந்து வராவிட்டாலும், அம்மாமார் குசினியுள் பாவிக்கும் கலைச்சொல். இங்கு அதன் பயன், ஒற்றுமை கருதி பாவிக்கப்படுகிறது. "தறுக்கணித்தவர்கள்" என்ற பதம் இங்கு தமது உடல் வயதிற்குரிய செயல்பாட்டினை ஒருவர் தொடர்ந்து செய்யாது தனது உடல் வயதிற்கு கீழ் பட்டவர்களின்/தன் பழைய இளமை காலத்திலிருந்து விடுதலை பெற்று வளர்ச்சி அடையாது அங்கு தரித்து நிற்பதால் இதனை விளக்க பாவிக்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட மூன்று இளையவர் குழுக்களிடம் "பிள்ளை இளையவர்கள்" "வளர்ந்த இளையவர்கள்" என்ற இரு குழுக்களும் பல சமூக, கலாச்சார, உடலியல், காரணங்களினால் உளவியல் தாக்கங்கள் பெற்றிருப்பது வெள்ளிடைமலையாகத் தெரிகின்றது என லாம். இவ் உழவியல் அழுத்தங்கள், சுற்று சூழல்களில் இருந்தும், ஒருவர் உடலியல் தன்மைகளில் இருந்தும் உருவாகின்றன. ஆனால் இங்கு இவ்விரு குழுவினரை விட்டு, உண்மையான இளையவர் பற்றிய விடயங்களே கவனிக்கப்படுகிறது.

சுற்றுச் சூழல்கள் என்னும் போது "ஒருவரின்" அளவில் இருக்கும் உயிருள்ள, உயிரற்ற எல்லாம் அடங்கும் எனலாம். உதாரணமாக பெற்றோர், சகோதரர், அயலவர், நண்பர், மற்றும் வளர்ப்பு விலங்குகள், தாவரங்கள் போன்ற உயிருள்ளனவும், வீட்டுப் பாவனைப் பொருட்கள், உடை என்பவற்றிலிருந்து பாடசாலை, தபாற்கந்தோர், கோவில் போன்ற நிறுவனங்கள், சமய, அரசியல், கலாச்சார, பண்புக் கருத்துக்கள் என்ற உயிரற்ற பொருட்கள், கருத்துக்கள் என்பனவற்றைக் கூறலாம். இவைகள் ஒருவரில் வித்தியாசமான தாக்கங்களை ஏற்படுத்துவதையும் அறியலாம்.

மேலுள்ள புற காரணிகளை விட அவனுடைய உடல்கூட உள அழுத்தங்களிற்கு காரணமாக அமைகிறது. குறிப்பாக எமது இளையவர்களை எடுத்துக் கொண்டால் பெண் பிள்ளைகட்கு 11 - 13 வயதும், ஆண் பிள்ளைகட்கு 12 - 15 வயதும் சடுதியான உடலியல் மாற்றங்களுக்கு உள்ளாகும் காலமாகும். இக் காலகட்டத்தில் உடலியல் உறுப்புக்கள் மாத்திரமல்ல, அவர்கள் விருப்பு, வெறுப்பு, ஆசை, பாவம், கோபம், நட்பு போன்ற உளவியல் உணர்வு சிந்தனைகளும் மாற்றம் அடைகிறது. இவ்வகை மாற்றங்கள் எமது அக சுரப்பிகளில் உற்பத்தியாகும் இரசாயன திரவங்களாலேயே ஏற்படுகின்றன. இதனாலேயே "இளையவர்கள் பருவம்" ஆண்பெண் வித்தியாசம் இன்றி, தவிர்க்க முடியாத, இன்றியமையாத ஓர் முக்கிய பருவமாக அமைகிறது.

இப் பருவத்தில் உருவாகும் உடல் மாற்றங்களை அக சுரப்பீ இரசாயன திரவங்கள் பாதிப்பது போல் உளவியல் செயல்பாடுகளை பாதிப்பது இல்லை என உளவியல் நிபுணர்கள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றார்கள். அவர்கள் கருத்துப்படி 'பூப்பு' அடையும் நிலையை ஒருவர் எய்தும் போது குடும்பம், சமூகம், அச்சமூகத்தின் கொள்கைகள், எதிர்பார்ப்புகள், எப்படி அவர் நடந்து கொள்ள வேண்டும் என நிச்சயிக்கிறது. இந்த நிச்சயிக்கப்பட்ட கருத்துக்களிற்கு ஏற்ப ஒருவர் தன்னை தக அமைக்க விரும்புகிறார். அப்படி அவர் தன்னை தக அமைக்க முயலும் போது மனதில் பல முரண் கருத்துக்கள் ஏற்படுகின்றன. அவர் மனதில் மாத்திரம் அல்ல, அவரோடு சம்பந்தப்பட்ட மற்றவர்கள் கூட முரண்படுகிறார்கள். இந்த அக, புற முரண்பாடுகள் தான் இளையவர்களின் மன எழுச்சிக்கு [Emotion] வித்தாகின்றன என்பர். அவர்கள் மிக நெடுங்காலம் சாதாரண பிள்ளைகளாக வாழ்ந்துவிட்டு சடுதியாக ஓரிரு வருடங்களில் உடல் மாற்றம், அவர்கள் உள - சமூக சிந்தனை, கொள்கை மாற்றம் ஏற்படும்போது பலர் திகைப்புக்கு ஆளாகிறார்கள். சரியான விளக்கங்கள் இடைக்காதபோது, அவர்கள் பரிதவிப்பு கூடுதலாகி விடுகிறது எனலாம்.

இந்த வகை பருவ மாற்றங்கள் பற்றிய விடயங்கள் பற்றி தெளிவான செய்திகள், விளக்கங்கள் ஒருவர் தாய்மொழியில் தாராளமாக இருக்கும் போது அச்சமூக மக்கள் நன்மை பெறுகிறார்கள், இத்துடன் வாய்வழியாக கூட சரியான விளக்கங்களையும் பெரியவர்கள் இளையவர்களிற்கு வழங்கும் போதும் தன்மை ஏற்படுகிறது. இத்துடன் புகலிட நாட்டில் இப் பருவம் வேறுபல விசாலங்களுடன் இளையவர்களிற்கு அறிமுகப்படுத்தப்படுகிறது என்பதை சிலர் தெளிவாக அறிவோம். பலர் மற்றவர்களிடம் கேட்டோ, பார்த்தோ, கற்பனை பண்ணியோ அறிவோம். இங்கு எமது பெரியவர்களின் பொறுமையாக விளக்கம் கொடுக்கும் பண்பு மிகவும் தேவைப்படுகிறது.

பல இளையவர்கள் பெரியவர்களின் பிழையான கட்டுப்பாடுகளினாலும், எச்சரிக்கைகளினாலும் உள நிலை பறிக்கப்பட்டு, பிறழ்வு நிலைக்கு போய்விடுகிறார்கள். இந்நிலைக்கு தள்ளப்பட்ட பின்பு அவர்கள் தம்மை அறியாமலேயே புகலிட நாட்டு பழக்க வழக்கங்களினால் ஈர்க்கப்பட்டு விடப்படுகிறார்கள். இந்த நிலையினை தவிர்த்து அல்லது குறைத்துக் கொள்வதற்கு முக்கியவிடயம் இளையவர் பராயம் என்பது மிகவும் சடுதியாக, எதுவித அனுபவமும் இல்லாது பிள்ளைகளுக்கு திடீரென்று கிடைக்கின்றது. இதனால் அவர்கள் அப்பருவகால மாற்றத்தின் (Victim) பலியாடுகள் ஆக இருக்கிறார்கள். இக் காலகட்டத்தில் கட்டுப்பாடு, எச்சரிக்கை அல்ல முக்கியம். தெளிவான செய்திகளும், விளக்கங்களும், அன்பான வழிநடத்தலுமே அவசியம். இதனால் பெரியவர்கள் இளையவர்களை இணைத்து கதைத்துப் பழகவேண்டும்.

இதுவரை இளைஞர்களின் பருவமாற்ற பிரச்சனை பற்றி பார்த்தோம். இதனை விட இளையவர் பருவம் மிகவும் "கொந்தளிப்பு" நிறைந்த காலமாகவும் அமைகின்றது எனலாம். இளையவர்களின் உணர்வு நிலையில் "கொந்தளிப்பு" பெற்றோர் இளையவர் உறவில் "கொந்தளிப்பு", சகோதரர்கள், நண்பர்கள், உறவில் "கொந்தளிப்பு" பாடசாலை கல்வி, விளையாட்டு என்பவற்றிலும் "கொந்தளிப்பு நிலை" தன் சுயரூபத்தைக் காட்டாது விடுவதில்லை. இதனால் இளையவர்களின் உள நிலை ஒரு நேரம் உற்சாகம், சக்தி, மகிழ்ச்சி நிறைந்ததாகவும், மறு நேரம் எதிலும் விருப்பம் இல்லாதும், உற்சாகம் குறைந்தும், தனித்து இருக்க விருப்பம் உடையதாகவும், சோர்வுடையதாகவும் காணப்படுகிறது.

இளையவர்களின் உள உணர்ச்சிகள் கொப்பளிக்கும் காலமாக இருப்பதனால் எவர் அவர்களை பற்றி குறைகூறினாலோ, பிழைசொன்னாலோ, கூடாது / தவறு என சொன்

பல இளையவர்கள் பெரியவர்களின் பிழையான கட்டுப்பாடுகளினாலும், எச்சரிக்கைகளினாலும் உள நிலை பறிக்கப்பட்டு, பிறழ்வு நிலைக்கு போய்விடுகிறார்கள். இந்நிலைக்கு தள்ளப்பட்ட பின்பு அவர்கள் தம்மை அறியாமலேயே புகலிட நாட்டு பழக்க வழக்கங்களினால் ஈர்க்கப்பட்டு விடப்படுகிறார்கள்.

உளவியலாளர்:
வி.எஸ்.கே. நாதன்
(டென்மார்க்)

ளாலோ அதனை எதிர்த்து செயல்படும் தன்மையுடைய தாக காணப்படுகிறது. இவ் விடயங்களில் பெற்றோர்கள் தாம் ஓர் காலத்தில் இப்படி இருந்தோம் என்பதை தெளிவாக சிந்திக்க மறந்துவிடுகிறார்கள், அல்லது தவறிவிடுகிறார்கள், அல்லது அனுபவத்தில் தாம் பட்ட கஸ்டம் அல்லது தமது சகோதரர்கள், அயலவர்கள் பட்டதாகக் கேள்விப்பட்ட விடயங்கள் பிள்ளைகளிற்கு நடக்கக்கூடாது என "பாதுகாக்கும்" மன நிலையில் இருக்கிறார்கள்,

இவைகளை விட புகலிட நாட்டு சூழல் இன்னும் பெற்றோர்கள் மிக பதட்டம் அடையும் அளவிற்கு இருப்பதைப் பார்க்கின்றோம். பிள்ளைகளின் பாதுகாவலனாகவும், பிள்ளைகளின் உரிமைகளுக்காக மட்டும் வாதிடும் சமூக சட்டங்களும், தனி நபர்களின் தெரிவுகளிற்கு / விருப்பங்களிற்கு துணை போகும் சமூக உதவிகளும் போல இன்னோரன்ன விடயங்களின் தமிழ் விழுமியங்கள் உடைவு சிதறல்களுக்கு நேரடியாகவும் காரணமாகின. இவைகள், இளையவர்களின் எல்லைகள், கற்பனைகள், சம நிலைகள், தெளிவு நிலைகள் என்பவற்றைப் பதம் பார்க்கும் விடயங்களாகவும் இருக்கின்றன.

புகலிடச் சூழலில் வருகிற பிரச்சனைகளை உன்னிப்பாக அவதானிக்க ஒருவர் பெற்றோர் - இளையவர் இரு பகுதியினரது அறிவுக்கு தகவல்களின் பற்றாக்குறையை முக்கிய குறைபாடாக கூறுகின்றனர். அதாவது பெற்றோரும், இளையவர்களும் தத்தமது கலாச்சார விளக்கங்களிலும் போதிய அறிவு தகவல்கள் அற்ற நிலையில் இருக்கின்றனர். இதனால் இரு பகுதியினரும் தெளிவான சுய விளக்கங்களிலும் போதிய அறிவுத் தகவல்கள் அற்ற நிலையிலும் இருக்கின்றனர். இதனால் இரு பகுதியினரும் தெளிவான சுய விளக்கங்களுடன் தம்மையோ மற்றவர்களையோ வழி காட்ட முடியாதவர்களாக அமைகின்றனர். ஒருவரை ஒருவர் குழப்பும் நிலையிலும் வாதிட்டு தமது விளக்கத்தையே சரி என நிலைநாட்டும் மன போக்குகளும் அதிகரிப்பதைப் பார்க்கலாம். இந்த விவாதிப்பு சூழலும், போதிய விளக்கமில்லாததால் ஏற்படும் குழப்பங்களும் இளையவர்களின் உள நிலையில் அமைதியின்மை, முரண்பாடு, கலக்கம் போன்றவை தோன்ற காரணமாகின்றன. இந்நிலை தொடர்ந்து நிலைக்கும் போது இளையவர்கள் உள நிலையில் மிகவும் பாதிப்பும், குறைபாடும் அடையக் காணப்படுகின்றனர். இந்த உளப் பாதிப்பால் ஏற்படும் சோர்வு, களைப்பு அமைதியின்மைக்கு கைமருந்துகளை, உதாரணமாக போதை பொருட்கள், இன்ப களியாட்டங்களில் அதிக நாட்டம், வீட்டை விட்டு வெளியிடங்களில் கூட நேரத்தை செலவிடல், கூடா நட்பு போன்ற விடயங்களை மாற்றீடாக கொள்கின்றனர்.

இளையவர்கள் ஆரம்பத்தில் பரீட்சார்த்தமாக பல விடயங்களை ஆரம்பித்து காலப்போக்கில் பழக்கமாக்கி விடுகிறார்கள். அதுவும் புகலிடத்தில் பரீட்சார்த்தமாக விடயங்களை செய்து பார்க்கும் வாய்ப்புகள் மிக இரகசியமான முறையில் மலிவாகக் கிடைக்கின்றன. இதனால் பெற்றோர்களாகிய வர்கள் இளையவர்களுடன் புதிய முறையில் பழகவேண்டிய தேவையும், நிர்ப்பந்தமும் இருக்கின்றது. மற்ற இளையவர்களின் நடத்தைகளை உற்று அவதானித்து, அதனால் பதட்டமடையாது அன்புடன் கதைக்க வேண்டியுள்ளது. சில வேளைகளில் இளையவர்கள் தமக்குப் புரியாமலேயே விசேட நடத்தை உள்ளவர்களாக இருக்கின்றார்கள். உதாரணமாக அடிக்கடி கைகால் கழுவுதல், எண்ணி, எண்ணிக் கழுவுதல், உடுப்புகள் பாவனைப் பொருட்களை அடிக்கடி கழுவுதல் போன்றன. இப்படியான சந்தர்ப்பங்களில் உளவியலாளர்களை நாடுவது சிறந்தது. இளையவர்களை தண்டிப்பதோ, பேசுவதோ, பயப்படுத்துவதோ, நேர்த்திக்கடன் வைப்பதோ உகந்தது அல்ல.

> **புகலிட நாட்டு கலாச்சாரத்தின் விழுமியங்களை பற்றிய தெளிவான விளக்கத்தை பெற்றோர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். மனம்போன போக்கில் கொச்சைப்படுத்தி விடுதல் இளையவர்கள் மனதில் குழப்பங்களை ஏற்படுத்தும்.**

புகலிட நாட்டு கலாச்சாரத்தின் விழுமியங்களை பற்றிய தெளிவான விளக்கத்தை பெற்றோர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். மனம்போன போக்கில் கொச்சைப்படுத்தி விடுதல் இளையவர்கள் மனதில் குழப்பங்களை ஏற்படுத்தும். இளையவர்கள் கல்விக்கூடங்களிலும், சக மாணவ நண்பர்களிடமும் தெளிவான சரியான விளக்கங்களைப் பெறலாம். அதனால் தமது கலாச்சார விளக்கங்கள் பற்றியும் தெளிவான, சரியான விளக்கங்கள் பெற ஆவலுடையவர்களாகவும் இருப்பர். இச் சந்தர்ப்பத்தில் பெற்றோர் தமது கலாச்சாரம் பற்றி பூரண விளக்கம் கொடுக்காவிட்டாலும் பிள்ளைகள் குழம்புகின்றனர்.

இங்கு பெற்றோர்களையும் குறை காணமுடியாத நிலையில் நாம் இருக்கின்றோம். தமிழ் கலாச்சார விழுமியங்கள்/ பண்புகள் பற்றிய தெளிவான விளக்கம் உள்ள நிலையில் நாம் பழகுவதில்லை. உதாரணமாக தமிழ் பலகார வரிசையிலேயே றோல்ஸ், கட்லட், சமோசா போன்றவற்றை மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்துகின்றோம்.

இதனால் இங்கு காணும் பெற்றோர் _ இளையவர்களது தெளிவு விளக்கங்களை விட அவர்களுக்கு தெளிவு விளக்கங்கள் ஏற்படக் கூடிய அளவிற்கு செய்திகள் விடயங்கள் தாராளமாகப் படித்த / பழுத்த அனுபவம் உடையவர்களினால் பரப்ப பட வேண்டும் மேலும் இவ்விடயம் படித்த/ பழுத்த அனுபவம் உடையவர்களினது விடயங்கள் என இராது இளையவர்களும் தமது ஆர்வங்களை கட்டுரைகளாக எழுதி பத்திரிகை சஞ்சிகைகளுக்கு அனுப்பி விளக்கம் ஏற்பட உதவலாம். இத்துடன் தமிழ்ச் சங்கம், நட்புறவுச் சங்கங்கள் போன்றன பொங்கி சாப்பிடும் விழாக்களை மாத்திரம் நடத்தாது, அறிவுவளர்ச்சி, கருத்தரங்கு, பட்டிமன்றம், கலந்துரையாடல் போன்றவற்றை பல மட்டங்களிலும் நடத்தி இளையவர்களை வழிநடத்த முயலலாம். இவர்கள் கெடுகிறார்கள், பழுதாகும் இவர்கள் திருந்தமாட்டார்கள் என கரித்துக் கொட்டாது, "அவர்கள் தமது தேவைக்கேற்ப விளக்கம், செய்தி, உதவி இல்லாது தவிக்கிறார்கள்" என புரிந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் நாமும் ஏதாவது செய்கின்ற மனநிலை ஏற்பட்டு, புதிய பரிமாணமாகிய புலம் பெயர்ந்த வாழ்வை செழிக்கப்பண்ண முடியும்.


தமிழுக்காகவும் தமிழீழத்திற்காகவும்
உழைத்து உயிர் நீத்த மாவீரர்
லெப். கேணல் நாதன்
கப்டன் கஜன்
இருவருக்கும் எமது அஞ்சலி

நூறாவது முரசறைந்து
தமிழீழ உணர்வொலி எழுப்பும்
ஈழமுரசின் வளர்ச்சிக்கு
வாழ்த்துக்கள்!

**புதியசங்கம்**

ஆசிய உணவு வகைகளுக்கு
நாட வேண்டிய ஸ்தாபனம்

NEW CO. OPERATIVE
Gathe 1A
42107 Wuppertal-Elberfel
Tel: 0202/455106

ஈழமுரசின் பணி தொடர எமது வாழ்த்துக்கள்

**ARO PRASI TRADE**

உங்கள் மனம் நிறைந்த ஆதரவில்
பெருகி வரும் எமது சேவை

அரோ பிரசி ரேட்



கூறைச்சேலை, காஞ்சிபுரம், பனாரிஸ்,
மைசூர் சில்க் மற்றும் மங்கையர்
விரும்பும் பல ரக சேலைகளுக்கும்
எம்மை நாடுங்கள்.
மங்கள வைபவங்களுக்கு வேண்டிய
சிற்றுண்டி வகைகளுக்கும்
மண்டபத்திற்கு வேண்டிய
கதிரைகளை வாடகைக்குப் பெற
என்றும் எம்மை நாடுங்கள்.
இல்லத் தேவைகளை நிறைவு செய்ய
இலங்கை இந்தியா ஆகிய நாடுகளில்
இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தரமான மளிகைப்
பொருட்களும், உணவுப் பொருட்களும்
நிதான விலையில் பெறலாம்.
மனதுக்கினிய பழைய, புதிய, திரைப்படப் பாடல்கள்
(சி.டி, ஒடியோ), திரைப்படங்கள் எம்மிடம் வாடகைக்கும்,
விற்பனைக்கும் உண்டு.
இலங்கை, இந்திய வார-மாத சஞ்சிகைகள், பத்திரிகைகள்
எம்மிடம் கிடைக்கும்

Glashuttenplatz 11- * - 45549 Sprockhovel
Tel: 02339/6478 - Fax: 02339/6272

# தமிழ்த்தேசியம்

## - ஒரு மீள்பார்வை

தமிழ்த் தேசியம் குறித்து, அண்மைக் காலத்தில் தமிழகத்தில் மீண்டும் ஓர் அலை எழுந்துள்ளது. மைய அரசில் இறுதியாக நடந்த பேராயக் கட்சியின் ஆட்சியும், தமிழகத்தின் அம்மையாரின் ஆட்சியும் இணைந்து நடத்திய கெடுபிடிகள், தமிழ்த்தேசியம் என்ற எதிர்வினை எழுச்சிக்கு உடனடிக் காரணமாக அமைந்தது என்று கூறலாம். இத்தகைய கெடுபிடிகளில் இருந்து தமிழகம் தன்னை விடுவித்துக்கொள்ளும் சாத்தியம் இல்லையென்று பலரும் கருதிய சூழலில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. அண்மையில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தால் சில பத்தாண்டுகளாக தமிழகத்தில் தொடர்ந்து நிலவும் தமிழ் தேசிய உணர்வெழுச்சிக்கும் குறைவு எதுவும் நேர்ந்துவிடவில்லை. கூட்டணி அரசு என்பது கூட்டாட்சி ஆக மலர்ச்சி பெறும் என்பதற்கும் தடயங்கள் இல்லை. மாநிலத்திற்கு சில அதிகாரங்கள் கூடி வரலாம் என்பதைத் தவிர இந்தக் கூடுதல் அதிகாரம் கூட்டாட்சி என்று ஆகிவிடாது.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் கூட்டாட்சி என்ற கோட்பாடு இடம்பெறவில்லை. அரசியல் அமைப்புச் சட்டமன்றத்தில் தொடக்கத்தில் கூட்டாட்சி பற்றி சில நம்பிக்கைகள் எழுந்த பொழுதிலும் இறுதி வடிவில் கூட்டாட்சி என்பது ஒதுக்கப்பட்டது. கூட்டாட்சி என்ற அமைப்பில் மாநிலங்கள் என்பவை தனிக்கொடியோடும், தனி அரசியல் அமைப்புச்சட்டத்தோடும், ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும், மொழி என்ற அடிப்படையில் அமைந்த தேசிய இனங்கள், கூட்டாட்சியின் உறுப்புக்களாக இடம் பெற்றிருக்கும். இறையாண்மை உடைய தேசிய இனங்கள் தம் இறையாண்மையில் ஒரு பகுதியை விட்டுக் கொடுப்பதன் மூலமே மைய அரசு உருவாகும். அனைத்துச் தேசிய இனங்களின் மொழிகளும், மைய அரசின் அலுவல் மொழிகளாக அமைந்திருக்கும். இந்திய மொழியோ அல்லது ஆங்கிலத்தோடு கூடிய இந்திய மொழியோ என்ற கேள்விக்கே இடம் இருந்திருக்காது. ஆளுநர் என்பவர் மைய அரசின் முகவராக இருக்கமுடியாது. வேறு மாநிலத்தைச் சார்ந்தவர்கள் இந்திய அரசுப்பணியாளர்களாக தமிழகத்திற்கு வரவேண்டியதில்லை. தமிழகத்தின் எல்லைக்குள் செயல்படுகிற மைய அரசின் அலுவலகங்கள் தமிழில் தான் நடைபெறும். மாநிலங்களும் மைய அரசும், முற்றான சமத்துவம் உடைய அரசுகளாகத்தான் அமைந்திருக்கும். எந்த மாநிலமும் தேவைப்படும் பொழுது மைய அரசிலிருந்து ஒரு பொது வாக்கெடுப்பின் மூலம் பிரிந்து செல்லவும் முடியும்.

கூட்டாட்சி என்பதன் கோட்பாட்டை இப்படி இன்று விரித்துச் சொல்வதற்கான காரணம் என்ன என்பதை நாம் விளக்க வேண்டியதில்லை. இப்படி ஒரு கூட்டாட்சி அமைப்பு ஏற்பட்டிருக்குமானால் காஷ்மீரிலோ, பஞ்சாப்பிலோ தேசிய இன எழுச்சிகள் வெடித்திருக்கமுடியாது. தமிழகத்திலும், தேசிய உணர்வு ஒரு கனலாக தொடர்ந்து நிலைபெற்றிருக்க முடியாது. கடந்த 50 ஆண்டுகளுக்கு இடையில் அரசியலமைப்புச் சட்டத்தில் தமக்குத் தரப்பட்டிருந்த உரிமைகளை, மாநில அரசுகளிடமிருந்து மைய அரசு பறித்தது என்று தொடங்கி பல காரணங்களை அடுக்கலாம். கடைசியாக சந்தைப் பொருளாதாரம் என்ற முறையில் இந்தியாவின் மைய அரசு

**இந்தியாவில் வேறு எந்த மொழியைக் காட்டிலும் நீண்டகால வரலாறும், மேன்மையும், தனித்தன்மையும் உடையது தமிழ்மொழி என்ற உண்மை அவர்களுக்கு கசப்பாக இருந்தது.**

தன் இறையாண்மையை அன்னிய சக்திகளின் காலடியில் அடகு வைத்த பொழுது, பாராளுமன்றத்தையோ, மாநில அரசுகளையோ அது கலந்து கொள்ளவில்லை. இப்படி ஒரு முற்றான அதிகாரத்தை மைய அரசு செயல்படுத்தியது. மைய அரசில் இடம்பெற்றிருந்த பேராயக்கட்சியின் குறுகிய நலன்களுக்காக மாநில அரசுகள் கலைக்கப்பட்டன. இவற்றோடு இன்னும் மேலுமொரு முக்கியமான காரணம், இந்தியாவில் சில மாநிலங்கள், தொழில் வளர்ச்சியில் தொடர்ந்து முன்னேற்றம் பெற இதற்காக வேறு சில மாநிலங்கள் தாம் சுரண்டப்படுவதை இந்திய தேசியம் என்ற மாயையை நம்பி ஏற்றுக் கொள்ளவேண்டியிருந்தது. இந்தியாவின் கிழக்குப்பகுதியிலுள்ள அஸ்ஸாம் முதலிய மாநிலங்கள், எந்த வகையிலும் இந்திய தேசியத்தின் முத்திரையை ஏற்கக்கூடியவையாகவும் இல்லை.

பிரிட்டிஷ் அரசு இராணுவத்தின் மூலம் இந்தியாவின் பல பகுதிகளை ஓர் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தது. 47 - 48-இல் இந்தியா என்ற ஒரு தேசம், சுதேச சமஸ்தானங்களையும் உள்ளடக்கியதாக உருவாக்கப்பட்டது. பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக விடுதலைப் போராட்டம் நடைபெற்ற பொழுது, இந்திய தேசம் என்ற ஓர் உணர்வு ஏற்பட்டது. இந்தியா முழுவதும் நெடுங்காலமாக நிலவிய பல்வேறு கலாச்சாரங்களுக்கு இடையில், நிலவிய சில ஒத்தகூறுகள், விடுதலைப் போராட்டத்தை ஒட்டி முன்னிலைப்படுத்தப்பட்டன.

47-ற்குப் பின்னர் உருவான மைய அரச மாநிலங்களின் ஒட்டு மொத்தமான வளர்ச்சியை முதன்மைப்படுத்தியிருக்குமானால் இந்திய தேசம் என்ற ஒத்த உணர்வு மேலும் வளர்ச்சி பெற்றிருக்கக்கூடும். கூட்டாட்சி என்பதனோடு சோசலிசம் என்ற செயல்பாடுகளும் கடைப்பிடிக்கப்பட்டிருக்குமானால் இந்திய தேசம் மேலும் வலுப்பட்டிருக்கும். இப்படி எதுவும் நடைபெறவில்லை.

கங்கை, காவிரி இணைப்புச் செயல்படவில்லை. தொழில் வளர்ச்சி பெருகிய அளவிற்கு வேளாண்மைத்துறையில் வளர்ச்சியில்லை. பொதுத்துறை நிறுவனங்கள் தனியார் துறை நிறுவனங்களுக்காகச் செயல்பட்டன. சோசலிசத் திட்டங்கள் தொடர்ந்து கைவிடப்பட்டன. இந்தி மொழியின் வளர்ச்சிக்காக மைய அரசு செயல்பட்டது. அரசு நிர்வாகம் பல மடங்கு தன்னைப் பெருக்கிக் கொண்டது. நகரங்கள் பெருகின. கிராமங்கள் அழிந்தன. மேல் நிலைக்கல்வி வளர்க்கப்பட்ட அளவிற்கு, தொடக்கம் மற்றும் இடைநிலைக்கல்வி புறக்கணிக்கப்பட்டது. முதலாளிகளைப்போலவே மத்திய தர வர்க்கமும் பெருகிறது. ஒவ்வொரு ஆண்டும் வறுமைக் கோட்டிற்குக் கீழே தள்ளப்படுபவர் தொகை பெருகியது. கடத்தல்காரர்கள் கொள்ளையர்களாக மாறினர். மக்கள் ஆட்சி தொடர்ந்து பலவீனப்பட்டிருந்தது. இந்த தேசியத்திற்கு பெரும் அளவிலான மனிதர்கள் அன்னியர்களாயினர்.

இத்தகைய சூழல்தான் தேசிய இன உணர்வெழுச்சிக்கு ஆதாரமாக அமைகிறது. தமிழ் தேசிய இன உணர்வெழுச்சிக்கும் இந்தப் பொதுப்போக்குத்தான் காரணம். மைய அரசின் இந்தி மொழி தமிழைத்தாழ்த்தியது. தமிழ் பெறவேண்டிய இடங்களை இந்தி தொடர்ந்து கைப்பற்றுகிறது. தமிழ், தமிழின் பெருமை, தமிழின் தொன்மை என்றெல்லாம் தமிழ் பற்றாளர்கள் பேசுவதை வடக்கத்தியரோடு, இந்திய தேசியத்தை ஒரு முகமாக ஏற்றுக்கொண்ட அரசியல் கட்சிகளோ மதிக்கவில்லை. இந்தியாவில் வேறு எந்த மொழியைக் காட்டிலும் நீண்டகால வரலாறும், மேன்மையும், தனித்தன்மையும் உடையது தமிழ்மொழி என்ற உண்மை அவர்களுக்கு கசப்பாக இருந்தது. இந்திய மொழிகள் அனைத்திற்கும் மூலமொழி சமஸ்கிருதம்தான் என்ற அவர்களது பொய்மையை தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ள இயலாது. அன்றியும் சமஸ்கிருதத்திற்கு நிகரானது தமிழ்மொழி. ஆரியம் வருவதற்கு முன்னர் இந்தியா முழுவதும் பரவியிருந்தது தமிழ் நாகரீகம், சிந்து நாகரீகம், திராவிடர்களின் நாகரீகம். இந்த உண்மைகள் எல்லாம் இந்தியாவின் அரசியல் அறிஞர்களினால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்குமானால், தமிழ்த் தேசத்திற்கான தன்னுரிமையை அவர்கள் மறுத்திருக்க முடியாது.

தமிழ் நாகரீகத்தின் தொன்மை முதலியவற்றை மறைத்ததோடு தமிழ் மக்களை அடக்கி ஒடுக்குவதன் மூலம் தமிழ் தேசத்தின் குரலை ஒடுக்கவும் அவர்கள் முனைந்தார்கள். இது நாள் வரை "செவ்விய மொழி தமிழ்" என்பதை அவர்கள் ஏற்கவில்லை. தமிழிசையின் தனித்தன்மை, தமிழ் மருத்துவத்தின் தனித்தன்மை முதலியவற்றைக் கூட அவர்கள் ஏற்கவில்லை. ஒரு நூற்றாண்டுகளுக்கு மேலாகவே இந்திய தேசியம் என்ற உணர்வுக்கு ஆட்பட்ட தமிழ் மக்களின் ஒரு பகுதியினரை, தமிழ் உணர்வு உடையவர்களுக்கு எதிராகக் கிளப்பிவிடுவதிலும் அவர்கள் வெற்றி கண்டனர். ஞானபீட முதலிய பரிசுகள் தமிழ் இலக்கியத்திற்குத் தொடர்ந்து மறுக்கப்படுவதை, இதன் தொடர்பில் வைத்து நாம் புரிந்துகொள்ளமுடியும்.

அண்மைக் காலத்தில் மேல் எழுந்திருக்கிற தமிழ் தேசிய உணர்வு எழுச்சியை கடந்த ஒரு நூற்றாண்டு கால வரலாற்றுச் சூழலில் வைத்து சிலவற்றைக்கூறினோம். அண்மைக் கால வரலாற்றோடுதான் நாம் நெருக்கமாக இருக்கிறோம், என்பது மட்டுமல்ல இந்த அண்மைக்கால வரலாற்றின் வழியே, நமக்குள் வந்திருக்கிற தமிழ் தேசிய உணர்வின் வரலாறு மேலும் நீண்டது; நெடுங்காலத்திற்குரியது என்பதையும் நாம் நினைவில் கொள்வது தகும். தமிழுக்கும் ஆரியத்திற்கும் நெடுங்காலமாக நிலவிய எதிர்நிலையை இங்கு குறிப்பிடலாம். பக்தி இலக்கிய எழுச்சியின் போது தமிழின் மேன்மை பாடப்பெற்றது. சங்ககாலம் முதற்கொண்டு உலகியல் வாழ்வுக்கு முதன்மைதரும் போக்கு தமிழ் இலக்கியத்தில் முதன்மையாகப் பதிந்திருப்பதைக் காண்கிறோம். சங்க இலக்கியம் உலகியல் வாழ்வுக்குத்தான் முதன்மையைத் தந்தது. வள்ளுவர் பாடிய அறம் என்பது உலகியலை மேன்மைப்படுத்தும் அறம். கண்ணகி செய்த புரட்சியோ மணிமேகலை மேற்கொண்ட தவமோ, உலகியலின் தன்மை கருதியதுதான் சித்தர் பாடல்களை மையப்படுத்தினால் வரலாறு முழுவதும் தமிழ் மக்களின் அளவுச் சார்பை நன்கு புரிந்து கொள்ளலாம். வள்ளலார் முதலியவர்கள் வழியே பெரியாருக்கும், பாரதியாருக்கும் பாரதிதாசனுக்கும் நாம் வந்து சேரமுடியும். இன்று சாதி வேண்டாம், மதம் வேண்டாம், பார்ப்பனர் ஆதிக்கம் வேண்டாம் என்றெல்லாம் நாம் கூறுகின்றோம். இன்றைய நமது இலக்குகளை நெடுங்காலத்தமிழ் வாழ்வின் சாரமென்று நாம் மதிப்பிட முடியும்.

**சமஸ்கிருதத்திற்கு நிகரானது தமிழ்மொழி. ஆரியம் வருவதற்கு முன்னர் இந்தியா முழுவதும் பரவியிருந்தது தமிழ் நாகரீகம். சிந்து நாகரீகம், திராவிடர்களின் நாகரீகம்.**

வள்ளுவரின் ஒப்புரவு என்பது இன்றைய நோக்கில் சோசலிச அறம். எந்த வடிவத்திலும் ஆதிக்கம் நமக்கு வேண்டியதில்லை. இப்படி ஒரு நாகரிகம் தான் நமக்குத் தேவை. இடைக்காலத்தில் வந்து சேர்ந்த ஏற்றத்தாழ்வுகளை நாம் ஒப்புக்கொள்ள மறுக்கின்றோம். ஆழ்ந்து பார்க்கும் பொழுது தமிழ்த் தேசியம் என்று இன்று நாம் பேசுவதற்கான மெய்யியலின் அடிப்படைக்கூறுகளை தமிழ் வரலாற்றிலிருந்து நாம் பெறுகிறோம். தமிழ்த் தேசம் ஒன்றாக இருக்கவேண்டும் என்ற குரல் புறநானூற்றில் ஒலிக்கிறது. தமிழ் மன்னர்களை இகழ்ந்தவர்களின் மீது செங்குட்டுவன் படையெடுத்துச் சென்றான். இப்படி சிலம்பு சொல்லும் கற்பனைக் கதைக்கு அடியிலுள்ள உண்மையை நாம் காணவேண்டும். தமிழன் பிற தேசங்களை வென்றான் என்ற பெருமிதம் நமக்கு இன்று உடன்பாடில்லை. அனைத்து தேச மக்களோடும் சமத்துவ உணர்வோடு வாழ்வதில்தான் மனித மேன்மை அடங்கியிருக்கிறது. பிறரை நாம் அடிமைப்படுத்தினால் பிறர் நம்மை அடிமைப்படுத்துவதையும் நாம் ஏற்க வேண்டியிருக்கும் சரண்டலோ ஒடுக்குமுறையோ நமக்கு எந்த் வடிவிலும் தேவையில்லை.

வரலாற்றின் அனுபவங்களை நமக்குள் சேகரித்துக் கொண்ட நிலையில்தான் 'தமிழ்த்தேசியம்' என்று இன்று நாம் பேசுகின்றோம். தமிழ் தேசியத்தின் இயற்கையை நாம் அன்னியர்கைகளில் ஒப்படைக்க விரும்பவில்லை. பசுமைப்புரட்சி, சந்தைப் பொருளாதாரம், ஏற்றுமதிக்கான உற்பத்தி என்ற பெயர்களில் தமிழ் நிலத்தின் நிலம், நீர் முதலிய இயற்கை வளங்களை நாம் இழந்துவிடுவதை ஏற்கமாட்டோம். வணிகர் மற்றும் முதலாளிகளின் தேவைக்காக, கோடிக்கணக்கான உழைக்கும் மக்களின் வாழ்வுக்கு ஆதாரமான இயற்கையை நாம் அழித்துவிடமுடியாது. இதைப் போலவே தான் தமிழ்க் கல்வி என்பது நம் வாழ்வுக்கு இன்னொரு ஆதாரம். தமிழ்தான் நமக்குப் பயிற்றுமொழி, ஆட்சிமொழி, மைய அரசோடு உறவு கொள்வதற்குரிய அலுவல் மொழி தமிழ் நம் அறிவை வளர்க்கும். உயிரை வளர்க்கும் தமிழ் வரலாறு நமக்குள்பதிவது தமிழ்க் கல்வியின் மூலம்தான். தொன்மையான நாகரிகம் என்ற முறையில் மேன்மையான மனித வாழ்வுக்குரிய பண்பாட்டுச் செழுமையை தனக்குள் தாங்கியிருப்பது தமிழ்மொழி. நுகர்வியத்திற்கு இடம் கொடுத்து உலகளவில் சிதைந்து கொண்டிருக்கின்ற மனித நாகரிகத்தை ஒரு மீள் பார்வைக்கு உட்படுத்தக்கூடியதாகவும் மனித நாகரிகத்தை மீண்டும் மேம்படுத்துவதற்குரிய ஊற்றாகவும் திகழவல்லது. தமிழ்மொழி.

தமிழ் தேசியத்தின் ஆட்சி என்பது தமிழ் நாகரிகத்தின் ஆட்சி; மனித நாகரிகத்தின் ஆட்சி. இவ்வளவையும் உள்ளடக்கித்தான் தமிழ் தேசியம் என்ற குரலை இன்று நாம் மீண்டும் ஒலிக்கிறோம்.

- ஞானி

# ஈழமுரசின் பணி தொடர எமது வாழ்த்துக்கள்

நண்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு
விஷேட மலிவு விற்பனை

# மோகன்ஸ் வீடியோ

**இசைதென்றல்**
**TOP 40**
} பாடல் கெசட்



காதல் கோட்டை
பூவரசன்
காதல் தேசம்
சிவசக்தி
மேட்டுக்குடி
இந்து
இந்தியன்
சிறைச்சாலை
உள்ளத்தை அள்ளித்தா
பூவே உனக்காக
பாட்ஷா
முத்து
காந்தி பிறந்த மண்
காதலன்
பசும்பொன்
குருசிஷ்யன்
பம்பாய்
இந்திரா
தமிழ் செல்வன்
ஒரு ஊர்ல ஒரு ராஜகுமாரி
கட்டப்பொம்மன்
சுவர் இல்லாத சித்திரங்கள்
அந்த 7 நாட்கள்
அடிமைப் பெண்
நினைத்ததை முடிப்பவன்
மன்னவன் வந்தானடி
தெய்வமகன்

ஆகிய படங்கள் அனைத்தும்
மலிவு விற்பனையில்
இது மட்டும் அல்ல மற்றும்
புதிய படங்கள், CD, Audio
அனைத்தும் மலிவு விலையில்
ஒரு முறை
விஜயம் செய்து பாருங்கள்

**Tel: 06 08 65 03 19**

**203, Rue du Fg. St.Denis,**
**75010 Paris.**
**M°: Gare du Nord**

| | |
|---|---|
| படங்கள்.................... | 35 Frs |
| 5 CD........................ | 150 Frs |
| Audio........................ | 8 Frs |

# புத்த மதவெறியும் சிங்கள இனவெறியும்

வழக்கறிஞர் பூ.அர. குப்புசாமி
கரூர், தமிழ்நாடு

உலகின் கண்முன் முஸ்லிம் மத வெறி, இந்து மத வெறி முதலியவைகள் தான் அடையாளம் காட்டப்படுகின்றன. ஆனால் இன்று மிக மிகக் கொடூரமான முறையில் சிறீலங்காவில் செயல்பட்டு வரும் மிகவும் வெறியூட்டப்பட்ட புத்த மத வெறியைப் பற்றி உலகிற்குச் சரிவர தெரியாமல் இருந்து வருகிறது.

சிறீலங்கா அரசியல்வாதிகள் சிங்கள வாக்குகளைப் பெறும் நோக்குடன், சிங்கள இன வெறியையும், பௌத்த மத வெறியையும் ஊதி, ஊதி வளர்த்தனர். அதன் விளைவு புத்த சங்கம் நாட்டின் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை விட, சுப்பர் அரசாங்கமாக மாறிவிட்டது.

மாற்றினார்கள். மீண்டும் 80 களில் ஒரு முறை, நாட்டிலுள்ள கொலைகாரர்களும், சிறையிலிருந்த கொலைகாரர்களும், ஜே.வி.பி இயக்கத்தைச் சேர்ந்தவர்களை நேரடியாகச் சுட்டோ, குத்தியோ கொல்ல ஒரு குறிப்பிட்ட இராணுவ அமைச்சர் ஏற்பாடு செய்தார். அப்போது சுமார் முப்பதினாயிரம் சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்டார்கள்.

பௌத்த மத வெறியர்கள் கிறிஸ்தவ, இந்து மதங்களை அந்நிய மதங்கள் என்று அறிவித்தனர். போப் ஆண்டவர் கொழும்பிற்கு வரும்போது அவரை எதிர்த்தும் கலகம் செய்தனர். ஆனால், தமிழர்களை

சிங்கள சிப்பாயும் ஒவ்வொரு தமிழனையும் கொல்வது தன் புத்த மதக்கடமை என்ற உச்சியில் இருக்கின்றான்.

சிங்கள இனவெறி, பௌத்த மதவெறி ஏற்றப்பட்ட சிங்கள இராணுவத்தினர் புத்தமத வெற்றிக்கு, பிற மதங்களைச் சுத்தமாகத் துடைத்து எறிந்து சிறீலங்காவை ஒரு புனித புத்த நாடாக மாற்றவே விரும்புகின்றனர்.

தமிழ் வீரர்களை மட்டுமல்ல, தமிழ் மக்களையும் கொன்று ஒழிக்கும் வேலையை ஒரு மதக் கடமையாக நினைத்து தாக்குகிறார்கள். இப்போது அவர்கள்

பட்டார். இப்படிப் பல நிகழ்ச்சிகள் உண்டு. எனவே சந்திரிகா பயப்படுவதிலும் அர்த்தம் உள்ளது.

கிளப்பப்பட்ட புத்தமத வெறியின் இன்னொரு அம்சம், தமிழர்களின் சில இந்துமதக் கோயில்களும், புனித ஸ்தலங்களும் இடித்து நொருக்கி நிரவப்படுவதாகும். அண்மையில் அம்பாறை மாவட்டத்தில் மட்டும் அழிக்கப்பட்ட சைவக்கோயில்கள் முன்னூறுக்கும் மேற்பட்டதாகும். இப்போதெல்லாம் இந்தியத் தமிழர்கள் பிரபலமான கதிர்காமக் கந்தன் கோயிலுக்

முயற்சிக்கப்படுகிறது. எனவே இத்தகைய போலித் தீர்வுகளை கொழும்பு அரசாங்கத்திடமும், இந்திய அரசிடமும் கூலி பெறும் தமிழர் கட்சிகளும், அமைப்புகளுமே ஏற்றுக் கொள்ள மறுக்கின்றன.

பிறகு புத்த பீடாதிபதிகளைக் கேட்க வேண்டுமா? அவர்கள் அதிபர் சந்திரிக்காவின் அரசியல் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆயிரக்கணக்கில் ஆர்ப்பாட்டம் நடத்தி அதைக் கிழித்தெறிகிறார்கள். எனவே சந்திரிகா அவர்களிடம் அரசியல் தீர்விற்கு வழிவிடுமாறு அடிபணிந்து இறைஞ்ச வேண்டியுள்ளது.

புத்த பிக்குகளின் உயர்மட்ட மஹா சங்கம் தன்னுடைய உத்தரவாக சிறீலங்கா அரசு தமிழர்களுக்கு எவ்வித உரிமையும் அளிக்கக்கூடாது என உத்தரவிட்டு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இது 1993 நவம்பர் மாதத்திலாகும். அந்த அறிக்கை படிக்கவே ஒவ்வொரு தமிழன் நெஞ்சும் பதறும். அது ஜலந்தரில் இருந்து வரும் புத்த மத பத்திரிகை 'பீம் பத்திரிக்காவில்' நவம்பர் 1993 ல் வந்திருக்கிறது. சிறீலங்காவை புத்தமத நாடாகவே திரும்பத் திரும்பக் கூறி அப்பத்திரிகையின் நிருபர் பிப்ரவரி 1996 இதழில் எழுதியுள்ளார். மார்ச் 1996 'பீம் பத்திரிகா' இதழில் முதல் பக்க செய்தியாகவே வந்துள்ளதொன்று. நம்மை, அன்பின் அடிப்படையில் இருந்த புத்த மதம் எவ்வளவு தூரம் மாற்ற, அனைத்து

வெறும் சங்கள சிப்பாய்கள் அல்ல. புத்த மத வெறி ஏறிய சிங்கள சிப்பாய்கள். (சிறீலங்கா இராணுவத்திலும், காவல்துறையிலும் தமிழர்கள் ஒழித்துக்கட்டப்பட்டிருக்கின்றனர்).

குச் செல்வதையே மறந்து விட்டார்கள். ஏன் பழனி கோயிலைப் போல் ஈழத் தமிழர்களுக்குரிய செல்வச்சந்நிதி கோயிலே இராணுவத்தாரால் தாக்கப்பட்டது. மாதா கோயில்

பெருவாரியாக உள்ள சிங்கள மக்களுக்கு இன வெறி மேலும், மேலும் ஊட்டப் பெறவே, பௌத்த மஹா சங்கத் தலைமையின் விருப்பத்திற்கு விரோதமாக ஜனநாயக நெறிகளையும், சமத்துவ சகோதரத்துவ கொள்கைகளையும் சிறுபான்மையினர் பாதுகாப்பு போன்றவைகளையும் அங்கு யாராலும் காப்பாற்ற முடியவில்லை. 1972ல் சட்டவிரோதமாக நிறைவேற்றப்பட்ட அரசியல் சாசனத்தில் புத்த மதமே அரசு மதமாக அறிவிக்கப்பட்டு, ஸ்ரீலங்கா ஒரு புத்த மத நாடாக பிரகடனப் படுத்தப்பட்டுவிட்டது. சட்டங்களிலும், அரசு உத்தரவுகளிலும் அரசியல் தலைவர்கள் பேச்சுக்களிலும் புத்த மத இலங்கை (BHUDDIST SRILANKA) என்றே தவறாமல் குறிப்பிடப்பட்டு வந்தது; வருகிறது. மத வெறியின் உச்சியில் இப்போது சிங்கள இனம் அங்கு இருந்து கொண்டிருக்கிறது. எனவே பொதுவாக சிறுபான்மையினரின் உரிமை, தேசிய இன உரிமை என்றெல்லாம் பேசிவந்த பல வித பொது உடமையினர் கூட வாய்மூடி மௌனமாகி விட்டார்கள். கிளப்பப்பட்ட இன, மதவெறி சமதர்மக் கொள்கைகளுக்கும் தொழிலாளர் நன்மைக்கும் எதிராக செயற்படுகிறது. எனவே தான் இன்றைக்குக்கூட தொண்டமான் தலைமையில் உள்ள தோட்டத்தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ய வேண்டி வந்திருக்கிறது.

ஸ்ரீலங்காவின் பொருளாதாரமே சீரழிவது கண்டும், மத வாத மஹா சங்கம் கவலைப்படவில்லை. சமதர்ம இலச்சியத்தோடு தொடங்கப்பட்ட, ரோகண விஜவீராவின் ஜனதா விமுக்தி பெரமுனாவினரை 1971ல் பதினைந்தாயிரம் பேரைக் கொலை செய்து புனிதமான நதி என அவர்கள் கூறும் 'மாவலி' கங்கையில் பிணங்களை வீசி அதை இரத்த ஆறாக

அழிப்பதற்கு முன்னுரிமை கொடுத்தும், மேற்கத்திய கிறிஸ்தவ வல்லரசுகளின் உதவி பெற வேண்டியும் கிறிஸ்தவ மதத்தினரின் மீதான தாக்குதலை ஓரளவு ஒத்தி வைத்துள்ளார்கள்.

இந்திய வம்சாவழி சிறீலங்காத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையிலே பிளவு ஏற்படுத்தத் தொடர்ச்சியான முயற்சியை சிங்கள பௌத்த மத வெறி உச்சிக்குப் போய் விட்ட சிங்களவரைக் கண்டு பயந்து உலகத்திலேயேசிறந்த 'கொரில்லா' வீரர்கள், தியாகசீலர்களான ஈழத்தமிழர்களின் விடுதலைப் படையே நாசமாக்கப்பட்டு விட்டால் தங்கள் கதி அதோ கதிதான் என்பதை உணர்ந்து தற்போது மலையகத் தமிழர்களின் தலைவரான தொண்டமானும், புலிகள் போராட்டத்திற்கு ஆதரவாக குரல் கொடுத்து வருகிறார். தற்போது சிங்கள பௌத்த மத வெறியர்களுக்கு சிங்களப் படையினரை வெறியேற்றிப் போராட வைக்க வேண்டிய கடமை ஏற்பட்டது. எனவே அவர்கள் படை முகாம்களுக்குச் சென்றும், போர்க்களத்திற்கு நேரில் சென்றும், சிங்கள சிப்பாய்களின் மத வெறி உணர்வைக் கொம்பு சீவி விட்டு, தமிழர்களை அழிக்க எந்த யுத்த நியதியையும் கடைப்பிடிக்க வேண்டியதில்லை என்ற அளவிற்கு அவர்கள் தயாரித்து விட்டார்கள்.

உண்மையில் உலகிலேயே பலவீனமானதும், பயிற்சியற்றதும் பயந்த சுபாவமுடைய பதினைந்தாயிரம் பேர்கொண்ட ஒரு சிறு இராணுவமான சிங்கள இராணுவம், இன்று ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட பேர் கொண்டதாகவும், பலநாட்டு இராணுவப் பயிற்சியாளர்களால் பயிற்றுவிக்கப்பட்டவர்களாகவும், குறிப்பாக இந்திய, அமெரிக்க பயிற்சியாளர்களால் தயாரிக்கப்பட்டவர்களாகவும் ஆகிவிட்டார்கள். ஒவ்வொரு



ஏற்கனவே சந்திரிகாவின் தந்தை பண்டாரநாயக்கா வடக்கு, கிழக்கு மாநிலங்களைத் தமிழர்களின் பூர்வீகத் தாயகம் என ஒப்பி, தந்தை செல்வாவுடன் ஏற்பட்ட ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட காரணத்திற்காக ஒரு புத்தமத குருவாலேயே சுட்டுக் கொல்லப்பட்டார். அவருடைய கணவர் குமாரதுங்கேயும் யாழ்ப்பாணம் சென்று தமிழர் தலைவர்களுடன் சமரச பேச்சு நடாத்தி வந்ததிற்காகவே புத்தமத வெறியர்களால் சுட்டுக் கொல்லப்

களும் அதற்கு விதிவிலக்கல்ல.

இந்த மோசமான சூழ்நிலையில் உலகத்தின் கண்களில் மண்தூவ பலவித பயனில்லாத சமரசத் திட்டங்களை சந்திரிகா பரவ விடுகிறார். ஆனால் அவைகள் அனைத்தும் பௌத்த பீடாதிபதிகள் எதிர்ப்புக் காரணமாக கைவிடப்படுகிறது. அல்லது தமிழர்களுக்கு மேலும் விரோதமாக திருத்தப்படுகிறது. உதாரணமாக, சிறீலங்கா எட்டு பிரதேசங்களைக் கொண்ட ஒன்றியம் எனத் திருத்தப்பட

மத வெறியர்களையும் விஞ்சி நிற்கிறது என்பதை இங்கு சுட்டிக் காட்டுகிறது. அந்த செய்தி ஒருவர் விடாமல் தமிழ்ப் போராளிகள் அனைவரையும் சிங்களப் படை அழித்தொழிக்க வேண்டும் என்ற புத்த மதப் பீடத்தின் உத்தரவு பற்றியதாகும்.

இச்செய்திகள் இந்தியத் தமிழர் கண் முன்னே மறைக்கப்பட்டு வருகின்றன என்பது தான் நமக்குப் பெரும் வேதனை. சிங்களத் தரப்பு வெறியாட்டம் அத்தனையும் மறைக்கப்பட்டுத் தமிழர்களின் உயிர், உடமை, உரிமைகளைக் காக்கும் போராளிகளை அவதூறு செய்து பத்திரிகைகள் செய்தி போடுவதைத் தடுக்க முடியாத ஒரு கையறு

நிலையில் நாம் உள்ளோமே என்று நினைத்து வேதனைப் பட வேண்டியுள்ளது.

சிறீலங்கா அரசு உலக நாடுகள் பலவற்றில் அநாதைகளாகச் சென்று வேலை செய்து பிழைக்கும் தமிழர்களுக்கு விரோதமாகவும் அரசியல் இராஜதந்திர ரீதியாகத் தொல்லை கொடுக்கிறது. செஞ்சிலுவைச் சங்கங்கள் போன்றவை செயல்படாமல் தடுத்து நோயாளிகளை மருந்து கூட இல்லாமல் சாகுமாறு செய்கிறது. சமீபத்தில் தமிழர் பகுதிகளுக்கு உணவுப் பொருட்கள் செல்லாமல் அன்புவழி போதித்த புத்தமத தலைவர்களுக்கு ஆனந்தமான காட்சியாக இருக்கின்றன. அரசு சார்பற்ற நிறுவனங்கள் சென்ற நவம்பவரில் கூடி இடர்பட்ட மக்களுக்கு தங்களால் என்ன செய்ய முடியும் என்று ஆராய்வதற்கான கருத்தரங்கு நடத்தியபோது அங்கே புத்தமத சிங்கள வெறியர்கள் உள்ளே நுழைந்து அவர்களை அடித்து நொருக்கியிருக்கின்றனர். 'இங்கே எவனாவது தமிழன் இருக்கின்றானா' என்று கூறிக்கொண்டு துளாவியிருக்கிறார்கள். அதில் பங்கு கொண்ட இரண்டொரு மனிதாபிமான சிங்களவர்களும் மத வெறியர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் இந்து மதத்தின் பேரால் அரசு நடத்தும் அனைத்து இந்துத்துவ சக்திகளும், சிறீலங்காவில் இந்து மதம் அழிக்கப்படுகிறது என்பதை கண்டு கொள்ள மறுக்கின்றன. இது தான் வரலாற்றில் உள்ள ஒரு 'வக்கிரம்' என்பதா?

சிறீலங்காவில் உள்ள தமிழர்களின் இன எழுச்சியும், உரிமைக் கிளர்ச்சியும் பௌத்த வெறியாட்டத்தின் எதிர் விளைவே ஆகும். புத்த மத வெறி கிளப்பப்பட தொடங்கியது கடந்த நூற்றாண்டில் ஆகும். முதலில் அது கிறிஸ்தவ மதத்தை எதிர்த்தே இருந்தது. பின் இஸ்லாமிய வணிகர்கள் மீது திரும்பியது. அவர்களுக்கெதிராக 1915ல் ஒரு கலகத்தையும் நடாத்தியது. 1930களில் மதவெறியூட்டப்பட்ட சிங்கள வெறியாட்டம் கொழும்பு துறைமுகத்தில் வேலை செய்து வந்த மலையாளிகளின் மீது திரும்பியது. 1948ற்குப் பிறகு இந்திய வம்சாவளித் தோட்டத் தொழிலாளர்கள் மீது திரும்பி அவர்களை நாடற்ற நிர்க்கதி நிலமைக்கு தள்ளியது. பின்னர் அது ஈழத்தின் ஆதிக்குடிகளான தமிழர்கள் மீதும் திரும்பியது. சிங்களம் மட்டும் ஆட்சி மொழி என்ற 1956 சட்டம் தொடங்கி வரிசையாக தமிழர்களுக்கு எல்லா வகை இன்னல்களையும் தொடர்ந்து இழைத்து வருகிறது. தமிழர்கள் முன்னர் பெற்றிருந்த அனைத்து உரிமைகளையும் பறித்து, வாழ்வு உரிமையையும் பறித்து, நிலங்களையும் பறித்து வெறும் எதிரிகளாகச் செய்ய இரக்கமற்ற முறையில் தொடர்ந்து காரியம் நடைபெற்றன. அதன் விளைவே அங்கு ஆயுதம் தாங்கிய தமிழ் இளைஞர்களின் உரிமை காப்பு போராட்டமாகும்.

புத்த மத குருமார்களின் மத வெறிக்கொள்கை காரணமாக, மத வெறியூட்டப்பட்ட சிங்கள மக்கள் அங்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் ஆணைகளை விட, மத பீடத்தின் ஆணைகளையே சிரமேற்கொண்டு செயல்படுகிறார்கள்.

எனவே புத்த மத குருபீடம் அங்கு ஒரு அரசியல் சட்டத்திற்கு வெளியே உள்ள அதிகார பீடமாக (Extra- Constitutional Authority) இன்று வரை இருந்து வருகிறது. எனவே சந்திரிகாவும் சிறீலங்கா அரசியலில் சமாதானத்தை ஏற்படுத்த குருமார்கள் ஒத்துழைக்க வேண்டும் என கெஞ்சிக் கேட்டுக் கொள்ள வேண்டியுள்ளது. அவர்களின் வெறியைத் தணிக்க முடியாமல் உலக யுத்த நெறிகளையெல்லாம் காலில் போட்டு மிதித்து விட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, உடை, மருந்து எதுவும் கிடைக்காமலும் செய்யும் ஒரு அரக்கத்தனமான அரசை அவர் அங்கு நடத்த வேண்டியுள்ளது.

பொதுவாக இந்திய (தமிழ் நாட்டு) தமிழர்களுக்கு புத்த மதம் என்றால் அன்பு மதம் என்று மட்டுமே நாளது இற்றை வரை புரியவைக்கப்பட்டுள்ளது. தந்தை பெரியாரும் பார்ப்பனீய வேத (பேத) மதத்தை எதிர்க்க புத்தமதத்தை, புத்தரை பாராட்டி மாநாடுகள் போட்டார், பேசினார். பலருக்கு புத்தன் என்றும், கௌதமன் என்றும் பெயரும் வைத்தார். புத்த மத மாநாடுகளுக்கு வெளிநாடுகளும் சென்று வந்தார். இந்த சூழ்நிலையில் அசோக்குமார் சினிமாவில் வரும் புத்த துறவியும், பெரியாரின் முயற்சிகளுமாகச் சேர்ந்து நாளதுவரை தமிழர்கள் புத்தமதத்தை அன்பு மதமாகவே நினைத்து வருகிறார்கள். ஆனால் இந்தியாவில் இயங்கும் அண்ணல் அத்பேத்கர் அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட புதிய புத்த மதம் (Neo- bhuddhism) நடாத்தும் இதழ்கள் கூட சிறீலங்கா புத்த மத குருபீடத்தின் தமிழர்களுக்கெதிரான மத வெறியாட்டத்தை இங்கு கண்டிக்காமல் அவர்களுக்கு ஆதரவாக இருந்து வருகிறார்கள்.

இங்கு, அதாவது இந்தியாவில் தொடர்ந்து புத்தமதம் அழிக்கப்படுவதும், புத்தமதச் சொத்துக்களைக் கவர்ந்து கொள்வதும் ஏன், உலக பௌத்தர்களின் தலைமைப் பீடமான புத்த கயா கோயிலே பார்ப்பனர் வசம் (ஒரு பாராளுமன்ற சட்டம் மூலம்) ஒப்படைக்கப்பட்டுள்ளதும், புத்தமத கோயில்களைப் பாதுகாக்க ஜப்பான் அரசு ஆண்டுக்கு ரூபாய் 100 கோடி கொடுத்ததை இந்து மேல்சாதிக்காரர்கள் சாப்பிட்டு வந்ததை அறிந்து ஜப்பான் அத்தொகை கொடுப்பதை சமீபத்தில் நிறுத்தி விட்டதையும், புத்த கயாவை மீட்க தீக்குளிக்க இருந்து திரு. முலாயம் சிங் அவர்களால் தடுக்கப்பட்டதும் போன்ற செய்திகள் சிங்களத்தில் வெற்றிகரமாக மறைக்கப்பட்டு வருகின்றன. எந்த இந்திய ஆளும் வர்க்கம் தொடர்ந்து பௌத்த மதத்தை இங்கு அழித்து துடைக்கிறார்களோ அவர்களுக்கு ஆதரவாக சிங்கள பௌத்த வெறியர்கள் செயல்படுவது வரலாற்றின் ஒரு வக்கிரமாகும். சமீபத்தில் கூடிய இந்திய வரலாற்று மாநாட்டில் கூட இந்திய அரசு பௌத்த, இஸ்லாமிய வரலாற்றுச் சின்னங்களை பாதுகாக்காமல் அழிய விடுகிறது என்ற குற்றச்சாட்டும் எழுந்தது. இந்த மாதிரி சங்கதிகளை பற்றி சிறீலங்காவில் இருந்து புத்த புனித இடங்களைத் தரிசிக்க வரும் பயணிகளை சென்னையில் உள்ள மகாபோதி சங்கக் கட்டிடத்தில் அவ்வப்போது நான் சந்தித்து பேசுவதுண்டு. அவர்களுக்கு இந்தியாவில் இன்றைக்கும் நடக்கும் பௌத்த மத எதிர்ப்பைப் பற்றி ஒன்றுமே தெரியவில்லை.

ஆனால் சிறீலங்காவில் பத்திரிகை செய்தி கட்டுப்பாட்டு விதிகளுக்குத் தப்பி அங்கு



இந்து மதக் கோயில் அர்ச்சகர்கள் கொடுமைக்குள்ளாவதும், இந்து மத கோயில்கள் இடிக்கப்படுவதும், கோயில்களின் கருவறை வரை செய்திகள் ஓரளவு தமிழ்நாட்டுத் தமிழ் இதழ்களில் வரத்தான் செய்கின்றன. ஏன், பூணூல் அறுப்பு செய்தி கூட வந்துள்ளது. சமீபத்தில் சிறீலங்கா சென்று வந்த தவத்திரு மருதாசல அடிகளால் ஓம் சக்தி இதழில், அங்கு இந்துக் கோயில்கள் பல இடங்களில் இடிந்து கிடப்பதாகவும் இந்துக்களுக்கு பாதுகாப்பற்ற நிலையில் அவர்கள் பௌத்தர்களாக, கிறிஸ்தவர்களாக, இஸ்லாமியர்களாக மாறி வருவதையும், புத்தமதத் துறவிகள் சுமார் 20,000 பேர் அரசின் மீது ஆளுமை செய்து வருவதையும், சிறீலங்கா அரசு புத்தமதத்தை பரப்புவதற்கு ஆண்டுக்கு ரூபா 300 மில்லியன் டாலர் செலவு செய்வதைப் பற்றியெல்லாம் விரிவாக எழுதியுள்ளார். அவரை பாதி சிறீ லங்காவிற்கு மேல் பார்க்க விடவில்லை என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார். இத்தனை இருந்தும் தமிழகத்தில் உள்ள அல்லது இந்தியாவில் உள்ள இந்து மதத்தைக் காக்க அவதாரம் எடுத்துள்ளதாக ஆகாயத்திற்கும், பூமிக்கும் குதிக்கும், சக்திகள் இதை ஏன் கண்டு கொள்ளவில்லை? என்பதும் ஒரு வரலாற்றில் நடக்கும் விசித்திரம் போலும். ஆனால் ஒன்று புரிகிறது. முன்பு ஜெயவர்த்தனா சொன்ன மாதிரி 'இந்திய ஆளும் கூட்டத்தின் இனமும்' சிங்கள இனமும் ஒரே அடிப்படை இனமே, என அவர் கூறியது உண்மையோ என நினைக்க வேண்டியுள்ளது.

பௌத்த குருமார்களின் கொழும்பு அரசுக்கு இட்ட கடைசிக் கட்டளை விடுதலைப் புலிகளை முற்றாக வேரறுக்க வேண்டும் என்பதே.

அதைத்தான் சந்திரிகா அரசு செயற்படுத்தி வருகிறது என்பது தேற்றம். ஒரு கணக்கெடுப்பில் 77 சதவீதம் சிங்களவர்கள் இதை ஆதரித்தும், தமிழர்களுக்கு எந்த வித அதிகாரமும் அளிக்கக்கூடாது எனவும் கருத்து தெரிவித்து இருக்கிறார்கள். புத்த குருமார்களும் ஈழத்தைத் தவிர வேறு எந்த தாயகமும் இல்லாத ஈழத்தையே தாயகமாகக் கொண்டு சரித்திர முன்காலம் தொட்டு அங்கு வாழ்ந்து வரும் ஈழத் தமிழர்களுக்கு எந்தவொரு அதிகாரமோ, உதவியோ ஏன்? உணவும், மருந்தும் கூட கொடுப்பதை எதிர்த்து வருகிறார்கள். பழைய பௌத்த அமைப்புகளில், அகில சிறீலங்கா பௌத்த காங்கிரஸ் (All Ceylon Buddhist Congress) மற்றும் உலக பௌத்தர் கழகம் (world Fellowship Of Buddhist) ஆகியவை மட்டுமே தீவிரவாத நோக்குள்ளவை. 1986ம் ஆண்டு நேபாளத்தின் தலைநகரான காட்மண்டுவில் நடந்த இக்கழகத்தின் பதினைந்தாவது மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பின்வருமாறு, "சுமார் 70 சதவிகித மக்கள் பௌத்தர்களாக இருக்கும் சிறீலங்கா என்னும் அருமையான நாட்டில் ஒரு பயங்கரவாத இயக்கம் தலை விரித்தாடிக் கொண்டிருக்கிறது. இந்த இயக்கமானது இனவாத இயக்கமாகும். அந்நிய நாடுகளால் தூண்டப்பட்டு வரும் இந்த இயக்கம், பௌத்த தர்மத்தையும் பௌத்த கலாச்சாரத்தையும், பௌத்த வாழ்க்கை நெறி முறைகளையும் அழித்தொழிக்க வேண்டும் என்ற என்ற சர்வதேசிய இலட்சியத்தினைக் கொண்டு பிரிவினைவாத முழக்கத்தின் கீழ் அந்த லட்சியத்தை மறைத்துக் கொண்டு செயல்பட்டு வருகிறது". இத்தீர்மானம் மிகச் சுலபமாக சர்வதேச பௌத்த இயக்கங்களின் ஆதரவைப் பெற்று நிறைவேற்றியதை இங்கு குறிப்பிட வேண்டும். தற்போது தீவிர நோக்கு கொண்டு இயங்கும் அமைப்புகள் அனைத்துமே 1979-க்குப் பிறகு அமைக்கப்பட்டவை. அத்தகைய முயற்சிகளே பெருகி தற்போது பேயாட்டம் ஆடுகின்றன. கோயில் மணியை அடித்து சிங்கள பௌத்த வன்முறைக் கும்பலை அப்பாவித் தமிழர்கள் மீது ஏவும் காட்சி நம் இதயத்தின் இரத்தத்தை உறைய செய்பவையாகும்.

தமிழ் தேசிய இனத்தின் மீது தீராத பகைமை கொண்டிருக்கும் சிங்கள அரசியல் கட்சிகள், அக்கட்சிகளின் ஆயுதப் பிரிவாக செயலாற்றும் தீவிரவாதக் குழுக்களின் ஊற்றுக்கண் சிங்களச் சமுதாயத்தில் எங்கு எப்படித் தங்கியிருக்கிறது என்பதைக் காண மற்றும் சமூகக் காரணிகளையும், சிங்கள மக்கள் மத்தியில் பௌத்தமத நிறுவனம் அதிகாரத்தை எவ்வாறு பெறுகிறது, எப்படி ஆட்சி செய்கிறது என்பதையும் ஆராய்ந்தால் ஆட்சி அதிகாரத்திற்காகப் போட்டியிடும் அரசியல் கட்சிகளுக்கும் மேலான அதிகாரத்தைப் பெற்றிருக்கும் பௌத்த மதத்தையும், பௌத்த பிக்குகளையும் அடையாளம் காணலாம். தாய் நாட்டுப் பாதுகாப்பு என்பது தமிழ் தேசிய இனத்திற்கு எதிராகப் போர் தொடுப்பது தான் என்பதை மீண்டும், மீண்டும் சிங்கள அரசியல்வாதிகள் பௌத்த மத பிக்குகள் நிரூபிக்கிற செயலை அறிய முடிகிறது. புத்தரின் புனித மொழிகளையும் மற்றும் மதச் சடங்குகளையும் இன வெறிப் போக்குகளுக்கு ஆதரவாகப் புதுப்பொருள் தந்து தமிழர்களுக்கு எதிராக மாற்றுவதையும் ஆதாரங்களோடு திரு. பீட்டர் சல்க் அவர்களின் 'சிங்கள பௌத்த இனவெறி தீவிர வாதம்' என்னும் நூல் விரிவாக விளக்குகிறது.

சிலருக்குப் பௌத்த மத வெறியாட்டம் குறித்து சந்தேகம் எழலாம். வரலாற்றை சரியாக தெரிந்து புரிந்து கொண்டால் இந்த சந்தேகமே எழாது. இந்தியாவில் மற்றும் பிற நாடுகளில் பரவியிருக்கும் புத்தமதத்தை சேர்ந்த மன்னர்கள் வரலாற்றில் மிகவும் ரத்தம் சிந்திய கொடூர போர்களை நடத்தியுள்ளார்கள். சயாம் நாட்டின் தலைநகருக்கு சென்றால் போர் உடையில் காட்சி தரும் புத்தரின் சிலைகளை காணலாம். இந்தியாவின் ஒரு மாநிலமான அருணாசலப் பிரதேசத்தின் வடகிழக்கு மாவட்டம் 'தாவாங்' என்பதாகும். அதில் உள்ள நான்கு புத்தமத மடாலயங்களும் தங்கள் மடாலயங்களைச் சுற்றிக் கோட்டை சுவர் எழுப்பி யுத்த சன்னதமாக காட்சி அளிக்கின்றன. அவர்கள் புத்த பகவானின் அன்பு மதத்தை அற்புத முறையில் பரப்பியுள்ளார்கள். எனவே புத்த மதமும் வரலாற்றில் பல்வேறு காலகட்டத்தில் மதவெறிப் போர்களை நடத்திய மதமே, என்பதை குறிப்பாகத் தமிழ் நாட்டுத் தலைவர்களுக்குத் தெரிவிக்கப் பட வேண்டிய முக்கிய செய்தி ஒன்றாகும். அத்தகைய மத வெறியாட்டத்தின் கடைசி காட்சி தான் சிறீலங்காவில் பூகம்பம் போல் எழுந்து நிற்கும் புத்தமத வெறியாகும். அதில் இருந்து தமிழர்களைக் காப்பது தமிழர்களில் உள்ள அனைத்து சமய உணர்வு உள்ளவர்களின் தலையாய கடமை என்பதை கூறத் தேவையில்லை.

# இன்றைய தமிழகம்

## முன்னுரை

இன்றைய உலகத்தை குறிப்பாக அரசியல் உலகத்தைப் புரிந்து கொள்வது மிகக்கடினமாய் இருக்கிறது. ஏகாதிபத்தியம் சோசலிசம் (பல வகைப்பட்டது) என்ற முரண் பாடு ரஷ்ய சோசலிச அரச ஏகாதிபத்தியத்தின் வீழ்ச்சியோடு முடிவுற்றது. உலக முதலாளியத் தின் உயர் தொழில்நுட்பம் கொண்ட பண்ட உற்பத்தியும், தகவல் தொடர்பு சாதனங்க ளும், நுகர்பொருள் வெறியும் சோசலிசத்திற்கான உணர்வை, போராட்டத்தை வீழ்த்தி விட் டன. இன்று நாடுகளுக்கிடையே அரசியல் (அரசு) எல்லைகள் தான் இருக்கின்றனவே தவிர பொருளாதார எல்லைகள் இல்லை. முதலாளியத்திற்குக் கூட அனைத்துலக அரசியல் தலைமை என்பது சாத்தியமா யில்லை. அரசியல் என்ற உணர்வு பூர்வமான அம்சத்தை பொருளாதாரம் எனும் தன் வெள்முச்சி (திட்டமிடப்படாதது, ஒழுங்கு செய்யப்பட்டு எதேச் சையாய் வளர்வது) அமுக்கி விட்டது. இதன் விளைவு, உல கில் எங்குமே பொருளாதார முரண்பாடு அரசியல் முரண் பாடாக பரிணமித்து உருத் திரள முடியாது என்பதாகும். பகுதிப் போராட்டங்கள் (partial struggle) இலக்கை நோக் கிய போராட்டமாக பரிபூரண வளர்ச்சி அடையமுடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மனித வரலாற்றில் 125 ஆண்டு கள் வினையும் எதிர் வினை யும் ஆற்றிய மாபெரும் தத்துவ மான மார்க்சியத்தின் அரசியல் பொருளாதாரக் கோட்பாடு கள் நமது அக விருப்பங்களை யெல்லாம் தாண்டி பொருந் தாமல் போய்விட்டது. மூன்று லகக் கோட்பாடுகள் வர்க்கப் போராட்டங்கள் என்பதெல் லாம் பொருந்தாக் கோட்பாடு கள் ஆகிவிட்டன. நுகர்வதே வாழ்வின் இலட்சியம் எனும் முதலாளிய உயர்ச்சித் தூண்டு தல் தத்துவம் உலக ஆளுமை யைப் பெற்றுவிட்டது எனலாம்.

ஆக, மொத்தத்தில் உலக முத லாளியத்தின் அரசியல் மையம் என்று ஒன்றும் இல்லை. அது போலவே தேசிய இனமாகவோ இன்றும் பல்வேறு வகைக ளிலோ ஒடுக்கப்பட்ட மக்களுக் கான தலைமைத் தத்துவம் என லும் ஒன்றுமில்லை. உணர்வு பூர்வமான அரசியல் உலகமா யிருந்த சகாப்தம் முடிவுற்று தன்னியல்பான பொருளாதார சகாப்தத்திற்குள் நுழைந்துவிட் டது. இனி உலகப்போருக்கோ, வர்க்க அரசியலதிகாரத்திற்கோ சாத்தியமில்லை.

இவற்றின் தாக்கம் இந்தியா விலும் பிரதிபலிக்கிறது. அமெ ரிக்க - ரஷ்ய முரண்பாட்டை பயன்படுத்திக்கொண்டு வளர எத்தனித்த இந்திய தொழில் துறையின் பொருளாதாரம் ரஷ் யாவின் வீழ்ச்சியால் தடுமாறு கிறது. இந்திய அரசு அதிகார வர்க்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்து இந்திய பொருளாதாரம் படிப்படியாக பெருமுதலாளி கள், உலக முதலாளிகளின் காட்டுக் கட்டுப்பாட்டிற்கு மாற முயற்சிக்கிறது. ஆனால் அதற்கு இந்திய அரசியல் சூழல் தடையாய் இருந்து வரு கிறது. நூற்றுக்கணக்கான ஆயி ரக்கணக்கான 'இந்திய' வர லாற்று சமூகக் குழுக்கள் (சாதி, மதம், பழங்குடி இனங்கள், மொழிப்பிரிவினர் ஆகியவை) தேர்தல் முதலாளிய சட்டங்க ளைக் கடந்து 50 ஆண்டுகளில் விழிப்புணர்வு பெற்று தங்க ளின் சுய வளர்ச்சிக்கான அர சியலைத் தேடி வருகின்றனர். இதனால் பல சமூகக் குழுக்க ளையும் தேசிய இனங்களையும் கொண்ட துணைக்கண்டத் திற்கு இந்தியப் பாராளுமன்றம் பொருந்துவதாயில்லை. இனி ஒரு கட்சி ஆட்சியும் சாத்திய மில்லை. பல பிரிவு மக்களைப் பிரதிபலிக்கும் பல ஆட்சி முறை இனி தவிர்க்க முடியா தது. ஒன்று வடக்கே இழுத் தால் ஒன்று தெற்கே இழுக்கும். இப்படி ஒரு அரசியல் நெருக் கடி இருந்தாலும் மக்கள் எழுச்சிகளுக்கு சாத்தியமில் லாத அடித்தள நிலைமையில் ஆளுவோர் பயப்படவேண்டிய தில்லை என்ற நிலைமையே இருந்து வருகிறது.

இப்படிப்பட்ட அரசியல் ஸ்திரமற்ற நிலை இருந்தாலும் பொருளாதார அரங்கம், சர்வ தேசப்பொருளியல் போட்டிக் குள் வேகமாக உள்ளிழுக்கப் பட்டு வருகிறது. கடந்த 5, 10 ஆண்டுகளில் தொழில் நவீன மயமாக்கல், அலுவலக நிர்வாக நவீனமாக்கல், நிதி மூலதனத் தின் ஆளுமை (கீழ் மட்டத்திலி ருந்து மேல் மட்டம் வரை) நாடு முழுவதும் தகவல் தொடர்பு சாதனங்களின் பயங்கர வளர்ச்சி (S.T.D. I.S.D) பல டிவி நிறுவனங்கள், TGV வேக ரயில் கள்) மற்றும் நவீன பாவனைப் பொருட்களின் குவிப்பு ஆகி யவை என்றுமில்லாத வேகத் தில் நடைபெற்று வருகிறது.

### தமிழகம்

மேற்கூறப்பட்ட உலக - இந் திய கண்ணோட்டத்திலேயே தமிழகத்தை விளக்கமுடியும். பார்ப்பன எதிர்ப்பு மையம் கொண்ட திராவிட இயக்கத் தின் தாக்கத்தால் (சினிமா, தனிநபர் துதிபாடல், மயக்க வைக் கும் மாநாடுகள், சொற்பொழி வுகள், வார்த்தை ஜாலங்கள், மயக்கும் வாக்குறுதிகள்) நகர்ப் புறங்களிலும், கிராமப்புறங்களி லும் நடுத்தர வர்க்கம் / சாதிக ளின் அரசியல் ஆளுமை இங்கு அதிகம். பார்ப்பன எதிர்ப்பு மங்கி விட்டாலும், ஜனரஞ்கத் தன்மை கொண்ட அரசியல் அணுகுமுறை திராவிட இயக் கத்தின் பாரம்பரியம். பார்ப்பன எதிர்ப்போடு மொழி தேசிய உணர்வு சேர்ந்து கொண்டது. மொழிவழி தேசியத்திற்குள்

**ஒவ்வொரு பிரச்சினையிலும் தமிழக மக்கள் அடையாள எதிர்ப்பை (Symbolic) காட்டுவதோடு சரி. அடுத்தகட்ட போராட்டம் என்று தொடர்ச்சியாக முடிவை நோக்கி செல்வதில்லை. எவ்வளவுதான் ஊழல், அதிகார திணிப்பு, அடக்குமுறை, பொருளாதார ஒடுக்குமுறை என்று வந்தாலும் மக்கள் 5 ஆண்டுகள் பொறுமையாகக் காத்திருந்து தேர்தலின் போது தங்கள் வாக்குமூலம் மாற்றுவார்களே தவிர வேறு எதிர்ப்புணர்ச்சியை பெரிய அளவில் காட்டுவதில்லை.**

ஆளுமை சாதிகளும் (சைவ பிள்ளை) ஆற்காடு முதலியார் நாட்டுக்கோட்டை செட்டியார், நாயுடுக்கள்) அடக்கம். இத்த கைய பார்ப்பன எதிர்ப்பு - மொழிவழித் தேசியத்திற்கு ஈடு கொடுக்கமுடியாமல் பொதுவு டைமை இயக்கம் தேய்ந்தது. பொதுவுடைமை இயக்கத்தின் பார்ப்பன மற்றும் அதிக்க சாதித் தலைமையும் பொருளாதார வாதமும் பொதுவுடைமை இயக் கம் வளரமுடியாமல் போனதற் கான உட்காரணிகள் ஆகும். திராவிட இயக்கம் தன்னுடைய எல்லாக் கருத்தடிப்படைகளி லும் தீர்த்துப்போயிருப்பினும் வேறு மாற்று இங்கு உருவாக வில்லை. தீர்த்துப்போனதின் வெளிப்பாடு, நிலவும் பண் பாட்டுச் சீரழிவிற்கு அடிப் படையாகும். ஏற்கனவே வளர்க் கப்பட்ட சினிமா கவர்ச்சி அர சியல் தனிநபர் துதிபாடலோடு நவீன முதலாளியத்தின் சீரழிவு களும் கைகோர்த்துக் கொண்டு இருக்கின்றன. சாராயம், லாட் டாரி மோகம், கோவில்களின் பெருக்கம், அனைத்து மட்டத் திலும் நிலவும் ஊழல், சாதியப் பிடிமானம் ஆகியவை மக்களி டையே தன்நம்பிக்கையின்மை, சுயமரியாதையற்ற போக்கு களை வளர்த்திருக்கின்றன. சாதி உணர்வு, பாலினக் கவர்ச்சி ஆகியவை தலைவிரித் தாடுகின்றன.

சமீப ஆண்டுகளின் தீண்டா மைக்கு உட்பட்ட மக்கள் சுய உணர்வு பெற்று தங்களுக்கான இயக்கம், இலக்கியம் படைக் கத் தலைப்படுகின்றனர். எனி னும் இவை எல்லாம் கருத்து மட்டத்தில் மிக ஆரம்ப நிலை யிலேயே இருக்கின்றன. தலித் இயக்கம் என்பது இதுநாள் வரை உருப்பெறமுடியாத படி திராவிட இயக்கத்தின் பொத் தாம் பொதுவான தமிழின முழக்கம் தடுத்து வந்திருக்கின் றது. தேசிய மன உரிமை முழக் கம் ஒடுக்கப்பட்டோரின் முழக் கத்தோடு இதுநாள் வரை இணையவே இல்லை. எனவே சமீப காலங்களில் தமிழின உரிமை முழக்கம் பிரதானமா னதா என்ற கேள்வி கருத்துலக விவாதத்திற்கு வருகின்றது. எனினும் இவ்விவாதம் மேலும் அடுத்த கட்டத்திற்கு நகரும் சாத்தியப்பாடு மிக குறைவா கவே தென்படுகிறது.

பொதுவாகவே இந்தியத் தமிழர்கள் சுதந்திர வேட்கை கொண்டவர்களில்லை. சாதிப் படிமானமும் குறுகிய நோக்கும் கொண்டவர்கள். பெரியாருக் குப் பிறகு பரந்த நோக்கம் கொண்டவர்கள் உருவாகவே இல்லை. மொழிவழியில் இங்கு ஆங்கில மோகம் அதிகம். மேலும் தமிழ் நாட்டில் 25 முதல் 30 சதவீதம் பேர் பிற மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள். இக் காரணங் களால் தமிழ் தேசிய உணர்வு வீறு கொண்டு எழவே இல்லை. சமூக அரசியல் ஊழல் - சமர சக் கண்ணோட்டம் கொண்ட நடுத்தர வர்க்க / சாதி தலை மையால் எல்லா இயக்கங்க ளுமே இங்கு சிதைக்கப்பட்டி ருக்கின்றன.

இத்தகைய நிலைமையில் தாராளமயமாக்கல் என்ற இந் திய அரசின் புதிய பொருளா தாரக் கொள்கையால் பாவ னைப்பொருள் மோகம் நடுத் தர வர்க்கத்திடையே பெரும ளவு தூண்டிக்கப்படுகின்றது. சுயநலம், பண வேட்கை ஆகி யவை தீவிரமடைந்திருக்கின் றன. இந்த நிலைமையில் எத்த கைய இலக்குக்கொண்ட இயக் கமும் இங்கு வளரமுடியாத துன்ப நிலையே இருக்கிறது.

எதிர்கால இயக்கம் வளருவ தற்கான சூழலும் இல்லை. இங் குள்ள இளைஞர்களுக்கு எந்த இயக்கமும் தேவைப்படவில்லை. அல்லது இளைஞர்களைக் குறிப்பிட்ட இலட்சிய இலக் கிற்கு தயார்படுத்த எந்த இயக் கமும் இல்லை.

ஒவ்வொரு பிரச்சினையி லும் தமிழக மக்கள் அடை யாள எதிர்ப்பை (Symbolic) காட்டுவதோடு சரி. அடுத்த கட்ட போராட்டம் என்று தொடர்ச்சியாக முடிவை நோக்கி செல்வதில்லை. எவ்வ ளவுதான் ஊழல், அதிகார திணிப்பு, அடக்குமுறை, பொரு ளாதார ஒடுக்குமுறை என்று வந்தாலும் மக்கள் 5 ஆண்டு கள் பொறுமையாகக் காத்தி ருந்து தேர்தலின் போது தங்கள் வாக்குமூலம் மாற்றுவார்களே தவிர வேறு எதிர்ப்புணர்ச் சியை பெரிய அளவில் காட் டுவதில்லை. தமிழீழம் பற்றிய பிரச்சினையிலும் அவ்வாறே. விதிப்பயன் என்ற உணர்வும், கனவுலக சினிமா மயக்கமும் வரலாற்றில் சோதனையை ஏற்படுத்திய குறுகிய, கூட்டு ணர்வு அற்ற, பொதுநோக்க மற்ற, பண்புகளும் அண்மை யில் பெருகியிருக்கும் பொரு ளாதார சுயநலமும், வரலாற்று நாயகன் எவராவது வந்து தம் பிரச்சனைகளுக்கு தீர்வு கொடுப்பார் என்ற நம்பிக்கை யும் மக்களின் விழிப்புணர்ச்சி பெருகாமலிருக்க பெரும் தடையாய் இங்கு இருக்கின் றன.

அரசியலரங்கில் அதிமுக. இனி இருக்காது. அல்லது மிக சிறிய சக்தியாகவே இருக்கும். ஒடுக்கப்பட்ட சாதி / வர்க்க மக்களின் முன்னேற்றத்திற்கும் தமிழக உரிமைகளுக்காகவும் நல்ல கொள்கைகளை கொண்ட பாட்டாளி மக்கள் கட்சி, எப் படி கட்சி கட்டுவது, அறிவுபூர் வமாக எப்படி அதை வளர்த் துச் செல்வது என்பதில் ஆற்ற லின்றி தனி நபரை மையம் கொண்டு வீணாய் போயிற்று. இனி அக்கட்சி வளர சாத்திய மில்லை. தங்களைத் தாங்களே வீணடித்துக் கொண்டார்கள். எதிர்ப்பு என்பது தி.மு.க. விற்கு இல்லை. குறைந்தபட்சம் 3, 4 ஆண்டுகளுக்கு இல்லை. இந் திய அமைச்சரவையில் தி.மு.க. முக்கிய அங்கம் வகிப்பதால் ஈழப்பிரச்சனைக்காக தி.மு.க. ஓங்கிக் குரல் எழுப்பாது. பல கட்சிகளின் கூட்டணி ஆட்சி, மத்தியில் இருப்பதால் அவசி யப்படும் தீர்மானமான எந்த முடிவையும் அதனால் எடுக்க முடியாது. ஆக ஈழப்பிரச்ச னைக்கு ஆதரவாக இந்தியா செயல்படாது.


மொத்தத்தில், இனி வரும் காலங்களில் தமிழகத்தில் துண்டு துண்டாக போராட்டங்கள் இருக்குமேயன்றி எந்த இலக்கிற் குமான எந்த தொடர்ச்சியான போராட்டங்களும் இருக்காது. சாதியம், தொலைத் தொடர்பு சாதனங்கள் ஏற்படுத்தும் உணர்வு மயக்கம், நுகர்பொருள் கலாசசாரம் ஆகியவற்றிற்குள் இங்குள்ள மனிதன் ஆட்படுத் தப்பட்டுள்ளான். பெரியாரும் மார்க்சும் துன்பகரமாக மர ணப்படுக்கையில் கிடத்தப்பட் டுள்ளார்கள்.

**- கே. எம். கே**




மங்கையர் வாழ்வில் மற்றுமோர் பரிணாமம் மங்களம் நிறை நல் மஞ்சள் நீராட்டு விழா
கரத்தோடு கரம்சேர மனதோடு மனம்சேரும் திருமண விழாக்கள்
இன்றுதான் பூமியில் புதிதாய்ப் பிறந்தோமெனக் குதூகலிக்கும் பிறந்த நாள் விழாக்கள்
மற்றும் அனைத்து மங்கள வைபவங்களிலும்
அதி நவீன தொழில்நுட்பத்துடன் வீடியோ எடுத்து,நிகழ்ந்து நிழலானவற்றை நிஜமாக்கிப் பார்த்து மகிழ நாடுங்கள்

**பரிஸ் வீடியோ விஷன்**
**01 42 58 69 56**



அனைத்து விதமான வீடியோ புரோகிராம்களுடனும் தமிழ் எழுத்துக்களுடனும் மலிவான விலையில்
AMIGA Computerகள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்

ஈழமுரசின் பணி தொடர எமது வாழ்த்துக்கள்

நவீன டிசைன்களில் 22 கரட் தங்க நகைகள், ஆடவர், நங்கையர்கள், குழந்தைகளுக்கான ரெடிமெட் உடுப்புக்கள், பட்டுப் புடவைகள், கூறைச் சேலைகள், பட்டு வேட்டிகள், எவர்சில்வர் பொருட்கள் ஒடியோ, வீடியோ, சிடி, வார - மாத பத்திரிகைகள், சஞ்சிகைகள், மளிகைப் பொருட்கள், மரக்கறி வகைகள், கடலுணவு வகைகள்

அனைத்தும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள

Laxumi

Asian Shop



லக்சுமி

ஆசியன் மாளிகை

*Hutten platx 20-22,*
*35683 Dillenburg, Germany.*
*Tel:02771-6585 / 02778-2148*

ஈழமுரசு பத்திரிகையின் 100வது வெளியீட்டை வாழ்த்தி என்றும் உங்கள் பணி தொடர மீண்டும் எங்கள் ஸ்தாபனத்தின் மனம் நிறைந்த வாழ்த்துக்கள்



ஈழமுரசின் பணி தொடர எமது வாழ்த்துக்கள்

புதிது DATTELN இல் புதிது
(Kreis RECKLINGHAUSEN

இந்தியாவிலிருந்து நேரடியாக
புத்தம் புதிய டிசைன்களில்
இறக்குமதி செய்யப்பட்ட

சாறி | பஞ்சாபி | கூறை | பனாறிஸ்

மற்றும் சிறுவர்களின் ரெடிமேட் ஆடைகள்

மலிவு ... மலிவு

ஏர் லங்கா, சகுந்தலா, பதாமி, இந்தியன் குசித்கா, ரம்பா, கோல்டன் குயின், சரிதா, அமெரிக்கன் டாலர்

விதம் விதமான சேலைத் தெரிவுக்கு

பலவிதமான புத்தம் புதிய டிசைன்களில் பஞ்சாபிகள், கூறைகள் தெரிவு செய்ய வேண்டுமெனில் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

Y&S

ஏசியன் சொப்

15.12.96 இலிருந்து எமது ஸ்தாபனத்தில் புதன்கிழமை, வெள்ளிக்கிழமைகளில் சிகை அலங்காரம் செய்யப்படும் என்பதையும் மகிழ்வுடன் எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகிறோம்

எமது கடையின் முன்வாசல் Provinzial str இல் உள்ளது.

Wittener Str-65, 45711 Datteln
Tel: 02363/734967 - Fax: 02363 / 734968



ஈழமுரசின் பணி தொடர எமது வாழ்த்துக்கள்

ஜேர்மனி கம்பேர்க்கில்.....

பிரியா ரெக்ஸ்ரைல்ஸ்

மலிவு விற்பனை

மாபெரும் மலிவு விற்பனை சகலவிதமான ஆடைகளும்

| | | | |
|---|---|---|---|
| பஞ்சாபி | 40.00Dm | மிளகாய்த்தூள் | 4.60DM |
| 3 Butterfly Sarees | 95.00Dm | பெசிரகம், சிசிரகம், கடுகு | 100g 0.89Pf |
| பெரியோர் ரவுசர் | 30.00DM | மாம்பழ ஜூஸ் | 2.25DM |
| ஆசா சாறி | 85.00DM | குத்துவிளக்கு | 6.00DM |
| பனாறிஸ் சாறி | 130.00DM | குத்துவிளக்கு சிறியது | 4.00DM |
| தொடக்கம் குறைந்த விலையிலும் உண்டு | | ஓமான் மீன் | 1Kg 7.00DM |
| சுவாமி படம் | 75.00DM | குத்தரிசி | 10Kg 24.50DM |
| அரிசி மா | 3.05DM | ஒரு பவுண் (22 கரட்) | 185.00DM |
| Broen Reis | 24.50DM | தரம் மிக்க எவர் சில்வர் பாத்திரங்கள் | |
| G.F.T. பசுமதி 2 Kg | 7.75DM | குத்துவிளக்கு செற் | 39.00DM |
| மைசூர்ப் பருப்பு | 2Kg 4.25DM | | |



ஒவ்வொரு திங்கட்கிழமை காலையிலும் உடன் மரக்கறி வகைகள் பெற்றுக்கொள்ளலாம்

*Wandsbeker Market Str-144,*
*22041 Hamburg.*
*Tel: 040-6520987 - Fax: 040-6520286*

சிறுகதை

# வீக் என்ட்!

கி.செ.துரை



பாலாமணி குளிர்சாதனப் பெட்டியைத் திறந்து நெடுநேரமாகச் சல்லடை போட்டு, ஒருவாறாக அடியில் கிடந்த கோழியை வெளியே எடுத்தாள்.

அது எப்பொழுது சிவபதமடைந்தது? பக்கட் செய்யப்பட்ட திகதி, காலாவதியாகும் நாளெது? போன்ற தகவல்கள் ஏதுமற்ற நிர்வாணமாய்.. தலையிழந்து... எந்தாண்டு வாங்கிப் போட்டாளோ? என்று அவளுக்கே தெரியாத நிலையில் கிடந்தது.

கால்கள் இரண்டும் தறித்து முடமாக்கப்பட்டு, குடல் வகிர்ந்துபோய், சிரச்சேதமாகி, தலைதொலைந்து, உறைந்து கல்லாகிக் கிடந்தது. வெட்டுவதற்குவசதியாக தண்ணீர்ச் சட்டியில் தூக்கிப்போட்டாள்.

கோழி ஊறுவதற்கு முன் அரிசி போட்டு, பருப்புக் கறியையும் இறக்கிவிட நினைத்தாள். அலுமாரியைத் திறந்தபோது முன்னுக்கு நீட்டியபடி உருளைக் கிழங்குமா, காய்ச்சல் றஸ்க், நூடில்ஸ் போன்ற எப்போதாவது பாவிக்கும் சாமான்கள் முழித்தபடி கிடந்தன. எல்லாவற்றையும் கீழே இறக்கி அன்றாடம் பாவிக்கும் அரிசியையும், மைசூர்ப் பருப்பையும் எடுத்து முடிக்க போதும் போதுமென்றாகிவிட்டது.

அலுமாரிக்குள் கிடந்த பொரித்த அப்பளம், முறுக்கு, மிக்சர், பொரித்த எண்ணையென எல்லாமே சேர்ந்து மெல்லிய 'சக்கு' மணம்வீசியது. அலுமாரியில் அங்குமிங்குமாக பெயர் தெரியாத ஐரோப்பியப் பூச்சிகள் ஊர்ந்தும், பறந்தும். கதவைப் பத்திரமாக மூடினாள்.

"மாதத்திலை முதல் கிழமை ஒருதரையும் கூப்பிடாதை. கரைச்சல் சரைச்சலெண்டன் கேட்டாளே!" பழுப்பேறிப்போயிருந்த டாத்ருமை "கறாச் கறாச்!" சென மரத்தும்பால் தேய்த்தபடியே தூதலிங்கம் புறுபுறுத்தார்

"தும்புத்தடி ஒருபக்கம்! உந்த மனியன் ஒரு பக்கம்! ஒண்டும் விளங்கேல்லையப்பா என்னனை சொல்லுறியள் ?"

இருவரும் மாறி மாறிக் கத்தி, கடைசியில் அவரே தும்புத்தடியும் கையுமாய் குசுனிக்குள் போய் பலத்த குரலில், "மாசத்தில முதல் கிழமை..!" என்று நீட்டினார்.

"நானே வாங்கோவெண்டு ஆலாத்தியெடுத்தது ? வாறனெண்டசனத்தை என்ன வரவேண்டாமெண்டுறதே ?" குளிர் சாதனப்பெட்டியை சட்டென இழுத்தாள். முன்பக்கமாக எல்லாவற்றையும் மறைத்த படி கிடந்த இலைக்கோவாவும் ஒரு நுள்ளுப்போல கரைத்து வைத்திருந்த புளிக் கிண்ணியும் உருண்டு கீழே சரிந்தன. தூதலிங்கம், "கப்சிப்!" ஆனது.

"முதலிலை பாத்ருமைக் கழுவிப்போட்டு, பாலை வேண்டியாங்கோ! பிந்தினியளோ பால் முடிஞ்சுபோடும்." சீலைப்பையைத்தூக்கிக் கீழே போட்டாள்.

இங்கிருந்து பில்கா மாக்கற் போய்வர பத்துக் கிலோமீட்டர் தூரமிருந்தது. ஆறு பெட்டிப்பாலுக்கும் கிடைக்கக்கூடிய மொத்த இலாபம் ஒரேயொரு குறோண். பெற்றோல விரயத்தையும், கிடைக்கும் ஆதாயத்தையும் கூட்டிப்பார்த்த போது, வைத்தியக்காரத்தனமாகப் பட்டது. ஆனால் நிறையத்தமிழர்கள் அவரைவிடத் தொலைவிலிருந்தே பாலுக்காக வருவதால் மக்களைப் பகைக்கப் பயந்து வாயை மூடிக் கொண்டான்.

கடைக்குப் போனபோது சனக்கூட்டம் நிறைந்து கிடந்தது. நாலைந்து கறுப்புத்தலைகள் தெரிந்தன. அவர்களும் பாலுக்குத்தான். காதிற்குள் "எவ்வளவு கழிவு ?" என்று குடைந்து குடைந்து சென்றனர்.

"மாதத் தொடக்கத்திலேயே கழிவு கழிவெண்டுதானே எல்லாருமே கழிவுகளாய்க் கிடக்கிறம்.!" என்று கத்த வேண்டும் போலிருந்தது. தானும் ஒரு சீட்டுத் தாய்ச்சி என்பதை உணர்ந்து அடக்கிக் கொண்டான்.

கால்கடுக்கக் காத்துநின்று ஆறு லீட்டர் பால் பெட்டிகளையும் கவுண்டரில் அடுக்கியபோது, அதில் இருந்தவன் அவரையே ஏற இறங்கப் பார்த்தான். "மற்றப் பொருட்களையும் வாங்கவேணுமெண்டுதான் ஒரு பொருளை மலிவாகப் போடுறது. இது கூடத் தெரியாத ஜடமாய் இருக்கிறாயே!" என்று அவன் கேட்காவிட்டாலும்; பார்வை அப்படித்தான் இருந்தது. பால் பெட்டிகளை கோபத்தோடு தள்ளிவிட்டான். தூதலிங்கத்திடம் அதற்கும் ஒரு அசட்டுச் சிரிப்பு.

காரை நிறுத்தத்திலிருந்து நகர்த்திய போது, வெளியில் உருளைக்கிழங்கு மூடைகள் அடுக்கி வைத்திருப்பது தெரிந்தது. பழைய லாடா காரிலிருந்து ஒரு கிழவன் சடாரென்று கீழே இறங்கினான். ஒரு மூடை கிழங்கு மாயமாய் மறைந்தது. நல்லவேளை அந்தக் கிழவன் ஒரு தமிழனல்ல. தூதலிங்கத்திற்கும் அப்படியே ஒரு ஆசை தூண்டியது. அடக்கிக் கொண்டார்.

வீடு வந்து சேர சோறும் பருப்பும் இறங்கிவிட்டது. கோழிக்கறியின் வாசம் மாடியிலிருந்து படியிறங்கி கீழே வந்து கொண்டிருந்தது. தூளைப் போட்டு, சீரகத்திற்கு ஒரு தடவை, இன்னொரு தடவை உள்ளி, பிறகு இஞ்சி, கறிவேப்பிலை என்று ஒவ்வொன்றாக யோசித்து யோசித்து, இங்கும் அங்குமாகத் தேடி எல்லாவற்றையும் போட்டு முடிக்க இறைச்சிக் குழம்பு பாரதக் கதையாக நீண்டு, கோழியும் கரைந்து கிடந்தது.

பால் பெட்டியுடன் உள்ளே வந்தவர், குசினியைப் பார்த்ததும் விறைத்துப் போய் நின்றார். "என்னடியப்பா ஒரு குழம்பு வைக்கிறதுக்கு உலகத்துச் சட்டிபானையள், கிண்ணியள் எல்லாவற்றையும் எடுத்து கடை பரப்பி வைத்திருக்கிறாய் ?" கடைக்காரன் மீதிருந்த கோபத்தை காட்டமாக இறக்கிவிட்டு மண்டபத்தை ஒழுங்குபடுத்தத் தொடங்கினான்.

"எணேய்! எப்பன் இஞ்சை வாணை! போன கிழமை சதுர்த்தியால் கொண்டந்த தேங்காய்க் கையிலுகள் சும்மா கிடக்குது. துருவினியெண்டால் சம்பலரைச்சுப் போடலாம். விருப்பமாச் சாப்பிடுங்கள்." தேங்காய்களைக் கையில் தூக்கிப் பார்த்தார். தேரை மேய்ந்த தேங்காய்கள் போலக் கிடந்தன. திருகு வலையில் கொடுதது சுழற்றத் தொடங்கினான்.

நினைவுகளும் அது போலச் சுழன்றன. "இந்த ஐந்து வரியத்திலை ஒரு நாள் எங்க வீட்டுப் பக்கம் வந்திருப்பானோ ? இண்டைக்கென்ன கலியாணமோ குடும்பத்தோடை வாறனெண்டுறான். புண்ணாக்கன் சும்மா வரமாட்டான்."

"அந்தாளை ஏனணை திட்டுறியள் ? அந்தாளுக்குப் போஸ்ட் மாஸ்டரெல்லே இஞ்சத்தையில் பேர்!"

"போஸ்ட்மாஸ்டர், மாஸ்டர், கிளாக்கு, பிறிஞ்சிப்பல் உதெல்லாம் இஞ்சை தலை நரைச்சாக்களுக்கு வைக்கிற பேரடியப்பா!

அதுதான், நான் அவரை ஊரிலை கூப்பிடுற மாதிரியே புண்ணாக்கன் சாமியெண்டது. எல்லாம் அன்புதான். ஒண்டாப் படிச்சவனெல்லோ!" மாசுக் கருவாடும், சதுர்த்தித் தேங்காயும் சம்பலில் சங்கமமாயின.

ஒரு மணி ஏழு நிமிடத்திற்கு புகைவண்டிவரும். தூதலிங்கம் குளித்துவிட்டு ஸ்டேசனுக்குள் காரைக் கிளப்பினார். அவர் திரும்புவதற்குள் இவள் குளித்து வெளிக்கிட வேண்டும். பாலாமணி பரபரப்பாகினாள்.

கடமைக்காக நாலுதரம் தண்ணீரை மேலும் கீழும் பிசிறியடித்துவிட்டு, நடுங்கியபடியே துவாயைச் சுற்றிக்கொண்டு, அறைக்குள் ஓடினாள். அதற்குப் பிறகுதான் அவளுக்குரிய பெரிய பிரச்சனையே உருவெடுத்தது.

வீட்டை மறைத்துக் கிடக்கும் நான்கு அலுமாரிகளிலும் சிங்கப்பூர், இந்திய, ஐரோப்பிய மலிவுவிலை உடுப்புக்களால் நிறைத்து வைத்துக்கொண்டு, அது கிழிந்து போகும்வரை காத்திருக்கும் பாரம்பரியம். இப்போது எந்த உடுப்பை தெரிவுசெய்வதென்றே தடுமாற வைத்தது.

எந்தப் புடவை எங்கே கிடக்கிறது ? அதற்கான இறவிக்கை எந்த அலுமாரியில் சிக்குண்டு கிடக்கிறதெனத தெரியாமல் ஒவ்வொரு உடுப்புகளாக எடுத்து கட்டிலில் வீசிக் கொண்டிருந்தாள். போர்வை, தலையணை, உடைகள் சகிதம் கட்டில் ஒரு கோபுரமே வளர்ந்து கொண்டிருந்தது.

கடைசியாக, ஒரு இடைக்காலப் பஞ்சாபியை எடுத்து மாட்டிக்கொண்டு, கண்ணாடிக்கு முன்னால் வந்து பார்த்தபோது கமக்கட்டில் தையல் பிரிந்து; ஓர் ஓட்டை தெரிந்தது. ஊசி நூலைத்தேடி ஓடினாள். அது எங்கு கிடக்கிறதோ ? அதற்குள் தூதலிங்கமும் சாமி குடும்பமும் வந்து வாசல் மணியை அமுக்கினார்கள். கதவைத திறந்துவிட்டு துவாய்த்துண்டை வாயில் கௌவியபடியே மீண்டும் ஓடினாள்.

பெண்சாதியையும் கடைசிப்

(தொடர்ச்சி 36ம் பக்கம்)

(35ம் பக்கத் தொடர்ச்சி)

# வீக் என்ட்!

பிள்ளையையும் மட்டுமே கூட்டி வந்திருக்கிறார். கடைக்குட்டி சிறு பையன். பற்களோடு பார்த்தால் முயல்குட்டிபோல துருதுருப்புடன் இருந்தான். மடியில் தொலைபேசி, பொக்கட்டில் கல்குலேற்றர் சகிதம் அவரைப் பார்த்தபோது அவரும் தன்னைப்போலவே கழிவு கணக்குக் கேஸ்தான் என்று எடை போட்டுக்கொள்ள சூதலிங்கத்தாருக்குஅதிக நேரமாகவில்லை.

சம்பிரதாயமாக எல்லோரையும் விசாரித்துக் கொண்டார். அதற்குள் சின்னவன் வீட்டை நாலுதுடவைகள் சுற்றிவந்துவிட்டான். அடங்க வைத்த மண்டபம் பாலாமணியின் குசினிபோல் தலைவிரிகோலமானது.

"பறவாயில்லை குழந்தையள் என்றால் அப்படித்தானே!" என்றார் சூதலிங்கத்தார். ஓங்கி நாலு சாத்துச்சாத்தவேண்டுமென்று மனதில் மூண்ட கோபக் கனலை எப்படியோ சிரிப்பாக மாற்றியிருந்தார். இப்பொழுது பாலாமணி பஞ்சாபியைக் கழற்றிவிட்டு புதுச்சாரி கட்டி, மடமடப்புக் குலையாமல் வந்து சேர்ந்தாள்.

"எல்லாரும் சாப்பிட்டுட்டு, ஆறுதலாய் கதைக்கலாம்! என்றபடி பாலாமணி சாப்பாட்டை ஒவ்வொன்றாக மேசைக்கு எடுத்துவந்தாள். இடையில் சூதலிங்கம் ரெக்ஸ்ரீவியை அடித்து நாட்டில் ஏதும் நடக்கவில்லை என உறுதிசெய்து, மனதில் திருப்தி அடைந்தார்.

"கோழிக்கறியிலை பயப்பிடாமல் போட்டுச் சாப்பிடுங்கோ!" பாலாமணி பரிமாறியபடி அனைவரையும் உசாரப்படுத்தினாள். அவள் மட்டும் இன்று மச்சம் மாமிசம் இல்லை. சனிவிரதம். என்ன சொல்லியும் சிறுவன் உறைப்புக்குப் பயந்து சாப்பிட மறுத்தான். புருசன் பார்த்த பார்வையின் பொருளைப் புரிந்து கொண்டு, மனைவி கணேஸ் சிறுதட்டில் வெறுஞ் சோறும், முட்டையும், பருப்புக் கறியும் போட்டுக் கொண்டே மகனைத் தேடினாள்.

"ஏப்பப்பா ஏப்பே! சீக்கா மேக்கா மாயாஈக்க பங்க மை! ஈகிகி கீ!" பெடியன் மேசைக்குக் கீழிருந்து வெளிக்கிட்டு, கண்ணாமூச்சி காட்டினான். தாயும் விடவில்லை கலைத்துக் கலைத்து ஊட்டினாள். அவன் கையை உதற, மேசையில் இருந்த தண்ணீர்ச் சடி சரிந்தது. "பெடியன் வலு சுட்டி!" சூதலிங்கத்தார் அன்பாகச் சிரித்துக்கொண்டார். அதற்குப் பின்சிறுவன் மேலும் மேலும் வேகமெடுத்து, சூதலிங்கத்தின் உயிர்நாடியான ரீவியைச் சுற்றிச்சுற்றி ஓடத்தொடங்கினான்.

ரீவீ விழமுன் பெடியனைப் பிடித்துவிட முயன்றாள்



குணேஸ். உடனே அவன் குறுக்குப் பக்கமாக ஓடினான். அப்போது முன்னாள் எதிர்ப்பட்ட கண்ணாடி ஐன்னலைக் கவனிக்கவில்லை. "படார்!" என்ற சத்தம், அப்படியே சுருண்டு விழுந்தான். "ஐயோ!" என்று தலையில் அடித்துக் குழறியபடியே பாய்ந்து ஓடினார் சூதலிங்கம்.

தன்னுடைய பிள்ளையின் மீது சூதலிங்கத்திற்கு இவ்வளவு அக்கறையா? என்று ஒருகணம் அதிசயப்பட்டு நெகிழ்ந்தார் சாமி. ஆனால் பிள்ளையைக் கடந்து அப்பாலும் ஓடிய சூதலிங்கம் ஜன்னல் அருகே சென்று கண்ணாடி உடைந்து விட்டதோஎனத் தடவிப்பார்த்ததைக் கண்டதும் அவருக்கு எல்லாமே, "சப்!" பென்றாகியது.

பிள்ளைக்கு மண்டை பிளந்து இரத்தம் ஆறாகப் பாய்ந்துகொண்டிருந்தது. மனைவி குணேஸ் அடைத்த குரலில் கூச்சலிட்டாள். அதற்குள் பக்கத்துவீட்டு டெனிஸ்காரன் சத்தம் பொறுக்க முடியாமல் ஓடிவந்துவிட்டான். பிள்ளையையும் தூக்கியபடி தாய், தகப்பனையும் ஏற்றிக்கொண்டு, சாப்பிட்ட கையும் கழுவாமல் ஆஸ்பத்திரிக்கு விரைந்தார் சூதலிங்கம்.

அது சிறிய வைத்தியசாலை. பிள்ளைக்கு முதல் உதவிச் சிகிச்சை அளித்தார்கள். தலை படமெடுத்தல் உட்பட, மற்றக் காரியங்கள் அடுத்த நகரத்தில் இருக்கும் வைத்தியசாலையில்தான் நடைபெறவேண்டியிருந்தது. தாயையும் தகப்பனையும் ஏற்றிக்கொண்டு, அம்புலன்ஸ் வண்டி புறப்படத் தயாரானது. சிறுவனுக்கு மயக்கம் தெளிந்தபாடில்லை.

காசு, பணம் எல்லாம் சேத்தாச்சு, குடியுரிமையுட்பட மற்ற மற்ற காரியங்களும் நிறைவேற்றியாச்சு. தனித்தனி ஆக்களெல்லாம் ஆளுக்கு ஒரு சங்கத்தைத் தொடங்கி தலைவர்மாருமாகிவிட்டாங்கள். இனி நாமளுமொரு மனிசனெண்டு காட்ட ஒரு சங்கத்தையும் தொடங்கினால் என்ன? சாமிக்குத் தோன்றிய விபரீத ஆசைக்கு பொருந்தி வந்தது ஊர்ச் சங்கம் ஒன்றுதான். அதுதான் ஒறிஜினல் ஊராக்களைத் தேடி சூதலிங்கத்திடம் வந்திருந்தார். வந்த பயணம் முதன்முதலிலே அபசகுனம் பிடிச்சமாதிரி பெடியின்ரை மண்டையைப் பிளந்துவிட்டதால் மெளனமாகவே புறப்பட்டார்.

"நல்ல வேளை சன்னல் கண்ணாடி பிழைத்தது!" என்றபடி காரை ஸ்ராட் செய்தார். அப்போது வயிற்றுக்குள்ளும் இறக்கமாக ஒரு "ஸ்ராட்!" சத்தம். சிறைகிடந்த கோழி கைவரிசையைக் காட்ட ஆரம்பித்தது. புண்ணாக்கன் ஏன் வந்தான்? என்பதையும் கேட்க மறந்து, வீட்டை நோக்கி காரை வேகமாக மிதித்தார் சூதலிங்கம்.


ஈழமுரசின் பணி தொடர எமது வாழ்த்துக்கள்

JAFFNA SHOP &

JAFFNA CASH & CARRY

ஜவ்னா சொப்

இலங்கை, இந்திய, தாய்லாந்து நாட்டு மளிகைப் பொருட்கள், மரக்கறி வகைகள்,
கடலுணவுப் பொருட்கள் மற்றும் ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்கான
(இறக்குமதி செய்யப்பட்ட) உடைகள், மற்றும் 22 கரட் தங்கநகைகள்
அனைத்தையும் மலிவாகவும் தரமாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.
தரத்தில் சிறந்த Leela + Natco தயாரிப்புக்களின் மொத்த வியாபாரிகள்.

மொத்த விநியோகஸ்தர்கள்:

**Jaffna Shop**
Stauffacher Str. 104,
8004 Zurich
Tel: 01 / 241 02 80.

**Jaffna cash & carry**
Industrie str-7, 5432 Neunhof, swiss
Tel: / Fax: 056 4061111
Mobile: 089 4014684

# புகலிடச் சினிமாவும், அபிநயனும்

"சினிமா" அற்புதமான கலை ஊடகம்" பலரும் பல வேளைகளில் சொன்னது தான். அதனையே நாமும் சொல்லியாக வேண்டியுள்ளது. சினிமாவின் உன்னதத் தன்மையும் அதன் பண்பாடும் தெளிவுற மேலுள்ள வரிகள் போதுமானவை.

புலம் பெயர்ந்த வெளிநாடுகளில் வாழ்கின்ற ஈழத்துத் தமிழ்க் கலைஞர்களிடமிருந்து தோற்றம்பெற்ற வீடியோ திரைப் படங்கள் புகலிடத் தமிழ் சினிமா என்ற வடிவத்தைத் தோற்றுவித்தது. இந்தப் புகலிடச் சினிமா பற்றி இனி நாம் ஏதாவது பேசவேண்டுமானால் 'அபிநயன்' என்கின்ற சினிமா விமர்சகனையும் துணைக்கு அழைத்துக்கொண்டே அதனை நாம் செய்தாக வேண்டும். குறிப்பாக கடந்த காலங்களில் புகலிடத்தமிழ் சினிமா சார்ந்து எழுந்த கருத்துக்களில் அபிநயனின் பங்கு கணிசமாக உண்டு.

அபிநயன், புகலிடத் தமிழ் சினிமா இரண்டும் பிரித்துப் பார்க்க முடியாத ஒன்றாகி உள்ளது. கடந்த காலங்களில் புகலிடத்தமிழ் சினிமா சார்ந்து அபிநயன் வைத்த தாக்கமான விமர்சனங்கள் எதிர் விமர்சனங்களையும், எதிர் விளைவுகளையும் தோற்றுவித்தது. இது தவிர வெறும் பிதற்றல்களுக்கும், மிரட்டல்களுக்கும், சுய புலம்பல்களுக்கும்கூட அபிநயன் முகம்கொடுக்க வேண்டியிருந்தது 'புரிந்துகொள்ளாமை'என்ற நிலையில் புகலிடத் தமிழ்ச் சினிமா சார்ந்தவர்களால் அபிநயன் மீது வசை மாரிகளும் பொழியப்பட்டன. ஆனால் அபிநயனின் பேனா மேலும், மேலும் வீரியம் பெற்று, உறுதி பெற்று எழுந்தது. அவனது பேனா புகலிடச்சினிமா என்ற வடிவில் ஈழத்துக் கலைஞர்களிடம் இருந்து "கோடம்பாக்கத்துக் குப்பைகள்" (அபிநயன் பாசையில்) தோற்றம் பெறுவதை எப்போதும் ஏற்றுக்கொள்ளவில்லை. அபிநயன் தான் சார்ந்த சமூகத்தின் மீது ஆழமான நேயம் கொண்டிருந்தான், தனது மக்களின் விடுதலைக்காக உயிர் மூச்சாக நின்று உழைத்த ஒருவனால் அந்த மக்கள் எங்கிருந்தாலும் அவர்களின் நலனில், வளர்ச்சியில் அக்கறை கொண்டேயிருப்பான். இந்த வகையிலே புலம் பெயர்ந்த ஈழத்துக் கலைஞர்களிடமிருந்து பிறப்பெடுக்கின்ற எந்தவொரு கலை இலக்கிய முயற்சியும் தரமுடையதாக இருக்க வேண்டும் என்பதில் அவன் அவாக்கொண்டிருந்தான். வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் இந்த நவீன உலகத்துடன் ஓரளவுக்காவது எம்மைப் பிணைத்துக் கொண்டு எங்கள் முயற்சிகளை முன்னெடுக்க வேண்டுமென அவன் அடிக்கடி கூறிக்கொள்வான்.

இந்த நிலையிலே தான் புகலிடத் தமிழ்சினிமா என்கின்ற கலை ஊடகம் ஈழத்துக் கலைஞர்களிடம் இருந்து எவ்வித நோக்கமுமற்று, தமிழகச் சினிமாக்களின் தரம் கெட்ட மீள் பதிப்புக்களாக வெளிவரத் தொடங்கிய போது அபிநயன் மிகுந்த வேதனை கொண்டான். இது பற்றி அவன் எங்களோடு பல நாட்கள், பல இரவுகள் கதைத்திருக்கிறான். எழுத்துப் புலமைகளை வெளிப்படுத்தவோ, அன்றிக் கலைஞர்களுடைய முயற்சிகளுக்கு தடைகளாக இருக்கவோ அவன் எண்ணியதில்லை. எங்கள் கலைஞர்களிடம் இருந்து தரமான உயர்ந்த கலைப் படைப்புகள் உருவாக வேண்டுமென்பதில் உளப்பூர்வமான பிரக்ஞை கொண்டிருந்தான்.

**எழுத்துப் புலமைகளை வெளிப்படுத்தவோ, அன்றிக் கலைஞர்களுடைய முயற்சிகளுக்கு தடைகளாக இருக்கவோ அவன் எண்ணியதில்லை. எங்கள் கலைஞர்களிடம் இருந்து தரமான உயர்ந்த கலைப் படைப்புகள் உருவாக வேண்டுமென்பதில் உளப்பூர்வமான பிரக்ஞை கொண்டிருந்தான்.**

அபிநயன், எட்டு வருடங்களுக்கு மேலாக நான் அவனை அறிவேன். அவனிடம் இருந்து முதலாவதாய் எனக்குப் பிடித்துக் கொண்டது அவனது 'சுய தேடல்' எப்போதும் அவன் தேடிக் கற்றுக் கொண்டேயிருந்தான்.



அவனது தேடலில் சினிமா சார்ந்து அவனுக்கிருந்த ஆர்வமும் பிரமிக்கத்தக்கது. வெறும் கற்றுக் குட்டியாகி அவன் சினிமா சார்ந்த விமர்சனம் எழுதத் தடைப்பட்டவன் அல்ல. அவனது சினிமா பற்றிய அறிதலின் அல்லது தேடலின் ஆர்வத்திற்கு இவ்விடத்தில் ஒரு விடயத்தைக் குறிப்பிட்டாக வேண்டியுள்ளது. சிறந்த பிற மொழிப் படங்களைத் தேடிப்பார்க்கும் பழக்கத்தை எப்போதும் அவன் கொண்டிருந்தான். அண்மைக் காலமாக இரவு பகல் தூக்கமின்றி ஏராளமான பணிகளை அவன் தலையில் சுமந்து திரிந்தான். அவன் மரணிப்பதற்கு 20 நாட்களுக்கு முன்னர்கூட தனக்கிருந்த ஏராளமான வேலைப் பளுவிற்கு மத்தியிலும் ஒரு மாலைப் பொழுதில் என்னிடம் வந்து "இன்றிரவு நான் ஒரு படம் பார்க்க வேண்டும் நீயும் என்னுடன் வா" என அழைத்தான். என்ன படம் என்று கேட்டேன் 'Indepen dance day' தொழில்நுட்ப ரீதியில் பிரமாண்டமான முறையில் அதனைத் தயாரித்துள்ளார்களாம். எப்படியென்று பார்ப்போம் என்றான். நானும், அபிநயனும் என்னொரு நண்பனுமாக அன்றிரவு அந்தப் படத்தைப் பார்க்க சென்மிசலுக்குச் சென்றோம். ஆனால் நேரம் பிந்திவிட்டதால் அன்று அந்தப் படத்தைப் பார்க்காமலே திரும்பினோம்.

அபிநயன் ஈழமுரசுப் பத்திரிகையை ஆரம்பித்த போதே அதன் மூலம் சினிமா பற்றிய அறிதலையும், விழிப்புணர்வையும் எமது மக்கள் மத்தியிலும் கலைஞர்கள் மத்தியிலும் ஏற்படுத்த வேண்டும் எனத் திட்டமிட்டிருந்தான், ஈழமுரசுப் பத்திரிகையை ஆரம்பிப்பதற்கு முன்னரேயே பத்திரிகையில் சினிமா பற்றி தொடர்ச்சியாக யாரை எழுதவைக்கலாம் என எமக்குள் கருத்துப் பரிமாற்றங்கள் நிகழ்ந்தபோது அபிநயன் உறுதியோடு முன்மொழிந்தவர்தான் ஜமுனா ராஜேந்திரன். ஆனால் அப்போது ஜமுனா ராஜேந்திரனை அபிநயனுக்குத் தெரியாது. ஆனால் அவரது எழுத்துக்களை நன்கு அறிந்து வைத்திருந்தான் அபிநயன். சினிமா சார்ந்து ஒரு ஆழமான பார்வையும் விசாலமான தேடுதலும் கொண்டிருந்தவராகவும் தமிழில் அதனை வெளிப்படுத்த வல்லவராகவும் ஜமுனாவைக் கருதியிருந்த அபிநயன், பத்திரிகை வருவதற்கு முன்னரேயே லண்டன் சென்று அவரிடம் ஈழமுரசுவில் எழுதுவதற்கு சம்மதமும் பெற்றுக் கொண்டான்.

**புலம் பெயர்ந்த ஈழத்துக் கலைஞர்களிடமிருந்து பிறப்பெடுக்கின்ற எந்தவொரு கலை இலக்கிய முயற்சியும் தரமுடைத்தாக இருக்க வேண்டும் என்பதில் அவன் அவாக்கொண்டிருந்தான்.**

இவற்றையெல்லாம் இவ்விடத்தில் ஏன் எழுதுகின்றேன் என்றால் அபிநயனிடம் இருந்த சினிமா சார்ந்த தேடல் பற்றி நீங்கள் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே.

புகலிடத்தமிழ் சினிமா சார்ந்து அபிநயன் விமர்சனக் கருத்துக்களை முன்வைத்த போதெல்லாம் அதற்கு எதிராக வந்த கருத்துக்களில் முக்கியமானதாக தங்களுடைய சிரமங்களையும், தங்களுடைய முயற்சிக்கு தடைகளையும் அபிநயன் ஏற்படுத்திக் கொள்கிறான் என்பதாகவே அமைந்தது. ஆனால் இந்தப் புகலிட மண்ணிலே, கட்டிடக்காட்டு வாழ்வின் நெருக்குதலுக்கிடையே ஒரு சினிமா, அதுவும் வீடியோ திரைப்படம் என்றாலும் அதில் எதிர்நோக்கக்கூடிய சிரமங்களையும் துயரங்களையும் மற்றெல்லோரையும் விட அபிநயன் நன்கு அறிந்து வைத்திருந்தான். ஒருபுறத்தில் தனது விமர்சனக் கருத்துக்களை உறுதியோடு முன் வைத்த போதிலும் அவர்களுடைய கருத்துக்களையும், அவர்களுடைய படங்களுக்கான விளம்பரங்களையும் கூட பத்திரிகை மூலம் வெளிப்படுத்த பின் நின்றதில்லை.

புகலிடச் சினிமாக்கள் புலம்பெயர்ந்த மக்கள் மத்தியில் ஏற்படுத்தக்கூடிய விளைவுகளையும், இந்த வீடியோ திரைப்படங்களின் மீதான தொடர் நம்பிக்கையற்ற தன்மை, புகலிடச் சினிமாக்களை மக்கள் முற்றாக நிராகரிக்கின்ற அபாயத்தைத்தோற்றுவிக்கும் என்பதையும் அபிநயன் பல்வேறு சந்தர்ப்பங்களில் சுட்டிக் காட்டியிருந்தான். இதேவேளை புகலிடத்தமிழ் சினிமா வரிசையில் வெளிவந்த படங்களில் "முகம்" தந்த நம்பிக்கையும் அபிநயன் வெளிப்படுத்தத் தவறியதில்லை. புகலிடத்தமிழ் சினிமா சார்ந்து வெறும் விமர்சனங்களோடு மட்டும் அபிநயன் நிறுத்திக் கொள்ளவில்லை.

புகலிடக் கலைஞர்களை முடிந்தளவுக்கு சந்தித்து ஆக்கபூர்வமான கருத்துப் பரிமாற்றங்களையும் நடத்தியிருக்கின்றான். எதிர்காலத்துப் புகலிடக் கலைஞர்களையெல்லாம் ஒன்றிணைத்து பல்வேறு சினிமா முயற்சிகளிலும், தேடல்களிலும் ஈடுபடுவதற்கும் அபிநயன் கனவு கண்டிருந்தான். நூற்றாண்டுச் சினிமாவை எட்டிவிட்ட மண்ணிலே இருக்கிறோம். இங்கிருந்து ஒரு தரமுடைய புகலிடத் தமிழ் சினிமாவை எமது கலைஞர்கள் உருவாக்க மாட்டார்களா என்ற ஏக்கம் இறுதிவரையிலும் அவனிடம் இருந்தது. அது மட்டுமன்றி தனது உரிமைக்காக போராடிக் கொண்டிருக்கின்ற ஒரு சமூகத்தைச் சார்ந்த கலைஞர்களிடமிருந்து சினிமாக் குப்பைகள் மீள பிறப்பெடுப்பதை அபிநயனால் என்றும் ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை. அபிநயன் எங்களோடு இல்லை. அவனது கனவுகள், ஏக்கங்கள் எங்களோடுதான் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அவனது பேனா தன் பணிக்காக உயிர்ப்போடு உறுதியோடு காத்துக்கிடக்கிறது. மீண்டும்... மீண்டும்... எழுவோம்... எழுதுவோம்...

- அபிநயப்பிரியன்

மேற்கு இலண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது
இங்கில்லை
N°: 199, The BROADWAY,
Southall, Middx.
T.P: 0181 / 813 9126

லண்டன் மாநகரில்
ஸ்ரீ லட்சுமி என்ரபிறைசஸ்
கன்னியர் முதல் சிறுவர் வரை
முதல் தர புடவை மாளிகை
SREE LAKSHMI ENTERPRISES
IMPORTER & EXPORTER, WHOLESALER & RETAILER
Large Collection of Wedding Sarees, Silk Sarees & Barathanatya Costumes
50 THE BROADWAY, SOUTHALL,
MIDDLESEX, UB1 1QB
TEL: 0181-843 9495 / 01831-662 824
- FAX: 0181-606 9709

இலண்டனில் நகைத்
தெரிவுகளுக்கு...
ராஜூ பட்னி அன் சன்
PATTNI HOUSE
58-60 EALING ROAD WEMBLEY,
MIDDX HA0 4TQ
TEL: 0181-903 6677 / 2859,
0181-902 0577
FAX: 0181- 903 4887

# ஈழமுரசின் பணி தொடர எமது வாழ்த்துக்கள்

LUNE INTERNATIONAL

## வாடிக்கையாளர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த

## லூனின் வருடாந்த மலிவு விற்பனை

## டிசம்பர் 20 முதல் ஜனவரி 20 வரை

### CD வகைகள்

18000 தரம்மிக்க
Ramiy CD ஞுடன் பிரமிட்,
பார், மயூரா போன்றவையும்
Fr. 19.- முதல் Fr. 39.- வரை
பெற்றுக்கொள்ளலாம்.

Ramy CDs
Fr. 400.-இற்கு
மேல்
கொள்முதல்
செய்வோருக்கு
இம் மாத புதிய
வெளியீட்டில
3 CD
இலவசம்

### CD Video Deck

5 CD Video போடக்கூடியது
~~Fr. 3990.-~~ Fr. 3590.-
1 CD Video போடக்கூடியது
~~Fr. 2990.-~~ Fr. 2590.-

### CD Videoகள்

(3 CD) Video படங்கள்
Fr. 99.-
(1 CD) Video பாடல்கள்
Fr. 60.-

LUNE International

எம்மிடம் 75 இற்கும்
அதிகமான சிடி, வீடியோ
படங்கள் பெற்றுக்கொள்ளலாம்.
இது வீடியோ உலகில் புதிய பரிமாணம்

### Audio வகைகள்

அவ்வை சண்முகி,
மிஸ்டர் ரோமியோ,
முத்து, லவ்பேட்ஸ்,
வில்லாதி வில்லன்,
ஆசை போன்ற புதிய
படங்கள் உட்பட
1500 ரக ODOs
Fr. 7.- இலிருந்து ...

### வீடியோ பிரதிகள் [படங்கள்-பாடல்கள்-வீடியோ பத்திரிகை]

அண்மையில் வெளிவந்த அவ்வை சண்முகி, மிஸ்டர் ரோமியோ திரைப்படங்கள் உட்பட 200இற்கும் மேற்பட்ட கடந்த ஒரு வருட வெளியீடுகளான தமிழத் திரைப் படப் பிரதிகள், அவ்வை சண்முகி, மிஸ்டர் ரோமியோ பாடல்கள் அடங்கிய Top 40, இசைத் தென்றல் 21, 22, 23 ஆகியன Fr. 34.- முதல் Fr. 44.- வரை மிகவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**Kodak Film Roll: Fr.19.90 - Fr. 24.90**
**Musical Christmas Card: Fr. 5.-, Fr. 10.-, Fr.15.-**

இது பிரான்ஸ் வாழ் தமிழ் மக்களின்
பேராதரவுடன் நடைபெறும் வருட இறுதியின்
பிரமாண்டமான மலிவு விற்பனையாகும்.

உலகெலாம் உலாவரும் ரமி இசைத்தட்டின்
13 வேறுபட்ட தெரிவில் வரும்
இசைத் தட்டுக்கள் நத்தார் புதுவருட
விருந்தாக வெளிவருகிறது.
அது நீங்கள் வரவேற்பதாகவே இருக்கும்.



**Lune International (S.A.R.L.)**
5, Rue Perdonnet, 75010 Paris
Tel./Fax 0142092143

# ஈழமுரசு தமிழீழம்: ஒரு பார்வை

## 15 ஜனவரி 1995 (முழக்கம் 1)

### விடுதலைப்புலிகள் சிறீலங்கா இராணுவம் மட்டக்களப்பில் சந்தித்துப் பேசினர்.

விடுதலைப் புலிகளின் பிரதேச பிரதிநிதிகளும், சிறீலங்கா இராணுவ அதிகாரிகளும் தாக்குதல் தவிர்ப்புப் பற்றிக் கலந்துரையாடியுள்ளனர்எனவும் விரைவில் திருகோணமலையிலும் இது தொடர்பாக பிறிதொரு சந்திப்பு இடம் பெறும் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### மோதல் தவிர்ப்பு உடன் பாட்டை சிறீலங்கா அரசு மீறுகின்றது- வி. புலிகள் குற்றச்சாட்டு.

மீன் பிடிக்க அனுமதிக்கப்பட்ட பகுதிகளைப் புதிதாக வரையறுத்தமையின் மூலம் சிறீலங்கா அரச மோதல்தவிர்ப்பு உடன்பாட்டு விதிகளை மீறுகின்றது. இது தொடர்பாக எமது அதிருப்தியையும் - ஆட்சேபனையையும் தெரிவிக்கிறோம் என விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் சிறீலங்கா அதிகாரிகளுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

### மூன்றாவது சுற்றுப் பேச்சு விரிவாக நடக்கும்

மோதல் தவிர்ப்பை அடிப்படையாகக் கொண்டு மூன்றாவது சுற்றுப் பேச்சு விரிவாக நடக்கும் என்றும் பூநகரி முகாம் அகற்றப்படும் அல்லது அகற்றப்படமாட்டாது என்பது முக்கியமானதல்ல, கேரதீவு, சங்குப்பிட்டிப் பாதை தொடர்பானதே முக்கியமானது என பாதுகாப்பமைச்சர் ரத்வத்தை அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்தார்.

## 20 - 26 ஜனவரி - 1995 (முழக்கம் 2)

### பூநகரி முகாமை மூட இராணுவம் மறுப்பு எரிபொருளுக்கும் அனுமதியில்லை. பேச்சுவார்த்தை தொடருமா?

பொதுமக்களுக்கான பாதையினைத் திறப்பதற்காக பூநகரி முகாமினை மூடுவதற்கு இராணுவத்தினர் தொடர்ந்து கடும் எதிர்ப்பினைத் தெரிவித்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அதே வேளை

பாதை திறப்பு, பொருளாதாரத்தடை, மீன் பிடித்தடை போன்ற விடயங்களுக்கு முன்னேற்றகரமான தீர்வுகள் சிறீலங்கா அரசினால் முன்வைக்கப்படாமையினால் திகதி தீர்மானிக்கப்படாது மூன்றாம் மட்டப் பேச்சுவார்த்தைகள் முடிவடைந்தது தெரிந்ததே.

### எதிர்ப்பின் மத்தியில் பாப்பாண்டவர் வருகை

பௌத்த தீவிரவாதிகளின் பலத்த எதிர்ப்பின் மத்தியில் திட்டமிட்டபடி ஜனவரி 20ஆம் திகதி பாப்பாண்டவர் தனது இலங்கைக்கான விஜயத்தினை மேற்கொள்கிறார்.

### பௌத்த விகாரைக்கு அவமதிப்பு பி.பி. சி நிருபர்கள் கைது

உள்ளூர் பிக்குமார் கொடுத்த முறைப்பாட்டினை அடுத்து பி.பி.சி நிருபர்கள் ஜோர்ச் ஆர்னியும், மற்றொரு நிருபரும் பௌத்த விகாரையை அவமதித்ததாகக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## 1 - 7 பெப்ரவரி 1995 (முழக்கம் 3)

### பலமான எனது அரசால் போரில் வெல்ல முடியும் - ஜனாதிபதி சந்திரிகா

பலமானதும், நேர்மையானதுமான எனது அரசால் போரில் வெல்ல முடியும். ஆனால் நான் விரும்புவது சமாதானமே. இவ்வாறு சிறீலங்கா ஜனாதிபதி பிரெஞ்சுத் தேசிய நாளிதழான 'லு மொன்ட்' பத்திரிகைக்கு 'அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார். மேலும் அரசு, சமாதானப் பேச்சு வார்த்தையில் அதிகமாக விட்டுக் கொடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

### 'டக்ளஸ்'இற்கும் சித்தார்த்தனுக்கும் 'பஜேரோ'ஜீப் வேணுமாம்

தற்போதைய புதிய எம். பி. க்கள் அனைவரும் புதிய அரசிடம் சொகுசு வாகனம் தர வேண்டுமென்று கேட்டுள்ளனர். சில எம்பிக்கள் ஒஸ்ரின், பென்ஸ் கார்களையும், டக்ளஸ், சித்தார்த்தன் உட்பட பல தமிழ், முஸ்லீம் எம். பிக்களும் 'பஜேரோ' 'சொகுசு ஜீப்" கேட்டு அரசிடம் விண்ணப்பித்துள்ளனராம்.

## 08 - 14 பெப்ரவரி 1995 (முழக்கம் 4)

### தமிழினத்தைத் தொடர்ந்தும் ஏமாற்ற இடமளிக்கமாட்டோம்

பேச்சுவார்த்தை என்ற பெயரில் தமிழினத்தை இனிமேலும் தொடர்ந்து ஏமாற்ற இடமளிக்க நாம் தயாரில்லை எனவும், ஆக்கபூர்வமான நடவடிக்கைகளே தமிழினத்தின் விடிவு எனவும், புலிகள் அந்தக் கொள்கையில் இருந்து விலக மாட்டார்கள் எனவும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் தன்னைச் சந்திக்க வந்த சர்வதேசக் கண்காணிப்புக் குழுவினரிடம் கூறியுள்ளார்.

### பூநகரி முகாம் அகற்றப்பட மாட்டாது -சந்திரிகா

பூநகரி முகாமை ஆகக் கூடியது 1000 மீற்றர்களுக்கே பின்நோக்கி நகர்த்த முடியும் என்றும் இதற்குமேல் இது பற்றிப் பேசுக்கு இடமில்லை என்றும் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

### இலங்கைக்கான உதவிப் பணத்தில் இராணுவச் செலவு கூடாது - ஜப்பானிய தூதுக் குழு அறிவிப்பு

### புலிகள் அரசாங்கம் அமைக்க ஐரோப்பிய நாடுகள் ஆலோசனை

புலிகள் ஒரு இடைக்கால மாகாண அரசை 5 வருடங்களுக்கு நிர்வகிக்கும் பரீட்சார்த்த முயற்சி ஒன்றுக்கு வாய்ப்பளிக்கும் ஆலோசனை ஒன்றை பல ஐரோப்பிய நாடுகள் தயாரித்து வருவதாக ஐரோப்பிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## 15 - 21 பெப்ரவரி 1995 (முழக்கம் 5)

### எங்களின் காலம் மீண்டும் வந்தால் ஒரு கை பார்ப்போம்.

கிழக்கில் இராணுவம் மிரட்டல். திருக்கோவில் விசேட அதிரடிப்படை முகாமைச் சேர்ந்த படைகள் அப்பகுதியிலுள்ள கடைகளிலிருந்து தலா 5 பக்கற் சிமெந்தை வாங்கிச் சென்று பதுங்கு குழிகளை அமைத்து வருகின்றனர். கொடுக்கத் தயங்கும் மக்களிடமே மேற்கண்டவாறு மிரட்டியுள்ளனர்.

### "சண்டே லீடர்" பத்திரிகை ஆசிரியர், மனைவி தாக்கப்பட்டனர். நுகேகொடையில் சம்பவம்

### யாழ். குடாவில் அபிவிருத்தி சேவைகள் இரண்டு வாரத்தில் ஆரம்பமாகும்.

### வீதிகள், பாடசாலைகள், ஆஸ்பத்திரிகைகளில் முதற்கட்ட வேலைகள்.

### இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசம் தமிழருக்குப் பாதுகாப்பாம் -

### வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடம் ஈ.பி.டி.பி., புளொட் தெரிவிப்பு

### பத்திரிகைச் சுதந்திரம் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது சந்திரிகா

## 22 - 28 பெப்ரவரி 1995 (முழக்கம்- 6)

### அமைதி சமாதானம் வேண்டி யாழ். நகரில் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

50.000-இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். ஜனாதிபதிக்கு அரச அதிபர் ஊடாக மகஜர்.

யாழ் நகரில் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பது பற்றி சிறீலங்கா அரசு கடைப்பிடிக்கும் அசமந்தப் போக்கைக் கண்டித்து மாபெரும் வெகுஜன ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று 18.02.95 அன்று நடைபெற்றது.

யாழ் மாவட்ட வணிகர் கழகங்கள், தொழிற் சங்கங்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்லூரி வெகுஜன அமைப்பின் பிரதிநிதிகள், மாணவர்கள், அரச ஊழியர்கள் உட்பட 50.000 இற்கும் மேற்பட்ட மக்கள் யாழ்_கச்சேரிக்கு ஊர்வலமாகச் சென்று அரச அதிபரிடம் ஜனாதிபதிக்கான மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

### 2000 வெற்றிடங்களுக்கு இராணுவம் ஆட்சேர்ப்பு

வடக்கு_ கிழக்குப் பிரச்சனைக்கு சமாதான முறையில் தீர்வு முயற்சிகள் நடைபெறும் அதே வேளை அரசாங்கம் இராணுவத்திற்குப் புதிய படையினரைத் திரட்டும் ஆட்சேர்ப்புக்கு அனுமதி வழங்கியுள்ளது.

### நாட்டைக் கூறுபோட இராணுவம் இடமளியாது - பூசா முகாம் இராணுவ அதிகாரி

### இராணுவப் பிரதேசத்தினுள் அபிவிருத்தியை ஆரம்பிக்கலாம் - புளொட் சித்தார்த்தன்

### விரைவில் பிரச்சனைகள் தீரும். முதலீட்டாளர்கள் அஞ்சத் தேவையில்லை. கருத்தரங்கில் சந்திரிகா

## 2- 8 மார்ச் - 1995 (முழக்கம் 7)

### விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபா சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவுக்கு கடிதம்

பூநகரி, ஆனையிறவு பாதை தொடர்பாக வி.புலிகள் தமது நிலைப்பாட்டை ஏற்கனவே தெரிவித்திருந்த போதிலும், அரசு, தற்போது ஒரு தலைப்பட்டதாக பாதையைத் திறந்துவிட்டுள்ளதாக அறிவித்துள்ளதுடன், பொருளாதாரத்தடையை நீக்காமல், அத்தியாவசிய வசதிகள் எதையும் செய்யாமல், வடக்குக் கிழக்கின் அடிப்படைப் பிரச்சனைகளைத் தீர்த்து விட்டோம் என திரு. பாலபட்ட பெந்தி எழுதிய கடிதத்துக்கு கண்டனம் தெரிவித்து வி. புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

### சிறீலங்கா கடற்படை புதிய பீரங்கிப் படகுகளை கொள்வனவு செய்கிறது

### யாழ். மாவட்டத்துக்கு நிதி . ஒதுக்கப்படவில்லை. கொழும்பில் யாழ் செயலக அதிகாரிகள் ஏமாற்றம்

### சிறீலங்காவில் பத்திரிகைத் தணிக்கை மீண்டும் வருகின்றது

### தமிழர்கள் மீது புதிய தாக்குதல்கள்

பாரிசில் தொடரும் வன்செயல்கள் பாரிசில் Clichy, paris20, மற்றும் சுற்றுப்புற நகர்களில் வசிக்கும் தமிழர்கள் வேறு நாட்டவர்களால் தாக்கப்பட்டு அவர்களது பணம், நகைகள் கொள்ளையடிக்கப்பட்டு வருவது தொடர்ந்து வருகின்றது. இதனால் தமிழ் மக்களிடையே அச்சம் நிலவி வருகின்றது.

## 9 - 15மார்ச் 1995 (முழக்கம் 8)

### சென்னை மத்திய சிறையிலிருந்து கைதிகள் தப்பி ஓட்டம்

### பொலிசாரின் தேடுதல் வேட்டையில் மோகன் எனும் குட்டி சயனைட் அருந்தித் தற்கொலை!

### பாலன், பாலேந்திரன் ஆகியோர் மீண்டும் கைது!

### சண்முகவேல் மர்மமான முறையில் மரணம்.

சந்தேகத்தின்பேரில் இலங்கையர்களான மனோன் மணி அவர் பிள்ளைகள் குமாரதாஸ் (39), ஞானதாஸ் (37) கைது.

### போருக்குத் தயாராகுங்கள்: ரத்வத்தை அறைகூவல்

அண்மையில் கிழக்கில் உள்ள அதிரடிப்படை முகாம்களுக்கு திடீர் விஜயத்தைத் மேற்கொண்ட பிரதி பாதுகாப்பமைச்சர் ரத்வத்தை மேற்கண்டவ்றாு தெரிவித்துள்ளார்.

### கிளாலி ஊடாக வந்தோம். கிளாலி ஊடாகவே போவோம்

கடந்த 5ஆம் திகதி தாண்டிக்குளம் இராணுவப் பகுதிக்கு விஜயம் செய்திருந்த பிரதிப்பாதுகாப்பமைச்சர் ரத்வத்தை அங்கிருந்து மக்களை நோக்கி யாழ்க் குடாவில் இருந்து எந்த வழியாக வந்தீர்கள்? பூநகரி ஊடாகவா? அல்லது கிளாலி ஊடாகவா? என்று கேட்டதற்கு, மக்கள் மேற் கண்டவாறு பதிலளித்தனர்.

(அடுத்த இதழிலும் தொடரும்)

## ஈழமுரசின் பணி தொடர எமது வாழ்த்துக்கள்

# வூட்லண்ட்ஸ் தொலைபேசி நிலையத்தின்


ஓர் ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டும்
நத்தார் புதுவருடத்தை முன்னிட்டும்

# மாபெரும் விலைக்குறைப்பு

05.12.96 தொடக்கம் 31.12.96 வரை வெளிநாடுகளுக்கான அழைப்பிற்கு 15 நிமிடம் 90Fr. வீடுகளில் இருந்து தொடர்பு கொள்வதற்கு 100Fr மட்டுமே.

இத்துடன் அமோக விற்பனையில் உள்ள நல்லூர் தொலைபேசி அட்டை 120Fr N.Vert



| | |
|---|---|
| இந்தியா | 18mn |
| இலங்கை | 15mn |
| பாகிஸ்தான் | 15mn |
| பங்களாதேஸ் | 15mn |

*சகல நாடுகளில் இருந்தும் N°.Vert மூலமாக கதைக்கக்கூடிய தொலைபேசி அட்டை*

| | | | |
|---|---|---|---|
| கனடா | 30mn | இலண்டன் | 30mn |
| சிங்கப்பூர் | 30mn | இந்தியா | 15mn |
| அவுஸ்ரேலியா | 30mn | இலங்கை | 12mn |
| ஐரோப்பா | 30mn | ம.கிழக்கு நாடுகள் | 20mn |

**வாடிக்கையாளர்களுக்கு விசேட கழிவுண்டு.**

Call back தொலைபேசி சேவையின் முன்னோடிகளான எம்மோடு வியாபாரிகளே இணையுங்கள்.

# *Woodlands*

*Tele communication Centre*

*70, Rue Louis blanc, 75010 Paris.*

*M°: La Chapelle - Tel: 01 40 35 01 04*



# இலண்டன் திரைப்பட விழா நவம்பர் 1996

# நிகராகுவா புரட்சி:

# கார்லாவின் பாடலும் கென்லோச்சின் சர்வதேசியமும்

Tamileelam Archive

I

இவ்வாண்டு நடைபெற்ற வெனிஸ் திரைப்பட விழாவில் எழுச்சியான பார்வையாளர் பெருமிதத்துடன் திரையிடலுக்குப்பின் இருக்கையினின்று எழுந்துநின்று கைதட்டி ஆர்ப்பாரித்து வரவேற்கப்பட்ட படங்கள் (FILM RECEIVED STANDING OVATION) இரண்டு. ஒன்று கென்லோச்சின் CARLA'S SONG (கார்லாவின் பாடல்) மற்றது நீல் ஜோர்யனின் 'மைக்கேல் கோலின்ஸ்'.

LAND AND FREEDOM படம் உலகெங்கும் திரையிடப்பட்ட போது கென்லோச் நிகராகுவாவில் "கார்லாவின் பாடலுக்கான" படப்பிடிப்பில் இருந்தார். அவரது கார்லாவின் பாடல் திரைப்பட விழாவில் திரையிடப்பட்டுக் கொண்டிருந்த போது லிவர்பூல் நகரில் மூடப்பட்ட கப்பல் கட்டும் தொழிலாளர்கள் போராட்டம் பற்றிய விவரணப் படத்தை எடுத்துக் கொண்டிருந்தார். "கென்லோச் ஐரோப்பிய போராடும் சினிமாவின் நாயகன்".

கார்லாவின் பாடல் நிகராகுவாப் புரட்சியின் அனுபங்களைப் பேசும்படம். 1979-ஆம் ஆண்டு ஜூலை 19-ம் நாள் நிகரகுவாப் புரட்சி வாகை சூடியது. டேனியல் ஓர்ட்டேகோ, தோமஸ் போர்ஹே, சொர்ஜியோ ரோமிரஸ், கவிஞர் கார்டனில் போன்றோர் வழிநடத்தினர்.

ஜூலை 30-ல் நிலச்சீர்திருத்த சட்டம் கொண்டு வரப்பட்டது. சர்வாதிகாரி சோமோசாவின் நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டு உழவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. பன்நாட்டு மூலதனங்கள், சுரங்கங்கள் தேசவுடமையாக்கப்பட்டன. வாடகை மக்களுக்கு 50 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. கல்வியறிவின்மைக்கு எதிரான இயக்கம் தொடங்கப்பட்டது. முதியோர் கல்வி பயிற்றுவிக்கப்பட்டனர். 1981-ஆம் ஆண்டு முடிய மட்டும் 400,000 மக்களுக்கு எழுதவும், படிக்கவும் கற்பிக்கப்பட்டது. விடுதலை இயக்கமான சான்டினிஸ்ரா இயக்கப் போராளிகளே (FSCN) இக்கல்வி இயக்கத்தை முன்னெடுத்துச் சென்றனர். மக்களின் மருத்துவத் தேவைகளும் சுத்தமான குடிநீருமே முதலுரிமை பெற்றன.

பன்நாட்டுக் கம்பனிகளால் வழி நடத்தப்பட்ட வாழைப் பழ உற்பத்தி தேசவுடமையாக்கப்பட்டது. தொழிற்சங்கங்கள் அமைக்கப்பட்டன.



கென்லோச்

1979-க்கு முன்பு 46 ஆண்டுகள் நிகராகுவாவை வேட்டைக் காடாக்கி அழித்தவன் சோமோசா எனும் சர்வாதிகாரி. ரூஸ்வெல்ட் சோமோசாவைப் பற்றி சொன்ன சொற்கள். "சோமோசா ஒரு தேவடியாள் மகனாக இருக்கலாம். ஆனால் அவன் நம்முடைய தேவடியாள் மகன்". 1979-இல் இவன் தூக்கியெறியப்பட்ட போது அமெரிக்கா மிகுந்த எரிச்சலடைந்தது.

1985-ஆம் ஆண்டு ரூஸ்வெல்டின் வாரிசு 'றீகன்' சொன்னார். "நிகரகுவாவின் அரசியல், அதன் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் எப்போதுமில்லாத வகையில் அசாதாரணமான அளவில் அமெரிக்க பாதுகாப்புக்கு, தேசிய பாதுகாப்புக்கு (NATIONAL SECURITY) அச்சுறுத்தலாக இருக்கிறது. ஆகவே ரொனால்ட் றீகனாகிய நான் நிகரகுவா விஷயத்தைக் கையாளுவதற்காக தேசிய- அவசர நிலையை பிரகடனம் செய்கின்றேன்".

வெளிப்படையாக இவ்வாறு சொன்ன அமெரிக்க ஏகாதிபத்தியம் 1981-ஆம் ஆண்டிலிருந்தே எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளுக்காக contra எனும் அமைப்பை ஊட்டிவளர்த்தது. 1981-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தொடக்கம் 'கொண்டிரா' தன்னுடைய நடவடிக்கைகளை அமெரிக்க இராணுவ உதவியுடன் தொடர்ச்சியாக மேற்கொண்டு அழிவு வேலைகளைச் செய்தது. அமெரிக்கா, புளோரிடாவில் அதே ஆண்டு கொடுமளிஸ்டா எனும் எதிர்ப்புரட்சி அமைப்புக்கான பயிற்சி நிலையம் ஒன்றைத் திறந்தது. 19 மில்லியன் டொலர் அமெரிக்க நிதி கொன்டிராவுக்குச் சென்றதை வெளிப்படுத்தியது "வாசிங்டன் போஸ்ட்". இவர்களுக்கு ஆயுதங்கள் விற்றதில் ஈரான் அரசும் பங்குபற்றியது. சி.ஐ.ஏ. நிக்கராகுவாவில் புரட்சியை ஒடுக்க சகல முயற்சிகளையும் மேற்கொண்டது. FSLN தலைவர்கள் பலரைக் கொலை செய்தது. கியூபாவைப் போலவே நிக்கராகுவாவும் இராணுவப் புரட்சியில் வாகை சூடியதை அமெரிக்காவால் நம்ப முடியவில்லை. பொருளாதாரத்தடை, இராணுவ எதிர்ப் புரட்சி போன்றவற்றினால் 30,000 மக்கள் இறந்தனர், 12 பில்லியன் டாலர்கள் பொருளாதார கட்டமைப்பில் சேதம், போன்றன விளைந்தன.

1986-ஆம் ஆண்டு நிக்கரகுவாவின் மீதான அமெரிக்க யுத்தம், சட்ட மீறல் என உலக நீதிமன்றம் (World Court) தீர்ப்பளித்தது. அமெரிக்கா அதை உதாசீனம் செய்தது. கடைசி வரை அதை ஒப்புக் கொள்ளவில்லை.

1984-ஆம் ஆண்டு FSLN தேர்தலையும் நடத்தியது. நடைபெற்ற தேர்தலில் தேசிய சபையில் 67% இடங்களை FSLN கைப்பற்றியது. 1982 மே மாதம் ஏற்பட்ட பெரும் வெள்ளப் பெருக்கினால் 60 வீதமான விவசாய நிலங்கள் அழிந்தன. பாதைகள் அழிந்தன. 250 மில்லியன் டாலர்கள் இயற்கை அனர்த்தத்தால் சேதமாகின.

இயற்கை அனர்த்தம், எதிர்ப் புரட்சி இராணுவ நடவடிக்கைகள், அமெரிக்க இராணுவ, பொருளாதாரத் தடை போன்றன ஏற்கனவே சீர்குலைந்திருந்த நாட்டை மேலும் சீர்குலைத்தன. சான்டினிஸ்டா புரட்சியாளர்களின் எல்லா ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் அழிக்கப்பட்டன. பாடசாலைகள், மருத்துவமனைகள், விமான நிலையங்கள், பிரதான பாதைகள் எல்லாம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன. புரட்சியின் தலைவர்கள் கொல்லப்பட்டனர். வறுமை, வேலை இல்லாப் பிரச்சினை என்பன அதிகரித்தன. குடி தண்ணீர் கூட இல்லாமல் போனது. அமெரிக்க ஏகாதிபத்தியமும், வலது சாரிகளும் இந்தச் சந்தாப்பத்திற்காகவே காத்திருந்தனர்.

இந்தச் சூழ்நிலையிலும் கூட மக்கள் மீதான தனது நம்பிக்கையையும், ஜனநாயகத்தில் தனது நம்பிக்கையையும் வெளிப்படுத்தினார் சான்டினிஸ்டா தலைவர் டானியல் ஓர்டேகா. 1990-இல் ஓர்டேகா தேர்தல்களை நடத்தினார்: அமெரிக்கப் பண உதவி எதிர்க் கட்சிகளுக்கு நேரடியாகவே உதவியது. சாண்டினிஸ்டாவைத் தவிர சகல வலதுசாரி மற்றும் நடுவாந்திரக் கட்சிகளும் ஒன்றிணைந்து போட்டியிட்டன. வலதுசாரிகள் வெற்றி பெற்றார்கள். இந்த ஆண்டு (1996) தேர்தலிலும் வலதுசாரிகள் வெற்றி பெற்றார்கள். இம்முறை சான்டினிஸ்டுக்கள் மொத்த வாக்குகளில் 47 வீதத்தைப் பெற்றனர். 24 வலதுசாரிகள் மற்றும் நடுவாந்திரக் கட்சிகளும் சேர்ந்து 53 வீத வாக்குகளைப் பெற்றார்கள்.

பல்கட்சி ஜனநாயகம் எனும் பிரமைக்குள் இன்று வெளிநாட்டு ஆதிக்கமே நிலவுகிறது. IMF, உலக வங்கி போன்றன மக்கள் திட்டங்களுக்கான செலவுகளைக் குறைத்து விட்டன. 70 வீத மக்கள் வறுமையில் வாழ்கிறார்கள். 60 வீத மக்கள் வேலையற்றவர்களாக இருக்கிறார்கள்.

கென்லோச் கடந்த ஆண்டு திக்ராகுவா படப்பிடிப்புக்குச் சென்றபோது இரண்டு விடயங்களை கண்ணுற்றார். ஒன்று நிறைய TOYATA வாகனங்கள் வீதிகளில் சென்றன. பெருமளவு ஏழைச் சிறுவர்கள் வீதிகளில் கார் துடைப்பவர்களாக வேலை செய்து கொண்டிருந்தனர். சான்டினிஸ்டா ஆட்சியில் இருந்த போது இவை இரண்டையும் காண முடியாமலிருந்தது.

இத்தகைய வரலாற்றுப் பிரச்சினைகளுக்குள் தான் கென்லோச்சின் 'கார்லாவின் பாடல்' படம் நுழைகிறது. கடந்த பத்தாண்டு காலமாகவே இப் படத்துக்கான விவாதங்களில் ஈடுபட்டு வந்தார் கென்லோச். 1980-களில் உலகெங்கிலுமிருந்து நிக்கராகுவா விடுதலைப் போராட்டத்தில் பங்குபெற இடதுசாரிகள் நிக்கராகுவா சென்றார்கள்.

கியூப விடுதலையும் இத்தகைய உத்வேகத்தை ஐரோப்பிய இடதுசாரிகளுக்குத் தந்தது. இலண்டன் 'நியூ லெப்ற் ரிவியூ'வைச் சேர்ந்த ரோபின் பிளக்பேரன், மித்ராந்தி அரசில் வெளியுறவு ஆலோசகராக இருந்த ரெஜிஸ் டெப்ரே, 'இலண்டன் ஸ்கூல் ஒப் எக்கனமிக்ஸ்' மாணவர் தலைவராயிருந்த தாரிக்அலி போன்றோர் கியூப/பொலிவிய புரட்சியில் பங்கேற்கவும் சேகுவேராவைச் சந்திக்கவும் லத்தீன் அமெரிக்கா சென்றனர்.

அவ்வாறு 1980-களில் நிக்கராகுவாப் புரட்சியில் பங்கேற்ற 'பால் லாவர்ரி' (Paul Laverty) எனும் கிளாஸ்கோவைச் சேர்ந்த சட்டத்தரணி ஒருவரின் உண்மை அனுபவங்களே இப்





கார்லாவாக நடித்த ஒயங்கா கபேசஸ்

படத்திற்கான கருவாக அமைகிறது. பல்வேறு சந்தர்ப்பங்களில் கென்லோச்சும் நிக்கராகுவா செல்ல நினைத்திருந்தும் முயலாமல், இப்போது தனது ஊடகத்தின் வழி ஒரு சர்வதேசிய புரட்சிகர மீள்பயணம் போய் வந்திருக்கிறார் கென்லோச்.

'கார்லாவின் பாடல்' படம் 1987-ஆம் ஆண்டு ஒரு பகல் நேரத்தில் கிளாஸ்கோ நகரத்தில் பஸ் சாரதியாக இருக்கும் யோர்ஜ், அகதியாக வந்து நடனக்காரியாக இருந்து, பிச்சை எடுத்து வாழும் ஒரு நிக்கராகுவாப் பெண்ணான கார்லாவைச் சந்தர்ப்பவசமாகச் சந்திப்பதிலிருந்து தொடங்குகிறது.

## II

கிளாஸ்கோ நகரத்தின் அரசு பஸ்சில் சாரதியாக இருக்கும் யோர்ஜ் அதிகாரவர்க்கம் குறித்த மிகுந்த எதிர்ப்புணர்வும், ஒடுக்கப்பட்ட மக்கள் பால் பரிவும் நகைச்சுவை உணர்வும் மிக்கவன். அவனது சகோதரி சாதாரண தொழிலாள வர்க்கப் பெண். பாடசாலை போகிறவன் ஜோர்ஜிக்கு ஒரு ... நண்பனும் உண்டு.

யோர்ஜின் பஸ்சில் ஏறுகிற பயணிகளோடு அவசரமாகப் பதுங்கி உள்ளேபோகும் கார்லா டிக்கெட் வாங்கவில்லை. டிக்கெட் பரிசோதகர் கண்டு பிடித்து கார்லாவைக் கேவலமாக ஏசுகிறான். பொலிசில் பிடித்துக் கொடுப்பதாக பயமுறுத்துகிறான். கார்லா செய்வதறியாது பரிதாபமாக விழித்தபடி அமர்ந்திருக்கிறான். இன்ஸ்பெக்டர் வசவுகளை மிகக் கேவலமாகப் பாவிக்கிறான்.

இதைப் பார்த்துக் கொண்டிருக்கும் ஜோர்ஜ் சகிக்க முடியாமல் தன் பையிலிருக்கும் சில்லறைகளை எடுத்துப்போட்டு டிக்கெட்டை கிழித்துக்கொண்டு போய் கார்லாவுக்குக் கொடுத்து அவளை விட்டுவிடும்படி. பரிசோதகருடன் பேசுகிறான். பரிசோதகர் விடுவதாக இல்லை. திறவாதத்துடன் வரும் வசவுகள் யோர்ஜாவையும் மாட்டி விடுவதாகச் சொல்கிறான் பரிசோதகர்.

பேசிக் கொண்டிருக்கும் போதே கார்லாவை பஸ்சில் இருந்து அகன்றுவிட கண்ஜாடை காட்டுகிறான். பரிசோதகர் இறங்கி துரத்த எத்தனிக்க, கதவை மூடிவிடும் ஜோர்ஜ் பஸ்சை செலுத்தத் தொடங்கி விடுகிறான். கார்லா மூச்சு வாங்க வாங்க ஓடி அடுத்த தெருவில் நுழைந்து தப்பிவிடுகிறாள்.

தோழமையும், ஒடுக்கப்பட்ட மனிதர்க்கிடையிலான நட்பும், அன்பும், புரிதலும் முதல் காட்சியிலேயே தொடங்கிவிட்டது. ஜோர்ஜக்கு நிக்கரகுவா புரட்சி பற்றியோ சான்டினிஸ்டா பற்றியோ, கொன்டிரா சி.ஐ.ஏ. பற்றியோ ஏதும் தெரியாது. அவனுக்குத் தெரிந்ததெல்லாம் துன்புறும் மக்கள் பால் அன்பு செய்வதுதான். பிற்பாடு தன் பள்ளித் தோழிகளோடு வரும் தன் சகோதரிகளிடமிருந்து நிக்கரகுவா பற்றிய அரசியலைத் தெரிந்து கொள்கிறான்.

கிளாஸ்கோ நகரத்தின் தெருக்களில் நடக்கும் இந்தப் பள்ளித் தோழிகளின் இளமைக் குறுகுறுப்பை பதிவுசெய்யும் காஸ்மரா பின்னொரு நாளில் இதே ஜோர்ஜிடம் அன்பும் குறுகுறுப்பான துள்ளலுடனும் இருக்கும் சான்டினிஸ்ட்டுகளான பெண் கெரில்லாக்களின் கலகலப்பையும் சகோதரத்துவத்தையும் அதே நிதானத்துடன் பதிவு செய்கிறது. பஸ்சில் தென்படும் முதிய கிளாஸ்கோ தொழிலாள வர்க்கப் பெண்களை அருகிருந்து பார்க்கும் அதே கமராதான் பின்பு நிக்கராகுவா கிராமம் ஒன்றில் முதிய

**இயற்கை அனர்த்தம், எதிர்ப்புரட்சி இராணுவ நடவடிக்கைகள், அமெரிக்க இராணுவ, பொருளாதாரத் தடை போன்றன ஏற்கனவே சீர்குலைந்திருந்த நாட்டை மேலும் சீர்குலைத்தன. சான்டினிஸ்டா புரட்சியாளர்களின் எல்லா ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் அழிக்கப்பட்டன. பாடசாலைகள், மருத்துவமனைகள், விமான நிலையங்கள், பிரதான பாதைகள் எல்லாம் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டன.**

விவசாயப் பெண்களையும், அதே புரிதலுடன், நட்புடன் அருகிருந்து பார்க்கிறது. உடனடியாக மூளையின் பரப்புக்குள் அலைந்து நிறைந்து நிலைக்கும் காட்சிப் படிமங்கள் இவை. இதுவே கலைஞனின் படைப்பு மனம். இதை படிப்பு உருவாக்காது. ஆன்ம ஒன்றிணைவே சாதிக்கும். இது இயல்பாகவே லோச்சின் படங்களில் காண முடியும் அம்சம்.

கார்லா தனது நன்றியைத் தெரிவிக்க ஜோர்ஜ்ஜின் கவுன்சில் குடியிருப்புக்கு வந்து ஒரு சின்ன நிக்கரகுவா படத்தை நினைவுப்பரிசாகத் தருகிறாள். ஜோர்ஜ் எவ்வளவோ கேட்டுக் கொண்டும் அவனோடு காப்பி அருந்த மறுக்கிறாள். ஒரு மார்க்கட் சதுக்கத்தில் இலத்தீன் அமெரிக்க நடனமாடும் கார்லா நடனம் முடிந்ததும் அக் கூட்டத்தின் இடையில் தனது தொப்பியை ஏந்திப் போகிறாள். பார்த்தவர்கள் காசு போடுகிறார்கள். அவளைத் தேடித் தேடி அங்கு கண்டுபிடிக்கும் ஜோர்ஜ் அவளோடு பேச முனைகிறான். அவள் மறுக்கிறாள். தன்னிடம் எவரும் தொடர்ந்து அன்பு காட்டுவதையோ அக்கறைப்படுவதையோ அவள் விரும்பவில்லை. வெள்ளையர்களிடம் நட்புக் கொள்வதில் அவளுக்கு நிறைய மனத்தடைகள் இருக்கிறது. அவளைத் தொடர்ந்து செல்லும் ஜோர்ஜ் ஒரு கைவிடப்பட்டிருந்த கட்டடத்தில் அவள் இருப்பதைக் காண்கிறான். சதா சத்தமும் கூச்சலுமாக இருக்கும் அக் கட்டடத்தில் ,தன்னைத் தொடர்ந்துவர வேண்டாம் எனச் சொல்லிக் கொண்டே அறைக்குள் நுழைந்து அவனைத் தள்ளுகிறாள் கார்லா. அங்கே வந்த ஒரு பெண் அவளை ஏசுகிறாள். கார்லா உடைந்து போகிறாள். அழுகையைத் தேற்ற தலையை மார்பில் சாய்க்க வரும் ஜோர்ஜை முதலில் நெப்பித் தள்ளும் அவள், பிற்பாடு அழுகையுடன் அவனைக் கட்டிக் கொள்கிறாள்.

கார்லாவின் துணிமணிகளை எடுத்துக் கொண்டு அவளை தன் நண்பனின் இருப்பிடம் ஒன்றில் கொண்டுபோய் விடுகிறான் ஜோர்ஜ். சாமான்கள் போடும் கிடங்கில் அவளுக்குப் படுக்கை கிடைக்கிறது. அடுத்த நாள் ஜோர்ஜ் பயணிகளை கிளாஸ்கோ தெருக்களில் நடுவழியில் இறக்கி விட்டுவிட்டு இதற்குமேல் பஸ் போகாது என்கிறான். பஸ்ஸை கவுன்சிலின் பிளாட்டுக்கு ஓட்டிவந்து கார்லாவை மட்டும் - ஏற்றிக் கொண்டு அந்தப் பெரிய சிவப்பு நிற டபின் டெக்கர் பஸ்சை மலைப்பிரதேசம் நோக்கி ஓட்டுகிறான் ஜோர்ஜ்.

உயர்ந்த மலைகள், நெடிய மரங்கள், இறங்கி மேலெழும் தார்சாலைகள், மூடுபனி, மழைக் காலம். அந்தப் பிரமாண்டமான புறச் சூழலில் மிகப் பெரிய டபின்டெக்கரில் ஒரு அகதிப் பெண்: சந்தோஷங்கள் அற்ற துக்கமான அகதிப் பெண்ணின் மனம். அருகில் பரிவான ஒரு ஆண்மனம்.

மூடுபனியில் அகண்ட மலைகளில் இடையில், சிறு ஓடையென நடைபாதையில் கார்லாவும், ஜோர்ஜும். மழை.... சடசடவெனப் பெய்ய தன்

ஈழமுரசிற்கு எமது வாழ்த்துக்கள்

தரம்
மலிவு
நம்பிக்கை

புத்தாண்டை முன்னிட்டு மலிவு விற்பனை

தரம்
மலிவு
நம்பிக்கை

மக்கள் கடை

சொலத்தூண் - Tel: 032 6222135

காலம்: 20.12.96 முதல் 21.12.96 வரை



மக்களின் நலன் கருதி தரமான இலங்கை, இந்திய, தாய்லாந்தில் இருந்து உடன் மரக்கறி வகைகள், மூறும் தரமான பொருட்கள், அனைத்தும் 10% கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.
அத்துடன் அனைத்து, CD வகைகளும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
1 CD - 5 SFr
1 VDO - 5 SFr



கோர்ட்டை, கார்லாவுக்கு தருகிறான் ஜோர்ஜ். இருவரும் புல்லில் அமர்ந்து பியர் போத்தலைத் திறந்து, தயாராகக் கொண்டுவந்த கண்ணாடிக் கிளாசில் விட்டு சியேர்ஸ் என கிணுங்குகின்றன கிண்ணங்கள்.

'கார்லாவுக்காக _ என்கிறான் ஜோர்ஜ்.'

ஜோர்ஜுக்காக _ கிளாஸ்கோவுக்காக _ நிக்கரகுவா மக்களுக்காக, புரட்சிக்காக, அனைத்து மனிதர்களின் சந்தோஷத்திற்காக, அந்தோனியோவுக்காக_ என்கிறாள் கார்லா.

யார் இந்த அந்தோனியோ?

அந்தோனியோ, சான்டினிஸ்டா இயக்கத்தின் பாடகன். கார்லாவின் காதலன். அந்தோனியோ உயிருடன் இருக்கிறானா, இல்லையா என்பது கார்லாவுக்குத் தெரியாது. அவன்தான் கார்லாவின் பாடலுக்கான இசை. கார்லா பாடல், அந்தோனியோ கிற்றார். ஜோர்ஜ் மெல்ல மெல்ல விசயங்களைத் தெரிந்து கொள்கிறான். அந்நிய நாட்டில் ஆதரவற்ற, நிலையற்ற மனநிலையில் ஜோர்ஜின் அன்பில் தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறாள் கார்லா.

அடுத்துவரும் காட்சி முதலில் மிகுந்த மனக் கிளர்ச்சியையும், தொடர்ந்து துக்கத்தையும் தருபவை. பஸ்சை மலைப் பிரதேசத்திற்கு ஓட்டிச் சென்றதால் ஜோர்ஜ் திட்டவட்டமாக வேலைநீக்கம் செய்யப்படுகிறான். கார்லா, ஜோர்ஜின் உடைகளை படுக்கையில் பற்களாலே கழட்டுகிறாள். ஜோர்ஜ் கார்லாவின் ஸ்டாக்கின்ஸ், மேலாடை உள்ளாடைகள் அனைத்தையும் பற்களாலேயே கழட்டுகிறான். சிரிப்பும் குதூகலமும் காதலும் நிறைந்த காட்சி அது. உணர்ச்சிக் கொந்தளிப்பில் கார்லாவின் மேல், உள்ளாடையை கழற்றிய ஜோர்ஜ், கார்லாவை மாரோடு சேர்த்து ஆரத் தழுவுகிறான். கார்லா வலியில் துடித்து விடுகிறாள். கார்லாவின் முதுகு முழுக்கக் காயங்கள். வரி வரியாக ஆறாத புண்கள். சாரி, சாரி என அவளை உச்சி மோர்ந்து முத்தமிடுகிறான் ஜோர்ஜ்.

கார்லா சொல்லத் தொடங்குகிறாள். நிக்கரகுவாவில் சோமோசேவுக்கு எதிராக தான் சான்டினிஸ்டியன் கெரில்லாக்களோடு சேர்ந்து போரிட்டதை, தனது காதலனும், தோழனுமான அந்தோனியோ என்கிற பாடகனிடமிருந்த நேசத்தை தனது தோழியர்கள் கொல்லப்பட்டதை, தான் தப்பி வந்ததை கொன்டிராக்கள், தனது மக்களைக் கொன்று குவிப்பதை, தனது தாய், தந்தையருக்கு என்ன ஆனது என்பதை தெரியாமல் இருப்பதை, பாட முடியாத தனது பாடலை என எல்லாவற்றையும் சொல்கிறாள். பிறிதொரு நாள் கார்லாவைத் தேடிவரும் ஜோர்ஜ் அவளை அறை அறையாகத் தேடுகிறான். எங்கும் காணவில்லை. அவள் அறைக் கட்டில் நிறைய கடிதங்கள். பாடல்கள் நிரம்பிய தாள்கள். 'கார்லா' 'கார்லா' என்றபடி பாத்ரூமுக்குள் போகும் ஜோர்ஜ் கார்லா தன் மணிக்கட்டுக்களை அறுத்தபடி இரத்தம் பாய்ந்தபடி மயங்கியபடி கிடப்பதைப் பார்த்து அலறுகிறான். அவளுக்குப் பிடித்த நிக்கராகுவாவின் கிராமப்புறப் படத்தைப் பெரிதாக்கி கட்டிலுக்கு நேரே தொங்கவிடுகிறான். இரவிரவாக விழித்திருந்து அவளைப் பார்த்துக் கொள்கிறான்.

**தான் தப்பி வந்ததை கொன்டிராக்கள், தனது மக்களைக் கொன்று குவிப்பதை, தனது தாய், தந்தையருக்கு என்ன ஆனது என்பதை தெரியாமல் இருப்பதை, பாட முடியாத தனது பாடலை என எல்லாவற்றையும் சொல்கிறாள்.**



டேனியல் ஓர்ட்கோ

விழித்தெழும் கார்லா அவனது தலைமுடியைக் கோதுகிறாள்.

ஜோர்ஜ் நிக்கராகுவாவிற்கு இரண்டு விமான டிக்கட்டுக்கள் வாங்கிவிட்டான். கார்லாவின் 'அந்தோனியோ'வைத் தேடிப் போகப் போகிறார்கள். கார்லாவின், அந்தோனியாவின் மீதான நேசமும் நிஜமானது. அதேவேளை நிலையற்ற நிலையில் அன்பு செலுத்தும் ஜோர்ஜின் மீதான காதலும் நிஜமானது. ஜோர்ஜைப் பொறுத்து கார்லாவின் மீதான காதலும் அவளது சந்தோஷமும் அவனுக்கு முக்கியமானது.

நிக்கராகுவா வந்து சேரும் ஜோர்ஜையும் கார்லாவையும் சான்டினிஸ்டா இயக்கத்தைச் சேர்ந்த பல்வேறு தோழர்கள் சந்திக்கிறார்கள். பிராட்லி என்றொரு அமெரிக்கரும் சந்திக்கிறார். கொன்டிராக்களுக்கு எதிரான போரில் முன்னணியில் நிற்பவர் அவர்தான். அவர் முன்பு அமெரிக்க சி.ஐ.ஏ க்காக கொன்டிராவை உருவாக்கக் காரணமாக இருந்தவர். கொன்டிராக்கள் மூலம் நிக்கராகுவா மக்களுக்கு எதிரான அமெரிக்காவின் மனித உரிமை மீறல்களை கண்டு கொதிப்படைந்து, இப்போது அமெரிக்காவுக்கு எதிராக சான்டினிஸ்டாக்களோடு சேர்ந்து செயல்படுபவர். அவருக்கு ஜோர்ஜை ஆரம்பத்திலிருந்தே பிடிக்கவில்லை. ஏனெனில் எந்த வெள்ளையரையும் அவரால் நம்ப முடியவில்லை. ஏனெனில் எல்லோருக்குள்ளும் சி.ஐ.ஏ. ஊடுருவி இருப்பதை அனுபவபூர்வமாகக் கண்டவர் அவர். ஜோர்ஜின் நடவடிக்கைகளும், புரட்சியின் ஆக்கபூர்வமான சாதனைகள் பற்றிய அவனது புரிதல்களும் கார்லாவுக்கு உதவவேண்டும் என்ற அவனது நல்ல மனதும் பிராட்லிக்கு சீக்கிரமே புரிய வருகிறது.

நிக்கரகுவா தலைநகர் மனாக்குவாவிலிருந்து கார்லாவின் கிராமம் நோக்கிப் போகும் வழியில் ஜோர்ஜ்சும், கார்லாவும் விவசாயிகளைச் சந்திக்கிறார்கள். பள்ளிக்கூடங்களை கட்டி எழுப்பும் ஆசிரியர்களைச் சந்திக்கிறார்கள். 'புரட்சியை நாங்கள் உயிரீந்தும் காப்போம்' என்கிறார்கள் விவசாயிகள். முதலில் எங்களுக்கு சாப்பாடும், குடிநீரும், நிலமும் இல்லாமல் இருந்தது. இப்போது எங்களுக்கு எல்லாம் கிடைக்கிறது. டின் விஸ்கியும் கூடக் கிடைக்கிறது. ஜோர்ஜிடம் இருந்து விஸ்கியை வாங்கி மடக் மடக்கெனக் குடிக்கிறார் விவசாயி.

கிராமத்தில் எல்லா உறவினர்களையும் சந்திக்கிறார்கள். தனது தோழிகளை அணைத்துக் கொள்கிறாள் கார்லா. அன்றிரவு நடனமும், குதூகலமுமாக அந்தக் கிராமம் சந்தோஷத்தில் திளைக்கிறது. ஸ்பானிய நடனம். ஜோர்ஜ்சும் கலந்து கொள்கிறான். தனது ரீசேட்டைக் கேக்கும் நிக்கராகுவா இளைஞனுக்கு அதைத் தந்து சான்டினிஸ்டா ரீசேட்டை வாங்கிப் போட்டுக் கொள்கிறான் ஜோர்ஜ். நடனமும், பாட்டும் இசையும் முடிந்து கிராமமே தூங்குகிறது.

## ஓயங்காவும் யோஜ்கும்

கார்லா ஆடும் படுக்கையில் உறங்க, ஜோர்ஜ் அருகில் சாய்வு நாற்காலியில் படுத்திருக்கிறான். திடீரென்று பெண்களும் குழந்தைகளும் அலற இருளை கிழித்துக் கொண்டு சீறுகின்றன துப்பாக்கி ரவைகள். கொன்டிராக்கள் கிராமத்தைத் தாக்கத் தொடங்கிவிட்டார்கள். சான்டினிஸ்டாக்களும் கிராமத்தைக் காத்து நின்று எதிர்த் தாக்குதல் தொடர்கிறார்கள். ஜோர்ஜிடம் ரீசேட் கேட்ட இளைஞன் சுட்டுக் கொல்லப்படுகிறான். குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள். பொழுது விடிகிறது. கிராமத்தையே சுடுகாடாக்கி விட்டுப் போயிருக்கிறார்கள் கொன்டிராக்கள்.

ஜோர்ஜ்சுக்கு அதிர்ச்சி. தான் அங்கு இந்த மிருகத்தனத்தின் இடையில் இருக்க விரும்பவில்லை என்றும், கார்லாவை தன்னோடு வரும்படியும் கேட்கிறான். கார்லா சந்தோஷமாக இருப்பதுதான் தனது நோக்கமே அல்லாது, அவள் சாவது தனக்கு விருப்பம் இல்லை என்கிறான். கார்லா மௌனமாக இருக்கிறாள். காரணம் கார்லாவின் குழந்தை, அந்தோனியோவின் குழந்தை அங்கே இருக்கிறது.

அந்தோனியோ அங்கே உயிரோடு இருக்கிறான் என்று அவள் நம்புகிறாள். அந்தோனியோவின் சகோதரர்கள் கொன்டிராவால் சுட்டுக் கொல்லப்பட அந்தோனியோ, மனம் பேதலித்து பாதுகாப்பாக எங்கோ வைக்கப்பட்டிருக்கிறான் என்பதை கேள்வியுறுகிறாள். கார்லா, அந்தோனியோவைத் தேடிப் போகிறாள். அவளைத் தொடர்ந்து செல்லும் ஜோர்ஜின் பஸ் கொன்டிராக்களின் தாக்குதலுக்கு உள்ளாகின்றது.

அந்தோனியோ தங்கியிருக்கும் கிராமத்துக்கு பிராட்லியும், ஜோர்ஜ்சும் வந்து சேர்கிறார்கள். கொன்டிராக்களின் வேட்டையினின்று தப்பி இருக்கும் பாடகன் அந்தோனியோவைத் தேடிய கார்லாவும், அங்கு வந்து விட்டிருக்கிறாள். கார்லாவைத் தேடிச்செல்லும் ஜோர்ஜ் அவளை அழைத்து வந்து அந்தோனியோ இருக்கும் வீட்டுக்குள் செல்லுமாறு கேட்டுக் கொள்கிறான். கார்லா உள் நுழைகிறாள். கதவைச் சாத்தி விட்டு பிராட்லியும், ஜோர்சும் திண்ணையில் அமர்கிறார்கள். கிற்றாரின் சத்தம் மெல்ல மெல்லப் பரவுகிறது. கூடவே கார்லாவின் பாடலும். சில நிமிடங்களில் பாடலும் கிற்றாரும் இணைவாக பாடல் காற்றில் பரவுகிறது. கார்லாவின் பாடல்.

### இறுதிக் காட்சி

புழுதி பரத்திக் கொண்டு வரும் ஜீப் மனாகுவா பஸ் ஸ்ராண்டில் நிற்கிறது. பிராட்லியும் விடைபெறுகிறான்.

பிராட்லி ஜோர்ஜ்சை சி.ஐ.ஏ. ஆக நினைத்துவிட்டதே ஆரம்பத்தில் வெறுக்கக் காரணம் என்கிறான். தான் ஒரு சாதாரண பஸ் டிரைவர் சி.ஐ.ஏ. அல்ல என்கிறான் ஜோர்ஜ். மறுபடியும் புழுதி பறக்க ஜோர்ச்சை ஏற்றிக்கொண்டு வாகனம் மெல்ல மெல்ல குண்டும் குழியுமான நிககரர்குவா சாலையில் நின்று விலகுகிறது. கார்லாவின் பாடல் தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருக்கிறது.

## III

கென்லோச் இப் படத்தை நிக்கராகுவாவில் தான் படப்பிடிப்பு நடத்திய கிராம மக்களுக்குக் காண்பிக்கவும், நிக்கராகுவாவில் திரையிட்டு பத்திரிகையாளர்களைச் சந்திக்கவும் இவ் ஆண்டின் மத்தியில் நிக்கராகுவா சென்றிருந்தார். அப்போது திரைக்கதையாளர், லேவாட்சும், கென்லோச்சும் மனாகுவா பல்கலைக் கழக மாணவர்களைச் சந்தித்தனர். அப்போது மாணவர்கள் கேட்ட கேள்வி இது. 'சோவியத் யூனியன் பற்றி நீங்கள் ஏன் பேசவில்லை? எல்லா யுத்தத்திலும் இரண்டு பக்கங்கள் இருக்கும். தமது நியாயத்தைச் சொல்ல. நீங்கள் கொன்டிராக்களோடு பேசினீர்களா? மறுபடி வெனீஸ் பிலிம் பெஸ்ரிவலில் ஒரு சோவியத் பத்திரிகையாளர் கென்லோச்சிடம் கேட்ட கேள்வி, 'ஆகவே நீங்கள் சி.ஐ.ஏக்கு எதிராக, கே.ஜி.பி பக்கத்தில் நிற்கிறீர்கள்'. கென்லோச இக்கேள்விகளுக்கு எல்லாம் சொன்ன பதில் மிகத் தெளிவானது.

நான்' சொன்னேன், 'பள்ளிக்கூடங்களை கட்டி எழுப்பியவர்கள் பக்கம் நான் நிற்கிறேன். மருத்துவ மனைகளைக் கட்டி எழுப்பியவர்கள் பக்கம் நான் நிற்கிறேன். மக்களுக்கு கற்பித்தவர்கள் பக்கம் நான் நிற்கும் அதேவேளை, மருத்துவ மனைகளை அழித்தவர்களுக்கு எதிராக நிற்கிறேன். பள்ளிக்கூடங்களை அழித்தவர்களுக்கு எதிராக, கற்பித்த ஆசிரியர்களை கொன்றவர்களுக்கு எதிராக நான் நிற்கிறேன்'.

- யமுனா ராஜேந்திரன்

## ஆதாரமான கட்டுரைகள் மற்றும் நேர்முகங்கள் புத்தகங்கள் பிரசுரங்கள்:


1. Ambush in Nicaragua
   On tour with Kenloach
   Friday Review / Guardien Nov. 8, 1996
   by Dan Glaister.

2. Ken & Co/
   Interview with Kenloach by Alisan Roberts
   Hot Ticket Extra
   Evening standard Festival. Special Nov. 1996

3. The Lion The Snitch anf the Uniforms
   by Derek Malcolm. Guardian Sep. 6, 1996

4. Vertico
   Film and TV Quarterly: CARLAS' SONG
   Interviews with
   1) Ken Loach (Director)
   2) Paul Laverty (Screen writer)
   3) Sally Hibbon (Producer) / Issue6 / Autumn 1996

5. 40th London Film Festival
   Official Brochure - Novembre 7-24, 1996 / BFI

6. CARLA'S SONG 10 YEARS ON: NICARAGUA 1996
   Nicaragua solidarity campaign
   129, Seven Sisters Road, London N7 7QG. Ph: 0171 272 9619

7. Nicaragua: The Sandinista's Peoples Revolution
   Pathfinder - 1985 / London - Sydney - Newyork.

8. Carlas Song: Philip French Obsever Review / 10 Nov. 1996




# ஈழத்து நவீன தமிழ்க் கவிதை

இது ஈழமுரசுப் பத்திரிகையின் நூறாவது முழக்கம். இதன் முதலாவது முழக்கத்தில் இருந்து மிக அண்மைக்காலம் வரை உணவின்றி, ஓய்வின்றி, உறக்கமின்றி அயராது உழைத்த கஜனை எங்கள் நினைவிற் கொண்டு இன்றைய சாளரத்தின் கதவுகளை திறந்து கொள்கிறோம்.

சுமார் 50 ஆண்டுகால வரலாற்றினைக் கொண்ட ஈழத்து நவீன தமிழ் கவிதையின் தலைமுறைக் கவிஞர்கள் பற்றிய முன்னுரை ஒன்றினை மீண்டும் படிக்கக் கிடைத்தது. இவ் அறிமுகம் க்ரியா வெளியீடான 'பதினொரு ஈழத்துக் கவிஞர்கள்' எனும் தொகுப்பிலிருந்தது. இந்த 50 ஆண்டுக் காலப் பகுதியில்தான் ஈழத்து நவீன தமிழ்க் கவிதை அதன் முழு அர்த்தத்தில் தோன்றி வளர்ந்து பல தலைமுறையினரைக் கண்டது. இந்த வரலாற்றினை அறிந்து கொள்ளுமுகமாக இந்த முன்னுரையின் ஒரு பகுதியினை இங்கே தருகிறோம். இம் முன்னுரை 1984 ஆகஸ்ட் மாதத்தில் வெளியிடப் பட்டுள்ளது இங்கே குறிப்பிடத்தக்கது. இதன் தொடர்ச்சியை, அதன் பரிமாணத்தினை தரவுகள் கொண்டோர் எவரும் எழுதுவார்களாயின் பயனுள்ளதாகவிருக்கும்.

எமது ரசனைக்கேற்ப, இன்றைய ஈழத்துக் கவிதையின் வெவ்வேறு தலைமுறைகளைப் பிரதிபலிக்கும் மிக முக்கியமான கவிஞர்கள் என்று நாம் கருதும் சிலரை, முதன்மையாகப் பிறநாட்டினர்க்கு அறிமுகப்படுத்துவதே இத் தொகுப்பின் நோக்கமாகும். இதன் மூலம் இன்றைய ஈழத்துக் கவிதையின் வளமான சில பண்புகளை அவர்கள் கிரகித்துக் கொள்ளக்கூடும் என்பது எமது நம்பிக்கை. இத்தகைய ஒரு தொகுப்பிலே 'இன்னார் இன்னாரையும் சேர்த்துக் கொண்டிருக்கலாம்' என்று சிலர் ஆலோசனைகள் கூறக்கூடும். அது தவறாகாது. ஆயினும், ஈழத்துக் கவிதையில் பரிச்சயமும், இலக்கியக்கூருஉணர்வும், விமர்சனச் சம நிலையும் உள்ள எவரும் இங்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட கவிஞர்களுள் யாரையேனும் தவிர்த்திருக்கலாம் என்று கூறமாட்டார்கள் என்றே நம்புகிறோம்.

ஈழத்திலே நவீன தமிழ்க் கவிதைக்குச் சுமார் நாற்பது ஆண்டுகால வரலாறு உண்டு. 1940-களிலிருந்துதான் இங்கு நவீன தமிழ்க் கவிதை - அதன் முழு அர்த்தத்தில் - தோன்றி வளரத் தொடங்கியது. அன்றில் இருந்து இன்று வரையுள்ள இந்த நாற்பது ஆண்டுகளில் ஐந்து தலைமுறைக் கவிஞர்களையும் அவர்களது கவிதைப் போக்குகளையும் பற்றி விரிவாக மதிப்பிடுவது சாத்தியமல்ல. ஆயினும் இத தொகுப்பில் இடம் பெறும் பதினொரு கவிஞர்களும் எவ்வெத் தலைமுறைகளைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறார்கள் என்பதை அறிந்து கொள்வது பயனுடையதாக அமையும்.

கவிதைத்துறையில் பிரவேசித்த காலத்தைக் கொண்டே கவிஞர்களின் தலைமுறை கணிக்கப்படுகின்றது. ஆயினும், ஒரு தலைமுறையைச் சேர்ந்த கவிஞர் அந்தத் தலைமுறைக்குள்ளேயே முடங்கிவிடுவதாகக் கருதக்கூடாது. பொதுவாக, தான் எழுதத் தொடங்கிய காலப்பகுதியின்றி அதை அடுத்து வரும் காலப் பகுதியிலேயே ஒரு படைப்பாளி முதிர்ச்சியடைவதை நாம் அவதானிக்கிறோம். அதேவேளை தான் எழுதிய காலகட்டத்தின் முத்திரைகள் அவனுடன் தொடர்ந்து வருவதும் தவிர்க்க முடியாதது.

இவ்வகையில், 1940-களில் உருவாகிய ஈழத்து நவீன கவிதையின் முதலாவது தலைமுறையைச் சேர்ந்தவர் மஹாகவி ஆயினும், 1971இல் மரணிக்கும் வரை சுமார் முப்பது ஆண்டுகள் இடையறாது அவர் கவிதைகள் எழுதிவந்தார். 1950 களில் முதிர்ச்சியடைந்து 1960களில் தனது உச்ச நிலையை அடைந்தவர் அவர். முருகையனும் நீலாவணனும் 1950களில் உருவாகிய இரண்டாவது தலைமுறையைச் சேர்ந்தவர்கள். 1975இல் மரணிக்கும் வரை நீலாவணன் தேக்கமற்றுக் கவிதை எழுதிவந்தார். 50களிலும் 60களிலும் மஹாகவி, முருகையன், நீலாவணன் ஆகிய மூவருமே ஈழத்தின் பிரதான மூத்த கவிஞர்களாக விளங்கினர். மு.பொன்னம்பலம், எம்.ஏ.நுஃமான், சண்முகம்,சிவலிங்கம், தா.இராமலிங்கம் ஆகியோர் 1960களில் ஆரம்பத்தில் கவிதைத் துறையில் பிரவேசித்தவர்கள். இவர்கள் மூன்றாவது தலைமுறையினர். இன்றும் தொடர்ந்து எழுதிவருபவர்கள் சி.சிவசேகரம், அ.யேசுராசா, வ.ஐ.ச ஜெயபாலன் ஆகியோர் 1970-களின் தொடக்கத்தில் அல்லது 1960-களின் பிற்பகுதியில் கவிதைத்துறையில் பிரவேசித்தவர்கள். நான்காவது தலைமுறையினர் இவர்கள். 1970-களின் பிற்பகுதியிலே ஏராளமான இளைஞர்கள் கவிதை எழுதத் தொடங்கினர். இவர்களுள் பத்துப் பதினைந்து பேராவது குறிப்பிடத்தகுந்த கவிதைகள் எழுதி வருகின்றனர். இவர்களே ஐந்தாவது தலைமுறையினர். சேரன் இத் தலைமுறையில் முதன்மையான இடம் வகிக்கின்றார்.

தலைமுறைப் பகுப்பு வெறும் காலரீதியானது மட்டுமல்ல. இவர்கள் எழுதத் தொடங்கிய காலப் பகுதியில் நிலவிய கவிதைபற்றிய நோக்கமும், சமூக அரசியல் சக்திகளும் இவர்களது கவிதைப் போக்குகளின் கணிசமான பாதிப்பைச் செலுத்தி இருக்கின்றன என்பதையும் நாம் அவதானிக்கலாம். உருவ அம்சத்தை மட்டும் எடுத்துக்கொண்டு நோக்கினால் முதல் இரு தலைமுறைகளையும் சேர்ந்த மஹாகவி, முருகையன், நீலாவணன் ஆகியோர் செய்யுள்வழிக் கவிஞர்களே. தொடக்க காலத்தில் யாப்போசைக்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதிய இவர்கள் பிற்காலத்தில் பேச்சோசைக்கு முக்கியத்துவம் கொடுத்து தற்காலத் தேவைக்கேற்ப மரபுவழிச் செய்யுளை நவீனப் படுத்தியவர்கள். ஆயினும், செய்யுளுக்குப் புறம்பான ஊடகத்தில் கவிதை இயற்றப்பட முடியும் என்பதில் இவர்களுக்கு நம்பிக்கை இருந்ததில்லை. அது மட்டுமன்றி இவர்கள் அதற்கு எதிரானவர்களும் கூட. மஹாகவி, நீலாவணன் ஆகியோர் செய்யுளுக்குப் புறம்பான கவிதை முயற்சிகளை எதிர்த்துக் கவிதைகள் எழுதியுள்ளனர். முருகையன் கட்டுரைகளும் எழுதியுள்ளார். இது இவர்களது தொடக்க காலத்தில் உருவான மனப்பாங்கின் வெளிப்பாடே எனலாம்.

இந்த உருவ அம்சத்தைப் பொறுத்தவரை மூன்றாவது தலைமுறையினரிடையே அதிக நெகிழ்ச்சி காணப்படுகின்றது. எம்.ஏ.நுஃமான் தனது கவிதைகளுக்குச் செய்யுளையே ஊடகமாகக் கொள்ளும் போதிலும் செய்யுள் மட்டுமே கவிதையின் ஊடகமல்ல என்ற கருத்தை வலியுறுத்தி வருபவர். மு.

**கவிதைத்துறையில் பிரவேசித்த காலத்தைக் கொண்டே கவிஞர்களின் தலைமுறை கணிக்கப்படுகின்றது. ஆயினும், ஒரு தலைமுறையைச் சேர்ந்த கவிஞர் அந்தத் தலைமுறைக்குள்ளேயே முடங்கிவிடுவதாகக் கருதக்கூடாது. பொதுவாக, தான் எழுதத் தொடங்கிய காலப்பகுதியின்றி அதை அடுத்து வரும் காலப் பகுதியிலேயே ஒரு படைப்பாளி முதிர்ச்சியடைவதை நாம் அவதானிக்கிறோம்.**

பொன்னம்பலம், சண்முகம் சிவலிங்கம் ஆகியோர் செய்யுள்களையும் வசனத்தையும் தேவைக்கேற்ப தங்கள் கவிதையின் ஊடகமாகப் பயன்படுத்துபவர்கள். தா. இராமலிங்கம் ஆரம்பத்திலிருந்தே மரபுவழிச் செய்யுளை நிராகரித்து வந்துள்ளார். ஆயினும், தன் கவிதைகளில் கூடிய அளவு ஒத்திசைக் கோலங்களை அமைத்துக் கொள்பவர் அவர். பல்வேறுவகையான செய்யுளடிகள் அவரது கவிதையில் கலந்து வருவதும் உண்டு.

நான்காவது, ஐந்தாவது தலைமுறையினரிடம், சிலர் விதிவிலக்காக, செய்யுளை முற்றாக கைவிட்ட நிலையினைக் காண்கின்றோம். ஆயினும், அதிக நெகிழ்ச்சியுடைய செய்யுள் வடிவமான 'அகவல்' இவர்களுட் சிலரின் சில கவிதைகளின் முழுமையாகவும் (சிவசேகரம், ஜெயபாலன்) சிலரின் சில கவிதைகளில் இடைப்பிறவரலாகவும் (யேசுராசா, சேரன்) வரக் காணலாம். ஆக, கடந்த நாற்பது ஆண்டுகளில் செய்யுள் பற்றிய மனப்பாங்கு நெகிழ்ச்சியுற்று வந்திருப்பதையே இவர்கள் மூலம் நாம் உணர்கின்றோம்.

கவிதையின் ஊடகத்தில் மட்டுமன்றி அதன் வெளிப்பாட்டு முறையிலும் ஒவ்வொரு தலைமுறையினரிடையும் நுட்பமான வேறுபாடுகள் இருப்பதையும் நாம் அவதானிக்கலாம். உதாரணமாக, ஒரே பொருளைப் (சாதிக்கொடுமை) பற்றிய மஹாகவியின் 'தேரும் திங்களும்' 'சேரனின் மயான காண்டம்' ஆகியவற்றின் வெளிப்பாட்டு முறையை ஒப்பு நோக்கலாம். அவ்வக் கவிஞருக்கே உரிய தனித்துவமான வெளிப்பாட்டு முறையை அவை காட்டும் அதேவேளை, அவரவர் காலத்துக்கே உரிய சில பொதுப் பண்புகளை அவை கொண்டிருப்பதையும் கூர்ந்து நோக்குவோர் உணரலாம்.

இலக்கியக் கூர்உணர்வு உடையவர்கள் இத் தொகுதியில் இடம் பெறும் பதினொரு கவிஞர்களிடம் வெவ்வேறுவிதமான கவிதைப் பாணியை இனங்காண முடியுமென்று நம்புகிறோம். இது இக் கவிஞர்களின் தனித்துவமாகும். ஈழத்து நவீன கவிதை இத்தகைய தனித்துவமான ஆளுமைகளாலேயே வளம் பெற்றுள்ளது. மஹாகவி யதார்த்த நெறி நின்று, மனிதனின் தன்னுணர்வுக்கு_ அவனது ஆற்றலுக்கு அதிக அழுத்தம் கொடுப்பவர். காட்சிப் படிமங்களினூடு அதைக் கவிதையில் வார்ப்பவர். இதிகாசக் கதையான அகலிகைக்கு அவர் கொடுக்கும் புதிய விளக்கத்தில் கூட நாம் இதைக் காணலாம். அகலிகை கல்லாவது யாருடைய சாபத்தினாலுமல்ல. தன்னுணர்வின் விழிப்பினால்தான். இந்திரன் மேனியெல்லாம் புண் உண்டாவதுயாருடைய சாபத்தினாலுமில்லை; தன் பொல்லாமையின் நோண்டுதலால் தான். அகலிகையைப் போல் மிக இறுக்கமான சாட்சிப் படிமங்களை அவரது கவிதைகள் எல்லாவற்றிலும் காணலாம். இப்படிமங்களினூடு வாசகனை ஓர் உணர்வுச் சூழலுக்குள் கொண்டு போவது மஹாகவியின் பாணி.

முருகையனின் பாணி இதிலிருந்து வேறானது. கருத்து அல்லது சிந்தனை வெளிப்பாடுதான் அவரது கவிதையின் பிரதான அம்சமாகும். விஞ்ஞானத்திற்குரிய பொதுமைப்படுத்தும் சிந்தனைமுறையை இவரது பெரும்பாலான கவிதைகளில் காணலாம். முருகையனின் கவிதைகள் வாசகனை ஓர் அறிவுச் சூழலுக்குள் கொண்டு செல்வன. நீலாவணனிடம் இரு எதிர்நிலைப்பட்ட (Contrasting) போக்குகளைக் காணலாம். ஒன்று, மஹாகவியிடம் காணப்படும் யதார்த்தநெறி. மற்றது, மரபு சார்ந்த ஆன்மீகக் குறியீட்டு நெறி. அவரது 'பாவம் வாத்தியாரிலும்' 'பனிப்பாலையிலும்' இவ்விரு எதிர்நிலைகளைக் காணலாம்.

மூன்றாம், நான்காம், ஐந்தாம் தலைமுறைகளைச் சேர்ந்தவர்களுடன் பெரும்பாலோர் மார்க்சியச் சார்புநிலையானர்கள். ஆயினும், இவர்கள் மார்க்சியத்தை உள்வாங்கிக் கொண்ட முறையிலும் அதை வெளிப்படுத்தும் முறையிலும் ஆளுக்கு ஆள் வெவ்வேறு அளவில் வேறுபடுகின்றனர். அதுவே அவர்களது தனித்துவம். மு, பொன்னம்பலத்தை இங்கு தனியாகக் குறிப்பிட வேண்டும். ஈழத்துக் கவிதையிலே அவர் வேறு ஒரு போக்கை பிரதிபலிக்கின்றார். மு. தளையசிங்கம் முன்வைத்த மார்க்சியத்தை நிராகரித்து மார்ச்சியத்துக்கப்பால் தேடும் ஆன்மீகப் போக்கு அவருடையது. கவிதையில் யதார்த்தத்தைவிட ஆத்மாத்தத்தை வலியுறுத்துபவர் அவர். அவரது அக வெளி சமிக்ஞைகள் இதை நன்கு புலப்படுத்தும். இராமலிங்கமும் ஆன்மீக நோக்குடையவரே. ஆயினும் சமூக யதார்த்தத்தில் அவரது கால்கள் நன்கு பதித்துள்ளன.

தற்காலத் தமிழகக் கவிதையிலே இத்தகைய தனித்துவவேறுபாடுகளை நாம் அபூர்வமாகவே காண்கின்றோம். பாரதி, பாரதிதாசனிடம் காணப்பட்டது போன்ற அல்லது கு.ப. ரா.; பிச்சமூர்த்தி போன்றவர்களிடம் காணப்பட்டது போன்ற துலக்கமான ஆளுமை வேறுபாடுகளை இன்றையத் தமிழகக் கவிஞர்கள் வெளிப்படுத்தவில்லை. பொதுவாகச் சொல்வதானால் எழுத்து மரபினர், வானம்பாடி மரபினர் என இரு மரபினரையே நாம் அங்கு காண்கிறோம். குழுத் தனித்துவத்துக்குள் தனித்தனி ஆளுமைகள் பெரிதும் மறைந்து போய் விட்டன என்றே தோன்றுகின்றது. ஈழத்திலே இத்தகைய குழு மரபுகளை அவதானிக்கமுடியவில்லை. தனி ஆளுமைகளே பிரகாசிக்கின்றன.

இத் தொகுப்பில் இடம் பெறும் பதினொரு கவிஞர்களும் வெவ்வேறு அளவில் தங்களுக்கென்ற தனித்துவமான பாணிகளைக் கொண்டுள்ளனர் என்று கூறும் அதேவேளை அவர்களிடம் காணப்படும் சில அடிப்படையான பொதுப் பண்புகளை

யும் நாம் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். அதில் முதன்மையானது அவர்களின் சமூகச் சார்பாகும். ஈழத்து நவீன தமிழ்க் கவிதையின் பிரதான பண்பே அதன் சமூகச் சார்புதான். கவிதைகள் சமூக, அரசியல் பிரச்சனைகள் தொடர்பான கவிஞனின் பார்வையை, அனுபவத்தை, சமூக நிலைப்பட்ட சிந்தனைகளை வெளிப்படுத்துவதையே நாம் இங்கு சமூகச் சார்பு என்று கருதுகின்றோம். இதிலே சமகாலப்பிரக்ஞை முக்கியமானது. மஹாகவி கூறியுள்ளதுபோல்

இன்றைய காலத்திருக்கும் மனிதர்கள்
இன்றைய காலத்தியங்கும் நோக்குகள்
இன்றைய காலத்திழுப்புகள் எதிர்ப்புகள்
இன்றைய காலத் திக்கட்டுக்கள்

முதலியனவையே ஈழத்து நவீன தமிழ்க் கவிதையின் பிரதான பொருளாய் அமைந்துள்ளன. மஹாகவி, முருகையன், நீலாவணன் முதலிய முன்னோடிகள் - இவர்களது நோக்கும் போக்கும் வெவ்வேறாய் இருப்பினும் - சமூகச் சார்பினை ஈழத்துக் கவிதையின் பிரதான பண்பாக நிலைநிறுத்தினர். இவர்களை அடுத்த தலைமுறைகளில் உருவாகிய மார்க்சிய தத்துவ சார்புடைய கவிஞர்களும் மார்க்சிய எதிர்ப்புக் கவிஞர்களும் கூட கவிதையின் சமூக சார்புக்கு மிகுந்த அழுத்தம் கொடுத்தனர். வாழ்க்கை, சமூகம் பற்றிய ஓர் ஆழமான பார்வையை அவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். பொருள் அடிப்படையில் இவர்களின் கவிதைகளைப் பாகுபடுத்துவது இவற்றின் சமூகச் சார்பை மிக எளிமைப்படுத்துவதாக அமைந்துவிடலாம். எனினும், சாதியமைப்பு, வர்க்க முரண்பாடு, இன ஒடுக்குமுறை போன்றவற்றிற்கு இன்றைய ஈழத்துக் கவிஞர்கள் எவ்வாறு முகம் கொடுத்துள்ளனர் என்பதை இத் தொகுப்பில் உள்ள பெரும்பாலான கவிதைகள் புலப்படுத்துகின்றன என்பதை நாம் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இன்றைய ஈழத்துக் கவிதை பிரதானமாகச் சமூகச் சார்புடையது என்று நாம் கூறும் போது, அது முற்றிலும் தனிமனிதச் சார்பற்றது என்று பொருளாகாது. எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சமூகச் சார்பையும் தனிமனிதச் சார்பையும் வேறுபடுத்தி நோக்கவும் முடியாது. கவிதை முழு மொத்தமான வாழ்க்கை அனுபவ வெளிப்பாடுதான். கவிஞன் சமூக மனிதனாக இருக்கும் அதேவேளை தனிமனிதனாகவும் இருக்கிறான். இவ்விரட்டைத் தன்மை ஒன்றை ஒன்று பாதிப்பது; ஒன்றில் ஒன்று தங்கியிருப்பது. கவிஞனும் ஒரு சமூக மனிதன் என்ற வகையிலே தனக்கும் சமூகத்திற்கும் பொதுவான சமூக, அரசியல் பிரச்சனைகளால் பாதிக்கப்பட்டு அதற்கு முகம் கொடுக்கின்றான். அதேவேளை அவன் ஒரு தனிமனிதன் என்ற வகையிலே அவனுக்கென்று தனிப்பட்ட (Personal) அனுபவங்களும் பிரச்சனைகளும் உண்டு. அவற்றிற்கும் அவன் கவிதை வடிவம் கொடுக்கின்றான். இவ்வகையிலே இன்றைய ஈழத்துக் கவிதையில் கவிஞர்களின் தனிமனிதச் சார்பான வெளிப்பாடுகளையும் காண்கின்றோம். இத் தொகுப்பிலும் அத்தகைய சில கவிதைகளைக் காணலாம். ஆயினும், இன்றைய ஈழத்துக் கவிதையில் சமூகச் சார்பே ஆதிக்கம் செலுத்தும் (Dominant) அம்சம் எனல் தவறாகாது.

சம காலத் தமிழகக் கவிதையுடன் ஒப்புநோக்குகையில் இது எதிர்நிலையானது என்று தோன்றுகிறது. தமிழகக் கவிதை பிரதானமாக அதீத தனிமனிதச் சார்பானது; பெரிதும் உள்நோக்கானது. 'எழுத்து' காலகட்டத்திலிருந்து இப்பண்பு தொடர்ந்து வருவதை அவதானிக்கமுடிகின்றது. தருமு, சிவராமு, நகுலன் போன்றோர் இதன் துருவ முனைகள் எனலாம். (சிவராமு ஈழத்தவர் எனினும் அவரது இலக்கிய வாழ்வு தமிழகத்துக்கே உரியது) 'வானம்பாடிக் குழுவினரே' அங்கு கவிதைக்கு ஒரு சமூக சார்பைக் கொடுக்க முயன்றனர். ஆயினும், புனைவியல் பாங்கே (Romanticism) அவர்களிடம் மேலோங்கிக் காணப்படுகின்றது எனலாம்.

ஈழத்து நவீன தமிழ்க் கவிதையின் பிறிதொரு முக்கிய பண்பு அதன் ஸ்தூலத் தன்மையாகும். (Concreteness) திட்டவட்டமானதாக, நேரடியான பொருட் புலப்பாடு உடையதாகக் கவிதைகள் அமைவதையே நாம் ஸ்தூல தன்மை எனக் குறிப்பிடுகின்றோம். ஸ்தூலமாக கவிதைகள் எளிதில் புரிந்து கொள்ளத் தக்கவையாகவும், வாசகனது உணர்வில் நேரடியாகத் தைக்கக்கூடியவையாகவும் உள்ளன. இத்தகைய கவிதைகள் கவிஞன் தனக்குத் தானே பேசிக் கொண்டவையாக அமைவதில்லை. அவை வாசகனுடன் பேசுகின்றன. கவிஞனின் அனுபவத்தை, அவனது உணர்வை எளிதில் வாசகர்க்குள்ளும் இறக்கிவிடுகின்றன. இதனால் கவிஞனுக்கும் வாசகனுக்கும் இடையே எளிமையான, அதே வேளை வலிமையான செய்திப் பரிமாற்ற சாதனமாகவும் அவை அமைந்து விடுகின்றன. பெரும்பாலான கவிதைகள் உண்மையான, அன்றாட வாழ்க்கை அனுபவத்துடன் உறவுடையவையாக இருப்பதும், அன்றாட வழக்கில் உள்ள இயல்பான மொழி அமைப்பைப் பயன்படுத்துவதும் இதன் காரணமாகலாம். ஆயினும் இருண்மைப் பண்புடைய (obscurity) அல்லது இலகுவில் பிடிபடாத் தன்மையுடைய கவிதைகள் இங்கு எழுதப்படாமலும் இல்லை. இத் தொகுப்பில் உள்ள நீலாவணனின் 'பனிப்பாலை', சண்முகம்சிவலிங்கத்தின் 'வெளியார் வருகை' ஆகிய கவிதைகளை இதற்கு உதாரணமாகத் தரலாம். ஆயினும், இத்தகைய வெளிப்பாட்டு முறைகள் ஈழத்துக் கவிதையில் ஒப்பீட்டளவில் குறைவாகவே காணப்படுகின்றன.

மறுதலையில் இன்றையத் தமிழகக் கவிதை பெரும்பாலும் 'சூக்குமமானது' (abstract) எனலாம். பிடிபடாத்தன்மை அல்லது இருண்மை இவற்றின் பொதுப் பண்பாகக் காணப்படுகின்றது. கவிதை மொழியிலே தற்போக்கான அம்சங்களை (Idiosyncratic Features) - தனியாளுக்குரிய (Private) குறியீடுகள், படிமங்கள் போன்றவற்றை - அதிகம் கையாள்வது மிகவும் முக்கிய காரணம் எனலாம். அதீத தனிமனித வாதமும், அக நோக்கும் இதனை நிர்ணயிக்கின்றன போலும். சமூகச் சார்புடைய அல்லது புறநோக்கான கவிதைகள் எழுதும் வானம்பாடிக் குழுவினர் கூட, சிலர் விதிவிலக்காக, இத்தகைய மொழிக் கூறுகளையே பயன்படுத்துகின்றனர். சற்று டாம்பீகமான மொழிப்பயன் பாட்டினால் செயற்கையான அல்லது சாதாரண வழக்கில் இருந்து முற்றிலும் வேறான மொழிநடை ஒன்றையும் உருவாக்குகின்றனர். இவை அவர்களது கவிதைகளுக்கும் ஒரு சூக்குமத் தன்மையைக் கொடுத்து விடுகின்றன. ஆனால், 'ஈழத்துப் பிடிபடாக்' கவிதைகள் கூட இயல்பான மொழி நடையிலேயே அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு கூறுவதன் மூலம் இன்றைய தமிழகக் கவிதை

> சமகால ஈழத்துக் கவிதையையும் தமிழகக் கவிதையையும் ஒப்புநோக்கி ஆராய்வது எமது நோக்கமல்ல. எனினும் இன்றைய ஈழத்துக் கவிதையின் தனித்துவமான சில அம்சங்களை இனங்கண்டு கொள்வதற்கு இத்தகைய சில குறிப்புகள் பயன்படுத்தக்கூடும்

முழுவதுமே சூக்குமமானது என்று நாம் கருதுவதாகக் கொள்ளக்கூடாது. ஆனால் அதுவே ஆதிக்கப் பண்பு எனல் தவறாகாது.

இந்தச் சிறு அறிமுகத்தில் சமகால ஈழத்துக் கவிதையையும் தமிழகக் கவிதையையும் ஒப்புநோக்கி ஆராய்வது எமது நோக்கமல்ல. எனினும் இன்றைய ஈழத்துக் கவிதையின் தனித்துவமான சில அம்சங்களை இனங்கண்டு கொள்வதற்கு இத்தகைய சில குறிப்புகள் பயன்படுத்தக்கூடும் என்றே கருதுகின்றோம். ஆனால், இரண்டு கவிதைப் போக்குகளிலும் எது சிறந்தது என்று மதிப்பிட நாம் முன்வரவில்லை. இரண்டும் வேறுபட்ட போக்குகள் என்பதைப் புரிந்துகொண்டால் இப்போதைக்குப் போதுமானது.

இத்தொகுப்பிலே ஒவ்வொரு கவிஞரினது படைப்பாக ஐந்து கவிதைகள் மட்டுமே தரப்பட்டுள்ளன. இவைதான் அவ்வக் கவிஞர்களின் சிறந்த படைப்புகள் என்று கருதத்தேவையில்லை. முடிந்தவரை ஒவ்வொரு கவிஞரதும் பன்முகப் பட்ட கவிதைப் போக்கை எடுத்துக் காட்டும் வகையிலேயே வெவ்வேறு வகையான கவிதைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. 1960க்கு முன்னர் எழுதத் தொடங்கியவர்களிடம் சிறுவர்களிடமிருந்தும் 60க்குப் பின்னர், அவர்கள் எழுதிய கவிதைகளே இத் தொகுப்பில் தரப்பட்டுள்ளன. அவ்வகையிலே கடந்த இருபது ஆண்டு காலத்தில் ஐந்து தலைமுறைகளைச் சேர்ந்த ஈழத்துக் கவிஞர்கள் பதினொருவரின் பன்முகப்பட்ட கவித்துவ வெளிப்பாடுகளில் ஒரு சிறு பகுதியையே இத் தொகுப்பு உள்ளடக்குகின்றது. இன்றைய ஈழத்துக் கவிதையை அறிந்து கொள்ள விரும்புவோருக்கு இது ஒரு நுழைவாயிலாக அமையும் என்பது எமது நம்பிக்கை.

தங்கள் படைப்புக்களை இத் தொகுப்பில் சேர்த்துக்கொள்ள அனுமதி அளித்த கவிஞர்களுக்கு, எமது நன்றிகள்; நண்பர் பத்மநாப ஐயரின் அயரா முயற்சியில்லாமல் இந்நூல் உருவாகியே இருக்க முடியாது ஈழத்து இலக்கிய உலகம் அவருக்கு நன்றிக்கடன்பட்டுள்ளது.

தொகுப்பு: வர்மன்

# கஜனின் கவிதைகள்

## புதிய புலர்வுக்காய்....

காலம் காலமாய்
ஆதிக்கங்கள்....
ஆராஜகங்கள்....
அடக்கு முறைகள்....
இந்த
அந்நியப் பாதங்களில்
அழுந்திக்
கொண்டிருக்கிறது
ஈழத்தின் தலைவிதி!
வளைந்து வளைந்து
எங்கள்
முதுகெலும் பெல்லாம்
இற்றுப் போனதால்
நரம்பு வேர்கள்
தாகம் கொண்டது
சுதந்திரம் வேண்டி!

ஏகாதிபத்தியங்களின்
ஏகபோக மாளிகை
மயக்க போதையில்
அரசியல்
தலைவர்களின்
உணர்ச்சி வசனங்களால்
எம் மக்கள்
தலை அறுந்து....
உடல் சரிந்து.....
உயிர் பிரிந்து....
ஆண்டுக்கொருதரம்
முகூர்த்தம் குறித்துக்
கொண்டன
கலவரங்கள்!

இளம் கூற்றுக்கள்
போர்க் கொடி
தூக்கையில்
இலவம் பஞ்சுகள்
இந்தியாவின்
காலடியில்
வீழ்ந்து கிடந்தன.

சிங்கள ஆதிக்கம்
எங்கள்
நெஞ்சிலே உதைத்தது.

காந்தியம்....
அகிம்சை.....
மனித நேயம்....
சமாதானம்.....
இந்த
சொற் சித்திரக்காரர்கள்
எங்கள்
முதுகுக்குப் பின்னால்
ஈட்டி முனைகளைக்
கூர் பார்த்துக்
கொண்டனர்
ஆதிக்கக் கரங்களின்
இரும்புப் பிடிக்குள்
கண்ணீர் வடிக்கிறது
ஈழத்தின் தலைவிதி!


ஒரு
புதிய விடியலுக்காய்
அண்மையில்
கேட்கிறது
துப்பாக்கிப்பூபாளம்!
மௌன இரைச்சலில்
மோனத் தவமிருக்கும்
இருள் முனிவனை
பல
சேவலின் கூவல்கள்
நிஷ்டை கலைக்கும்!
யானைக் கூட்ட
முகிற் காட்டுக் கருமை
கழுவி
வீதியெங்கும் நில
வானின்
குருதியைமடுத்து
சிவப்புக் கோலமிடும்
அந்த
புதிய புலர்வுக்காய்
உயிரை உருக்கும்
இளைய
மெழுகுவர்த்திகள்....
அந்த விடுதலை
வேள்வி
தானமாய் கொண்ட
அப்பாவி உயிர்கள்....

பனித் தேசத்து
வசதிகளின்
போர்வையில்
குளிர் காய்கின்ற
ஈழத்து வித்துகளே..
எம்
மண்ணில்
அவலங்களுக்கு
கை கொஞ்சம்
கொடுங்களேன்.



- கஜன் -
கலாச்சாரம் - 1988

## ஈழமுரசு சிறப்புடன் வீறுநடைபோட
## எமது வாழ்த்துக்கள்




**மிகக் குறுகிய காலத்தில் மக்களின் அன்பையும், ஆதரவையும் பெற்று முன்னணியில் நிற்கும் கடை**

# மக்கள் கடை

## இது உங்கள் கடை

**பிரதி வெள்ளி தோறும் கீரை வகைகள், மரக்கறி வகைகள் உடனுக்குடன் இறக்குமதி செய்து விற்பனை செய்யப்படுகின்றன**

**அறிவித்தல்**

*மக்களின் வேண்டுகோளுக்கிணங்க வெகு விரைவில் கென்யா மரக்கறிகள், இலங்கை, இந்திய மளிகைப் பொருட்கள், மீன் வகைகள், USA புழுங்கல் அரிசி மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும்.*

# மக்கள் கடை

இது உங்கள் கடை

இதோ நீங்கள் இலகுவாக மக்கள் கடையைச் சென்றடைய வழி




**59, Rue Louis Blanc, 75010 Paris.**
**Métro: La Chapelle**

# கொலைக் குழுக்களின் கூட்டமைப்பாக மாறும் ரஷ்யா ?




ரஷ்யா சோவியத் கூட்டமைப்பில் இருந்த காலத்தில் மட்டும் குற்றச் செயல்கள் நடக்காமலா இருந்தன. ஆனால் மிகவும் குறைக்கப்பட்ட நிலையில் காணப்பட்டன என்பது உண்மையே. சோவியத்தின் பாதுகாப்பு இறுக்கம் மற்றும் கம்யூனிச கொள்கைகளில் கீழ் மக்கள் கஷ்டப் பட்டாலும் போதிய உணவு உடை வசதிகளை பெற்றுக் கொண்டதன் காரணமாக கூடிய அளவில் குற்றச் செயல்கள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

ஆனால், சோவியத் யூனியன் சிதைவடைந்தன் பின்னர், இன்று ரஷ்யாவில் குற்றச் செயல்கள் பெருமளவில் அதிகரித்துள்ளன. அதிலும் மொஸ்கோ, உலகில் சட்ட ஒழுங்குகள் அற்ற நகரங்களில் ஒன்று என்று கணிக்கப்பட்டுள்ளது. ரஷ்யக் கூட்டமைப்பு தனியாகப் பிரிந்ததின் பின் 1991-ம் ஆண்டு புதிய பொருளாதாரக் கொள்கை' அறிமுகப்படுத்தப் பட்டது. முன்னர் அரச கட்டுப்பாட்டுக்குள் இருந்த வர்த்தகம் வெளியாருக்கும் விரிவு படுத்தப் பட்டு தாராள சந்தைப்படுத்தும் திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டது. நீண்டகாலம் கம்யூனிசத்தின் கீழ் முற்றிலும் மாறுபட்ட ஒரு பொருளாதாரக் கொள்கைக்குள் வாழ்ந்த மக்கள் இந்த புதிய மறுதலால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். ரஷ்யாவில் நாணய மாற்றில் ரூபிள்கள் பெறுமதி வீழ்ச்சியடைந்ததால் உள்ளூரில் பொருட்களின் விலை பெருமளவில் அதிகரித்தது. அத்துடன் தொழிற்சாலைகளுக்கான மூலப் பொருட்கள் கிடைக்காததால் தொழிற்சாலைகள் மூடப்பட்டன. மற்றும் இயங்கும் தொழிற்சாலைகளும் பெரும் பொருளாதார சிக்கல்களை அனுபவித்தன.

வேலைகளை இழந்த மக்கள் உணவுக்காக கஷ்டப்பட்ட நிலையில், நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரிக்கத் தொடங்கின. வருமானம் இல்லாத நிலையில் அரசிற்கு வரிகளைச் செலுத்த தொழிற்சாலை மற்றும் வேறு நிறுவனங்களில் அதிபர்கள் மறுத்தனர். அரசாங்கம் பணத்திற்கு கஷ்டப்பட்டது, உலக வங்கியும் நாட்டின் பொருளாதார சீர்கேடுகளை காரணமாக்கி கடன்களை தள்ளிப்போட்டு வந்தது. வெளிநாட்டு முதலீடுகள் அதிகரிக்கத் தொடங்கின. இதில் முன்னணியில் நிற்பது அமெரிக்காதான். பல மேற்குநாட்டு நிறுவனங்கள் ரஷ்யாவில் காலூன்றத் தொடங்கின. இது ஒருவகையில் உள்ளூர் தொழிலதிபர்களைப் பாதிக்கத்தான் செய்தது



ரஷ்யாவில் அமெரிக்க சார்பு வர்த்தக அமைப்பின் தலைவரும், மொஸ்கோவில் பல நிறுவனங்களின் பங்கு தாரருமான ஒரு அமெரிக்கர் கடந்த மாதம் மொஸ்கோ நகர வீதியில் வைத்துக் கொலை செய்யப்பட்டார். இவர் நன்கு திட்டமிட்ட ரீதியில் ஒரு கொலைக் குழுவால் கொல்லப்பட்ட சம்பவமானது. வெளிநாட்டு முதலீட்டாளர்களை சிந்திக்க வைத்தது. இது மட்டுமல்ல கடந்த வருட ஆரம்பம் முதல் சுமார் 200-க்கும் மேற்பட்ட அதி உயர் வங்கி அதிகாரிகள் கொலை செய்யப்பட்டார்கள் இவ் வகையான சம்பவங்களின் பின்னணியில் பெரும் தொழிலதிபர்களும், அரச அதிகாரிகளும் இருப்பதாக பாதுகாப்புப் பிரிவினர் கூறுகிறார்கள். அவர்களது கணிப்பின் படி ஒவ்வொரு பத்து குற்றவாளிகளிலும் ஒருவர் இவ்வகையான அதிகாரிகளோ அல்லது தொழிலாளர்களோ இருக்கிறார்கள் என்பது தான. இவ்வருடம் மொஸ்கோவில் மாத்திரம் 20 ஆயிரத்திற்கும் அதிகமான குற்றச் செயல்கள் நடந்துள்ளன.

இக் கொள்ளைகள், ஆட்கடத்தல்கள், கொலைகள் என்பவற்றில் ஏராளமான பயிற்றப் பட்ட உறுப்பினர்கள் இயங்குகிறார்கள். அநேகமான குழுக்கள் பெரும் தொழிற்சாலை அதிபர்கள், முன்னாள் இராணுவத் தளபதிகளினால் நடத்தப்படுகின்றன. ஒரு அதிகாரி இதுபற்றிக் கூறுகையில் "சம்பளத்திற்குப் பதிலாக கோவாவையும், கரட்டையும் பெற்றுக் கொள்வதைவிட இப்படியான குழுக்களில் வேலை செய்தால் பெரும் பணத்தை திரட்டலாம் என இராணுவத்தினர் சிலர் நினைக்கின்றார்கள்" என்றார்.

இவ் வகையான குழுக்களால் நடத்தப்படும் கொலைகள், ஆட்கடத்தல்கள், போன்றவைகள் பெரும்பாலும் பொருளாதார இலக்குகளாகவும், அரசியல் இலக்குகளாகவும் இருக்கின்றன. மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் குறிப்பாக பேர்லின், பாரிஸ், போன்ற நகரங்களில் இக் குழுக்களால் விலை உயர்ந்த கார்கள் திருடப்பட்டு மொஸ்கோவுக்கு கொண்டு செல்லப்படுவதும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. அநேகமாக பொலிஸ் சேவை சீர்குலைந்துள்ள நிலையில் இவ்வகையான சில குழுக்கள் தனிநபர்கள், தொழிற்சாலைகள் போன்றவற்றிற்கு பாதுகாப்பு அளிக்கின்றன.

முன்னாள் இராணுவ அதிகாரியான அலெக்சான்டர் லெபெட் திடீரென அரசியல்வாதியாக மாறி மக்களின் பாதுகாப்பின்மை என்பதனை கொள்கையாக வைத்து கடந்த ரஷ்யத் தேர்தலில் யெல்சினின் பிரதான போட்டியாளராக மாறினார். இவருக்கு பாதுகாப்பு தலைமைப் பதவியை அளித்த யெல்சின் இரண்டாம் கட்ட வாக்கெடுப்பில் இரண்டாவது முறையாக ஜனாதிபதியாக தெரிவானார். அந்த விழாவின் போது பேசிய அவர் ரஷ்ய மக்களின் பாதுகாப்பின்மை, மற்றும் சட்டவிரோதக் குழுக்களை ஒழிப்பது போன்ற வற்றிற்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்றார். ஆனால், நான்கு மாதங்களின் பின்னர் இன்றும் குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளனவே தவிர குறைக்கப்பட வில்லை.

மிகவும் நம்பிக்கையுடன செயல்பட்ட லெபெட், ஜெல்சினால் திடீரென பதவியிலிருந்து தூக்கி வீசப் பட்டுள்ளார். இவர் பதவி ஏற்றதன் பின், முன்னாள் சோவியத் யூனியனின் உளவு நிறுவனமான KGB யின் ஏராளமான திறமைமிக்க அதிகாரிகளை புதிய FSB எனும் கூட்டமைப்பின் பாதுகாப்பு அமைப்புக்குள் இணைத்து திட்டமிட்ட குற்றச் செயல்களை குறைக்கும் நடவடிக்கைகளில் இறங்கினார். அவரது பணிப்பின் பேரில் துரித அதிரடிப் படையொன்றும் 19,000 பேர்களைக் கொண்டு அமைக்கப்பட்டது. லெபெட் பதவி ஏற்றதன் பின் குற்றச் செயல்கள் 50 வீதம் குறைந்தது என்பதை ஒத்துக் கொள்ளும் ஒரு அதிகாரி, திட்டமிட்ட குழுக்களின் நடவடிக்கைகள் 7 விகிதத்தால் அதிகரித்துள்ளன என்கிறார். ரஷ்யக் கூட்டமைப்பின் 85 பிராந்தியங்களில் 34 பிராந்தியங்களில் இவ் வகையான குற்றச் செயல்கள் அதிகம் நடக்கின்றன. அதிலும் தூரகிழக்கு சைபீரியாவே மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

லெபெட்டின் பதவிப்பறிப்புக்கு காரணம் எனச் சொல்லப்படும் உள்துறை அமைச்சர் கூலிக்கோவும், பிரதமர் செர்ன மெடின் போன்றோர்கள் FSB யின் அதிகாரிகளுடன் இணைந்து, 'லெபெட்' சதியொன்றில் ஈடுபடத் திட்டமிட்டுள்ளார் என்று குற்றஞ்சாட்டினார்கள். இவர்களால் FSB யின் அதிகாரிகள் அழைக்கப்பட்டு லெபெட்டினால் அறிமுகப் படுத்தப் பட்ட திட்டங்கள் எதனையும் செயல்படுத்த வேண்டாம் என்றும், அதி தீவிர போக்கு, ஆயுத ரீதியான புரட்சி ஒன்றுக்கு வழி ஏற்படுத்தலாம் என்றும் எச்சரித்துள்ளார்கள். துணிந்து செயலாற்றிய FSB அதிகாரிகள் என்ன செய்வதென்றறியாது திகைத்து செயலற்றுப் போயுள்ளனர். ரஷ்ய அரசிற்குள் உள்ள இவ்வகையான பிளவுபட்ட தன்மைகளும் இன்றைய நிலைகளுக்கு ஒரு காரணம் எனச் சொல்லப்படுகிறது.

ரஷ்ய அதிபர் ஜெல்சின் சுகயீனமாக இருந்த போது அவருக்கு பெரும் உதவியாக இருந்தவர் அனடொலி சுபெய்ஸ். இவர் இன்று கிரெம்பிளின் செல்வாக்கு மிகுந்த நபர்களில் ஒருவராக கருதப்படுகிறார். இவர் அண்மையில் கூறியபடி ஒரு நாட்டின் சமூகம், ஜனநாயக வழிக்கு வரும்போது அரசிற்குள் ஒரு சர்வதிகாரமுறை இருப்பது அவசியம் என்றதற்கிணங்க மீண்டும் மறுபிறவி எடுத்துள்ள யெல்சினின் நடவடிக்கைகள் காட்டுகின்றன. கடந்தவாரம் அவர் ரஷ்யாவின் அரசியல், பாதுகாப்புத் துறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. அவர் ரஷ்யாவின் பலத்தினை மீண்டும் உலக அளவில் நிரூபிப்பார் என்பதைக் காட்டுவதாக அரசியல் அவதானிகள் கூறியுள்ளார்கள்.

**உதயன்**

ஈழமுரசின் வளர்ச்சிக்கும் அதன் மகத்தான பணி தொடரவும் எமது வாழ்த்துக்கள்

யாழ்ரா

மளிகை & வீடியோ

253, Av. Jean Jaures, 93300 Aubervilliers.
M°: La Courneuve ou Fort Aubervilliers
Tel: 01 48 38 26 26

# உலகச் செய்திகள்



## பிரான்சின் புதிய குடியேற்றவாத மனநிலை நியாயமற்றது

### - அமெரிக்கா -

ஜெயிர் நாட்டுக்கான அமெரிக்க தூதுவர் DANIEL SIMPSON நான்கு ஜெயிர் நாட்டு பத்திரிகைகளுக்கு அளி-த்த பேட்டியில் "பிரான்சின் போக்கு உண்மை நிலையை பிரதிபலிப்பதாக இல்லை. ஆபிரிக்காவில் ஆதிக்கம் செலுத்தக் கூடிய நிலையில் பிரான்ஸ் இல்லை. நவ காலனித்துவப் போக்கு ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை" எனவும் அவர் தெரிவித்தார்.

இது ஒருபுறமிருக்க, அகதிகளுக்கு உதவவென சர்வதேசப் படைகள் அங்கு செல்லும் வேலைகள் துரிதப்படுத்தப்பட்டு வருகின்றன. புருண்டியில் யூலையில் நடைபெற்ற இராணுவப்புரட்சிக்கு பின் அந்நாட்டின் மீது விதிக்கப்பட்டிருக்கும் பொருளாதாரத் தடையால் அங்கு உணவுப் பஞ்சம் ஏற்படும் ஆபத்து தோன்றியுள்ளது.

## ருவண்டாவிலும் ஜெயிரிலும் இரகசிய செயற்பாடுகளில் அமெரிக்கா

ருவண்டாவில் ஜெயிர் நகருக்குள் ஊடுருவியுள்ள ருவண்ட படையுள்ளும் அமெரிக்க இராணுவ அதிகாரிகள் செயற்படுவதாக பிரெஞ்சு இராணுவத் தகவல் துறை அறிவித்துள்ளது. படையெடுப்பு நடாத்தி வரும் ருட்சி இனத் தலைவர்களுக்கு இராணுவ தொழில்நுட்ப பயிற்சிகளை இவர்கள் வழங்கிவருவதாக கருதப்படுகின்றது.

தற்போது பிரான்சில் தங்கியிருந்து மருத்துவ சிகிச்சை பெற்றுவரும் ஜெயிர் ஜனாதிபதி முபுட்டுவை கவிழ்க்க அமெரிக்கா முனைவதாக வேறு செய்திகள் தெரிவிக்கின்றன. எனினும், இக்குற்றச் சாட்டுக்களை அமெரிக்கா மறுத்துள்ளது.

ஜெயிர் நாட்டில் வாழும் பிரெஞ்சு மக்களை காக்கவென 1000 பேர் வரையான பிரெஞ்சு படையினர் பரசூட் மூலம் அங்கு இறக்கப்பட்டுள்ளனர்.

## பூட்ரோஸ் காலியின் பதவிக்காலம் முடிகிறது

ஐ.நா. செயலாளர் நாயகம் பூட்ரோஸ் பூட்ரோஸ் காலியின் பதவி டிசம்பர் 31ம் திகதியுடன் முடிவடைவது உறுதியாகிவிட்டது.

இரண்டாவது தடவையாக பதவி வகிக்க விரும்பிய பூட்ரோஸ் காலியை அமெரிக்கா கடுமையாக எதிர்த்தது. பூட்ரோஸ் காலியை எகிப்து, பிரான்ஸ் உட்பட பல நாடுகள் ஆதரித்து வந்தன.

தற்போது ஆபிரிக்க ஒற்றுமை சங்கத்தின் கூட்ட முடிவில் புதிய செயலாளரர் ஒருவரை நியமிப்பது தொடர்பாக ஆலோசிக்கப் பட்டதிலிருந்து ஆபிரிக்க நாடுகளும் தமது ஆதரவை விலக்கிக் கொண்டுள்ளன என்பது தெளிவாகியுள்ளது.

IVOIRE நாட்டைச் சேர்ந்த AMARA ESSY என்பவர் ஆபிரிக்க நாடுகள் சார்பில் போட்டியாளராக நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## தொடர்ந்து பதவி வகிக்கும் எண்ணத்தை நிறுத்துகின்றேன்

ஐ.நா. சபையின் செயலாளர் நாயகமாக தொடர்ந்து பதவி வகிக்கும் எண்ணத்தை தான் தற்காலிகமாக கைவிட்டுள்ளதாக ஐ.நா. செயலாளர் நாயகம் பூட்ரோஸ் பூட்ரோஸ் காலி அறிவித்துள்ளார். இவ்வறிப்பு கடந்த வாரம் வெளியாகியுள்ளது.

அமெரிக்கா இதையிட்டு மகிழ்ச்சி தெரிவித்துள்ளது. பிரான்சின் அனுசரணையைப் பெற்றிருந்த பூட்ரோஸ் காலியின் இந்த முடிவால் புதிய செயலாளர் ஒருவரை பாரிஸ் தெரிவு செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

டிசம்பர் 9-ம் திகதி புதிய செயலாளர் நாயகம் யார் என்பது வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சம்பளம் கோரி 4 இலட்சம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்

ரஷ்யாவிலுள்ள 189 எண்ணைக் கிணறுகளில் 161 கிணறுகளில் வேலை செய்யும் 4 இலட்சத்திறகும் அதிகமான தொழிலாளர்கள் பல மாதங்களாக செலுத்தப்படாதிருக்கும் தமது சம்பளத்தைக் கோரி பாரிய வேலைநிறுத்தில் குதித்துள்ளனர். இவ்வேலை நிறுத்தம் பல வாரங்கள் தொடரலாம் என அஞ்சப்படுகிறது.


**மாபெரும் திறப்புவிழா !!!**

**CEYLON TRADERS**

**அன்பார்ந்த தமிழ்மக்களே !**

BONN BAD GODESBERG, KOBLENZER STR - 83ல்

அமைந்துள்ள வியாபாரக் கேந்திர நிலையம்

**13-12-1996 வெள்ளிக்கிழமை**

உங்கள் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்திட சகல வசதிகளுடனும் ஆரம்பிக்கவுள்ளோம்.

எங்களிடம்

ஆடவர், நங்கையர், மற்றும் சிறுவர்களின் ஆடைவகைகள் எவர் சில்வர் பாத்திரங்கள் அலங்காரப்பொருட்கள் மற்றும் வீடியோ, ஒடியோ, அசல் 22 கரட் தங்க நகைகள், ராசிக்கற்கள் (அவரவர் ராசிக்கமைய) பதித்த தங்க நகைகள், வெள்ளி நகைகள், மளிகைப் பொருட்கள், மரக்கறி, கடலுணவுகள் அனைத்தும் எம்மிடம் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் அனைவரின் ஆதரவையும் நல்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி.

**CEYLON TREDERS**

Koblanzer Str - 83
53177 BONN
Tel- 0228 366377 / Fax- 0228 366378



புதிய தலைமையில்

*Asia Bazar*

**மீண்டும் புதுப்பொலிவுடன் உங்களை வரவேற்கின்றது**

*Asia Bazar*

Monchenglad bach வில் அமைந்திருக்கும் Asia Bazar இல் சகல விதமான மளிகைப் பொருட்கள் சிங்கப்பூரிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 22 கரட் தங்கநகைகள், பட்டுப்புடவைகள், பட்டுவேட்டிகள், சிங்கப்பூர், அமெரிக்காவிலிருந்து தருவிக்கப்பட்ட சிறுவர் சிறுமியருக்கான ரெடிமேட் உடைகள் எவர்சில்வர் பொருட்கள்.

வைபவங்களுக்குத் தேவையான உணவு வகைகள் அனைத்தும் இலங்கை, இந்தியா, சிங்கப்பூருக்கான உடனடி உண்டியல் சேவை.

பிரதி வெள்ளிதோறும் இலங்கை முறையில் தயாரிக்கப்பட்ட பாண் அனைத்தையும் நீங்கள் மனநிறைவுடன் பெற்றுக் கொள்ளலாம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றது.

*Asia Bazar*

# சிஸ்ஜோர்டானி பிரதேசம் இஸ்ரேலியர்களுக்கு சொந்தம்

1967ம் ஆண்டு இஸ்ரேலியர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட சிஸ் ஜோர்டானிப் பிரதேசம் என்றென்றைக்குமே இஸ்ரேலியர்களுக்குத்தான் சொந்தமாக இருக்கும். இவ்வாறு இஸ்ரேலியப் பிரதமர் பென்சமின் நெட்டன்யாகு தெரிவித்துள்ளார்.

பிரதமர் அலுவலகம் மேற்படி குடியேற்றத் திட்டம் தொடர்பாக விடுத்த அறிக்கையில், யூதர்கள் மட்டும் வாழக் கூடிய இந் நிலத்தின் அபிவிருத்தி பணத்தட்டுப்பாடு நிலவும் இவ்வாண்டில் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை ஜெய்ரில் கூடிய அரபு லீக் தனது தீர்மானத்தில் இஸ்ரேலின் விஸ்தரிப்புக் கொள்கையை கண்டித்துள்ளதுடன் யசிர் அரபாத்தும், சிரியத் தலைவரும் இதனைக் கண்டிக்க வேண்டும் எனவும் கோரப் பட்டுள்ளது.

# ஜோன் மேஜர் ஆட்சி கவிழ்கின்றது

ஒரே ஒரு மேலதிக வாக்கைக் கொண்டு ஆட்சி நடாத்தி வந்த பிரித்தானியப் பிரதமர் ஜோன் மேஜர் கடந்த 07.12.96 வெள்ளி முதல் பெரும்பான்மைப் பலத்தை இழந்து விட்டார்.

SIR JOHN GORST என்ற HENDON பிரதேச உறுப்பினர் தனது பதவியை இராஜினாமா செய்ததைத் தொடர்ந்தே இந் நிலை உருவாகியுள்ளது.

1992-ல் பதவியேற்கும் போது 13 பேர் மேலதிக ஆசனங்களைக் கொண்டிருந்த ஜோன் மேஜர் தற்போது பெரும்பான்மையற்றவரர்க உள்ளார்.

HENDON பிரதேசத்தில் உள்ள வைத்தியசாலை ஒன்றை பிரதமர் மூடிவிட உத்தேசித்ததைத் தொடர்ந்தே இம்முடிவைத் தான் எடுத்ததாக இராஜினாமா செய்த பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

# சீனாவில் மத நடவடிக்கை அனுமதிக்கப்பட வேண்டும்

## - பாப்பரசர் -

சீனாவில் மத நடவடிக்கைகளை அனுமதிக்க வேண்டும் என பாப்பரசர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து சீனா உள்நாட்டு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் சீன மக்களின் சுதந்திரத்தை சீன அரசு மதிக்கின்றது. மதம் மீது நம்பிக்கை வைக்க அவர்களுக்கு உரிமையுண்டு.

ஆனால் பிற நாட்டு தலையீடுகள் அனுமதிக்க முடியாதவை. அது கபட நோக்கம் கொண்டவை என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கத்தோலிக்கர்கள் வத்திக்கானுடன் [illegible] அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கை குறித்தே இக்கருத்து வெளியாகியுள்ளது.

# நாடுகடத்தப்பட்ட பலஸ்தீனர்கள் உண்ணாவிரதப் போராட்டம்

16 மாதங்களுக்கு முன் லிபியாவிலிருந்து பலஸ்தீனத்திற்கு நாடு கடத்தப்பட்ட பலஸ்தீனர்களை உள்ளே நுழைய விட இஸ்ரேல் மறுத்து விட்டது. இரு நாட்டு எல்லையிலும் கடந்த16 மாதங்களைக் கழித்த இவர்கள் தமது உரிமை வேண்டி உண்ணாவிரதப் போராட்டத்தினை ஆரம்பித்துள்ளதாக எல்லைகள் அற்ற மருத்துவர் (MSF) சங்கம் அறிவித்துள்ளது.

இது ஒரு புறமிருக்க இவர்களை ஏற்றுக்கொள்ள எந்த நாடும் முன்வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# ஹிரோசிமா ஞாபகார்த்த சின்னம் பாதுகாக்கப்படக் கூடாது

## - அமெரிக்கா -

இரண்டாம் உலகப் போர் காலத்தில் 06 ஆகஸ்ட் 1945-ம் ஆண்டு அமெரிக்கர்களால் ஜப்பானிய நகர் மீது அணுகுண்டு வீசப்பட்டது. ஜப்பானை அழித்து விட்டோம் என மமதையுடன் செய்யப்பட்ட காரியம் அது.

இலட்சக்கணக்கானோர்களின் உயிருக்கும், கோடிக்கணக்கான உடமைகளுக்கும் அழிவு நிலைவித்த இந்த மனித நாகரிகமற்ற செயல் மீண்டும் நிகழக்கூடாது என்பதற்காக நிர்மாணிக்கப்பட்ட இந்தத் தூபியை UNES-CO பாதுகாக்க முன்வந்ததை அமெரிக்கா எதிர்த்துள்ளது.

இது தொடர்பான அவசரக் கூட்டம் ஒன்று அடுத்த வாரம் நடைபெறவுள்ளது.

# அல்ஜீரியாவில் ஜனாதிபதி ஆட்சி முறை

கடந்த நவம்பர் 28ம் திகதி நடைபெற்ற அபிப்பிராய வாக்கெடுப்பின் மூலம் அல்ஜீரிய ஜனாதிபதி ஜெருவால் சகல அதிகாரங்களும் பெற்ற ஜனாதிபதியாகியுள்ளார். வாக்கெடுப்பு நாளன்று மட்டும் இடம்பெற்ற கலவரத்தில் 26 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

பிரான்ஸ் நாட்டின் பின்பலம் பெற்ற ஜனாதிபதி ஜெருவால் இஸ்லாமிய தீவிரவாதிகளை வெல்வதற்கு இவ் அதிகாரத்தை பயன்படுத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ் அபிப்பிராய வாக்கெடுப்பு முடிவுகள் சிலநாட்களில் பிரஞ்சு தலைநகர் பாரிசில் குண்டுத் தாக்குதல் நடாத்தப் பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# ஐரோப்பிய சமூகத்துடன் இணைய போலந்து தயார்

கடந்த வாரம் பிரான்சில் தனது முதலாவது உத்தியோக பூர்வமான சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருந்த போலந்து ஜனாதிபதி அலெக்சாண்டர் கவாஸ்னெஸ்கி தனது நாடு ஐரோப்பிய சமூகத்துடன் இணையத் தயாராக இருக்கின்றது எனத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒரு வருட காலமாக போலந்து ஜனாதிபதியாக இருக்கும் இவர் நேட்டோ அணியிலும் தனது நாடு இணைய வேண்டும் என ஆர்வம் கொண்டுள்ளார்.

கடந்த டிசம்பர் 2ம் திகதி லிஸ்பர்னில் நடைபெற்ற ஐரோப்பிய பாதுகாப்பு மாநாட்டில் கலந்து கொண்ட ரஸ்யப் பிரதமர் நேட்டோ அணியின் கிழக்கு நோக்கிய விஸ்தரிப்புக்கு தனது எதிர்ப்பைத் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வாரக் குறிப்பு

**01.12.96 ஞாயிற்றுக்கிழமை**

- சேர்பிய அரசு விடுத்துள்ள அறிக்கையில் மக்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களுக்கு கடுமையான கட்டுப்பாடு விடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்ள்ளது.
- சேர்பிய எதிர்க்கட்சியினர் நடாத்திவரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளை பிரெஞ்சு அரசியல்வாதிகள் பாராட்டியுள்ளனர்.
- ரஷ்சிய சார்பாளரான திரு PETRU LUCINSCKI மோல்டாவியின் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
- உக்கிரேன் நாட்டில் இயங்கி வந்த இரண்டு அணு உலைகளில் ஒன்று மூடப்பட்டுள்ளது.
- செனகல் நாட்டில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் சோசலிசக் கட்சி வெற்றி பெற்றுள்ளது. குறிப்பாக DAKAR நகரத்தையும் சோசலிசக் கட்சி கைப்பற்றியுள்ளது.
- தொழிலாளர் வேலை நிறுத்தம் காரணமாக பிரபல இத்தாலிய பத்திரிகையான LA STAMPA வெளிவரவில்லை.

**02.12.96 திங்கட்கிழமை**

- கிரேக்கத்தில் சோசலிஸ்ட் அரசின் வரவு செலவுத் திட்டத்திற்கு எதிராக விவசாயிகள் போராட்டம்.
- ஜனாதிபதி கிளிங்டன் இருவார கால இடைவெளிக்குப் பின்னர் வெள்ளை மாளிகை திரும்பினார்.
- 21ம் நூற்றாண்டிற்கான சமாதான அடித்தளத்தை ஏற்படுத்துவது தொடர்பாக ஆராய ஐரோப்பிய பாதுகாப்பு உச்சி மாநாடு போர்த்துக்கல் தலைநகரில் ஆரம்பம்.

**03.12.96 செவ்வாக்கிழமை**

- ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் IGOR RODINOV அமெரிக்காவில் மேற்கொள்ள இருந்த சுற்றுப்பயணம் திடீரென இரத்துச் செய்யப்பட்டுள்ளது.
- ஈராக்கிய அதிபர் சதாம் குசைனின் பாதுகாப்புப் படையை சேர்ந்த கேர்ணல் ROUKAN ABDEL என்பவர் திடீரென சுகயீனமுற்றதால் பிரான்சின் தலைநகர் பாரிசில் உள்ள வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
- சேர்பியர்களால் அழிக்கப்பட்ட வுக்கோவாருக்கு திடீர் சுற்றுப்பயணம் மேற்கொண்ட குரோஷிய ஜனாதிபதி சேர்பிய மக்கள் எவ் அச்சமும் இன்றி அங்கு வாழலாம் எனத் தெரிவித்துள்ளார்.
- மாட்டுப் பைத்திய நோய் தொடர்பாக ஐரோப்பிய ஆணைக்குழு எடுத்த முடிவுகள் திருப்தியற்றவை என ஐரோப்பிய ஆணையகம் தெரிவித்துள்ளது.

**04.12.96 புதன்கிழமை**

- ரோலஜி போன்ற மதக்குழுக்களுக்கு எதிராக இயங்கிவந்த CULT AWARENESS NET WORK என்ற அமெரிக்க நிறுவனம் சைன்ரோலஜி மதக் குழுவுக்கு ஆவணங்களுடன் விற்பனை.
- ஜெயிர் நாட்டுக்கு சமாதானப்படை அனுப்ப வேண்டியது அத்தியாவசியமென ஐநா. அவதானிகள் குழு பரிந்துரைத்துள்ளது.
- அப்கானிஸ்தானில் தலிபான்களால் பதவி நீக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி ரபானி பாரிஸ் விஜயம். ரோம்நகரில் அகதியாக வாழும் ஆப்கானிஸ்தான் முன்னாள் மன்னர் ZAHER SHAH தலிபன்கள் மீது அழுத்தம் பிரயோகிக்க தவறிவிட்டார் என ஜனாதிபதி கவலை தெரிவித்துள்ளார்.
- ஊழல் குற்றச்சாட்டு விசாரணை என்ற பெயரில் ஜப்பானிய சுகாதார மந்திரியின் வீடு சோதனை. கடந்தவாரம் உதவி மந்திரியின் வீடு சோதனையிடப்பட்டிருந்தது.
- ஐரோப்பாவிலுள்ள நேட்டோ படைப்பிரிவுத் தளபதியாக ஐரோப்பியர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்ற பிரெஞ்சு ஜனாதிபதியின் கோரிக்கையை அமெரிக்கா மறுத்துள்ளது.

**05.12.96 வியாழக்கிழமை**

- அமெரிக்காவின் இராஜாங்க செயலாளராக திருமதி MADELEINE ALBERIGHT நியமிக்கப்பட்டுள்ளார். இந்தப் பதவியை வகிக்கும் முதல் பெண் இவராவார். ஐநா. பிரதிநிதியாக செயற்பட்ட இவர் பூட்ரஸ்காலி விடயத்திலும், ஈராக்கிய விடயத்திலும் கடும் போக்கைக் கடைப்பிடித்த இரும்புப் பெண்.
- அமெரிக்க பாதுகாப்பு செயலாளராக இருந்த வில்லியம் பெரியும், அணு ஆயுதத் துறைக்குப் பொறுப்பாக இருந்த GEORGE LEE BUTLER உம் அமெரிக்காவின் அணு ஆயுதக் கொள்கையை விமர்சித்துள்ளனர்.
- நேட்டோ உறுப்பு நாடுகளின் அடுத்த மகாநாடு யூலை 04 முதல் 14 வரை நடைபெற உள்ளது.
- ஆப்கானிஸ்தான் முன்னாள் அரசியல் தலைவர் BABRAK KARMAL மொஸ்கோவில் காலமானார்.

**06.12.96 வெள்ளிக்கிழமை**

- பிரான்சில் UDF, RPR, PC கட்சிகளைச் சேர்ந்த பலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். ஊழல் தொடர்பாக விசாரணைக்கு உள்ளாக்கப் பட்டவர்களில் பாரிஸ் மேயரின் மனைவியும் ஒருவர்.
- பிரித்தானியப் பிரதமர்தனது பெரும்பான்மையை இழந்துள்ளார்.
- யூகோஸ்லாவிய ஜனாதிபதி மிலோஸிச் தடை செய்த பி 92 வானொலி மீண்டும் அனுமதி. அமெரிக்க பிரஜைகள் சங்கத் தலைவர் வானொலி நிர்வாகிக்குப் பாராட்டு.
- ரஷ்யப் பாராளுமன்றத்தில் நடைபெற இருந்த வரவு செலவு திட்ட வாக்கெடுப்பு பின்போடப்பட்டுள்ளது.
- ஆறுவருட தடைக்குப்பின் ஈராக்கியப் பெற்றோல் அடுத்தவாரம் முதல் ஏற்றுமதியாகும்.

**07.12.96 சனிக்கிழமை**

- பிரித்தானிய இளவரசர் சார்ல்ஸ், இளவரசி டயானாவும் விரைவில் ஒரே மேடையில் தோன்ற உள்ளனர் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன. இவர்கள் விவாகரத்து செய்து விட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.
- சுவிசில் 1994ல் இடம் பெற்ற கூட்டுக் கொலையில் காரணமாகக் கருதப்பட்ட TEMPLE SOLAIRE இன் தலைவர் LUK JOURET அவுஸ்திரேலியாவில் தலைமறைவாக வாழ்வதாகத் தகவல் வெளியாகி உள்ளது.
- ஜெயிர் நாட்டில் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட ஹூட்டு இனத்தவர்களின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக ஐநா.பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.
- டப்ளினில் நடைபெற உள்ள ஐரோப்பிய மகாநாட்டுக்கு புறப்படுவதற்கு முன்னர் பிரான்ஸ் ஜனாதிபதி ஜக்சிராக் மக்களுக்கு உரையாற்றுவார் எனத் தெரியவருகின்றது.

# ஈழமுரசின் பணி தொடர எமது வாழ்த்துக்கள்

## வாடிக்கையாளர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்

*வாடிக்கையாளர்களுக்கு ஓர் மகிழ்ச்சிகரமான அறிவிப்பு:*

**எமது வாடிக்கையாளர்களின் நன்மை கருதி எமது புதிய ஸ்தாபனம்**

**14/12/96 முதல்**

203, RUE DU FG. ST. DENIS,
75010 PARIS.

என்னும் முகவரியில் இடம் மாற்றப்படவுள்ளது என்பதை தாழ்மையுடன் அறியத் தருகிறோம்.

14/12/96 சனிக்கிழமை மாலை 4.12 மணியிலிருந்து 5.42 மணிவரை உள்ள சுப வேளையில் எமது வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

### ஆடவர்களுக்கு ஓர் நற்செய்தி

எமது புதிய ஸ்தாபனத்தில் ஆடவர்களுக்கென ஓர் பிரிவு அமைத்திருக்கிறோம். ஆடவர்களுக்கான சகல ஆடைகளையும் தெரிவு செய்திட உடன் நாடவேண்டிய ஒரே இடம்

# திருப்பதி
## பெஷன் கவுஸ்




*குழந்தைகள், சிறுவர்கள், சிறுமிகள், நங்கையர்கள், ஆடவர் அனைவர்க்கும் ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் ஆடைகளைத் தெரிவு செய்திட நம்பிக்கையான ஒரே இடம்*



Tel:
01 40 37 56 44

# திருப்பதி பெஷன் கவுஸ்

அன்பு இதயங்களே!

உங்கள் அழகுக்கு அழகு செய்யும் அழகான ஆடைகளுக்கு திருப்பதியை நாடுங்கள்.

**திருப்பதியின் தெரிவுகள் நிச்சயமாக உங்களைத் திருப்திப்படுத்தும்.**

**திருப்பதியின் திறப்புவிழாவை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை**

**50% கழிவில்**

*12/12/96* முதல் *14/01/97* வரை

**THIRUPPATHY**
203, Rue du Fbg. St. Denis, 75010 Paris.
M°: La Chapelle *ou* Gare du Nord



# சப்பாற்றிஸ்ரா:
# தேசிய விடுதலை இயக்கத்தில் பெண்கள்

**மெக்சிக்கோவில் சியாப்பா மாநிலத்தில் அரச அடக்கு முறைக்கு எதிராக சப்பாற்றிஸ்ரா தேசிய விடுதலை இயக்கம் (CCRI) போராடி வருவது தெரிந்ததே. இவ்வமைப்பின் பெண்கள் பிரதிநிதியான றமோனாவினதும், பெண்கள் இராணுவ அணிக்குத் தலைவியான அனா மரியாவினதும் பேட்டி 'Ya basta' என்ற புத்தகத்திலிருந்து நன்றியுடன் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது.**



**கேள்வி:**

சப்பாற்றிஸ்ரா தேசிய விடுதலையில் பெண்களின் பங்களிப்பு எவ்வாறு ஆரம்பமானது?

**றமோனா:**

ஆரம்பத்தில் கிராம மக்களிடையே இப் போராட்டம் பற்றிப் பேசப்பட்ட போது பெண்களின் பங்களிப்புப்பற்றி பேசப்படவேயில்லை. நூற்றாண்டு காலமாக நடந்து கொண்டிருக்கும் இவ் அடக்குமுறை ஓர் வழக்கமாகிவிட்டது. ஆயினும் கிராமத்து மக்கள் தங்களைப் படிப்படியாக போராட்டத்தில் இணைத்துகொள்ளத் துவங்கிய போது, பெண்கள் தமது பங்களிப்புப் பற்றிப் புரிந்துகொள்ளத் தொடங்கியதுடன், தாமும் போராட்டத்தில் இணைந்து கொள்ள வேண்டிய அவசியத்தையும் உணர்ந்து கொண்டனர். இறுதியில் ஆண்களைப் போல் தாமும் தமது உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கத் தொடங்கினர். ஆரம்பத்தில் பெண்கள் அரசியல் கூட்டங்களில் கலந்து கொள்வதற்குக் கூட அனுமதிக்கப்பட வில்லை. பின்பு பெண்கள் ஒன்றிணைந்து விடுதலை இயக்கத்தில் தமது பங்களிப்பை எடுத்துக் கொண்டனர். தொடர்ச்சியான அவர்களது போராட்டத்தினால் பெண்களுக்கெனப் புரட்சிகரச் சட்டம் ஒன்றையும் கோரினார்கள்.

**அனா மரியா:**

ஆண்களும் பெண்களும் இணைந்த இப் போராட்டத்தின் முக்கிய கோரிக்கை நாம் வாழும் மண்ணை எமக்குச் சொந்தமாக்குவதேயாகும். எமது கோரிக்கைகளுள் விசேடமான ஒன்று பெண்கள் பற்றியது. ஏனெனில் ஆண்கள் தம் சார்பாகச் சிந்திப்பதாலும், பெண்களின் கருத்துக்களைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளாததாலும் அவர்களுக்கு எங்களுக்குத் தேவையான சில விடயங்கள் புரிவதில்லை. இதன் அடிப்படையிலேயே எமது கோரிக்கைகள் உருவாகின. அவையாவன, பெண்களுக்கான விசேட பாடசாலைகள் _ வயது போனவர்களாக இருந்தாலும், பலர் எழுத வாசிக்க விரும்புகிறார்கள். பிரசவ விடுதி _ இங்கு பிரசவத்தை இலகுவாக்க முடியும். வீட்டில் நடைபெறும் பிரசவத்தின்போது தூசுகள் படிந்த நிலங்களில் குழந்தையைப் பெற்றெடுப்பதுடன், ஆண்கள் வேலைக்குப் பாவிக்கும் 'மஷேட்ட' கத்தியால் (செவ்விந்தியர்கள் பாவிக்கும் கத்தி) தொப்புள் கொடி வெட்டப்படுகின்றது. பிரசவத்தின் பின் தாயையும், பிள்ளையையும் கவனித்துக் கொள்வதற்கான குறைந்தபட்ச மருத்துவத் தேவைகள் கூட இங்கில்லை. பெண் மருத்துவர்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றார்கள். அத்தோடு கைவேலைகள், பின்னல் வேலைகளை இலகுவாக்குவதற்கு தொழில்பட்டறைகளையும் சில இயந்திரங்களையும் கோருகிறோம். நகர்ப்புற முதலாளிகள் நியாயமற்ற முறையில் இவர்களிடமிருந்து பொருட்களைக் கொள்வனவு செய்வதைத் தடுக்கவும் இவர்கள் தமது உற்பத்திகளை தாமே சந்தைமயப் படுத்துவதற்கும், சந்தைகளை உருவாக்குமாறு கோருகின்றார்கள். செவ்விந்தியப் பெண்கள் கொடூரமாக நடத்தப் படுவதோடு, நீதியின்மை, பாகுபாடு, இனவாதச் செயல்களாலும் பாதிக்கப்படுகின்றனர்.

மேலும் ஒரு கோரிக்கை, சிறுவர்களுக்கான பாடசாலைகள், ஆரம்பப் பாடசாலைகள், பட்டினியால் வாடும் குழந்தைகளுக்கு உணவு போன்றவையாகும். தற்போதைய அரசியல் யாப்பில் பெண்கள் நிலத்தின் சொந்தக்காரர்களாக இருக்க முடியாது. எம்முடைய புதிய சட்டத்தில் இதற்கான சட்டப் பிரிவு உண்டு. இவ்வுரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும். எமக்கென நல்ல விவசாய நிலங்கள் சொந்தமாக்கப்பட வேண்டும்.

இத் தேசிய அமைப்புக்குள் பெண்களுக்கான சட்டம் இல்லாமல் இருந்ததால் நாம் எதிர்ப்புத் தெரிவித்ததோடு, சில தோழியர் இணைந்து ஒரு மாதிரிச் சட்டத்தை எழுதி அமைப்புக் குழுக் கூட்டத்தின் போது வாசித்த போது ஒருவரும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. இதன் பின்னர் இம் மாதிரிச் சட்டம் கிராம மட்டத்திலான குழுக்களிடையே விவாதிக்கப்பட்டு ஆலோசனைகளும், கருத்துக்களும் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின்னர் பெண்களுக்கான சட்டம் உருவாக்கப்பட்டது.

**கேள்வி:**

செவ்விந்தியப் பெண்களின் வாழ்க்கை முறைபற்றிக் கூற முடியுமா?

**அனா மரியா:**

பெண் ஓய்வின்றி நாள் முழுதும் உழைக்கிறாள். அவள் அதிகாலை மூன்று மணிக்கு எழுந்து ஆண்களுக்கு காலை உணவு தயாரிப்பதற்காக கைக்குழந்தையை முதுகில் அல்லது நெஞ்சில் சுமந்து சென்று விறகும், சோளமும் சேகரித்து வருகிறாள். பின்னர் பகல் முழுவதும் வீட்டு வேலைகளில் ஈடுபடுகிறாள். இப்படியே கிழமை முழுவதும் கழிக்கிறாள். ஆனால் ஆண்கள் ஞாயிற்றுக்கிழமையிலாவது தமது பொழுது போக்குகளை சீட்டாட்டத்திலும், கூடைப்பந்தாட்டம் விளையாடுவதிலும் கழிக்கின்றனர். பெண்ணுக்கு பொழுது போக்குவதற்கு நேரம் கிடையாது.

**றமோனா:**

பெண்களுக்கு பாடசாலைக்குப் போவதற்கோ, பொழுது போக்கைக் கழிப்பதற்கோ அனுமதி கிடையாது. சிறுவயதிலிருந்தே எங்கள் தம்பிமாரைக் காவிக்கொண்டு திரியவேண்டும். சோளம் அரைப்பதற்கும், ரோட்டிலாஸ் செய்வதற்கும் (சோளத்தில் செய்யப்படும் உணவு) உதவ வேண்டும். வீடு கூட்டிக் கழுவ வேண்டும். தாய் வீட்டில் குழந்தையை விட்டுச் செல்லும் போது குடும்பத்தின் மூத்த பெண் பிள்ளை அவர்களைப் பார்க்கும் பொறுப்பை ஏற்க வேண்டும். அதனாலேயே அவளுக்கு பாடசாலை வாழ்வு மறுக்கப்படுகிறது. இது போன்று தான் எனக்கும் நேர்ந்தது.

பெண்கள் குடும்பத்தினராலேயோ அல்லது சம்பிரதாய முறைகளுக்காகவோ பதின் மூன்று அல்லது பதின்நான்கு வயதில் திருமணம் செய்ய நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். எமது சமுதாயத்தில் ஆணுக்கு ஒரு பெண்ணைப் பிடித்துப் போய்விட்டால் அந்தப் பெண்ணிடம் சம்மதம் கேட்பதற்குப் பதிலாக, பெண்ணின் தகப்பனாருக்கு மதுபானம் அல்லது உணவேதும் எடுத்துச் சென்று கொடுக்கிறான். தகப்பனார் அதனை ஏற்றுக் கொண்டுவிட்டால் பெண்ணின் விருப்பம் கேட்கப்படாமலே திருமணம் நிச்சயிக்கப்படும். பல பெண்கள் அழுதபடியே மாப்பிள்ளையின் வீட்டிற்கோ அல்லது தேவாலயத்திற்கோ செல்கின்றனர்.

கிராமத்தில் திருமணமாகாமல் இருவர் இணைந்து வாழ்வதென்பது முடியாத விடயம். அத்துடன் அது ஒரு வழமைக்கு எதிரான செயல். அப்படி யாராவது நடந்து கொண்டுவிட்டால் அவர்களுக்கு சிறைத்தண்டனை அல்லது கூடைப்பந்தாட்டம் விளையாடும் மைதானத்தில் கட்டிவைக்கப்பட்டு கிராமத்து மக்கள் அவர்களுக்கு தண்டனை கொடுப்பார்கள். தண்டனை போதும் என்ற முடிவுக்கு வந்த பின்னரே விடுவிக்கப் படுவார்கள். இதனாலே சுதந்திரமான துணையை தெரிவு செய்யலாம் என்று எமது சட்டத்தில் உண்டு.

**கேள்வி:**

நீங்கள் ச.தே.வி. இயக்கத்தில் எவ்வாறு இணைந்து கொண்டீர்கள்?

**றமோனா:**

கிராமத்தில் வறுமை நிலையிலிருந்த என்னை விடுவித்துக் கொள்ள நகரத்துக்கு வந்தபின்னர்தான் எனக்கு பெண்களின் உண்மையான நிலைபற்றி புரியத் தொடங்கியது. நாங்கள் நகரங்களில் கவனிப்பற்றும் தேவையற்றோராகவும், கணக்கில் எடுக்கப்படாததையும், எமது உற்பத்திகள் மிகக் குறைந்த விலையில் கொள்வனவு செய்யப்படுவதையும் கண்டு கொண்ட நான் இதற்கு எதிராக நாம் போராட வேண்டிய தேவையை உணர்ந்து கொண்டேன்.

**அனா மரியா:**

நான் மிக இளவயதிலிருந்தே ச.தே.வி.இயக்கத்தில் சேர்ந்து கொண்டேன். எனக்கு அப்போது பதின்நான்கு வயது. அனுபவம் நிறைந்த தோழர்கள் எங்களுக்கு ஆரம்பப் பள்ளியை மேற்கொண்டனர். எழுதவும், வாசிக்கவும் கற்றுத்தந்தனர். பின்னர் ஆயுதப் பயிற்சியையும் எடுத்தனர். மக்களுடன் அரசியல் பேசுவதற்கும், போராட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளையும் விளக்குவதற்கு வகுப்புகள் எடுத்தனர். இவ்வாறு நான் படிப்படியாக கற்றுக் கொண்டேன். அது ஒரு நீண்ட கதை. சிறுமியாக இருந்தபோது எமது பெற்றோருடன் இணைந்து அரசியல் போராட்டத்தில் இணைந்து கொண்டேன். நாங்கள் கூட்டங்களுக்கும், ஊர்வலங்களுக்கும் அடிக்கடி போனோம். எனது .பெற்றோரும் வேறு பலரும் அமைப்பொன்றில் இருந்தனர். பிள்ளைகளாகிய நாங்களும் அவர்களுடன் போனோம். எனது எட்டாவது வயதிலிருந்தே அனுபவங்களையும் விழிப்புணர்வையும் பெற்றுக் கொண்டேன்.

எமது அகிம்சைப் போராட்டத்தினால் கோரிக்கைகள் ஒன்றும் நிறைவு செய்யப்படாத பட்சத்திலேயே நாம் பலவந்தமாக நிலங்களையும் கைப்பற்றிக் கொண்டோம். அதன்பின்னர் இராணுவத்தினர் வந்து எம்மைப் பலமாகத் தாக்கியதுடன் சித்திரவதையும் செய்து, கொடுமைப்படுத்தி வெளியேற்றினர். இப்படியான அகோர

மான அடக்குமுறை, பலாத்காரத்தின் பின்னரேயே நாம் எம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஆயுதம் தரிப்பது என்ற முடிவுக்கு வந்தோம். அரசானது அமைதியான தீர்வொன்றை விரும்பாத பட்சத்தில் அதனை ஆயுதப் போராட்டத்தினூடாகக் காண்போம்! என்று முடிவெடுத்தோம். இப்படித்தான் பத்து வருடங்களுக்கு முன்னர் நாங்கள் முதன் முதலாக இரு பெண்கள் இயக்கத்தில் வந்து சேர்ந்தோம். அப்போது மொத்தமாக எட்டு முதல் பத்துப் பேர் வரையிலேயே இருந்தனர். இதனையறிந்த மற்றப் பெண்களும் காலத்திற்கு காலம் வந்து இணைந்து கொண்டதுடன் அவர்களது பெண்பிள்ளைகளுக்கும், சகோதரிகளுக்கும், பேத்திகளுக்கும் போராட்டத்தின் அவசியம் பற்றி எடுத்துக் கூறினர். இப்படியே ச.தே.வி. இயக்கத்தில் 30 வீதமானோர் பெண்களானார்கள்.

**கேள்வி:**

**நீங்கள் விடுதலை இராணுவத்திற்கும், றாமோனா அரசியற் பிரிவுக்கும் பிரதிநிதிகள், இவை இரண்டிற்குமிடையேயான வித்தியாசம் என்ன?**

**அனா மரியா:**

விடுதலை இயக்கத்தில் இருப்பவர்கள் குடும்பங்களைவிட்டுப் பிரிந்து விடுதலைக்காகவும், போராட்டத்திற்காகவும் தம்மை முழுதாக அர்ப்பணித்து செயற்படுபவர்கள். அவர்கள் தங்கள் குடும்பத்திற்கு உதவி செய்ய முடியாது. ஆனால் றமோனா, கிராமத்திலேயே இருந்து பல அமைப்புக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறாள். அங்கேயே அவளுக்கு அரசியல் வேலைகளும் இருக்கிறது.

**கேள்வி:** இந்த தேசிய விடுதலை இயக்கத்தில் பெண்களாகிய நீங்கள் ஓர் போராட்டத்தினை நடத்தி உங்கள் கோரிக்கைகளுக்கு எவ்வாறு அங்கிகாரம் பெறமுடிந்தது?

**றமோனா:**

பெண்கள் சந்திப்புக்களிலும், கூட்டங்களிலும் பங்கெடுத்துக் கொள்வது தடைசெய்யப்பட்டிருந்ததும், கருத்துக்கள் கவனத்திலெடுக்கப்படாமலிருந்தபோதும் நாம் இதற்கெதிராக என்ன செய்யலாமென யோசித்தேன். படிப்படியாக சேர்ந்து செயற்படுவதிலும் கூட்டங்களை ஒழுங்கு செய்வதிலும் ஈடுபட்டோம். பெண்களின் நிலைமையைப் புரிந்து கொண்ட நாம் பெண்களுக்கான பிரதிநிதிகளைத் தெரிவு செய்யவேண்டிய அவசியத்தை உணர்ந்து செயற்பட்டோம். நாங்கள் எமது செயற்பாடுகளில் முன்னேறுவதையும் எம்மால் பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணமுடியுமென்ற நம்பிக்கையையும் பெற்றோம். அதன் அடிப்படையிலேயே செவ்விந்தியர்களின் இரகசிய இராணுவ விடுதலை இராணுவக் குழுவின் CCRI பெண்கள் பிரதிநிதியாகச் செயற்படுகிறேன். என்னுடைய பங்களிப்பு செய்தி தகவல் சேகரிப்பு, பெண்களை அமைப்புமயப்படுத்தல் போன்றவற்றை எனது மொழியில் செயற்படுத்துவதாகும்.

**அனா மரியா:**

எமது அமைப்பில் ஆண்களும் பெண்களும் சமமாக நடந்துகொள்கின்றனர். ஆனால் கிராமங்களில் இன்னமும் ஆணாதிக்கம் நடைமுறையிலுள்ளது. எமது விடுதலை இயக்கத்தில் ஆண்களும், பெண்களும் உயர் பதவிகளில் பொறுப்பு வகிக்கின்றனர். புதிய தோழர்கள் எமது இராணுவத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டவுடன் அவர்களுக்குக் கட்டுப்பாடு, கூட்டுறவு முறை என்பன கற்றுக் கொடுக்கப்படுகிறது. இப்படிப் பயிற்றப்பட்ட நாங்கள், கிராம மக்களிடம் சென்று அவர்களுடன் கலந்துரையாடி, அவர்களுக்கு சமவுரிமை, கூட்டுறவு, மற்றும் பெண்களிற்கு மறுக்கப்பட்டுவரும் உரிமைகள் பற்றி பேசுவதுடன் அவர்களைப் படிப்பதற்கும் தூண்டுகிறோம். றமோனா இம் மக்களின் மொழியை சரளமாகப் பேசக்கூடியவள். அதனால் அவள் மக்களுடன் இலகுவாக கதைத்துக் கொள்ளமுடியும். ஆனால் அவளுக்கு ஸ்பானிய மொழி நன்றாகத் தெரியாது. சான் கிறிஸ்ரோவில் நடந்த அரசு - போராளிகள் பேச்சு வார்த்தைக்கு சென்ற குழுவில் நானும் பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டிருந்தேன்.

**கேள்வி:**

**உங்கள் அமைப்பில் பெண்களின் செயற்பாடுகள் பற்றிக் கூறமுடியுமா?**

**அனா மரியா:**

ஆரம்பத்தில் பாதுகாப்பு விடயத்தில் பெண்கள் பெரும் பங்காற்றினர். ஒவ்வொரு கிராமத்திலும் தொடர்பு சாதனங்களை வைத்திருந்தோம். கிராமத்தினுள் இராணுவம் ஊடுருவும் போது வீட்டுப் பெண்கள் தொடர்பு சாதனக் கருவிகள் மூலம் எமக்கு அறிவித்தனர். நாம் நகரங்களைத் தாக்கிய போதும் அவர்கள் அப்படியான உதவிகளைச் செய்தனர். இவர்கள் தமது கிராமத்தையும் குழந்தைகளையும் பாதுகாத்தது மட்டுமல்லாமல், போராட்டக் களத்திலிருந்த அவர்களது பிள்ளைகளையும் இராணுவத்திடமிருந்து பாதுகாத்தனர். ஓர் இராணுவத்திற்குத் தேவையான எல்லாவற்றையும் நாமே செய்கிறோம். ஆயுதங்கள், கைக்குண்டு போன்றவற்றைத் தயாரிப்பதிலும் பெண்கள் ஈடுபட்டனர். இப்படியான வேலைகளை எல்லோரும் செய்யலாம். இங்கு எல்லாமே சமத்துவம். ஒருநாள் ஆண்கள் சமைத்தால் மறுநாள் பெண்கள். இப்படியே நடைபெறுகிறது.

**கேள்வி:**

**உங்களது மரணத்தைப்பற்றி நீங்கள் சிந்தித்துப் பார்த்ததுண்டா?**

**றமோனா:**

சமத்துவத்தையும், நீதியையும் நிலைநாட்ட வேறுவழியில்லாததால் போராடவேண்டியுள்ளது. இப் போராட்டத்தில் இறக்க நேரிட்டால் அதை ஏற்றுக் கொள்வேன். ஏனெனில் எனது மக்களின் விடுதலைக்கு இப் போராட்டம் அவசியமானது.

**அனா மரியா:**

எனது மரணத்தைப்பற்றி என்ன சொல்வதென்றே தெரியவில்லை. ஏனெனில் எனது மரணத்தை நினைக்கும் போது என்னால் எதையுமே உணர முடியவில்லை. அது நாம் உயிர் வாழ்ந்தும் வாழாதவர்கள் போல இருந்ததே காரணமாகவிருக்கலாம். நாம் சமாதானமாகப் போராடிய போதும் பலர் கிராமங்களில் இறந்தனர். இப்போது பலர் பட்டினியாலும் நோய்வாய்ப்பட்டும் இறந்தனர். அப்போதும் போர் நடப்பது போன்றுதான் பலர் இறந்தனர். இப்போது போராட்டத்தில் பலர் கொல்லப்படுகின்றனர். இந்த நாட்டில் நடைமுறையில் இல்லாத சுதந்திரத்தையும், சமத்துவத்தையும் பெறுவதற்கு பலர் உயிர்களைக் கொடுத்துப் போராட வேண்டியது அவசிய தேவையாகும். போராட்டத்தில் தெளிவுள்ள எமக்கு மரணம் என்பது பெரிதாகப் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. ஆனால் உணவு இல்லாமல், தீராத நோய்களினால் எமது குழந்தைகள் இறக்கும் போது, எமது இதயங்களில் அது பெரிதும் பாதிபபை ஏற்படுத்துகிறது. என் கைகளில் இரு குழந்தைகள் இறந்தனர். எம்மால் ஒன்றுமே செய்யமுடியவில்லை. முதலில் அவர்களது தாய் இறந்தாள். பின்பு குழந்தைகள் இறந்தனர். இப்படியே ஆயிரக்கணக்கான குழந்தைகள் இறக்கின்றனர். பல பெண்கள் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். ஏனெனில் அவர்களது உரிமைகள் மறுக்கப்பட்டு, கல்வி மறுக்கப்பட்டு, வீட்டிலேயே தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். பலர் நியாயமற்ற முறையில் தண்டிக்கப்படுவதுடன் சுரண்டப்படுகின்றனர். பெண்களைப் போலவே ஆண்களும் சுரண்டப்பட்டாலும், மேலும் ஆண்களாலேயும் பெண்கள் சுரண்டப்படுகின்றனர். இதுவே கிராமத்திலும் நகரத்திலும் பெண்களின் நிலைமை. இதுவரை காலமும் எங்களுக்கும் சில காரியங்களைச் செய்ய வல்லமையிருந்தும், சந்தர்ப்பமும் உரிமையும் தரப்படாமல் இருந்ததால், எம்மாலும் செய்யமுடியும் என்ற நம்பிக்கையுடன் அவற்றை நாமே எமது கையில் எடுத்துச் செய்யத் துணிந்துவிட்டோம்.

*மூலம்: ஜேர்மன்*
*நன்றி: பெண்கள் சந்திப்பு மலர்.*

**சமத்துவத்தையும், நீதியையும் நிலைநாட்ட வேறுவழியில்லாததால் போராடவேண்டியுள்ளது. இப் போராட்டத்தில் இறக்க நேரிட்டால் அதை ஏற்றுக் கொள்வேன். ஏனெனில் எனது மக்களின் விடுதலைக்கு இப் போராட்டம் அவசியமானது.**

***- றமோனா***



ஈழமுரசிற்கு எமது வாழ்த்துக்கள்
புதிய, பழைய தரமான தமிழ், ஹிந்தி, மலையாள வீடியோப் பிரதிகளையும் CDக்களையும் பெற்றுக்கொள்ள
Aalayam
5, Amen Corner, Tooting
London Sw17 9Je
Tel: 0181-7673951

ஈழமுரசிற்கு எமது வாழ்த்துக்கள்
K.R.S.
Enterprises
537, High Road, Wembley
Tel: 0181-903 9252
* Off Licence
* News Agents

ஈழமுரசின் பணி தொடர
எமது வாழ்த்துக்கள்
SHARMILAS
5, Amen Corner,
Tooting
London Sw17 9JE
Tel: 0181-7673951




## உங்கள் கை வண்ணம்



### இவ் வாரக் கைவண்ணம்

**செல்வன் இரத்தினராசா ஐங்கரன்**

வயது: 6 (02.11.1990), இடம்: மானிப்பாய்

தற்போதைய விலாசம்: 4563 Gerlafingen, Germany.



சூரியன்

சூரியன் காலையில் உதிக்கும்.
சூரியன் மாலையில் மறையும்.
சூரியன் ஒளியும் வெப்பமும் தரும்.
சூரியன்; உயிரினம் வாழ மிக அவசியம்.
சூரியன் கிழக்கில் தோன்றி மேற்கில் மறையும்.
சூரியனுக்கு மறு பெயர் ஞாயிறு.



**செல்வி**
**சன்ஜா மதன்**

வயது: 6

தமிழ் பாடசாலை
Biel - Swiss.



## குட்டிக் கதை படியுங்கள்

### ஆந்தையும் புறாவும்



ஒரு மரத்தில் ஒரு ஆந்தை களைத்துப் போய் இருந்தது. அதனைப் பார்த்த புறா ஒன்று "நீ ஏன் களைத்திருக்கிறாய்?" என்று கேட்டது.

"நான் எனது இருப்பிடத்தை மாற்றி வேறு இட்த்திற்குக் குடியிருக்கப் போய்க் கொண்டிருக்கிறேன்" என ஆந்தை கூறியது.

"ஏன் உன் இருப்பிடத்தை மாற்றுகிறாய்?" என புறா கேட்டது.

"நான் இருக்கும் இடத்தில் வாழும் மக்கள் எனது குரலையும் சததத்தையும் கேட்டு என்னை வெறுக்கிறார்கள்; அதனால் நான் வேறு இடம் மாறுகிறேன்" என்றது ஆந்தை.

புறா சிரித்தது. "உனது குரலுக்கும் சத்தத்துக்குமாக நீ போய் வசிக்க எண்ணும் இடத்தில் இருக்கும் மக்களும் உன்னை வெறுத்தால் நீ என்ன செய்யப் போகிறாய்?" என புறா கேட்டது.

ஆந்தை பதில் சொல்ல முடியாமல் தவித்தது.

"ஆந்தையாரே நீர் இடம் மாறுவதை விடுத்து, உமது குரலை மாற்றிக் கொள்வதற்கு ஏதாவது முயற்சி செய்து பாரும்" என்றது புறா.

ஆந்தையும் புறாவின் ஆலோசனையை ஏற்றுக் கொண்டு தனது இருப்பிடம் நோக்கித் திரும்பியது.

## கவிதை பாடுவோம்

### ஈழமுரசு வாழ்கவே

ஈழமுரசு! ஈழமுரசு!
நூறு முழக்கம் புரிந்த முரசு
சிறுவர் முற்றம் மீதில்
எம்மை விளையாட
விட்ட முரசு.
படங்கள் வரைந்து, கவிதை பாடி
தமிழும் கற்க
வைத்த முரசு.
தம்பி தங்கை பலபேரை
உறவுகொள்ள வைத்த முரசு.
அறிவியலும் தேசப்பற்றும்
எமக்குத் தந்த
இன்ப முரசு.
வாழ்க வாழ்க வாழ்கவே
ஈழமுரசு வாழ்கவே
சிறுவர் முற்றம் மீதிலே
தொடரும் எங்கள் பவனியே.

- *நிலா*

## சின்னக் கட்டுரை



**செல்வி**
**சிந்துஜா**
**தர்மகுலராஜா**

வயது: 9

இடம்:
Gien, France.

கல்வியின் பெருமை

கற்றவன் உலகில் பெரியவனே
கற்றான் மதிப்புக்குரியவனே
பெற்றோர் பெரியோர் போற்றுபவரே
பெருமைக்குரியவன் நீதானே

நன்றாய்ப் படிப்பாய் நல்லதையே
நாளும் அதன்படி நடப்பாயே
சென்ற இடமெல்லாம் சிறப்புண்டு
செல்வர்க்கும் இல்லையே உன் மதிப்பு

என் பெயர் சிந்துஜா. எனக்கு இரண்டு தங்கைகள் இருக்கிறார்கள். நான் CE2 படிக்கிறேன். எனக்கு என் தாய்மொழியாகிய தமிழ் படிப்பதில் மிகவும் விருப்பம். எனது அம்மாவிடம் கேட்டுக் கல்வியின் பெருமையை அறிந்து கொண்டேன். அறிந்தவற்றை சிறுவர் முற்றத்துக்கும் அறியத் தருகிறேன்.

## ஈழமுரசின் பணி தொடர எமது வாழ்த்துக்கள்

எமது வாடிக்கையாளர்களுக்கு நத்தார் பண்டிகை, புதுவருட வாழ்த்துக்கள்

# TTS Brothers

**எமது சேவைக்கு எல்லை இல்லை**

**Munster * Dortmund * England * Singapore**

அந்தோனி: சுப்பு அண்ணா! ஏன் கவலையாக இருக்கிறீங்கள்?

சுப்பு: எனது மகளுக்கு கலியாண வீடு.


அந்தோனி: இதுக்கு ஏன் கவலை? இது ஒரு சந்தோசமான விசயமெல்லோ.

சுப்பு: இந்தக் கடைகள் எல்லாம் ஏறி இறங்கி சாமான்களை வாங்கிறதுக்கு 1 மாத லீவு கேட்டால்; இல்லை எண்டு சொல்லிப்போட்டாங்கள். அப்பிடி லீவு எடுத்தால் வேலையால் நிப்பாட்டிபோடுவம் எண்டு சொல்றாங்கள்.

அந்தோனி: கவலையை விடுங்கோ; நேர TTS இற்குப் போங்கோ; எல்லாச் சாமான்களையும் (நகை, புடவை, மற்றும் அலங்காரப் பொருட்கள்,.....) ஒரே இடத்தில ஒரு மணித்தியாலத்தில வாங்கிப்போடலாம்.

சுப்பு: எப்பிடி TTS (Dortmund) இற்கு காரில போறது?

அந்தோனி: இதும் சுலபம்; Autobahn 45 இல் Do-Hafen இல் இறக்கி ஒரு இடமும் திரும்பாமல் நேர வந்தால் TTS Brothers (Dortmund) வரும்




**TTS Brothers**
Oesterhotst - 70 (Bersigplatz)
44145 Dortmund.
Tel: 0231-819288 - Fax: 0231-533431

## ஈழமுரசு பல நூறு வருக

MALA

# மலிவுக்கு மறுபெயர் மாலா

## 15 வருட சேவையில்

# மாலா *மளிகை*, மாலா *வீடியோ*

**உங்களுக்குத் தேவையான அனைத்து மளிகைப் பொருட்களுக்கும்**

| | | | |
|---|---|---|---|
| லயன் லாகர் | 11.90Frs | 1Kg குத்தரிசி | 11.50Frs |
| ஸ்கொட் | 11.90Frs | 1Kg சிவத்தப் பச்சை அரிசி | 11.50Frs |
| 1Kg சிவப்பு அரிசி மா | 9.90Frs | 1Kg சம்பா அரிசி | 11.50Frs |

யானை மார்க் குளிர்பானங்கள் அனைத்தும் 4.50 Frs

மஞ்சள் அரிசி மூட்டைகள் 25Kg 149Frs, 155Frs, 170Frs, 190Frs

***மாலா மளிகை - வீடியோ***

***Tel: 01 42 62 01 22***

# புகலிட நிகழ்வுகள்

## கேணல் கிட்டு நினைவாக உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளையினர் கேணல் கிட்டு ஞாபகார்த்த உள்ளரங்க உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி ஒன்றினை ஒழுங்கு செய்துள்ளனர்.

இப்போட்டி 22.12.96 ஞாயிற்றுக்கிழமை காலை எட்டு மணியளவில் ஆரம்பமாகும் என போட்டி அமைப்பாளர்கள் அறிவித்துள்ளனர்.

போட்டி அரங்கம்:

SPORT ANLAGE FRONWALD
FRONWALD STR 115
AFFOLTEN, ZURICH.

## தங்கம் வென்ற எழுத்தாளர்

தமிழர்களுக்கான பாரீஸ் தமிழர் கல்வி நிலையத்தின் 10-வது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் நோர்வே பொ. சிவகுமாரனால் எழுதப்பட்ட "அண்ணன் காட்டிய வழி" முதலாம் இடத்தைப் பெற்று பரிசாக தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளது.

இதற்கான பரிசு இக்கல்வி நிலையத்தின் ஆண்டு நிறைவு விழாவின் போது வழங்கப்பட்டுள்ளது.

## தமிழீழ சரித்திரத்திற்கு நூலுருக் கொடுத்த ஜேர்மனியர்

"சிறிலங்காவில் தமிழர் மீது கட்டவிழ்த்து விட்டுள்ள வன்முறைகளை உலகிற்கு மறைத்து எத்தனை நாட்களுக்கு அராஜக ஆட்சி நடாத்த முடியும்? தணிக்கை மூலம் செய்திகள் வெளிவராமல் இருக்கலாம். ஆனால் உண்மை என்றோ ஒரு நாள் வெளிவந்தே தீரும்" என தமிழீழ ஆதரவுக் குழுவைச் சேர்ந்த ஜேர்மனியரான திரு. மைக் ராடமகா தெரிவித்தார்.

ஜேர்மனியில் கேர்ன் நகரில் 23.11.96 ஞாயிறன்று நடைபெற்ற மாவீரர் நாள் எழுச்சி விழாவில் உரையாற்றியபோது அவர் இவ்வாறு தெரிவித்தார். தமிழீழ சரித்திரம் குறித்து ஜேர்மன் மொழியில் இவர் ஒரு புத்தகமே எழுதியுள்ளார்.

இந்தப் புத்தகம் இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த திரு பழநெடுமாறனால் வெயிடப்பட்டது. இதனை எழுதி வெளியிட்டதற்காக உலகிலுள்ள எட்டுக் கோடி தமிழர் சார்பில் தாம் அவருக்கு நன்றி தெரிவிப்பதாக திரு. நெடுமாறன் தெரிவித்தார். திரு ராடமகா தமது உரையில் தொடர்ந்து கூறியதாவது:

"சிறீலங்கா ஜனாதிபதி உலகிற்கு ஒரு சமாதானப் புறாவாகப் காட்டிக் கொண்டு தமிழீழத்தை அழிக்க சகல வன்முறைகளையும் கட்டவிழ்த்து விட்டுள்ளார். இராணுவ வன்முறையால் தமிழர் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறி, அகதிகளாக தமிழர் செல்லும் பாதையில் விமானக் குண்டு வீச்சு, வெளிநாட்டு உதவி நிறுவனங்கள் தமிழருக்கு உதவி செய்யத் தடை, சமாதானப் பேச்சுவார்த்தை இல்லை, ஐ.நா. சபை உதவி செய்ய முன்வந்த போதும் அதனை ஏற்கவும் தடை, பத்திரிகைத் தணிக்கை ஆகிய சகல ஜனநாயக விரோத செயல்களிலும் சிறிலங்கா ஈடுபட்டுக் கொண்டு தமிழர்களை பயங்கரவாதிகள் என்று கூறுகின்றது.

இராணுவம் பிடித்துள்ள தமிழீழ பகுதியில் இன்று மக்கள் பீதியுடன் வாழ்கின்றார்கள். அங்கே பாலியல் பலாத்காரம், கொலை நடவடிக்கை ஆகியவற்றில் சிறிலங்கா இராணுவம் ஈடுபட்டுள்ளது. தமிழீழ



விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகளாகக் காட்ட ஜேர்மன், சுவிஸ் போன்ற நாடுகளிலும் முயற்சிகள் நடக்கின்றன. அவர்களுக்கு நாம் உண்மையை உணர்த்த தீவிரமான பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் "தேசிய பாதுகாப்பு நிதிக்கு" பங்களிப்பு செய்வதன் மூலம் சிறீலங்கா அரசிற்கு தமிழர்கள் தமது உறுதியைக் காட்ட வேண்டும். சுதந்திர தமிழீழம் மலர விடுதலைப் புலிகளின் கரங்களை பலப்படுத்த வேண்டும். தமிழரின் தாகமும் தமிழீழத் தாயகம் தான் என்பதை உலகிற்கு காட்ட வேண்டும்" என்று உணர்ச்சிப் பெருக்குடன் திரு. மைக் ராடமகா தமதுரையை முடித்தார்.

அவர் தமிழரின் தேசிய உடையான வேட்டி, சட்டை அணிந்தே வந்திருந்தார் - என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## தாயக அல்லல் தீர்க்க பணம், நகை வழங்கிய மக்கள்

(ஜேர்மனி)

ஜேர்மனி நூரன்பேர்க் புனர்வாழ்வுக் . கலைத்தென்றல் நிகழ்ச்சியின் போது தமிழீழ, தமிழர் புனர்வாழ்வுக்கென மக்கள் 2 ஆயிரத்திற்கு மேற்பட்ட பணமும் நகையும் வழங்கினர்.






அனைத்துலக கவன ஈர்ப்பு வாரம் தொடர்பான துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டதையடுத்து மக்கள் தாமாகவே முன்வந்து இதனை வழங்கினர்.

ஜேர்மனி தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஆதரவுக் கரம் வேண்டி நடாத்தி வரும் கலை நிகழ்ச்சி நூரன்பேக் நகரிலும் நடைபெற்றது. திரு. சிவகணேசனின் வரவேற்புரையுடன் கலை நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. நூரன்பேர்க் தமிழாலய மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் விசேடமாக நடைபெற்றன.

ஜேர்மனி கலை பண்பாட்டுக் கழக நடன ஆசிரியர்களான செல்விகள் தேனுகா. காந்தராசா, பவித்திரா செல்வகாந்தன் ஆகியோரின் நடனங்களும் ஜூஸ் மாஸ்டர் இன்பராஜாவின் நகைச்சுவையும் இடம்பெற்றன. ஜூஸ் மாஸ்டருடன் நகைச் சுவை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் கேதீஸ் நூறாவது மேடை நூரன்பேர்க்கில் ஏறியதனால் அவர் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தில் மலர்ச்செண்டு வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

தமிழீழம் இசைக்குழுவின் விடுதலை கானங்கள் பார்வையாளர்களை மெய்சிலிர்க்க வைத்தன. நன்றி உரையை நூரன்பேர்க் தமிழர் புனர்வாழ்வுக் கழக பிரதிநிதி வழங்கினார்.

## இத்தாலி பலெர்மோவில் மாவீரர் எழுச்சி நாள்



இத்தாலி பலெர்மோ நகரில் மாவீரர் எழுச்சி விழா கடந்த 24.11.96 அன்று நடைபெற்றது. இங்கு நடைபெற்ற விழாவில் நாப்போலி, கத்தானியா வாழ் தமிழ் மக்களும் உணர்வு பூர்வமாக கலந்து கொண்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் இத்தாலிய பிரதிநிதி திரு. மேத்தா அவர்களின் தேசியக் கொடி ஏற்றல் வைபவத்தினை தொடர்ந்து, பல கலை நிகழ்ச்சிகளும், பரிசளிப்பு வைபவமும் நடைபெற்றன. குறிப்பாக இவ்விழாவில் இத்தாலிய மாணவ மாணவியர் உட்பட பல இத்தாலிய மக்கள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. தமிழீழ மருத்துவ நிதிக்காக பணமும் இவ்விழாவின் போது திரட்டப்பட்டது.

## தமிழர் புனர்வாழ்வுக் கழக லியோன் கிளையின் மாவீரர் விழா

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரின் லியோன் கிளையினரின் மாவீரர் தின விழா எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை 15.12.96 மாலை மூன்று மணிக்கு நடத்தப்படவுள்ளது.

தாயக மண் மீட்புக்காக தமது உயிர்களைத் தியாகம் செய்த மாவீரர்களின் நினைவாக பல கலை நிகழ்ச்சிகள் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

நடைபெறும் இடம்:
45, Avenue Berthelot,
69007 LYON

ஈழமுரசின் பணி தொடர எமது வாழ்த்துக்கள்

வாடிக்கையாளர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த

# நத்தார்-புதுவருட மலிவு விற்பனை

## புடவை வகைகள்

பட்டுப் புடவைகள், காஞ்சிபுரம், காஷ்மீர், பனாரஸ், மைசூர் சில்க் 96ம் ஆண்டின் அறிமுகம். பஞ்சாபி, சுடிதார், காவ் சாறி, பரதநாட்டிய உடுப்புக்கள், முழுப் பாவாடை சட்டைகள், சிறுவர் சிறுமியர்க்கான கோட், சூட் மற்றும் பஞ்சாபி, சாறிப் பஞ்சாபி, சட்டைப் பஞ்சாபி, பேபி செட் ஆகியனவும்...

ஒவ்வொரு பனாரஸ் பட்டுச் சேலைக்கும் 1 CD இலவசம்

## ஆடவர் உடைகள்

ஆடவர்க்கான ஜீன்ஸ், சேட், ரீசேட், கைக் கடிகாரங்கள், சாரம் ஆகியனவும்

மற்றும் அழகுசாதனப் பொருட்கள், படுக்கை விரிப்புக்கள், எவர் சில்வர் பாத்திரங்கள், பண்டிகைக் கால அன்பளிப்புப் பொருட்கள் ஆகியனவும்

## CD வகைகள்

1800 தரம்மிக்க Ramiy CD களுடன் பிரமிட், பார், மயூரா போன்றவையும் 5SFr முதல் 9SFr வரை பெற்றுக்கொள்ளலாம்

Ramiy World

## ODO வகைகள்

முத்து, லவ்பேட்ஸ், வில்லாதி வில்லன், ஆசை போன்ற புதிய படங்கள் உட்பட 1500 ரக ODO வகைகள் 1SFr இலிருந்து

## வீடியோப் பிரதிகள் [படங்கள் - பாடல்கள் - வீடியோ பத்திரிகை]

அண்மையில் வெளிவந்த அவ்வை சண்முகி, மிஸ்டர் ரோமியோ திரைப்படங்கள் உட்பட 70 இற்கும் மேற்பட்ட கடந்த ஒரு வருட வெளியீடுகளான தமிழ்த் திரைப் படப் பிரதிகள் 8SFr முதல் 13SFr வரையிலான மலிவு விலையிலும்,
அவ்வை சண்முகி, மிஸ்டர் ரோமியோ பாடல்கள் அடங்கிய Top 40, இசைத் தென்றல் 21, 22, 23 ஆகியன 10SFr முதல் 13SFr வரையான மலிவு விலையிலும் பெற்றுக் கொள்ளலாம்.



Bern மாநகரில் Sri Ram (Zurich) நடாத்தும்
**16.12.96 திங்கள் முதல் 21.12.96 சனி வரை**
Restaurant Burgerhaus, Neuengasse20, 3011 Bern.
பேர்ண் புகையிரத நிலையத்திற்கு அருகிலுள்ள *McDonald's* இலிருந்து 1 நிமிட தூரம்

இது சுவிஸ் வாழ் தமிழ் மக்களின் பேராதரவுடன் நடைபெறும் வருட இறுதியின் பிரமாண்டமான மலிவு விற்பனையாகும். உலகெலாம் உலாவரும் ரமி இசைத் தட்டின் 13 மாறுபட்ட தெரிவில் வரும் இசைத் தட்டுக்கள் நத்தார் புதுவருட விருந்தாக வெளிவருகிறது.. அது நீங்கள் வரவேற்பதாகவே இருக்கும் என்பது உறுதி - Ramiy

**Euro card, Visa card ஏற்றுக்கொள்ளப்படும்**

**உலகத் தமிழ் மொழிபெயர்ப்புக் கருவி**

~~350SFr~~ 179SFr

# இதய அஞ்சலி



நாதன்

மாவீரரே!
பாரிஸ் நகரத்து வீதியிலே உங்கள் குருதி உறைந்தது.
உங்களின் கனவுகள் நிச்சயம் ஓர் நாள் நனவாகும்.
மாவீரன் கஜனே; இன்று, நூறாவது இதழிலே காலை
வைக்கும் ஈழமுரசிலே உனது கையெழுத்து
இல்லையே தவிர; உனது எண்ணங்களும் பல
வடிவங்களில் விஸ்வரூபம் எடுத்து நிற்கிறது. நீங்கள்
விட்டபணி நிச்சயம் பல மடங்கு பெருகும். அது
மலரப் போகும் நம் தமிழீழத்தில் பல அறிஞர்களை
உருவாக்கும் என்பது திண்ணம்



கஜன்

**என்றும் உங்கள் நினைவலைகளுடன்**

**தாயகம் ரேடேர்ஸ்**

# வாழ்த்துச் செய்தி

பத்திரிகை உலகத்திலேயே மிகக் குறுகிய காலத்தில் அனைத்துத் தமிழ்
நெஞ்சங்களையும் தன் வசப்படுத்திய **ஈழமுரசு பத்திரிகையே!**
தாயகத்தின் உண்மை நிகழ்வுகளை உடனுக்குடன் தமிழ் மக்களுக்கு
அறியத்தருவதில் உனக்கு நிகர் நீயே!!
இவ்வாரம் நூறாவது இதழில் காலடி வைக்கும் ஈழமுரசே உனது சேவை இன்னும்
பல ஆயிரம், இலட்சம் இதழ்களைக் காண வேண்டும் என வாழ்த்துகின்றது

**தாயகம் ரேடேர்ஸ்**

**சுற்காட் நகரில் 3வது வருடத்தில்**
**அடியெடுத்து வைக்கின்றது**

# தாயகம் ரேடர்ஸ்

உங்களுக்குத் தேவையான அனைத்து ஆசிய உணவு வகைகள்,
கடலுணவு வகைகள், எவர்சில்வர் பொருட்கள், பெரியோர்,
சிறியோர் அனைவருக்குமேற்ற ஆடைவகைகள், பத்திரிகைகள்,
புத்தகங்கள், ஒலி, ஒளி நாடாக்கள், ஒலியிசைத்தட்டுக்கள்
அனைத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

# *Thayagam Traders*

Gutenberg Str-118, 70197 Stuttgart, Germany.

ஈழமுரசின் 100வது முழக்கத்திற்கும் அதன்
பணி மேலும் வளரவும் எமது வாழ்த்துக்கள்

ஞானம் சென்ரர்
கொமினிக்கேசன்

பிறக்கப்போகும்
புதிய வருடத்தில்
வெளிநாடுகளில் உள்ள
உங்கள்
உறவினர்களுடன்
தொலைபேசியில்
அளவளாவ சலுகைக்
கட்டணத்தில் புதிய
தொலைபேசி
அட்டையினை
அறிமுகப்படுத்துகின்றார்கள்



விபரங்களுக்கு:

ஞானம் சென்ரர் கொமினிக்கேசன்

195, Rue du Faubourg Saint Denis.
7500 Paris.
Tel: 01 46 07 09 36 - Fax: 01 46 07 00 14

(60ம் பக்கத் தொடர்ச்சி)

## ரெலோ...

ளர், குணே என்ற பொலிஸ் காரரும்மே சுட்டுக் கொல்லப் பட்டவர்களாவர்.

வாழைச்சேனை பிரதேச செயலகமும், ப.நோக்கு கூட்டு றவுச் சங்க கட்டிடத்திலேயே இயங்கி வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. இச் சம்பவத் தையடுத்து அங்கு கூடியிருந்த பொதுமக்களும் சிதறி ஓடியுள் ளனர். இச் சம்பவம் நடை பெற்ற இடத்திலிருந்து சுமார் நூறு மீற்றர் தூரத்தில் உதவி பொலிஸ் அத்தியஸ்தகர் அலு வலகம் இருந்தது என்பது குறிப் பிடத்தக்கது.

(60ம் பக்கத் தொடர்ச்சி)

## சுபவீரபாண்டியன்...

லைப் புலிகள் இயக்கம் திகழ்கி றது.

அரசியல் உள்நோக்கத்து டன் விடுதலைப் புலிகள் இயக் கத்தை இந்திய அரசு தடை செய்தது. தடை செய்யப்பட்ட அசாமிய உல்பா இயக்கம், காஸ்மீர் தேசிய முன்னணி போன்ற அமைப்புக்களுடன் பேச்சுவார்த்தைகளை இந்திய அரசு நடத்துகிறது. தடை செய் யப்பட்ட இயக்கத்தைப் பற்றி பேசுவது என்றால், அவைகளு டன் பேச்சுவார்த்தை நடத்து வது சட்ட விரோதமான செய லாகிவிடும்.

இந்திய அரசின் முன்னுக் குப்பின் முரணான போக்கிற்கு தமிழக அரசு துணைபோவதை, உண்மையான தமிழ் உணர்வு கொண்டவர்கள் கடுமையான கண்டனம் செய்வார்கள் என நம்புகிறேன்.

மணியரசன், சுப வீரபாண் டியன் இருவர் மட்டுமல்ல விடுதலைப் புலிகளை ஆதரித் துப் பேச பல்லாயிரக் கணக் கான தமிழர்கள் முன்வருவார் கள் என்பதை முதலமைச்சர் கருணாநிதி உணரவேண்டும் என்று நெடுமாறன் அவ்வறிக் கையில் தெரிவித்துள்ளார்.

(60ம் பக்கத் தொடர்ச்சி)

## கிளிநொச்சியில்...

லைப் புலிகளின் தாக்குதல் மிகவும் கடுமையாக இருந்தது. கொல்லப்பட்ட இரு படையி னரின் உடல்களை விட்டுவிட்டு ஏனைய சடலங்களையும், காய மடைந்தவர்களையும் தூக்கிக் கொண்டு படையினர் பின் வாங்கியுள்ளனர்.

இரு படையினரின் உடல்க ளைக் கைப்பற்றியவிடுதலைப் புலிகள் சில ஆயுத தளபாடங் களையும், கைப்பற்றியுள்ளனர். இச் சம்பவத்தின் போது புலி கள் தரப்பில் சேதங்கள் எது வும் ஏற்படவில்லை.

(60ம் பக்கத் தொடர்ச்சி)

## போராட்டத்திற்கு...

யாழ்குடாநாட்டு அபிவிருத் திக்கு நீங்கள் உதவி புரிவீர்களா? எனக் கேட்கப்பட்டதற்கு, யாழ் குடாநாட்டு அபிவிருத்திக்கு உதவுவது தொடர்பாக நுணுக்க மாக ஆராய வேண்டும் எனக் குறிப்பிட்ட ஜேர்மன் தூதுவர் உதாரணத்திற்கு ஒரு ஜென ரேட்டரை யாழ்ப்பாணத்திற்கு கொடுக்கிறோம் என்றால் அது யுத்தத்தில் அழிக்கப்படும்போது எமது உதவி பயனற்றுப் போகு மல்லவா என்றும் குறிப்பிட் டார்.

(60ம் பக்கத் தொடர்ச்சி)

## கூட்டணி...

தமிழ் மக்கள் மீது சிறீலங்கா இராணுவத்தினர் மிகுந்த ஆத் திரத்துடன் உள்ளதால் இரா ணுவத்தினரே இத் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களின் சூத்திர தாரிகள் என கிராமவாசி ஒரு வர் தெரிவித்துள்ளார்.

இச் சம்பவம் நடப்பதற்கு சில நாட்களுக்கு முன்னர் இரண்டு தமிழ் மக்களை இரா ணுவம் சுட்டுக் கொன்றது குறிப்பிடத்தக்கது.


## வீடு விற்பனைக்கு

CERGY St. CHRISTOPHE-இல் (RERக்கு அருகா மையில்) சகல வசதிகளுடன் கூடிய F4 வீடு 89M² விற்பனைக்கு உண்டு.

விலை 450 000 Ffr.

தொடர்புகளுக்கு: 01 39 19 70 10.


## 45ம் நாள் கண்ணீர் அஞ்சலியும் நன்றி நவிலலும்



### புவனேந்திரன் அனந்தன் (ராஜா)

அன்பின் திருவுருவே
அழகின் பிறப்பிடமே
அருமை மகன் அனந்தனே
அம்மா, அப்பா, அக்காவை
ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்டீரோ
நெஞ்சம் பதைக்குதைய்யா
நிலைகுலைந்து வாடுகின்றோமே
நீர் விட்டுச் சென்ற இனிய நினைவுகளை
நினைந்து நினைந்து கண்ணீர் வடிக்கின்றோம்.
பாவ உலக வாழ்வு என வெறுத்து
பரமனடி சேர்ந்தீரோ

உன் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கும்
அம்மா, அப்பா, அக்கா, உற்றார், உறவினர், நண்பர்கள்.

எமது அன்புச் செல்வத்தின் பிரிவுச் செய்தி கேட்டு அதிர்ச்சி யுடனும், ஆழ்ந்த கவலையுடனும் இருந்த எமக்கு நேரிலும், தொலைபேசி மூலமும், தபால் மூலமும் ஆறுதல் கூறி, அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், இறுதி ஈமைக் கிரிகைகளில் பங்குபற்றிக் கொண்டவர்களுக்கும், வேறு வழிகளில் நின்று ஒத்தாசையும், உதவியும் புரிந்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திரு. புவனேந்திரன் காஞ்சனமாலா குடும்பத்தினர்
Aigle சுவிஸ் · தொலைபேசி: 024 466 67 69.
தகவல்: திருமதி கௌசல்யா ஆனந்தராஜா பிரான்ஸ்
தொலைபேசி இல 01 69 96 76 53.

## 6ம் மாத வீர அஞ்சலி

தாயின் மடியில் 20.05.75



தாயக மண்ணில் 15.06.96

### லெப்டினன் கமலக்கண்ணன்

(சுப்பிரமணியம் பிரதீபன் - கல்வியங்காடு, யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை நேரடி மோதலில்
வீரமரணம்

எம் தேசத்தில் நிலை கொண்ட எதிரியை அகற்ற உன்னையே உலகை விட்டு நகர்த்தியவனே, ஆனால் உன் வீர நினைவுகளை எங்கள் மனங்களிலிருந்து அகற்றவே முடியாது.

தகவல்:
உற்றார், உறவினர், நண்பர்கள்.
தொலை பேசி இல: 01 45 91 29 69
(பாரிஸ்)

## மரண அறிவித்தல்



இறப்பு 28.11.96

### முருகேசு தம்பிராசா

தமிழீழம் கோண்டாவில் அன்னுங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட தம்பிராசா கடந்த 28.11.96 வியாழக்கிழமை மாங்குளத் தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், கனகலிங்கம் (ஜேர்மனி), கமலாதேவி (ஜேர்மனி), சிவலிங்கம் (கனடா), சந்திராதேவி (கோண்டாவில்), இந்திராணி (மாங்குளம்), கணேஸ்வரன் (தமிழ்நாடு), பரதன் (சுவிஸ்), மகேஸ்வரன் (பாரிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும்,

திருமதி யோகேஸ்வரி (ஜேர்மனி), திரு தேவபாலன் (ஜேர்மனி), திருமதி சுசிலா (கனடா), திரு. ஞானபாலன் (கோண்டாவில்), திரு. தர்மராஜா (மாங்குளம்), திருமதி அன்பரசி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரிகைகள் மாங்குளத்தில் நடைபெற்றுள்ளது.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மக்கள், மருமக்கள்

தகவல்: மகிந்தன், பாரிஸ்.
தொலைபேசி இல: 06 60 44 88 81.


ஈழமுரசின் பணி தொடர எமது வாழ்த்துக்கள்

புதிய முகவரியில் அதிநவீனமயப்படுத்தப்பட்ட கணணிக் கருவிகள் கொண்டு சிறந்த முறையில்
அனைத்துவிதமான அச்சு வேலைகளையும் விரும்பிய வண்ணம் செய்து பெற்றுக் கொள்ள

ஸ்ரீ பாரதி அச்சகம்

Thamarai SARL - 18, Rue Cail, 75010 Paris.

கடிதங்கள்
வாழ்த்து மடல்கள்
கலர் அஞ்சலிகள்
சஞ்சிகைகள்
மற்றும் பல

கறுப்பு வெள்ளை
கலர்
போட்டோ பிரதிகள்
குறைவான
கட்டணத்தில்

M°: Gare du Nord / La Chapelle - Tel: 01 42 05 46 04 / Fax: 01 42 05 46 36

ஈழமுரசு
Eelamurasu Weekly

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

உங்கள் தேவையறிந்து எங்களின் சேவை

Kumars Shop S. A. R. L.
80, Bld. Barbes, 75018 Paris.
M°: Marcadet Poissonniers
Tél: 01 42 59 35 10
Fax: 01 42 59 35 00

K.T.C. Jewels
193, Rue du Fg. S'Denis,
75010 Paris.
M°: Gare du Nord / La Chapelle
Tél: 01 42 05 41 36



குமாரர்ஸ்

Kumars
Jewels S.A.R.L.
80, Bld. Barbes,
75018 Paris.
M°: Marcadet
Poissonniers
Tél: 01 42 59 11 52
Fax: 01 42 59 35 00

# போராட்டத்திற்கு தலைமை ஏற்றவர்கள் நாட்டின் தலைவராகியும் உள்ளனர்

## -சிறீலங்காவுக்கான ஜேர்மன் தூதுவர்-

அண்மையில் கொழும்பில் இருந்து வெளிவரும் சிங்களப் பத்திரிகை ஒன்றிற்கு பேட்டிய ளித்த இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் டாக்டர் மைக் கல் சிமித், சிறீலங்காவில் நடை பெறும் யுத்தம் துரதிர்ஷ்டமா னதும், சோகமானதும் எனவும் குறிப்பிட்டுள்ளார். பல்லாயிரக் கணக்கான மக்கள் அழிந்து, சொத்துக்களும் அழிந்து போயின் றன. இதற்கு விரைவாக சமா தானம் எட்டப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

சிறீலங்கா அரசு விடுதலைப் புலிகளை பயங்கர வாத அமைப்பாக கருதுகிறது. இது பற்றி உங்கள் கருத்து என்ன? என பத்திரிகையாளர் கேட்ட தற்கு, இது உங்கள் உள்நாட்டுப் பிரச்சினை எனக் குறிப்பிட்ட அவர், ஆனாலும் பல நாடுக ளில் நடைபெற்ற போராட்ட முடிவுகளின் பின்னர் விடுத லைப் போரில் ஈடுபட்ட அமைப் புக்கள், அந் நாடுகளில் அரசு களை அமைத்துள்ளன.

குறிப்பாக தென்னாபிரிக்கா, மொசாம்பிக் போன்ற பல நாடுகளிலும் அந் நாட்டின் விடுதலைக்காக போராடிய தலைவர்கள், அந் நாட்டு தலை மைகளை ஏற்ற வரலாறு நடந் துள்ளது எனக் குறிப்பிட்டார்.

(தொடர்ச்சி 59ம் பக்கம்)

## கூட்டணியின் கூட்டத்தில் துப்பாக்கிச் சூடு ஒருவர் பலி

தமிழர் விடுதலைக் கூட்ட ணியினரால் ஒழுங்கு செய் யப்பட்ட பொதுக்கூட்டம் ஒன் றில் இனந்தெரியாதோர் மேற் கொண்ட துப்பாக்கிப் பிரயோ கத்தால் ஒருவர் கொல்லப்பட் டதுடன், பத்துக்கு மேற்பட்ட வர்கள் காயமடைந்துள்ளனர்.

அண்மையில் சிறீலங்கா இராணுவத்தினர் வெறித்தனம் புரிந்த மட்டக்களப்பு, கிரான் பிரதேசத்திலேயே இச் சம்பவம் நடைபெற்றுள்ளது. இப் பகுதி

(தொடர்ச்சி 59ம் பக்கம்)

## ரெலோ உறுப்பினரும் - பொலிசாரும் வாழைச்சேனையில் சுட்டுக் கொலை

வாழைச்சேனை பல நோக்கு கூட்டுறவுச சங்கத்தில் வைதது ரெலோ உறுப்பினர் ஒருவரும், பொ[illegible]ரும் கடந்த 09.12.96 திங்கட்கிழமை சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

நடந்து வந்த இனம் தெரி யாத இரண்டு வாலிபர்களே இவ் இருவரையும் சுட்டுவிட்டு தப்பி ஓடியுள்ளனர்.

கிருஷ்ணபிள்ளை சந்திர பிள்ளை (சின்னவன்), என்ற 29 வயதுடைய ரெலோ உறுப்பி

(தொடர்ச்சி 59ம் பக்கம்)

## சுப வீரபாண்டியன் - மணியரசன் கைது கண்டித்து நெடுமாறன் அறிக்கை

விடுதலைப் புலிகளை ஆத ரித்து பேசியதாக குற்றஞ்சாட் டப்பட்டு, பெ. மணியரசன், சுப வீரபாண்டியன் ஆகியோர் கைது செய்யப்பட்டிருப்பதை நான் வன்மையாகக் கண்டிக்கி றேன்.

விடுதலைப் புலிகள் மீது பொய்யான குற்றச் சாட்டுக் களை தமிழக முதலமைச்சரும், வேறு சிலரும் கூறும் போது பதிலளித்தால் அதற்காக கைது செய்வது அப்பட்டமான பாசி சப் போக்காகும். ஈழத் தமிழர் பிரச்சினையைப் பற்றிப் பேசும் போது, விடுதலைப் புலிகளைத் தவிர்த்து விட்டுப் பேச முடி யாது. ஈழத் தமிழரின் தேசிய விடுதலை இயக்கமாக விடுத

(தொடர்ச்சி 59ம் பக்கம்)

## மன்னாரிலும் சூரியக்கதிர் ?

மன்னார்ப் பகுதியில் இரா ணுவத்தினர் தீவிர பயிற்சிக ளில் ஈடுபட்டு வருவதாகவும், சூரியக்கதிர் 4 ஐ மன்னாரில் ஆரம்பிக்கும் முயற்சிகளில் படையினர் ஈடுபட்டு வருவ தாக பாதுகாப்பு வட்டாரங் களை ஆதாரம்காட்டி கொழும் புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சூரியக்கதிர் இராணுவ நட வடிக்கை மூலம் யாழ்ப்பாணத் தைக் கைப்பற்றிய படையினர் தற்போது மன்னாரில் ஒரு பாரிய இராணுவ நடவடிக் கையை மேற்கொள்ள திட்ட மிட்டுள்ளனராம். மன்னார் இராணுவ முகாங்களில் உள்ள இராணுவத்தினர் தாக்குதல் முன்னேற்பாடுகளிலும், தீவிரப் பயிற்சிகளிலும் ஒத்திகைகளி லும் ஈடுபடுவதாகவும் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## தமிழீழ மண் மீட்பு நிதி

அன்பார்ந்த பிரான்ஸ்வாழ் தமிழ் மக்களே!

தமிழீழ மண்ணை, ஆக்கிரமிப்பாளரிடமிருந்து மீட்டெடுக் கும் மண்மீட்பு நிதிக்கு உங்களிடமிருந்து உச்சக்கட்ட பங்க ளிப்பை உடனடி நிதியாக வேண்டி நிற்கிறோம்.

இந்த அவசர நிதி சேகரிப்பு, 08.12.96 தொடக்கம் 16.01.97 வரையான ஐந்து வாரகாலத்தில் நிறைவு செய்யப்பட உள்ள தால், இந்த அவசர மண்மீட்பு நிதிக்கு உங்களின் மனமுவந்த அதி உச்ச பங்களிப்பை உடனடியாக வழங்குவீர்கள் என எதிர் பார்க்கிறோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள்
பிரான்ஸ் பணியகம்.

## கிளிநொச்சியில் நேரடி மோதல் சிப்பாய்களின் சடலங்கள் புலிகளிடம்

கிளிநொச்சி திருவையாற் றுப் பகுதியில், விடுதலைப் புலி களுக்கும், சிறீலங்காப் படை யினரின் அணி ஒன்றுக்கும் இடையே கடந்த ஞாயிற்றுக் கிழமை 08.12.96 அன்று நேரடி மோதல் ஒன்று இடம் பெற்றுள் ளது.

இம் மோதலின் போது ஐந்து படையினர் அவ்விடத்தில் கொல்லப்பட, மேலும் பலர் படுகாயப்படுத்தப்பட்டுள்ளனர்.

அதிகாலை வேளையில் தமது பாதுகாப்பு முன்னரண் பகுதியிலிருந்து முன்னேற படை யினர் முயன்ற போதே இம் மோதல் இடம் பெற்றது. விடுத

(தொடர்ச்சி 59ம் பக்கம்)

கொட்டும் முரசாம் எங்கள் ஈழமுரசிற்கு வாழ்த்துகள்

நண்பர்கள், வாடிக்கையாளர்கள், மொத்த வியாபாரிகள், சில்லறை வியாபாரிகள்
அனைவருக்கும் எமது நத்தார் புதுவருட வாழ்த்துகள் உரித்தாகட்டும்.

அபூர்வ, றங்கோலி, கோலம், பட்டர் பிளை, அவ்வைசண்முகி உட்பட 1000 இற்கும் மேற்பட்ட சேலை தெரிவுகள்
பஞ்சாபி, சுரிதார், குழந்தைகளுக்கான ஆடைகள், ஆடவர் உடைத் தெரிவுகள் எவர்சில்வர் பாத்திரங்கள்
அனைத்திற்கும் ஐரோப்பாவின் ஏக விநியோகஸ்தர்கள்

Gopara Gnanam

Osthueshide 93, 48167 Munster
Tel: 49/251 617747 / Fax: 49/251616207
Hand phone 0171 330 6542